# தமிழ் மொழியும் இலக்கியமும்

## தரம் - 10



கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# தமிழ் நெடுங்கணக்கு

## දෙමළ හෝඩිය

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஃ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

# தமிழ்மொழியும் இலக்கியமும்

# தரம் - 10

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

*முதலாம் பதிப்பு - 2006*

*இரண்டாம் பதிப்பு - 2007*

*முழுப் பதிப்புரிமையுடையது*

2007 ஆம் ஆண்டு முதல் பாடசாலைகளுக்கு அறிமுகப்படுத்தப்படுகின்ற, திருத்தப்பட்ட புதிய பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்படுகின்ற இந்தப் பாடநூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் வழிகாட்டலிற்கு ஏற்ப, பாடநிபுணத்துவக் குழுவினாலும் பாடநூல் மதிப்பீட்டுக் குழுவினாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்காக வரையறுக்கப்பட்ட யுனைற்ரெட் மேர்ச்சன்ஸ் பிரின்டர்ஸ் (பிறைவட்) லிமிட்ரெட் அச்சகத்தில் தயாரித்து வெளியிடப்பட்டது.

2008/ஒ/10/174/150,000

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருள் - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெல்லாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ, சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழுமில்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ

*ஆனந்த சமரக்கோன்.*
*கவிதையின் பெயர்ப்பு.*

## வழிகாட்டல்

**திரு. என். தர்மசேன**

கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்

**திருமதி ஈ. எப். டீ. நாணயக்கார**

ஆலோசகர் - கல்வி வெளியீட்டு ஆணையாளர்.

## எழுத்தாளர்கள்

**திரு. வ. செல்வராஜா M.A. Dip, Ed.**

துணைப்பீடாதிபதி - ஸ்ரீபாதக்கல்வியியல் கல்லூரி பத்தனை.

**திரு. ம. ஜேம்ஸ் விக்டர் M.A.**

ஆசிரிய ஆலோசகர் - ஹட்டன் கல்வி வலயம்.

## ஆலோசனை

**திரு. சி. காண்டீபன் M.A. M. Phil.**

அபிவிருத்தி அலுவலர் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## இணைப்பாளர்

**திரு. என் கச்சிமுகம்மது**

பிரதிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்.

## பதிப்பக இணைப்பாளர்

**திரு. பா. உமாகாந்தன்**

## கணினி எழுத்தமைப்பும் பக்கவடிவமைப்பும்

**செல்வி எ. மேரி டிலாசினி B.A.**
அல் - அஷ்ரப் மகாவித்தியாலயம் - மாபொல, வத்தளை.

**திரு. ஜெ.எப். ஹெலன் Dip-in-Fe.Se**
ஹைலன்ஸ் கல்லூரி - ஹட்டன்.

## அட்டைப்படம் - சித்திரம்

**திரு. சிவம் சிவப்பிரகாசம் B.A.**

## அச்சுப்பதிப்பு

யுனைற்ரெட் மேர்ச்சன்ஸ் பிரின்டர்ஸ் (பிறைவட்) லிமிட்ரெட்

# முன்னுரை

இந்நூல் 2008ஆம் ஆண்டுக்கான தமிழ் மொழியும் இலக்கியமும் பாடத்திட்டத்தினை ஆதாரமாகக் கொண்டு ஆக்கப்பட்டதாகும். வாழ்க்கையை வெற்றிகரமாக நடத்துவதற்கும் சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையிலும் மாணவர்களிடையே தேர்ச்சிகளையும் திறன்களையும் விருத்தி செய்ய முனைவது இந்நூலாக்கத்தின் அடிப்படையான இலக்காகும்.

2006ஆம் ஆண்டில் முதற்பதிப்பாக வெளிவந்த தமிழ் மொழியும் இலக்கியமும் எனும் நூல் 2008ஆம் ஆண்டிற்காக மறுபதிப்புச் செய்யப்படுகின்றது. இப்பதிப்பிற்கு ஒத்துழைப்பு நல்கிய கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் ஏனையோருக்கும் எமது நன்றிகள் உரித்தாகும்.

இந்நூலின் தர விருத்தியை அடிப்படையாகக் கொண்ட முன்மொழிவுகள் கருத்துகள் வரவேற்கப்படுகின்றன.

என். தர்மசேன,
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்.

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
"இசுருபாய",
பத்தரமுல்ல.
2007.04.12.

# அறிமுகம்

தரம் பத்திற்கான பாடத்திட்டத்தைத் தழுவி ஆக்கப்பட்ட இந்நூலை, கற்கப்போகும் மாணவர்களுக்கும் கற்பிக்கப்போகும் ஆசிரியர்களுக்கும் அறிமுகம் செய்வதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

மாணவர் மையக் கல்விமுறையை அடிப்படையாகக் கொண்டு இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்களின் வழிகாட்டலினூடாக மாணவர்கள் சுயமாக கற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும், சுயமாக சிந்திக்கக் கூடிய வகையிலும் சுயமாக தேடிக்கற்கக்கூடிய வகையிலும், சுயமாக ஆக்கங்களைப் படைக்கக்கூடிய வகையிலும் இந்நூலை ஆக்கித் தருவதே எமது நோக்கம்.

எதிர்கால உலகில் மொழித்திறன் விருத்தி தொடர்பான சவால்களை, மாணவர்கள் வெற்றிகரமாக எதிர்கொள்ளவும் மொழியை செம்மையாக விருத்தி செய்யக்கூடிய வகையிலும் காத்திரமான பரந்துபட்ட உள்ளடக்கங்கள் இப்பாடநூலில் இடம் பெற்றுள்ளன.

மொழிவளம் மொழியைச் செம்மையாகக் கையாள்வதற்கு பெரிதும் உதவக்கூடியன. இலக்கணப்பகுதிகளும் இலகுவாக விளங்கக்கூடிய வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. ஆக்கத்திறன் பகுதிகள் மாணவர்கள் சுயமாக ஆக்கங்களை உருவாக்கக் கூடிய வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

மாணவர்களே,

இந்நூலில் தரப்பட்டுள்ள பயிற்சிகள், செயற்பாடுகள், ஒப்படைகள் என்பவற்றை ஆசிரியரின் வழிகாட்டலினூடாக நிறைவேற்றுங்கள். உங்கள் மொழிவளம் உயரும்.

இந்நூலாக்கத்தின் போதும் சீராக்கத்தின் போதும் பெரிதும் உதவிய அனைவருக்கும் எமது நன்றிகள்.

நூலாக்கக்குழு.

### *தமிழ்மொழி வாழ்த்து*

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடரத் தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

*- பாரதி -*

# பொருளடக்கம்


| எண் | பாடம் | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | சிட்டுக்குருவி | 1-16 |
| | ஆக்கத்திறன் - பந்தியமைத்தல் | |
| | மொழிவளம் - பேச்சுத்தமிழ் | |
| | இலக்கணம் - வாக்கியவகைகள் | |
| 2. | சிறுகதை இலக்கணம் | 17-31 |
| | ஆக்கத்திறன் - கட்டுரையாக்கம்-1 | |
| | மொழிவளம் - இணைமொழிகள் | |
| | இலக்கணம் - தொகைநிலைத்தொடர்கள் | |
| 3. | தக்காளிப் பழங்கள் | 32-47 |
| | ஆக்கத்திறன் - கட்டுரையாக்கம் - 11 | |
| | மொழிவளம் - மரபுப்பெயர்கள் | |
| | இலக்கணம் - தொகாநிலைத்தொடர்கள | |
| 4. | அறிவியல் பார்வை | 48-61 |
| | ஆக்கத்திறன் - உரையாடல் | |
| | மொழிவளம் - தொடர்மொழிக்கு ஒருமொழி | |
| | இலக்கணம் - இடைச்சொல் | |
| 5. | நாட்டுப்புறமும் ஏட்டுப்புறமும் | 62-73 |
| | ஆக்கத்திறன் - கடிதம் - 1 | |
| | மொழிவளம் - பழமொழிகள் | |
| | இலக்கணம் - உரிச்சொல | |
| 6. | இரட்டையர் | 74-85 |
| | ஆக்கத்திறன் - கடிதம் - 11 | |
| | மொழிவளம் - உவமைத்தொடர்கள் | |
| | இலக்கணம் - வினையால் அணையும்பெயர்கள் | |

| எண் | பாடம் | பக்கம் |
|---|---|---|
| 7. | பல்சுவைப்பாடல்கள் | 86-100 |
| | ஆக்கத்திறன் - மின்னியல் கடிதம் | |
| | மொழிவளம் - அணிகள் | |
| | இலக்கணம் - வேற்றுமை - 1 | |
| 8. | புதுக்கவிதை | 101-111 |
| | ஆக்கத்திறன் - அழைப்பிதழ் | |
| | மொழிவளம் - பிறமொழிச்சொற்கள் | |
| | இலக்கணம் - வேற்றுமை - 2 | |
| 9. | மொழியும் மொழிவளர்ச்சியும் | 112-121 |
| | ஆக்கத்திறன் - விளம்பரம் | |
| | மொழிவளம் - பெயராக, வினையாக வழங்கும் சொற்கள் | |
| | இலக்கணம் - வேற்றுமை - 3 | |
| 10. | நாடகத்தின் பிரதான அம்சங்கள் | 122-131 |
| | ஆக்கத்திறன் - அறிக்கை | |
| | மொழிவளம் - எதிர்க்கருத்துச்சொற்கள் | |
| | இலக்கணம் - வேற்றுமை - 4 | |
| 11. | உபகதை | 132-146 |
| | ஆக்கத்திறன் - படிவம் நிரப்புதல் | |
| | மொழிவளம் - லகர,ழகர,ளகர பேதம் | |
| | இலக்கணம் - புணர்ச்சி - 1 | |
| 12. | எனது ஆசான் | 147-160 |
| | ஆக்கத்திறன் - சுருக்கம் எழுதுதல் | |
| | மொழிவளம் - ரகர,றகர பேதம் | |
| | இலக்கணம் - புணர்ச்சி - 2 | |

# 01 சிட்டுக்குருவி



சிறிய தானியம் போன்ற மூக்கு, சின்னக் கண்கள், சின்னத்தலை, வெள்ளைக்கழுத்து, அழகிய மங்கல வெண்மை நிறமுடைய பட்டுப்போர்த்த வயிறு; கருமையும் வெண்மையும் கலந்த சாம்பல் நிறத்தாலாகிய பட்டுப்போர்த்த முதுகு, சிறிய தோகை, துளித்துளிக் கால்கள்.

இத்தனையும் சேர்த்து ஒரு பச்சைக் குழந்தையின் கைப்பிடியிலே பிடித்து விடலாம். இவ்விதமான உடலைச் சுமந்து என் வீட்டிலே இரண்டு உயிர்கள் வாழ்கின்றன. அவற்றில் ஒன்று ஆண், மற்றொன்று பெண். இவை தம்முள்ளே பேசிக்கொள்கின்றன. குடும்பத்துக்கு வேண்டிய உணவு தேடிக்கொள்கின்றன. கூடுகட்டிக்கொண்டு, கொஞ்சிக் குலாவி மிக இன்பத்துடன் வாழ்ந்து முட்டையிட்டுக் குஞ்சுகளைப் பசியில்லாமல் காப்பாற்றுகின்றன.

சிட்டுக்குருவி பறந்து செல்வதைப் பார்த்து எனக்கு அடிக்கடி பொறாமையுண்டாகும். ஆஹா! உடலை எவ்வளவு லாவகத்துடன் சுமந்து செல்கின்றன இந்தக் குருவிக்கு எப்போதேனும் தலை நோவு வருவதுண்டோ? ஏது, எனக்குத் தோன்றவில்லை. ஒரு முறையேனும் தலைநோவை அனுபவித்த முகத்திலே இத்தனை தெளிவு இருக்க நியாயமில்லை. பயமும் மானமும் மனிதனுக்குள்ளது போலவே குருவிக்கும் உண்டு. இருந்த போதிலும், தினந்தோறும் மனிதருடைய நெஞ்சைச் செல்லரிப்பது போலே அரிக்குங்கவலைத் தொகுதியும், அதனால் ஏற்படும் நோய்த்திரளும் குருவிக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

தெய்வமே, எனக்கு இரண்டு சிறகுகள் கொடுக்க மாட்டாயா? பாழ்பட்ட மனிதக் கூட்டத்தையும், அதன் கட்டுகளையும், நோய்களையும் துன்பங்களையும், பொய்களையும் உதறி எறிந்துவிட்டு, நான் இச்சைப்படி வானத்திலே பறந்து செல்ல மாட்டேனா? ஆஹா! எத்தனை தேசங்கள் பார்க்கலாம்! எத்தனை நாடுகள், எத்தனை பூக்கள், எத்தனை மலைகள்! எத்தனை சுனைகள்! எத்தனை அருவிகள், எத்தனை நதிகள்! எத்தனை கடல் வெளிகள்! வெயில், மழை, காற்று, பனி இவையெல்லாம் என் உடம்புக்கு நன்றாய் வழக்கப்பட்டு, இவற்றால் நோய் உண்டாகாமல் எப்போதும் இன்ப உணர்ச்சிகளே உண்டாகும். இந்த நிலை எனக்கு அருள் புரியலாகாதா? குருவிக்குப் பேசத்தெரியும், பொய் சொல்லத் தெரியாது. குருவியில் ஆண், பெண் உண்டு; தீராத கொடுமைகள் இல்லை. குருவிக்கு வீடுண்டு; தீர்வை கிடையாது நாயகனில்லை; சேவகமில்லை.

தெய்வமே, எனக்கு இவ்விதமான வாழ்க்கை தரலாகாதா? குருவிக்கில்லாத



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக



பெருமைகள் எனக்கும் சில அருள் செய் திருக்கிறாய் என்பது மெய் தான். ஆராய்ச்சி, பக்தி, சங்கீதம், கவிதை முதலிய இன்பங்கள் மனிதனுக்குக் கைகூடும், குருவிக்கு இயல்பில்லை ஆனாலும், இந்த இரண்டுவித இயல்பும் கலந்து பெற்றால் நான் பரிபூரண இன்பத்தை அடைய மாட்டேனா?

இந்த குருவி என்னசொல்கிறது? 'விடு விடு விடு' என்று கத்துகிறது. இஃது நான் விரும்பிய இன்பத்திற்கு வழி இன்னதென்று தெய்வம் குருவித்தமிழிலே எனக்குக் கற்றுக்கொடுப்பது போல் இருக்கின்றது.

விடு, விடு, விடு - தொழிலை விடாதே, உணவை விடாதே, பேட்டை விடாதே, கூட்டத்தை விடாதே, குஞ்சை விடாதே, உள்ளக்கட்டை அவிழ்த்து விடு. வீண் யோசனையை விடு. துன்பத்தை விடு.

இந்த வழி சொல்வதற்கு எளிதாய் இருக்கின்றது. இதனை நன்றாக உணர்ந்து கொள்ளுதல் எளிதன்று. உணர்ந்த பின்னும் இவை பழக்கப்படுதல் அருமையிலும் அருமை.

'விடு' என்ற பகுதியிலிருந்து 'வீடு' என்ற சொல் வந்தது. வீடு என்பது விடுதலை இதை வடமொழியில் முக்தி என்கின்றார்கள் இந்த நிலமையை இறந்து போனதன் பின்பு பெற வேண்டும் என்று பெரும்பாலானோர் விரும்புகின்றார்கள். இவ்வுலக வாழ்க்கையிலேயே, இப்போதே, அந்நிலையை விரும்புதல் நன்று.

விடுதலையே இன்பத்திற்கு வழி; விடுதலை பெற்றோர் வறுமையிலிருந்து மாறிச்செல்வமடைவார்கள் மெலிவும் நோயும் நீங்கி வலிமையும் உறுதியும் பெறுவார்கள். சிறுமை நீங்கி பெருமை காண்பார்கள். துன்பங்கள் நீங்கி இன்பம் எய்துவார்கள்.

வா; நெஞ்சே, பராசக்தியை நோக்கிச் சில மந்திரங்கள் சாதிப்போம்.

நான் விடுதலை பெறுவேன்; எனது கட்டுக்கள் அறுபடும். நான் விடுதலை பெறுவேன் என் இச்சைப்படி எப்போதும் நடப்பேன். என் இச்சையிலே பிறருக்குத் தீங்கு விளையாது. எனக்கும் துன்பம் விளையாது. நன்மைகளே என்னுடைய இச்சைகள். இவற்றை நான் எப்போதும் நிறைவேற்றும்படியாகத் தினந்தோறும் எனக்குப் பிராணசக்தி வளர்ந்துக்கொண்டு வருக. உயிர் வேண்டுகிறேன் தலையிலே இடிவிழுந்தபோதிலும் சேதப்படாத வைர உயிர் உடலை எளிதாகவும், உறுதியுடையதாகவும் நேர்மையுடையதாகவும் செய்து காக்கின்ற உயிர்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

அறிவு வேண்டுகிறேன்; எந்தப்பொருளை நோக்குமிடத்து, அதன் உண்மைகளை உடனே தெளிந்து கொள்ளும் நல்லறிவு, எங்கும் எப்போதும் அச்சமில்லாத வலிய அறிவு.

பிறவுயிருக்குத் தீங்கு தேட மாட்டேன்; என்னுடைய உயிருக்கு எங்கும் தீங்குவர மாட்டாது.

பராசக்தி, நின்னருளால் நான் விடுதலைபெற்று இவ்வுலகத்தில் வாழ்வேன்.

சுப்பிரமணிய பாரதியார்
பாரதியார் கட்டுரைகள்.

### அரும்பத விளக்கம்

| | | |
|---|---|---|
| லாவகம் | - | எளிமையுடனான வேகம், அழகு |
| நோவு | - | வலி |
| கணந்தோறும் | - | ஒவ்வொரு வினாடியும் |
| கட்டுகள் | - | கட்டுப்பாடுகள் / விலங்கு |
| இச்சை | - | விருப்பம் |
| சுனை | - | நீரூற்று |
| தீர்வை | - | வரி |
| நாயகன் | - | தலைவன் |
| சேவகன் | - | வேலைக்காரன் / அடிமை |
| பரிபூரணம் | - | முழுமை |

### பயிற்சி

1. பாரதி விரும்பும் அறிவு எத்தகையது?
2. விடுதலை பற்றி ஆசிரியர் முன்வைத்த கருத்துக்கள் எவை?
3. பாரதி, கட்டுரையில் முன்வைத்துள்ள கருத்துக்கள் எந்தளவிற்குப் பொருத்தப்பாடு உடையன.
4. ‘விடு, விடு’ என்ற குருவியின் கத்தல் பாரதிக்குக் கற்றுக் கொடுத்தது யாது?
5. இக்கட்டுரையில் கையாளப்பட்டுள்ள மொழி நடையின் சிறப்பை எடுத்துக்காட்டுக.

### மொழித் தேர்ச்சிக்கான செயற்பாடுகள்

1. *சிட்டுக்குருவி பாடப்பகுதியை உணர்வு பூர்வமாக உனது நண்பனுக்கு வாசித்துக்காட்டுக.*
2. *சிட்டுக்குருவி பாடப்பகுதியை கருப்பொருளும் சுவையும் சிதையாமல் சுருக்கி உமது மொழிநடையில் எழுதுக.*
3. *உமது ஆசிரியருடன் கலந்துரையாடி பாரதியாரின் பறவைகள் பற்றிப் பாடல்களை தொகுத்துத் தருக.*



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## பந்தி அமைத்தல்

கருத்துள்ள பந்தியாக வகுத்து விபரிப்பது, எடுத்துக்கொண்ட பொருளைத் தெளிவுப்படுத்துவதற்கு ஏற்ற நல்ல முறையாகும். ஒவ்வொரு பந்தியும் திடமான ஒரு கருத்தை மையமாகக் கொண்டிருக்கும். பிரதான கருத்து ஒரு வாக்கியத்திலும் அமையலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கியங்களிலும் எடுத்துக் கூறப்படலாம். கூறவந்த கருத்தைத் தெளிவாக எடுத்துரைப்பதற்குப் பந்தியமைப்பு முக்கியமாக அமைகிறது. தான் கூறவந்த கருத்தை ஒழுங்குப்படுத்துவதற்கும், வாசிப்போர் மனதில் கருத்துக்கள் இலகுவில் பதியவும் பந்தியமைப்பு அவசியமாகிறது.

(1) இனிப் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுவோம்.

''யானையின் உருவம்'' எனும் கருத்தில் ஒரு பந்தியை எவ்வாறு உருவாக்கலாம். என்பதை நோக்குவோம்.

1. விலங்குகளிலே மிகபெரிய மிருகம்.
2. சுளகு போன்ற காது.
3. சிறிய கண்கள் இரண்டு.
4. நீண்ட பலம் பொருந்திய தும்பிக்கை.
5. நீண்டு வளர்ந்த தந்தம்.
6. நான்கு பெரிய கால்கள் உண்டு.

இக்கருத்துக்களை உள்ளடக்கி ஆசிரியரின் உதவியுடன் பந்தியொன்றை அமையுங்கள்.

இப்போது பந்தியொன்றை அமைப்பதற்கான சில ஆற்றல்களைப் பெற்றிருப்பீர்கள்.

- ✔ குறித்த விடயம் பற்றிய குறிப்புக்களை வாக்கியங்களாக எழுதுதல்.
- ✔ குறிப்பு வாக்கியங்களை ஒழுங்குப்படுத்துதல்.
- ✔ ஒழுங்கமைத்த முறைக்கேற்ப வாக்கியங்களை இணைத்துத் தெளிவாகவும், வாசகர் மனத்திற் பதியும்படியாகவும் கருத்துள்ள பந்தியை அமைத்தல்.

### பயிற்சி

பின்வரும் வாக்கியங்களை ஏற்றவகையில் ஒழுங்குப்படுத்தி ஒரு பந்தியாக எழுதுங்கள்.

01. (அ) புதர்களிலோ, மரத்தின் கிளைகளிலோ மாத்திரம் அமர்ந்து அது பாடுவது இல்லை.

(ஆ) வானில் மிக உயரத்திற்குச் சிறு புள்ளியாகக்கூடத் தெரியாத அவ்வளவு உயரத்திற்குச்சென்று அங்கு பறந்தபடி பாடும்.

(இ) வானம்பாடி ஒரு பறவை, இனிமையாகப் பாடக்கூடியது.

(ஈ) அவ்வினிய ஓசையைக் கேட்டு மக்கள் பரவசமடைவார்கள்.

(உ) அப்பொழுது அந்தப் பாடல் மென்மைமிக்க இனிய இசையாகும். எங்கும் கேட்கும்.

02. (அ) இலக்கியம், நுண்கலைகள், அறிவியல் போன்ற யாவும் ஆக்கக் கற்பனைகளின் விளைவுகளேயாம்.

(ஆ) முன்னர் நாம் அனுபவித்த நிகழ்ச்சியொன்றினை மீண்டும் நமது மனக்கண் கொண்டு நோக்குதல் மீள் ஆக்கம் கற்பனையாகும்.

(இ) கற்பனை இரண்டு வகைப்படும்.

(ஈ) ஆனால் பழைய அனுபவங்களின் பிம்பங்களைப் புதிய முறையில் நாம் தொகுத்து அமைப்போமாயின் அது ஆக்கக் கற்பனையாகும்.

(உ) அவை மீள் ஆக்கக் கற்பனை, ஆக்கக்கற்பனை என்பனவாகும்.

## பந்தியின் பண்புகள்

**பின்வரும் பந்திகளை அவதானியுங்கள்.**

01. *நாடகத்திலே உரையாடல் முக்கியமாக அமைகிறது. கதாபாத்திரங்களின் உரையாடல்கள் அந்தந்தப் பாத்திரங்களுக்குப் பொருத்தமானதாக அமைய வேண்டும்; அப்பேச்சுக்கள் அவர்களுக்கு இயற்கையாக அமைவனவாக இருத்தல் வேண்டும். உலக வாழ்க்கையில் அவர்களின் நிலையில் உள்ளவர்கள் எவ்வாறு பேசுவார்களோ அவ்வாறு பேச்சுக்கள் அமைதல் வேண்டும். கற்பனைப் பாத்திரங்களையும் கற்பனை நிகழ்ச்சிகளையும் பார்ப்பவர்க்கு உண்மை போலத் தோன்றுமாறு அமைக்க வேண்டும்.*

02. *வெளிச்சவீடுகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். திண்ணிய நிலத்திலே கட்டப்படுவது ஒருவகை. அலை மோதும் கடற்பாறைகளிற் கட்டப்பட்டவை மறுவகை. நிலத்திலே கட்டுவது சுலபம். அது வீடு கட்டுவது போலிருக்கும். விரைவாகவும் கட்டிமுடித்து விடலாம். ஆனால் கடற்பாறையிலே, கடலின் நடுவில் வெளிச்சவீடு கட்டுவதென்பது சுலபமான காரியமா? கட்டுவோர் எத்துணை இடர்ப்பட வேண்டியிருக்கும்? அப்படி ஒரு வெளிச்சவீட்டைக்கட்டப் பல வருடங்கள் செல்லும். அலைகள், பேரலைகள், நீரோட்டங்கள், சுழிகள், புயல்கள் என்ற பல இடர்களை எதிர்க்கொள்ள வேண்டும். கட்டுபவன் கடல் அலைகளுடன் நெடுங்காலம் போராட வேண்டி வரும்.*

**மேலுள்ள பந்திகளின் பண்புகளை நோக்குவோம்.**

01. தலைமைக்கருத்தைக் கொண்டிருத்தல் - முதல் பந்தியில் ‘‘நாடகத்தில் உரையாடலின் முக்கியத்துவம்". இரண்டாவது பந்தியில் ‘‘வெளிச்சவீடுகளை அமைத்தல்" என்பதாகவும் தலைமைக்கருத்துக்கள் வந்துள்ளன. எனவே பந்தியின் தலையாய பண்புகளில் ஒன்று **தலைமைக் கருத்தைக் கொண்டிருத்தலாகும்.**

02 தலைமைக்கருத்தை ஐயந்திரிபுகளுக்கு இடந்தராதவாறு ஆணித்தரமாக முன்வைத்தல் பந்தியமைப்பின் இன்னொரு முக்கிய அம்சமாகும். அதாவது தலைமைக்கருத்தை அறிமுகம் செய்த முதல் வாக்கியத்தை நின்று

வற்றவிடாமல் அடுத்துவரும் வாக்கியங்களிலே உதாரணங்காட்டல், நியாயங்கூறல், விளக்கந்தருதல் முதலிய முறைகளினால் விரித்துத் தெளிவாக்குதல் வேண்டும்.

✸ மேலுள்ள பந்தியில் இந்த பண்புகள் உள்ளனவா? உங்கள் ஆசிரியருடன் கலந்துரையாடி இனங்காணுங்கள்.

03. வாசகர்கள் கேட்கக்கூடிய வினாக்களுக்கு விடைதருவதாகப் பந்திகள் அமைந்திருக்க வேண்டும்.

## பந்தியில் தவிர்க்கப்பட வேண்டியவை

1. கூறியதுகூறல்
2. மிகைப்படக் கூறல்
3. முன்னுக்குப்பின் முரணாகக்கூறல்
4. தேவைக்கேற்ற அளவு ஒரு பொருள் பற்றிக் கூறாது விடுதல்
5. சொல்லவந்த பொருளை விடுத்து, வேறு ஒரு பொருளைப்பற்றிச் சொல்லுதல்.

## பந்தியை விரித்து வளர்ப்பதற்கான வழிகள்

எடுத்துக்கொண்ட தலைப்புக்கும், நோக்கத்துக்கும் ஏற்றவாறு பந்திகளைப் பல வழிகளில் விரித்து வளர்க்கலாம் அவ்வழிகள் சில கீழே தரப்படுகின்றன.

01. விவரங்கள் தந்து விரித்தல்
02. ஒற்றுமை, வேற்றுமை காட்டி விரித்தல்
03. உதாரணங்காட்டி விரித்தல்
04. நிகழ்ச்சிகளை விரித்து விரித்தல்
05. நியாயங் கூறி விரித்தல்
06. விளக்கங் கூறி விரித்தல்
07. காரண காரியங்கள் கூறி விரித்தல்

## பயிற்சி

01. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து இரண்டு பந்தியாகப் பிரித்து எழுதவும்.

*இத்தகையதொரு சூழ்நிலையிலேயே பேராதனைப்பல்கலைக்கழகத்தில் 1970களின் ஆரம்பத்திலிருந்து தமிழ்ப் பேராசிரியராகவும் தமிழ்த்துறைத் தலைவராகவும் தமிழ்ச்சங்கத்தின் பெருந்தலைவராகவும் விளங்கிய பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள், பட்டப்பின் படிப்பு மாணவர்களின் ஆய்விற்கான விடயங்களைப் பொறுத்தவரை, கண்டிப்பானதொரு நடைமுறையைக் கடைப்பிடிக்கலானார். அவரது பேரார்வத்தினால், இலங்கையிற் பட்டப்பின் படிப்பிற்கான ஆய்வினை மேற்கொள்வோர் இலங்கைத் தமிழியல் தொடர்பான விடயங்களையே ஆய்வுப் பொருளாக மேற்கொள்ள வேண்டும் என்ற ஒரு நிர்ப்பந்த நிலை உருவாகிற்று. அதே சமயம் பல்கலைக்கழகங்களுக்கு வெளியிலும் இத்தகைய ஒரு நிலைமை சற்று முன்னதாகவே வளர்ச்சியடையலாயிற்று. இத்தகைய நிலைமையை மேலும் முன்னெடுத்துச் செல்லும் வகையில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் செயற்பாடுகளும் சாதனைகளும் அமையலாயின. அச்சங்கத்தினை முன்னின்று நடாத்தியவர்களுள் அதிகமானோர் பேராசிரியர் வித்தியானந்தனின் அபிமானத்திற்குரிய மாணவர்களும் அம்மாணவர்களின் அபிமானத்திற்குரியவர்களுமே என்பது இங்கு அவதானிக்கத்தக்கது.*

*பேராசிரியர் க. அருணாசலம்*
*இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள்.*

02. மேலே விரித்து எழுதிய பந்திகளின் தலைமைக்கருத்தைத் தருக.

***ஒப்படை 1***

ஆசிரியரினால் தரப்படும் கட்டுரையொன்றை வாசித்து அதில் வரும் ஒவ்வொரு பந்திகளினதும் தலைமைக்கருத்துக்களை தொகுத்து ஒப்படையை சமர்ப்பிக்கவும்.

***ஒப்படை 2***

பின்வரும் தொனிப்பொருள்களில் பந்திகளை எழுதுக.

1. கல்வியின் முக்கியத்துவம்
2. கல்வி பெறும் வழிகள்
3. கல்வி இன்மையால் ஏற்படக்கூடிய இடர்கள்

# பேச்சுத் தமிழ்

ஒரு மொழியில் இருவேறுப்பட்ட வடிவங்களே பேச்சுமொழியும், எழுத்து மொழியுமாகும். மனிதர்கள் நாள்தோறும் தங்களின் தொடர்பாடல் கருமங்களுக்கு பெரும்பான்மையாகப் பேச்சுத் தமிழையே உபயோகிக்கின்றனர். எழுத்து மொழியை விட, பேச்சு மொழியே வலிமையும், உயிர்ப்பும் உடையது என்பது மொழியியலாளர்களின் கருத்தாகும். உரையாடல், நாடகம், நாவல், சிறுகதை, கவிதை போன்ற இலக்கியவடிவங்களெல்லாம் இன்று பேச்சு வழக்கில் எழுதப்படுவதை நீங்கள் அறிவீர்கள். இவற்றுக்கு, சில உதாரணங்கள் கீழே தரப்படுகின்றன.

'ஆயிரந்தான் இருந்தாலும் படிப்பைப்போல் வருமோனை' நான் கூட நல்ல இடத்திலை பேரும் பணமும் உள்ள அப்பனுக்குப் பெண்ணாகப் பிறந்தன். இப்ப அதெல்லாம் எங்கே? கொஞ்சமாவது படிச்சிருந்தன் எண்டால் கனகசபாபதியின்ரை மூத்தபெட்டையை போல எங்கினையன் என்டாலும் படிப்பிக்க மாட்டேனோ?

*(கடற்காற்று-வை.அ.கைலாசநாதன்)*

'அஸ்லாமு அலைக்கும்!' முப்பது வருஷத்திற்கு முந்தி நடந்த போட்டியிலேயும் நூகுத்தம்பிதான் வெத்தினார்' அண்டெய்க்கி அந்தெ வெத்தியே என்டெ வரட்டுக்கவுரவெம் ஒத்துக்கெல்லே. அண்டெய்க்கிம் இண்டெய்க்கிம் இவருதான் வெத்திவீரன்' என்றவர் உடனே முப்பது வருடங்களுக்கு முன்னர் ஊர் மக்கள் தன்னைப் போர்த்தி சங்கை செய்த மக்கத்துச் சால்வையை இடுப்பிலிருந்து பவ்வியமாக எடுத்தார் சால்வையின் இருகரைகளையும் ஒன்றாகப் பிடித்து உதறியவராக அதே வேகத்தில் நூகுத்தம்பி மஸ்தானையும் போர்த்தியும் விட்டார். இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகாவது சங்கைக்குரியவருக்கே சால்வையை வழங்கிவிட்ட திருப்தியில் பாவச் சுமை கழன்றுவிட்ட ஆனந்தத்தில் அவரின் கண்கள் கசிந்தன.

*(மக்கத்துச்சால்வை எஸ்.எல்.எம். ஹனிபா)*

அட எஞ்செருப்ப எனக்குக் காதுகுத்தப் பாக்கிறியளே! எனக்கு என்னா வயசிருக்கும்? சொல்லுங்க பார்ப்போம். அதானே, நாப்பதுக்கு மேல சொல்ல மாட்டீங்கன்னு தான் எனக்குத் தெரியுமே, ஐம்பத்தைஞ்சுக்கு மேல் ஆகுதையா, அதை சொன்னா 'பென்சின்' குடுத்துடுவான்னு தோட்டத்துல ரெண்டொரு வயசு கொறச்சே சொல்லி வச்சிருக்கேனாக்கும் ம்........கையப் பாத்திஹளா,இப்பத்தான் கொஞ்சம் தளர்ந்து பேச்சுது என் வயசில'குஸ்தி', 'செலம்பம்' எல்லாம் வெளையாடியிருக்கேன். அது அந்தகாலத்து சாப்பாடுய்யா. கௌமைக்கு அரைப்புசல் தருவான் ஒரூவா காசைத்தூக்கிப் போட்டுக்கிட்டு போனாக்கா ஒரு வண்டி சாமான் கொண்டாரலாமே தெனம் உருளக்கெழங்கு, மைசூருபருப்பு, கருவாடு இத்தியாதி...

*(நாகசேனை தோட்டத்து நரசிம்மன் கங்காணி - ஆனந்தராகவன்)*

பேச்சு மொழி இன்று இலக்கியங்களில் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது என்பது தெளிவாகிறது. இனிப் பேச்சு மொழி குறித்துப் பேராசிரியர் - நு.ஃமான் அவர்களின் வகைப்பாட்டை நோக்குவோம்.

*பேச்சுத்தமிழ் தன்னுள்ளே பிரதேச ரீதியிலும் சமூகரீதியிலும் அமைந்த அநேக வேறுபாடுகளைக் கொண்டுள்ளது, இந்தியத்தமிழ், இலங்கைத்தமிழ் போன்றனவும் இந்தியத்தமிழில் சென்னைத்தமிழ், திருநெல்வேலித்தமிழ், தஞ்சாவூர்த் தமிழ் போன்றனவும் இலங்கைதமிழில் யாழ்ப்பாணத் தமிழ், மட்டக்களப்புத்தமிழ், மலையகத்தமிழ் போன்றனவும் பிரதேச வழக்குகளாகும். இவற்றை மொழியியலாளர் பிரதேசக்கிளை மொழிகள் (Regional Dialects) என்பர்.*

*பிராமணத்தமிழ், பிராமணரல்லாதார் தமிழ், முஸ்லீம் தமிழ், கிறிஸ்தவத்தமிழ், மீனவத்தமிழ் போன்றவை சமூக வேறுபாடுகளால் பேச்சுவழக்குகளாகும். இவற்றைச் சமூகக் கிளை மொழிகள்(Social Dialects)என அழைப்பர்.*

(1) பிரதேசக்கிளைமொழி

(2) சமூகக்கிளைமொழி

என்பவை பேச்சுவழக்கின் இரு வடிவங்களாகும் என்பதை மேற்போந்த மேற்கோளில் இருந்து அறிந்திருப்பீர்கள். உங்களின் வாசிப்பின் போது இடர்படாது இருக்க இவ்வகையான வழக்குகளை அறிந்திருப்பது அவசியமாகும்.

## பிரதேசக் கிளைமொழி

### வடக்குப்பிரதேசக் கிளைமொழி

| | பிரதேசவழக்கு | | பொதுவழக்கு |
|---|---|---|---|
| 01. | வித்துப்போட்டான் | - | விற்றுப்போட்டான் |
| 02. | காத்து | - | காற்று |
| 03. | மாத்து | - | மாற்று |
| 04. | முத்தம் | - | முற்றம் |
| 05. | குத்தம் | - | குற்றம் |
| 06. | சோத்துப்பானை | - | சோற்றுப்பானை |
| 07. | வெத்திலை | - | வெற்றிலை |
| 08. | பெத்தவள் | - | பெற்றவள் |
| 09. | கோவம் | - | கோபம் |
| 10. | பாபம் | - | பாவம் |
| 11. | உசிர் | - | உயிர் |
| 12. | மசிர் | - | மயிர் |
| 13. | வகிறு | - | வயிறு |

### *கிழக்குக்கிளைமொழி*

| | | |
|---|---|---|
| வாறாங்க | - | வருகிறார் |
| செய்வாங்க | - | செய்வார்கள் |
| போவாங்க | - | போவார்கள் |
| மறுகா | - | பிறகு, பின்பு |
| கிறுகி | - | திரும்பி |

| | | |
|---|---|---|
| முல்லைக்காரன் | - | வயலைக்குத்தகைக்கு எடுத்துச்செல்பவன். |
| வண்ணக்கர் | - | கோயிற்பரிபாலகர் |
| சாமத்திய வீடு | - | சடங்குவீடு |
| பந்தற்கால் | - | திருமணத்தையிட்டு நடப்படும் முள்முருங்கை மரம். |
| அடுக்களை | - | சமையலறை |

## தெற்குக்கிளைமொழி

| | | |
|---|---|---|
| உறுலோசு | - | கடிகாரம் |
| சல்லி | - | பணம் |
| ஆப்ப | - | அப்பம் |
| இடியாப்ப | - | இடியாப்பம் |
| புட்டுவம் | - | கதிரை |
| பள்ளி | - | பாடசாலை |
| கறி | - | இறைச்சி |
| கந்தூரி | - | சமய சார்பான விசேட தினங்களில் அன்னதானம் வழங்கும் வைபவம் |
| மீலாத் | - | பிறந்த நாள்விழா |
| மத்ராஸா | - | இஸ்லாமிய அறநெறிபாடசாலை |
| கிதாப் | - | புத்தகம் |
| ஷஹீப் | - | இஸ்லாத்திற்காகப் போரிட்டு வீரமரணமடைதல் |
| றிஸ்க் | - | உணவு |

## மலையகக்கிளைமொழி

| | | |
|---|---|---|
| பொழப்பு | - | பிழைப்பு |
| பொணம் | - | பிணம் |
| புள்ளே | - | பிள்ளை |
| ஒரல் | - | உரல் |
| எலை | - | இலை |

| | | |
|---|---|---|
| அங்கிட்டு | - | அங்கே |
| இங்கிட்டு | - | இங்கே |
| எங்கிட்டே | - | என்னிடம் |
| அம்புட்டு | - | அவ்வளவு |
| அப்புறம் | - | அதற்குபின்பு |

## சமூகக்கிளைமொழிகள்

### விவசாயச்சமூகம்

| | | |
|---|---|---|
| நடையன் | - | சூடுமிதிக்கும் எருதுகள் |
| உப்பட்டி | - | அறுவடை செய்யப்பட்ட அருவக்கூறுகள் |
| குல்லம் | - | சுளகு |
| களக்கட்டை | - | சூடுமிதித்தலின் போது எருதுகள் இணைக்கப் படும் நடுதடி |
| கேட்டி | - | எருதுகளை விரட்டும் சிறுதடி |
| பொலிக்கொடி | - | வைக்கோல் |
| கோல் | - | சாணம் |
| நாட்டான் | - | மேற்புறம் அகன்றும், கீழ்ப்புறம் ஒடுங்கியுமுள்ள மண்வெட்டி |
| பிக்கான் | - | சற்சதுரமாகவோ நீள்சதுரமாகவோ அமைந்துள்ள மண்வெட்டி |
| கொத்துதல் | - | ஆழமாக மண்ணைக் கிளறுதல் |
| கட்டை பிடுங்குதல் | - | மரம், செடி, கொடிகளிலுள்ள நிலத்தைக் கொத்தி பண்படுத்தல் |

### *மீனவச்சமூகம்*

| | | |
|---|---|---|
| கட்டு மரம் | - | சிறுதோணி |
| கரைவலை | - | கரையோரங்களிற் பயன்படுத்தப்படும் வலை |
| கென்மீன்கூடு | - | தென்னை ஈர்க்கினாற் செய்யப்படும் மீன் பிடிப்பதற்கான கூடு |
| எறிவலை | - | வலைவீசி மீன்பிடித்தல், இதனை வீச்சுவலை எனவும் கூறுவர் |



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

| | | |
|---|---|---|
| மண்டா | - | மீன்குத்தும் தடி |
| அட்டாளை | - | 3 அல்லது 4 அடி உயரமாக அமைக்கப்படும் மேசை வடிவில் அமைந்த பரண். |
| அம்மாறு | - | கொந்தளிப்பு |
| கொண்டல் | - | கிழக்குத்திசையிலிருந்து வீசும் காற்று. |
| செக்கல் | - | இருள் சூழும் மாலை நேரம். |
| கச்சான் | - | மேற்குத்திசையிலிருந்து வீசும் காற்று. |
| வெள்ளிடி | - | துக்க சம்பவம் |
| ஆலாப்பறத்தல் | - | அவசரப்படுதல் |
| செட்டுப்பிடிச்சவன் | - | ஆணவமுள்ளவன் |
| ஆத்துப்பறக்க | - | மிகவும் விரைவாக |
| அணியம் | - | மரக்கலத்தில் துடுப்பு வலிப்பவர் இருக்கும் இடம். |

*இலங்கைத்தமிழ் - தொலைக்கல்வி ஆசிரியர் - கையேடு*

## பயிற்சி

1. எமது பிரதேசத்தின் தனித்துவமான பேச்சுவழக்கு சொற்களை சேகரித்து பட்டியல் படுத்துவோம்.
2. இலக்கியத்தொகுப்பிலுள்ள சிறுகதைகளில் காணப்படும் பேச்சு வழக்குச் சொற்களை இனங்கண்டு அவற்றுக்குப் பொருத்தமான பொதுவழக்குச் சொற்களை எழுதுக.

## வாக்கிய வகைகள்

ஒரு கருத்தைப் பூரணமான முறையில் வெளியிடுவது வாக்கியமாகும். இதனை முற்றுத் தொடர்மொழி எனவும் கூறலாம்.

ஒருவருடைய எண்ணம், உணர்ச்சி, விருப்பு என்பவற்றை முழுமையாக புலப்படுத்துவதற்கு வாக்கியம் பயன்படுகிறது.

வாக்கியம் மூலமாக எந்தவொரு கருத்தையும் பூரணமாக வெளியிடும் போது அங்கே

*பேசுவோன்*
*கேட்போன்*
*பேசப்படும் பொருள்*
*அப்பொருளை உணர்த்தும் சொற்கள்*

எனும் நான்கு பகுதிகள் இடம் பெறுவதைக் காணலாம்.

வாக்கியங்களை அதன் அமைப்பு அடிப்படையில்

*தனிவாக்கியம்*
*தொடர்வாக்கியம்*
*கலப்பு வாக்கியம்*
*கூட்டுவாக்கியம்*

என நான்கு வகையாக வகைப்படுத்தலாம்.

### தனிவாக்கியம்

பின்வரும் வாக்கியங்களை நோக்குவோம்.

*குயில் கூவியது.*
*நான் ஒரு மாணவன்.*
*மயில் அழகாக ஆடியது.*
*ஆசிரியர் மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார்.*

இவ்வாக்கியங்களில் நாம் அவதானிக்கக்கூடிய பண்புகள்

* ஒரு எழுவாயும் ஒரு பயனிலையும் கொண்டுள்ளது.

| எழுவாய் | பயனிலை |
|---|---|
| குயில் | கூவியது |
| நான் | மாணவன் |
| மயில் | ஆடியது |
| ஆசிரியர் | வழங்கினார் |

* ஒவ்வொரு வாக்கியமும் ஒரு கருத்தை மையமாகக் கொண்டுள்ளது.
* எழுவாய், பயனிலைகள் அடைமொழிகளைக் கொண்டுள்ளன.

எனவே,

***ஓர் எழுவாயின் முற்றுப்பெற்ற ஒரேயொரு கருத்தை உணர்த்துவது தனிவாக்கியம் எனப்படும்.***

## தொடர்வாக்கியம்

பின்வரும் வாக்கியத்தை அவதானத்துடன் வாசிப்போம்.

*பச்சைக்கிளி சுதந்திரமாகப் பறந்து, திரிந்து, பாடி மகிழ்ந்தது.*

இவ்வாக்கியத்துள் பறத்தல், திரிதல், பாடுதல், மகிழ்தல் ஆகிய செயல்கள் இடம்பெற்றுள்ளதை அவதானித்திருப்பீர்கள்.

இவ்வாக்கியத்தை பின்வருமாறு நான்கு வாக்கியங்களாகப் பிரித்து எழுதலாம்.

1. *பச்சைக்கிளி சுதந்திரமாகப் பறந்தது.*
2. *பச்சைக்கிளி திரிந்தது.*
3. *பச்சைக்கிளி பாடியது.*
4. *பச்சைக்கிளி மகிழ்ந்தது.*

எனவே,

**ஓர் எழுவாயின் பல செயல்களில் ஒரு செயல் மாத்திரம் முற்றுப் பயனிலையாக அமைய, ஏனையவை எச்சங்களாகத் தொடர்ந்து வருவதாக அமைகின்ற வாக்கியங்கள் தொடர்வாக்கியங்கள் எனப்படும்.**

* ஒரே எழுவாயில் பல செயல்களைக் கூறும் தனிவாக்கியங்களை ஒரு வாக்கியமாக அமைக்கும் போது பின்வரும் சில விதிகளை கவனிக்க வேண்டியது அவசியமாகும்.

**(அ) வினைமுற்றுக்களை எச்சமாக்கல்**

பறந்தது - பறந்து        பாடியது - பாடி

திரிந்தது - திரிந்து        ஆடியது - ஆடி

**(ஆ) எண்ணும்மையைச் சேர்த்தல்**

கண்ணன் சுவையான உணவுகளை உண்டும்,

பாடியும், விளையாடியும், ஓய்வு நேரத்தைக்கழித்தான்.

**(இ) வேற்றுமை உருபுகளைச் சேர்த்தல்**

சந்திரன் பாடங்களைக் கவனமாகக் கற்றதனால்,
பரீட்சையில் சித்தியடைந்தான்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

(ஈ) அடைமொழியாக்கல்

எட்டயபுரத்தில் பிறந்து, சமஸ்தான புலவராக இருந்த பாரதி இருபதாம் நூற்றாண்டின் *இணையில்லாத மகாகவியாக* புகழ் பெற்றார்.

## கலப்பு வாக்கியம்

**பின்வரும் வாக்கியத்தை கவனிப்போம்.**

திராவிட மொழி குடும்பத்தில் தமிழ் மொழியும் ஒன்று என்பது மொழி ஆய்வாளர்களின் முடிவாகும்.

இவ்வாக்கியத்தில் ''மொழி ஆய்வாளர்களின் முடிவாகும்'' - என்பது தலைமை வாக்கியமாகும்.

''திராவிடமொழிக் குடும்பத்தில் தமிழ்மொழியும் ஒன்று'' - என்பது சார்பு வாக்கியம் ஆகும்.

*எனவே,*

***தலைமை வாக்கியத்தோடு ஒரு சார்பு வாக்கியமோ அல்லது பல சார்பு வாக்கியங்களோ இணைந்துவருவது கலப்பு வாக்கியமாகும்.***

## கூட்டு வாக்கியம்

**பின்வரும் வாக்கியங்களை கவனமாக அவதானிப்போம்.**

1. *பறவைகள் விடியுமுன் எழுந்தன; கீச்கீச்சென ஒலியெழுப்பின; கூட்டமாகப் பறந்து சென்றன.*

2. *மேகம் கறுத்தது; மழை கொட்டியது; வெள்ளம் பாய்ந்தது.*

முதலாவது வாக்கியத்தில் ஓர் எழுவாய் பல பயனிலைகளைக்கொண்டு வந்தமையை அவதானித்திருப்பீர்கள்.

இரண்டாவது வாக்கியத்தில் பல எழுவாய்களும் பல பயனிலைகளையும் கொண்டு வந்துள்ளமையை அவதானித்திருப்பீர்கள்.

*எனவே,*

***ஓர் எழுவாயும் பல பயனிலைகளும் அல்லது பல எழுவாய்களும் பல பயனிலைகளையும் கொண்டு அமைகின்ற வாக்கியம் கூட்டு வாக்கியம் எனப்படும்.***

## குறிப்பு:

நெருங்கிய பொருட் தொடர்பு காரணமாகவே கூட்டுவாக்கியங்கள் அமைகின்றன.

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களை இனங்கண்டு எழுதுக**

(அ) கிளி பறந்தது.

(ஆ) பறவைகள் பாடிப் பறந்தன.

(இ) வானில் நிலா உதித்தது, நட்சத்திரங்கள் கண்சிமிட்டின.

(ஈ) பாரதி ஒரு மகாகவி என்பது இலக்கிய ஆய்வாளர்களின் கருத்தாகும்.

(உ) நிஷாம் கவனமாக படித்து பரீட்சையில் சித்தியடைந்தான்.

**பின்வரும் வாக்கியங்களை கூட்டுவாக்கியமாக்குக.**

1. (அ) நான் இரவில் படித்தேன்.
   (ஆ) நான் பகலில் படித்தேன்.
2. (அ) ரகு மிக சிறந்த எழுத்தாளர்.
   (ஆ) அவர் என் நண்பர்.
3. (அ) மிகப்பெரிய பரப்பைக் கொண்டது தமிழ் பாடம்.
   (ஆ) தமிழ் பாடம் கற்பதற்கு இலகுவானது.
4. (அ) எட்வட் மட்டக்களப்பில் பிறந்தான்.
   (ஆ) புனித மைக்கல் கல்லூரியில் கல்விக்கற்றான்.

**ஒப்படை**

சிட்டுக்குருவி பாடப்பரப்பில் இடம் பெற்றுள்ள

தனிவாக்கியங்கள்

தொடர்வாக்கியங்கள்

கூட்டுவாக்கியங்கள்

கலப்பு வாக்கியங்கள் என்பவற்றை இனங்கண்டு எழுதுக.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

02

# சிறுகதை இலக்கணம்



சிறுகதைக்குள்ள இலக்கணத்தைக் கவனிப்போம். 'தனியாகச் சிறுகதைக்கென்று, எந்த இலக்கணமும் கிடையாது. வரை முறை கிடையாது, பண்புகள் கிடையா' என்றெல்லாம் சிலர் சொல்வார்கள். ஆனாலும், அவை நடைமுறையில் உலகெங்கும் இருக்கவே செய்கின்றன. இலக்கண வரம்புகளுக்கு உட்பட்டு எழுதுவோரும் உண்டு, உட்படாமல் சொந்த வரம்புகளை மேற்கொள்வோரும் உண்டு. வரம்புகளைத் தெரிந்து கொள்ளாமலே எழுதுவோரும் உண்டு. என்றாலும், சிறுகதைக்கெனத் தனிப் பண்புகளோ இலக்கணமோ இல்லையென்று கூறிவிட முடியாது. சிறுகதைக்கென நூற்றைம்பது ஆண்டு காலப் புதிய மரபு ஒன்று தோன்றி விட்டது.

இலக்கியத்தரமுள்ள உரைநடைச் சிறுகதைகள் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இர்விங், ஆலன்போ போன்றவர்களால் அமெரிக்காவிலும், துர்கனேவ், செக்காவ் முதலியோரால் ருஷ்யாவிலும், மாப்பஸான் போன்றோரால் பிரான்ஸிலும் எழுதப்பட்டுவிட்டன. இவ்வாறு உலக இலக்கியத்துக்குச் சிறந்த சிறுகதைகள் கிடைத்ததையடுத்து, 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் சிறுகதையின் பொதுவான தன்மைகள் குறித்து, ஆய்வுக் கருத்துக்கள் வெளிவந்தன. அதுவரை வெளிவந்த சிறுகதைகளில் காணப்பட்ட பொதுவான பண்புகளை உற்று நோக்கிச்சில வரைமுறைகளை ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

சிறுகதை என்றால், அது அளவில் சிறிதாக இருக்க வேண்டும். தனிமனித வாழ்க்கை அல்லது சமுதாய வாழ்க்கையின் ஒரு குறிப்பிட்ட போக்கை அது சுவையோடு பிரதிபலிக்க வேண்டும். கதையின் கருப்பொருள் வாழ்க்கையோடு தொடர்புகொண்ட எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். ஒரு கதாபாத்திரத்தின் இயல்பைக் கூறுவதாகவோ, ஆழமான மனித உணர்வுகளில் ஒன்றை வெளிப்படுத்துவதாகவோ, வாழ்க்கையின் ஒரு நிகழ்ச்சியைச் சுவைபட எடுத்துரைப்பதாகவோ, வாழ்க்கையின் ஒரு சிக்கலை அழகாக அல்லது அழுத்தமாக எடுத்துக்காட்டுவதாகவோ இருக்கலாம். ஆனால் ஒரு மனிதர், அல்லது ஓர் உணர்வு, அல்லது ஒரு நிகழ்ச்சி, அல்லது ஒரு சிக்கல் தான் அதில் தலைதூக்கி நிற்க வேண்டும். நாவலின் சுருக்கம் சிறுகதை ஆகாது.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

மேலும் அளவுக்கதிகமான கதை மாந்தருக்குச் சிறுகதையில் இடமில்லை. பல நிகழ்ச்சிகளும், பல்வேறு நிலைக்களன்களும் சிறுகதைக்கு அவசியமற்றவை. விரிவான பாத்திர வர்ணனை இவற்றுக்கு நாவல் இடம் கொடுக்குமே தவிரச் சிறுகதை இடம் தராது. குறைவான சொற்களால் - ஏற்ற சொற்களால் அங்கங்கே ஒவ்வொன்றையும் சுட்டிக்காட்ட வேண்டுமே தவிர, எல்லாவற்றையும் விளக்கக்கூடாது. பாத்திரங்களின் உரையாடலிலும் சொற்செட்டு மிகமிக அவசியமானது. அளவில் கதை சிறிதாக இருந்தாலும், கட்டுக்கோப்புக் குலையாத ஒரு முழுமை அதற்கு வேண்டும். இறுக்க மான ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புள்ள - செறிவு வேண்டும் சிறுகதைக்கு. கதை நம்பக்கூடியதாக உண்மையைப் போன்ற ஒரு தோற்றமுடையதாக அமைய வேண்டும். சிறுகதையைப் பற்றி எழுதுவோர், 'சிறுகதை இலக்கணம் இதுதான்' என்று வெளிப்படையாகக் கூறா விட்டாலும், அவர்கள் கூறியுள்ள புறக்கட்டுப்பாட்டு விதிகள் இவற்றையொட்டியே இருக்கின்றன.

இலக்கணத்தில் முழுத்தேர்ச்சி பெற்றுவிட்டால் மட்டிலும் எப்படி இலக்கிய நய முள்ள கவிதையை இயற்றிவிட முடியாதோ. அதே போல் தான் சிறுகதையின் வரம்புகளை அறிவதால் மட்டும் எழுதிவிட முடியாது. சிறுகதைக்கான புற ஒழுங்கு விதிகள் இவை. ஆனால் பிறவகை இலக்கியப் படைப்பைப் போலவே சிறு கதையும் உயிர்த்துடிப்பு ள்ளது. எந்த உணர்ச்சியை அல்லது கருத்தை அது தன்னகத்தே கொண்டிருக்கிறதோ அதைப் படிப்பவரின் நெஞ்சில் மின்வெட்டைப்போல் பாய்ச்சும் ஆற்றல் சிறுகதைக்கு வேண்டும். படித்து முடித்தவுடன் படித்தவர் உள்ளத்தில் எது ஊற்றுப் பெருக்கைப் போல் உணர்ச்சிகளைப் பூத்துச் சொரி கிறதோ அதுவே, சிறந்த சிறுகதை என்று கொள்ளலாம் கதைக்குப் பின்னே உள்ள கதாசிரியரின் கலையாற்றல், கற்பனைத்திறன், சொல்லாட்சி, அவர் மறைமுகமாய்க் கூறும் செய்தி இவ்வளவும் இலக்கண வரம்புகளை விடவும் மிகமிக முக்கியமாகும். சிறந்த சிறுகதை ஆசிரியர்கள் பலரும் எந்த இலக்கண வரம்புகளையும் நினைத்துக்கொண்டு தம்



கதைகளை எழுதுவது இல்லை. பெரும்பாலும் அவைத் தாமாகவே அமைந்துவிடுகின்றன. வேறு சிலர் தெரிந்துக்கொண்டே வரம்புகளை மீறிச் சிறந்த படைப்புக்களை உருவாக்கி விடுகிறார்கள்.

*அகிலன்*
*கதைக்கலை*
*சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்.*

### அரும்பத விளக்கம்

| | | |
|---|---|---|
| வரம்பு | - | எல்லை, வரையறை. |
| கருப்பொருள் | - | உள்ளடக்கம், கதையின் மையக்கருத்து. |
| சிக்கல் | - | பிரச்சினை |
| களம் | - | கதை நிகழும் இடம். |
| சொற்செட்டு | - | சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல். |
| செறிவு | - | உள்ளடக்கம் காத்திரமாக இருத்தல். |

## பயிற்சி

01) உலக சிறுகதை முன்னோடிகள் யாவர்?

02) சிறந்த சிறுகதையின் பண்புகள் எவை?

03) சிறந்த சிறுகதை வாசகனில் ஏற்படுத்தும் தாக்கங்கள் எவை?

04) சிறுகதைக்கும், நாவலுக்குமிடையிலான வேறுபாடுகள் ஐந்தினைக் கூறுக?

**ஒப்படை**

எமது பிரதேச சிறுகதை ஆசிரியர்களையும் அவர்களது சிறுகதைகளையும் பட்டியல் படுத்துவோம்.

### மொழித்தேர்ச்சிக்கான செயற்பாடுகள்

*1. சிறுகதை இலக்கணம் எனும் பாடப்பகுதியின் மையக்கருத்து, துணைக்கருத்துக்களை தொகுத்துக் கூறுக.*

*2. சிறுகதைக்கு இலக்கணம் உண்டா? இல்லையா? என்பது பற்றிய உமது கருத்துக்களை குழுவாக கலந்துரையாடி முன்வைக்குக.*

*3. நீர் வாசித்த ஒரு சிறுகதையை விமர்சித்து எழுதுக.*



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## கட்டுரையாக்கம்

ஏதாவதொரு தலைப்பில் முறைப்படி ஒழுங்காக ஆக்கமுறையில் எழுதுதல் கட்டுரையாகக் கருதப்படும். உரைநடை வளர்ச்சியடைந்த பின்னர் கட்டுரை எழுதுதல் தனித்துறையாக வளர்ந்துள்ளது.

ஒரு மொழியைப் பயில்வதன் முக்கியநோக்கம் ஒருவர் தமது கருத்தைத் தெளிவாகவும், நுட்பமாகவும் கூறுவதும், பிறர் கூறுவதை விளங்கிக்கொள்வதுமாகும். இவ்வகையில் கருத்துக்களை ஒழுங்காகவும், தெளிவாகவும் கோவைப்படவும் கூறுதல் கட்டுரையினுடைய முக்கிய இயல்பாகும்.

### *கட்டுரையின் அமைப்பு*

கட்டுரையானது ஒரு விடயம் பற்றிய பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியது என்பது நீங்கள் அறிந்ததே.

கட்டுரையை வாசகர்கள் சலிப்பின்றி ஆர்வத்துடன் வாசிக்கவும், அதன்மூலம் பயனுள்ள தகவல்களைப் பெறுவதற்கும் அது ஒருவித ஒழுங்குமுறையில் அமைவது அவசியமாகும்.

கட்டுரையின் அமைப்பை எடுத்துநோக்குவோமாயின் அது மூன்று பிரதான உறுப்புக்களைக் கொண்டமைவதைக் காணலாம்.

*01. முகவுரை*

*02. உடல்*

*03. முடிவுரை*

முகவுரை :- எழுதப்போகும் விடயத்தைப்பற்றிய ஓர் அறிமுகமே முகவுரை என்று கூறலாம். அதாவது எழுதப்போகும் விடயம் என்னவென்பது பற்றியும், எவ்வெவ் விடயக்கூறுகள் ஆராயப்படப் போகின்றன என்பது பற்றியும் அறிவிப்பது முகவுரையாகும்.

விடயத்தின் முக்கியத்துவம், விடயம் பற்றிய வினாக்களும் முகவுரையாக அமையலாம்.

உடல் :- உடல் என்ற பகுதியே கட்டுரையின் பெரும்பகுதியாகவும், உயிர்நாடியாகவும் அமையும். எடுத்துக்கொண்ட விடயத்தின் பல்வேறு அம்சங்களையும் வெவ்வேறாக விளக்கி அதேவேளை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்திப் படிமுறை வளர்ச்சியில் கருத்துக்களை நிரற்படுத்தி எழுதப்படும் பகுதியே உடல் எனலாம். கட்டுரையின் பெறுமானம், பயன், விளைவு என்பன இந்த உடலைப் பொறுத்தே அமையும்.

முடிவுரை :- முடிவுரை என்பது எழுதப்பட்ட அம்சங்களின் ஒரு தொகுப்பாகும் கட்டுரையில் பொதித்துள்ள பிரதான அம்சங்கள் முடிவுரையில தொகுத்து வழங்கப்படும். கட்டுரையொன்றின் முடிவிலேயே வாசகரின் அபிப்பிராயம், தீர்மானிக்கப்படுவதால் முடிவுரைப்பகுதி திட்டவட்டமானதாகவும் தெளிவாகவும் இருத்தல் சிறப்புடையது. கட்டுரையின் பிரச்சினைகளையும், தீர்வையும் முடிவுரையாக அமைக்கலாம்.

## கட்டுரை எழுதும் முறை

கட்டுரை கருத்துப்பரிமாற்றத்துக்கான ஓர் ஊடகமாகும். என்பதை நீங்கள் அறிவீர்கள் கட்டுரை எழுதுதலின் பல்வேறு நோக்கங்களில் வாசகர்களைத் திருப்திப்படுத்துவதும் ஒன்று. எனவே கட்டுரை ஒன்று சிறப்பான முறையில் அமைய வேண்டுமானால் அது எழுதப்பட வேண்டிய முறைகள் பற்றி அறிதலும் அவசியமாகும். கட்டுரை எழுதுதலில்

1. திட்டமிடுதல்
2. வடிவமைத்தல்

என்பன கட்டுரை எழுதுவதற்கான இரண்டு படிகளாகும். இனி, இதனை நோக்குவோம்.

### திட்டமிடல்

எழுதப்படும் கட்டுரை எவ்வாறு அமைய வேண்டுமென்பதை முன்கூட்டியே தீர்மானிப்பது திட்டமிடுதல் எனப்படும். இதன் அடிப்படையிலேயே கட்டுரைக்கான சட்டகம் தயாரிக்கப்படுகிறது. திட்டமிடுதல் பல்வேறு செயற்பாடுகளை கொண்டது.

அதாவது,

(1) எழுதப்படும் விடயத்தைத் தெரிவு செய்தல்.

(2) எழுதப்படப்போகும் விடயத்தின் பல்வேறு அம்சங்களை இனங்காணல்.

(3) ஒழுங்குப்படுத்தல்.

(4) யாவற்றையும் மனக்கண்ணிலே நிலைநிறுத்தல்.

(5) சட்டகத்தை அமைத்தல்.

### வடிவமைத்தல்

சட்டகத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட அம்சங்களை எவ்வாறு எழுதுதல் வேண்டும் என்பதையே வடிவமைத்தல் என்று கூறலாம். வடிவமைத்தலில் கவனிக்க வேண்டிய அம்சங்கள்

(1) எளிமையாகவும், தெளிவாகவும் சகலருக்கும் விளங்கும் வகையில் எழுதப்படுதல் வேண்டும்.

(2) கையாளப்படும் மொழிநடை பின்வருமாறு அமைதல் வேண்டும்.

| மொழிநடைப்பண்புகள் | இலக்கிய நடை | அறிவியல் நடை |
|---|---|---|
| உணர்ச்சிச்செறிவு | அதிகம் | குறைவு |
| சொல் அலங்காரம் | அதிகம் | இல்லை |
| கற்பனை | அதிகம் | இல்லை |
| உட்பொருள்/மறைபொருள் | அதிகம் | இல்லை |
| தர்க்க முறைமை | குறைவு | அதிகம் |
| பகுப்பாய்வு | இல்லை | அதிகம் |
| நேர்பொருள் | குறைவு | அதிகம் |
| கலைச்சொல் பயன்பாடு | குறைவு | அதிகம் |

(3) எழுத்துத்தெளிவும், குறியீடுகளை அனுசரித்தலும்,

(4) அம்சங்களைப் பந்தி பிரித்தெழுதலும், பந்திகளுக்கிடையே தொடர்பைப் பேணுதலும்.

**பின்வரும் அம்சங்கள் சிறப்பான பந்தியாக்கத்திற்குத் துணைபுரிவனவாகும்.**

(அ) பந்தியின் மையக்கருத்து கட்டுரையின் தலைமைக்கருத்தின் ஒரு கூறாக அமைதல் வேண்டும்.

(ஆ) பந்தியின் மையக்கருத்தினைத் தெரிந்து அதனை வலியுறுத்தியே பந்தி ஆக்கப்படுதல் வேண்டும்.

(இ) இன்னபொருள் பற்றித்தான் இப்பந்தி விளக்குகிறது என்பதை வாசகர்கள் எடுத்த எடுப்பிலேயே இனங்கண்டு உணரக்கூடியதாய் இருத்தல் வேண்டும்.

(ஈ) பந்திகளுக்கிடையில் தொடர்பும், படிமுறை வளர்ச்சியும் காணப்படுதல் வேண்டும்.

(உ) ஒவ்வொரு பந்தியை எழுதியதும் அதனை வாசித்துச்சீராக்கம் செய்தல் வேண்டும்.

இவ்வடிப்படைகளில் பந்திகளை அமைக்குமிடத்துக் கட்டுரையின் விடயக்கூறுகளைச் செவ்வனே விளங்குவதற்கும், கட்டுரையின் கட்டுக்கோப்பைப் பொருத்தமுற அமைப்பதற்கும் வாய்ப்பேற்படுகின்றது.

வாசகர்களைக் கவர வேண்டுமெனில் விடயப்பரப்புகளைத் தெளிவுறக் கூறுவதற்கு மேற்குறிப்பிட்டவாறு சிறந்த மொழிநடையும், தர்க்கரீதியான எடுத்துக்காட்டும் ஆற்றலும், தெளிவான எழுத்தும் அவசியம்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

### கட்டுரையில் அமைய வேண்டிய அழகுகள்

1. சுருக்கமாகவும், விளக்கமாகவும் கூறுதல்.
2. வாசிப்பவருக்கு இன்பம் தருதல்.
3 பொருத்தமான சொற்களைக் கையாளுதல்.
4. ஆழ்ந்த கருத்துக்களை உடையதாக இருத்தல்.
5 பந்திகளை ஒழுங்குற அமைத்தல்.
6. சிறந்த பயன்தருதல்.
7. எல்லோருக்கும் விளங்கக்கூடிய உதாரணங்களை எடுத்துக்காட்டி விளக்குதல்.
8. பொருத்தமான குறியீடுகளைப் பயன்படுத்தல்.

### கட்டுரையில் தவிர்க்கப்பட வேண்டியவை

1. பொருளை விளக்கமின்றிக் கூறுதல்.
2. அளவுக்கதிகமான சொற்களில் கூறுதல்.
3. விடயங்களை மீண்டும், மீண்டும் கூறுதல்.
4. குற்றமுள்ள சொற்களைச் சேர்த்தல்.
5. சந்தேகம் ஏற்படக் கூறுதல்.
6. முரண்படக் கூறுதல்.
7. பொருத்தமில்லாத வெற்றுச்சொற்கள் இடம் பெறுதல்.
8. கூறவந்த பொருளை விட்டு வேறொரு பொருளை விரித்துக் கூறுதல்.
9. சொல், பொருள் என்பன நலிவடைந்து செல்லுதல்.
10. பயனில்லாத சொற்கள் காணப்படுதல்.

### பயிற்சி

1. ஆசிரியர் வழங்கும் கட்டுரைகளை வாசித்து அவற்றுக்குப் பொருத்தமான சட்டகத்தை அமைத்துக் காட்டுக.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## இணை மொழிகள்

இணைமொழிகள் ஓசைநயமும், பொருட்செறிவும் வாய்ந்தவை. பண்டுதொட்டு தமிழ்மொழியிற் பயின்று வருபவை இவற்றை வாக்கியங்களில் பிரயோகிப்பதால் மொழித்திறன் விரிவடையும்.

*(அ) வேட்பாளர்கள் தேர்தல் காலங்களில் மூலைமுடுக்கு எல்லாம் நுழைந்து வாக்குக் கேட்டார்கள்.*

*(ஆ) கொடூர யுத்தத்தினால் கணக்கு வழக்கற்று மனித உயிர்கள் கொலை செய்யப்படுகின்றன.*

மேல் வந்த வாக்கியங்களில் மூலைமுடுக்கு, கணக்கு வழக்கற்று என்னும் சொற்றொடர்கள் அவ்வாக்கியங்களைப் பொருட்செறிவும், உயிர்ப்பும் உடையனவாக ஆக்குகின்றன. இவ்வாறு பயன்பட்ட சொற்றொடர்களே இணைமொழிகள் எனப்படும். இந்த இணைமொழிகளை மூன்று வகையாக வகுத்து நோக்கலாம்.

*(1) ஒன்றுக்கொன்று தொடர்புபட்ட பொருளுடைய இரு சொற்கள் இணைந்து வருதல்.*

(உ+ம்) - கொஞ்சிக்குலாவி

*(2) மாறுபட்ட பொருள் குறிக்கும் இருசொற்கள் இணைந்து வருதல்.*

(உ+ம்) - இன்பதுன்பம்

*(3) ஓசை நயம் கருதி அமைபவை இவ்வாறு அமைபவற்றுள் ஒன்று மட்டுமே பொருளுடையதாக அமையும்.*

(உ+ம்) - அந்திசந்தி

- அகடவிகடம்
- அங்குமிங்கும்
- அல்லும்பகலும்
- அரைகுறை
- அல்லோலகல்லோலம்
- ஆதிஅந்தம்
- ஆடிப்பாடி
- ஆடைஆபரணம்
- ஆறஅமர
- இங்குமங்கும்
- இடைஇடை
- இல்லாததுபொல்லாதது
- இன்னார்இனியார்
- ஈவிரக்கம்
- ஈவுசோர்வு
- உள்ளும்புறமும்
- உருட்டுப்புரட்டு
- ஏற்றம்இறக்கம்
- ஏச்சுப்பேச்சு
- ஏறக்குறைய
- ஏட்டிபோட்டி
- ஒட்டிஉலர்ந்து
- ஒளிப்புமறைப்பு
- ஓடிஆடி
- ஓய்வுஒழிவு
- கணக்கு வழக்கு
- கங்குகரை
- கண்ணுங்கருத்தும்
- கண்டது கடையது
- சின்னஞ்சிறிது

## தொகை தொகாநிலைத்தொடர்கள்

பின்வரும் சொற்களை வாசிப்போம்.

| | |
|---|---|
| *செந்தாமரை* | *இராப்பகல்* |
| *துடியிடை* | *தலைவணங்கு* |
| *பவளவாய்* | *அடிபணிந்தான்* |

இச்சொற்களில் இரு சொற்கள் இணைந்து ஒரு பொருள் உணர்த்தி நிற்பதை அவதானித்திருப்பீர்கள்.

துடி + இடை = துடியிடை

தலை + வணங்கு = தலைவணங்கு

அடி + பணிந்தான் = அடிபணிந்தான்

***இவ்வாறு இரு சொற்கள் இணைந்து ஒரு பொருளை உணர்த்துவதை தொடர்கள் என்போம்.***

### தொகை நிலைத்தொடர்கள்

பின்வரும் இரு வாக்கியங்களை அவதானித்து

அவற்றிக்கிடையே காணப்படும் வேறுபாட்டினை இனங்காண்போம்.

*இன்று வித்யா பாடசாலை வரவில்லை.*

*இன்றைக்கு வித்யா பாடசாலைக்கு வரவில்லை.*

முதல் வாக்கியத்தில்

*இன்று பாடசாலை* ***எனவும்***

இரண்டாம் வாக்கியத்தில்

*இன்றைக்கு பாடசாலைக்கு* ***எனவும்***

வந்துள்ளமையை இனங்கண்டிருப்பீர்கள் ‘க்கு’ என்ற உருபு இரண்டாம் வாக்கியத்தில் இடம் பெற, முதல் வாக்கியத்தில் இவை இடம் பெறவில்லை. ஆனால் பொருள் மாறுபடவில்லை என்பதையும் கவனத்திற் கொள்வோம்.

முதல் வாக்கியத்தில் ‘க்கு’ எனும் உருபு இடம் பெறவில்லை - தொக்கு அல்லது மறைந்திருக்கிறது.

இரண்டாம். வாக்கியத்தில் ‘க்கு’ எனும் உருபு வெளிப்பட்டு அல்லது தொகாமல் வருகிறது.

எனவே,

*சொற்றொடர்களுக்கிடையில் உருபுகள் தொக்கி நிற்பதைத் தொகை நிலைத் தொடர்கள் என அழைப்போம்.*

*சொற்களுக்கிடையில் உருபுகள் தொகாமல் நிற்பதைத் தொகாநிலைத் தொடர்கள் என அழைப்போம்.*

**தொகை நிலைத்தொடர்கள்**

இரு சொற்கள் இணைந்து ஒரு சொல்லின் தன்மையைப் பெற்றுப் பிளவுபடாது ஒருபொருளை உணர்த்துவதோடு அச்சொற்களுக்கிடையில் உருபுகள் தொக்கி அல்லது கெட்டு நிற்கும் சொற்றொடர்களே 'தொகை நிலைத்தொடர்கள்' என அழைக்கப்படும் என்பதை ஏற்கெனவே அறிந்தோம்.

பின்வரும் தொகைநிலைத் தொடர்களை அவதானத்துடன் வாசியுங்கள்.

*நாடுகடந்தான்*

*வருபுகழ்*

*கருங்குரங்கு*

*பவளவாய்*

*இராப்பகல்*

*கவியிலக்கணம்*

இச்சொற்றொடர்களில் உருபுகள் தொக்கி காணப்படுகின்றன. இவற்றில் உருபுகள் இடம் பெற்று விரியும்போது எவ்வாறு வருகின்றது என நோக்குவோம்.

**உருபுகள் எவை என்பதை கவனிக்கவும்**

| | | |
|---|---|---|
| நாட்டைக் கடந்தான் | - ஐ | வேற்றுமை உருபு |
| வருகின்ற புகழ் | - கின்ற | நிகழ்கால இடைநிலை |
| கருமையான குதிரை | - மை | பண்பு விகுதி |
| பவளம் போன்ற வாய் | - போன்ற | உவமை உருபு |
| இரவும் பகலும் | - உம் | இடைச்சொல் |
| கவிக்கு இலக்கணம் | - க்கு | 1. வேற்றுமை உருபு<br>2. கவிக்கு இலக்கணம் சொல்லும் ஒரு நூல். |

சொற்கள் விரிவு பட்டதையும் அதன் உருபுகளையும் அவதானித்திருப்பீர்கள்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

இனி,

**தொகை நிலைத் தொடர்களை வகைப்படுத்துவோம்**

1. *வேற்றுமைத்தொகை*
2. *வினைத்தொகை*
3. *பண்புத்தொகை*
4. *உவமைத்தொகை*
5. *உம்மைத்தொகை*
6. *அன்மொழித்தொகை*

எனவே

**தொகைநிலைத் தொடர்கள் ஆறு வகைப்படும்.** இவைபற்றி சற்று விரிவாக நோக்குவோம்.

## வேற்றுமைத் தொகை

சில உதாரணங்களை நோக்குவோம்.

| வேற்றுமைத்தொகை | உருபு | விரிவு |
|---|---|---|
| நிலங்கடந்தான் | **ஐ** | நிலத்தைக் கடந்தான் |
| தலை வணங்கினான் | **ஆல்** | தலையால் வணங்கினான் |
| கண்ணன் மகன் | **கு** | கண்ணனுக்கு மகன் |
| பாடசாலை நீங்கினான் | **இன்** | பாடசாலையின் நீங்கினான் |
| ஆதவன் கை | **அது** | ஆதவனது கை |
| குன்றக்குமுறல் | **கண்** | குன்றம் கண் குமுறல் |

எனவே,

***வேற்றுமை உருபுகள் மறைந்து அல்லது கெட்டு நிற்கும் சொற்றொடர்களை நாம் வேற்றுமைத் தொகை என்கிறோம்.***

### பயிற்சி

பின்வரும் வேற்றுமைத் தொகைச்சொற்களை விரித்து எழுதுக.

1. கடல் கடந்தான், பால் குடித்தான், வெள்ளிக்கொலுசு, மரப்பெட்டி, பாலர்பாடசாலை, சிறுவர் பூங்கா, கடற்கரை, பூவிதழ், இடிமுழக்கம், பூந்தேன்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## வினைத்தொகை

சில உதாரணங்களை நோக்குவோம்.

*வருபுனல்*
*கொல்களிறு*
*விடுகணை*
*சுடுசாம்பல்*
*குளிர்நீர்*

இச் சொற்றொடர்கள் எவ்வாறு விரிவடைகின்றன என நோக்குவோம்.

| | | |
|---|---|---|
| வருபுனல் - | வந்த புனல் | இறந்த காலம் |
| | வருகின்ற புனல் | நிகழ் காலம் |
| | வரும் புனல் | எதிர் காலம் |

| வினைத்தொகை | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| வருபுனல் | வந்த புனல் | வருகின்ற புனல் | வரும் புனல் |
| கொல் களிறு | கொன்ற களிறு | கொல்கின்ற களிறு | கொல்லும் களிறு |
| விடு கணை | விட்ட கணை | விடுகின்ற கணை | விடும் கணை |
| சுடு சாம்பல் | சுட்ட சாம்பல் | சுடுகின்ற சாம்பல் | சுடும் சாம்பல் |
| குளிர்நீர் | குளிர்ந்த நீர் | குளிர்கின்ற நீர் | குளிரும் நீர் |

*எனவே,*

***பெயரெச்சத்தின் விகுதியும் காலங்காட்டும் இடைநிலைகளும் கெட்டு வரும் சொற்றொடர்களை நாம் வினைத்தொகை என்கின்றோம்.***

### பயிற்சி

பின்வரும் வினைத்தொகைச்சொற்களை விரித்து எழுதுவோம்.

| வினைத்தொகை | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| 1. ஏவுகணை | | | |
| 2. எறிகல் | | | |
| 3. சுடுநீர் | | | |
| 4. குளிர்நிலவு | | | |
| 5. புகழுடம்பு | | | |



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

### பண்புத் தொகை

*பண்பு என்பது - வண்ணம், வடிவு, அளவு, சுவை முதலியனவாகும்.*

சில உதாரணங்களையும் அவை எவ்வாறு விரிவடைகின்றன எனவும் நோக்குவோம்.

| | | |
|---|---|---|
| செந்தாமரை | - செம்மையாகிய தாமரை | - வண்ணம் |
| வட்டக்கல் | - வட்டமாகிய கல் | - வடிவம் |
| முக்குணம் | - மூன்றாகிய குணம் | - அளவு |
| இன்சொல் | - இனிமையான சொல் | - சுவை |

இங்கு,ஆகிய, ஆன என்னும் உருபுகள் தொக்கி நின்றதை அவதானித்திருப்பீர்கள்.

*ஆகிய, ஆன என்னும் உருபுகள் கெட்டு நிற்கும் பண்புப்பெயர்ச்சொல் தொடர்களை நாம் பண்புத்தொகை என்போம்.*

இன்னும் ஓர் உதாரணத்தை நோக்குவோம்.

**சாரைப்பாம்பு**- சாரை யாகிய பாம்பு.

இதில் - பாம்பு என்பது பொதுப் பெயர்.

சாரை என்பது சிறப்புப் பெயர்.

இங்கு பண்புருபு கெட்டு, பொதுப்பெயரோடு சிறப்புப் பெயரும் ஒரு பொருள்பட வந்துள்ளது. இதனையே இருபெயரொட்டுப் 'பண்புத்தொகை' என்பர்.

### உவமைத்தொகை

**உவமை உருபுகள்** - போல, புரைய, ஒப்ப, உறழ, மான, கடுப்ப இயைய, ஏய்ப்ப, நேர, அன்ன, இன்ன.

சில உதாரணங்களையும் அவை எவ்வாறு விரிவடைகின்றன என்பதையும் நோக்குவோம்.

| | |
|---|---|
| பால் நிலவு | - பால் போன்ற நிலவு. |
| கார் கூந்தல் | - கார் போன்ற கூந்தல். |
| மான் விழி | - மான் போன்ற விழி. |
| முத்துப் பல் | - முத்துப் போன்ற பல். |
| நிலாமுகம் | - நிலாப் போன்ற முகம். |

இங்கு போன்ற எனும் உருபு தொக்கி நின்றதை அவதானித்தோம்.

*எனவே*

***உவமை உருபுகள் தொக்கி நிற்கும் சொற்றொடர்களை நாம் உவமைத்தொகை என்போம்.***

## உம்மைத் தொகை

சில உதாரணங்களையும் அவை எவ்வாறு விரிவடைகின்றன என்பதையும் நோக்குவோம்.

இராப்பகல் - இரவும் பகலும்

ஒன்றேகால் - ஒன்றும் காலும்

இங்கு 'உம்' என்ற உருபு தொக்கு நின்றதை அவதானித்திருப்பீர்கள்.

*எனவே,*

***சொற்றொடரின் இடையிலும் இறுதியிலும் 'உம்' உருபு தொக்கு நின்று பொருள் உணர்த்துமாயின் அதனை 'உம்மைத்தொகை' என்போம்.***

## அன்மொழித் தொகை

அன் மொழித் தொகை என்பது

அல் + மொழி + தொகை எனப்பிரிக்கலாம்.

அதாவது

இது வரை நாம் பார்த்த,

*வேற்றுமைத்தொகை*

*வினைத்தொகை*

*பண்புத்தொகை*

*உவமைத்தொகை*

*உம்மைத்தொகை அல்லாது எனப் பொருள்படும்.*

மொழி என்பது சொல் எனவும் தொகை என்பது தொக்கு நிற்றல் எனவும் பொருள்படும்.

எனவே,

ஏனைய தொகைகள் அல்லாத தொகைகளை நாம் அன்மொழித்தொகை என்போம்.

அதாவது.

வேற்றுமைத் தொகை முதலான ஐந்து தொகை நிலைத் தொடர்கள் தமக்குரிய பொருளை உணர்த்தாது அதற்கு அப்பால் வேறு ஒரு பொருளை உணர்த்தி நிற்பதை அன்மொழித்தொகை என்போம்.

சில உதாரணங்களையும் அவை விரிவடைகின்ற தன்மையையும் அவை உணர்த்தும் பொருளினையும் நோக்குவோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| பூங்குழல் | - | **பூவை உடைய குழலாள்** | - | வேற்றுமை |
| தாழ்குழல் | - | **தாழ்ந்த கூந்தலாள்** | - | வினை |
| கருங்குழல் | - | **கருமையான கூந்தலாள்** | - | பண்பு |
| தேன்மொழி | - | **தேன் போன்ற மொழியாள்** | - | உவமை |
| உயிர்மெய் | - | **உயிரும் மெய்யும் இணைந்த எழுத்து** | - | உம்மை |

| | |
|---|---|
| பூங்குழல் வந்தாள் | பூங்குழல் என்பது இரண்டாம் வேற்றுமைத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை இது பூவையுடைய குழலினையுடையாள் என விரியும். |
| தாழ்குழல் ஆடினாள் | தாழ்குழல் என்பது வினைத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை இது தாழ்ந்த குழலினையுடையாள் என விரியும். |
| கருங்குழல் பேசினாள் | கருங்குழல் என்பது பண்புத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித் தொகை இது கருமையாகிய குழலினையுடையாள் என விரியும். |
| தேன்மொழி பாடினாள் | தேன் மொழி என்பது உவமைத்தொகை நிலைக் களத்துப் பிறந்த அன்மொழித் தொகை. இது தேன் போன்ற மொழியினையுடையாள் என விரியும். |
| உயிர் மெய் | உயிர் மெய் என்பது உம்மைத்தொகை நிலைக் களத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது உயிரும் மெய்யும் கூடிப்பிறந்த எழுத்து என விரியும். |
| அறிவழகு வந்தான் | அறிவும் அழகும் - உம்மைத்தொகை. அறிவும் அழகும் கலந்து தோன்றிய அப்பெயரை உடைய ஒருவர் வந்தார். உம்மைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை. |

## பயிற்சி

பின்வரும் தொகைகளை இனங்கண்டு எழுதுக.

1. செம்மலர்
2. முக்கண்
3. வன்சொல்
4. பிறைநுதல்
5. கயல்விழி
6. பவளவாய்
7. நீர்நிலம்
8. முக்கால்
9. வான்நிலா
10. ஒன்றரை



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

03

# தக்காளிப் பழங்கள்



''கம்,கம்'' என்று இருமி, முக்கி முனகிக்கொண்டே படுக்கையில் புரண்டு நெளிந்த வைரமுத்துக் கிழவன் கைகளை மேலே நீட்டினான். தலைமாட்டில் தணித்து வைக்கப்பட்டிருந்த 'லாம்பு' கையில் தட்டியதும், தட்டுத் தடுமாறி லாம்பின் திரி தூண்டியைத் திருகி, வெளிச்சத்தை வருவித்துக் கொண்டே மறுபடியும், மறுபடியும் இருமினான்.

''பிள்ளை!''

''................''

''பிள்ளை....!''

''என்னம்மான்?''

''கொஞ்சம் சுடுதண்ணி தா பிள்ளை!''

சிறிது நேரத்துக்குள் தண்ணீர்க் கிளாசுடன் பிரசன்னமான கண்ணம்மா, கிழவனின் தலைமாட்டில் தண்ணீர்க் கிளாஸை வைத்துவிட்டு, கிழவன் எழுந்திருக்க உதவி செய்வதில் ஈடுபட்டாள்.

முழங்கைகளைப் படுக்கையிற் குத்தி, தலையை நிமிர்த்தி, பக்கவாட்டிற் சரிந்தவாறே கிளாசை எடுத்துத் தண்ணீரைக் குடித்தான்.

தண்ணீர் குடித்து முடிவதற்கிடையில், கிழவனுக்குக் களைப்பு வந்துவிட்டது. முனகிக்கொண்டே பக்கவாட்டில் சரிந்து, மறுபடியும் படுத்துக்கொண்டான். கலைந்து கிடந்த கிழவனின் போர்வையை இழுத்து, காலிலிருந்து கழுத்துவரை போர்த்திவிட்டுப் பக்கத்தேயிருந்த நாற்காலியில் அமர்ந்து, கிழவனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள் கண்ணம்மா.

பக்கத்து வீட்டு வானொலியில் பத்துமணி ஒலிபரப்பு அப்போதுதான் ஆரம்பமாகியது. ''அம்மான், மணி பத்தாச்சுது. மருந்தைக் குடிச்சுப்போட்டுப் படுங்கோவன்'' கிழவனின் தோள் மூட்டை இலேசாக வருடிக் கொண்டே கண்ணம்மா கேட்டாள்.

''எனக்கு மருந்து வேண்டாமென்று எத்தனை தரம் சொல்லிப் போட்டேன்.''



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

இந்த வார்த்தைகளைச் சொல்லி முடிப்பதற்கிடையில் கிழவன் ஒரு தடவை இருமித் தீர்த்துவிட்டு இளைத்தான்.

கண்ணம்மா சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். உடம்பை மறுபடிமாகத் திருப்பி, தலையை மட்டும் மேலே நிமிர்த்தி, தலைமாட்டில் வைக்கப்பட்டிருந்த எச்சில் படிக்கத்துள் துப்பிவிட்டு, போர்வையை இழுத்து உடம்பெல்லாம் மூடி மறைத்துக்கொண்டே கிழவன் சுருண்டு படுத்தான்.

''அம்மான்!''

''ஏன் பிள்ளை என்ன அலட்டுகிறாய்? எனக்கு மருந்தும் வேண்டாம், ஒண்டும் வேண்டாமெங்கிறேன். நீ சாப்பிட்டுட்டுப் போய்ப் படுபிள்ளை!'' இதற்குமேல் கண்ணம்மாவால் கிழவனை வற்புறுத்த முடியவில்லை. எழுந்து சென்று மேசைமேல் வைக்கப்பட்டிருந்த வெள்ளைப்பேப்பரையும், பேனாவையும் எடுத்து வந்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டதும், அதன் கைமேல் வைத்து எழுதத் தொடங்கினாள்.

''உடல் நிலைமோசமாயிருக்கிறது. நேற்றையிலிருந்து மருந்தையும் குடிக்கமாட்டேன் என்கிறார். படுக்கையில் கிடந்த இந்த மூன்று மாசத்திலும் நான் சொன்னபடியே கேட்டு வந்தவர், இப்போது என் மேல் எரிந்துவிழுகிறார். நீங்கள் யாராவது ஒருவர் வராவிடில் சமாளிக்க என்னால் முடியாது. கடிதம் கண்டதும்...''

இப்படி அவள் எழுதிக்கொண்டே போனாள்,

❖ ❖ ❖

வைரமுத்துக் கிழவனுக்கு வயது எழுபதுக்கு மேல்! சுதுமலையில் புகையிலைக்காரனென்றால், அது வைர முத்துக்கிழவன்தான். அந்தத் தொழிலில் அவர் ஈடுபட்டு அறுபத்திரண்டு ஆண்டுகள். எட்டு வயதில் கூழாவடிப்பள்ளிக் கூடத்திலிருந்து விடுபட்டு வந்ததும் தோட்டத்துப் பூமியில் காலடி எடுத்து வைத்தவர், இன்று வரை அந்தத் தொழிலில் ஈடுபட்டே வருகிறார்.

பள்ளிக்கூடத்தில் மயில்வாகனச் சட்டம்பியாரிடம் பாடங்கற்றவரல்லவா? அதனால் தகப்பனிடமே கெட்டிக்காரனென்ற பெயரை, தோட்டத்திற்குள் வந்த ஒருவருட காலத்துக்குள்ளேயே பெற்றுவிட்டார்.

''கையெழுத்துப்போடத் தெரிஞ்சால் போதும் மோனை. நீ தோட்டத்தைக் கொத்தப்பழகு-'' புகையிலைத் தம்பர் என்ற தகப்பனாரின் இந்தக் கட்டளைக்கு அடிபணிந்தே அவர் தோட்டத்துக்குள் குதித்தார்.

வைரமுத்துவுக்கோ அல்லது அவர் தகப்பன் தம்பருக்கோ புகையிலைத் தொழில் புதிய தொழிலல்ல. பரம்பரையாக வந்த தொழில், பரம்பரையாகவே பேரெடுத்துத் தந்த தொழில்.

''அந்தக் காலத்தில் வெள்ளைக்காரத் துரைமார் ''நல்ல புகையிலைக்காரன்'' என்று எழுதிக்குடுத்த 'சேட்டிப்பிக்கேட்டு' என்ரை அப்பாவிட்டை இருந்தது.'' என்று இப்போம் வைரமுத்தர் சொல்லிக்கொள்வார். இது பொய்யோ, மெய்யோ? வைரமுத்தரின் புகையிலைகள் மிக மிக அற்புதமானவை என்பதற்கு துளியும் சந்தேகமில்லை.

சுதுமலை அம்மன் கோவிலின் வடக்கெல்லையுடன் வைரமுத்தரின் வீடு இருந்தது. வீடு என்று அதைச் சொல்வதைவிடக் குடிசை என்றுதான் சொல்லலாம். வீட்டின் கிழக்கெல்லையைத் தொட்டபடி - முற்றத்தைத் தொட்டபடிதான் தோட்டமும் இருந்தது.

தந்தையும் மகனும் சதா தோட்டத்தோடுதான் கிடப்பார்கள்.

வைரமுத்தருக்கு வயசு இருபதாக இருக்கும்போது, தம்பர் கண்களை இறுக மூடிக்கொண்டார். தம்பர் செத்துப்போகும்போது விட்டுச் சென்ற கடனுக்கு வீடும், தோட்டத்து நிலமும் ஆனைக்கோட்டை விதானையார் சின்னத்தம்பிக்கு ஈட்டறுதியாகிவிட்டது. நூறு ரூபாவும், ஐந்து வருட வட்டியும் கொடுத்து அதை மீட்டுக்கொள்ள வழியற்றவராக வைரமுத்தர் இருந்தார். படுக்கையில் கிடந்த தாயாரையும், கணவனை மலைபோலச் சரித்துக் கொடுத்துவிட்டு வீட்டோடு கிடந்த அக்காளையும் பராமரிக்கவே அவர் உழைப்புச் சரியாகி வந்தது.

''நீ எப்போ வட்டியையும், முதலையும் கொண்டு வாரியோ அப்ப உன்ரை காணியை உனக்கு எழுதி விடுகிறேன்'' என்று விதானையார் உறுதி கூறியிருந்தமையால் வைரமுத்தர் சற்று நிம்மதியாக இருந்தார்! எப்போதாவது, ஒரு நாள் எப்படியும் மீட்டு விடலாமென்று நம்பிக்கை. ஆனால், வருடங்கள் பதினைந்தாகியும் ஆசை நிறைவேறியதாயில்லை.



வைரமுத்தரின் முப்பதாவது வயதில் தாயும், முப்பத்தைந்தாவது வயதில் அக்காளும் செத்துப் போனார்கள். வைரமுத்தர் அந்தக் குடிசையிலே தனித்துவிட்டார். உறவினர் என்று சொல்லிக்கொண்டு பலர் வந்து துக்கம் தெரிவித்துப் போனார்கள். ஆனால், அவரின் தனிமையைப் போக்க யாரும் முன் வந்ததாயில்லை.

வைரமுத்தருக்குச் சபலம் தட்டவில்லையென்று அழுத்தமாகக் கூறமுடியாவிட்டாலும், ஒரு துணைவேண்டுமென்று அவர் மனதில் தோன்றிய எண்ணம் இதன்பாற்பட்டது என்று கூறிவிட முடியாது. உடலையும், உள்ளத்தையும் சுற்றிக்கொண்டு புகைந்தெழும் ஒருவகை நெஞ்சோச்சல்!

அடுத்த வீட்டுக்காரர் ஒருவர் வைரமுத்தருக்குப்பெண் கொடுக்க முன்வந்தார். அவர் வைரமுத்தருக்கு இரத்த உறவினர் அல்லர். 'அயல்' என்ற தொடர்பு அவ்வளவு தான்.

நாலு பேர் முன்னிலையில் கவிழ்ந்த தலையை நிமிர்த்திக் கொள்ளாமல், சோற்றை உருண்டையாகக் குழைத்து, வைரமுத்தரின் கையிலே சீதேவி வைத்தாள்.

கூனிக் குறுகிக்கொண்டே சீதேவியால் தரப்பட்ட சோற்றுருண்டையைப் பெற்றுச் சாப்பிட்டுவிட்டு சம்பிரதாயத்தைப் பூர்த்தி செய்தார் வைரமுத்தர்.

சீதேவியும், வைரமுத்தரும் குடும்பமாகிவிட்டனர்.

பொன் மருவிய ஒரு ஜோடி வளையல், தங்கத்தாலான ஒரு ஜோடி திருகு கடுக்கன்- இவைதான் சீதேவிக்குக் கிடைத்த சீதனப் பொருள்கள். தந்தையால் அணிவிக்கப்பட்ட ஒரு ஜோடிக்கோளைக் கடுக்கன், தாயால் கட்டப்பட்ட இரட்டைப்பட்டு வெள்ளி அரைஞாண் ஆகியவை தான் வைரமுத்தரின் முதிசச் சொத்துக்கள் பேருக்கு வீடும் தோட்டத்து நிலமும் இருக்கிறது. ரூபா நூறும், பதினைந்து வருட வட்டியும் கொடுத்து மீட்கவேண்டுமே.

ஒன்று, இரண்டு என்று நிதானமாக அடியெடுத்து வைத்து குடும்பத்து எண்ணிக்கை ஆறாகிவிட்டது. மூத்தது இரண்டும் பெண்களாகையால் வெட்டிவிடப்பட்ட கள்ளிச் செடிபோல் அவர்கள் வளர்ந்துவிட்டார்கள்.

கடைசியாகச் சீதேவியின் வயிற்றிலிருந்து ஒருவன் அடியெடுத்து வைத்தான்.

''நல்ல கேது நட்சத்திரத்தில் பையன் பிறந்திருக்கிறான். அங்குமிங்குமாக நின்று மேல்வீட்டாரும், கீழ் வீட்டாரும் சந்தித்ததனால் அதிர்ஷ்டம் விரைந்தோடி வருகிறது'' என்று மடத்தடிச் செவிட்டுச்சாத்திரியார் சொல்லி வைத்தார். வைரமுத்தருக்கு மனம் குதியாகக் குதித்தது. சீதேவி இன்பத்தால் பூரித்துப் போனாள்.

சாத்திரியார் எதைச் சொன்னாரோ, கடைசியாக ஒரு நாள் அது நடந்தேவிட்டது.

பிள்ளைப் பதிவு செய்வதற்காக விதானையார் வீட்டை நோக்கிப் போய்க்கொண்டிருந்த வைரமுத்தர் விதானையார் வீட்டுக் குச்சு ஒழுங்கையின் வேலியில் ஒரு சரையை வைத்துக் கொண்டிருந்த காகத்தைக் கண்டதும் எதையோ நினைத்துக்கொண்டு, கைகளைக் காற்றிலே ஆட்டி காகத்தைப் பயங்காட்டினார். கொத்திய சரையை அப்படியே போட்டுவிட்டு காகம் பறந்தோடிவிட்டது.

விளையாட்டாகச் சரையை காலால் வருடிப் பார்த்த வைரமுத்தரின் மனது படபடத்தது. நான்கைந்தாக மடித்துச் சுருட்டப்பட்டபடி கிடந்த பணநோட்டுகள் அவரைப் பார்த்து நடுங்கின. அங்குமிங்கும் மிரளமிரள பண நோட்டுகளை எடுத்து மடிக்குள் சுருட்டி வயிற்றுச் சுருக்கோடு நெருடிச் செருகிக் கொண்டே நடையை வேறு வழியில் திருப்பினார். மனது மீண்டும் அடித்துக் கொண்டது. ''திரும்பிப் போவதை யாராவது பார்த்தால் தவறாகப் புரிந்துகொள்வார்கள்'' என்று மனது சொல்லியிருக்கவேண்டும். கால்களைத் திருப்பி விதானையார் வீட்டுப்பக்கமே விட்டார்.

''ஐயா!''

''ஆரது? - வைரமுத்துவின் குரல் போலை இருக்கு!''

''ஓமையா நான்தான்!''

''வைரமுத்து இஞ்சாலை உள்ளுக்கு வாடாப்பா! எனக்கு கால்லை சுகமில்லை.''

வைரமுத்தர் வாயிற்படி தாண்டி உள்ளே காலடி எடுத்து வைத்ததும், விதானையாரின் கால் வீங்கியிருந்ததைப் பார்த்துப் பயந்து போனார். அந்த நால்சார் வீட்டின் நடு முற்றத்திலே சாய்மனை நாற்காலியில் சாய்ந்து, கால்களை நீட்டி முன்னே வைக்கப்பட்டிருந்த முக்காலியில் - முண்டவைத்திருந்தார் விதானையார்.

''வயசெல்லே செண்டுபோச்சு. ஒரு மாதம் படுக்கையிலே கிடந்ததினாலை கால் வீங்கிப் போச்சு'' என்று தானாவே கூறிக்கொண்டு தமக்கே சமாதானம் செய்தார் விதானையார்.

விதானையாருக்குச் சம்பிரதாயப்படி அனுதாபம் தெரிவித்துவிட்டு, வந்த காரியத்தை வெட்கத்தோடு சொல்லி முடித்தார் வைரமுத்தர்.

''உனக்கென்ன, ரெண்டு ஆம்பிளைப் பிள்ளையளைப் பெத்துப்போட்டாய். உன்ரை சோத்தை நாயும் தின்னாது! நான் எல்லாத்தையும் பொட்டையளய்ப் பெத்துப் படறபாடு.....!'' என்று அலுத்துக் கொண்டே விதானையார் மகளையழைத்து பேர் பதித்த துண்டைக் கொடுக்கும்படி மகளுக்குக் கட்டளையிட்டார்.



சிறிது நேரத்திற்குப் பின் பார்வதி பதிவுக்கொப்பிகளுடன் வந்து சேர்ந்தாள்.

''பேரென்ன வைக்க?''

''கேது என்று வை புள்ளை!''

''என்ன? கேது...?''

''ஓமோம் புள்ளை. அவன் கேது நட்சத்திரத்திலைப் பிறந்தவன். அதனாலே கேது என்றே வச்சிடுவம்!'' நடுங்கும் கரங்களால் கையெழுத்திட்டு துண்டை வாங்கிக் கொண்டே வைரமுத்தர் தாமதியாது நடையைக் கட்டினார். அவர் உடம்பெல்லாம் வியர்த்து வடிந்தது!

''வாற நேரமெல்லாம் காணியைப் பற்றி பேசிறவன் இண்டைக்கு ஒண்டும் பேசாமல் போறானே!'' என்று விதானையார் ஆச்சரியப்பட்டார்.

ஓடோடியும் சீதேவியின் முன் சென்று, வாய் நிறைய நடந்ததைக் கூறிக்கொண்டே பண நோட்டுக்களை எண்ணிப் பார்த்தார் வைரமுத்தர்.

ரூபா முந்நூற்றைம்பது! துடக்கு வீட்டிக்குள் கிடக்கும் சீதேவியைச் சந்தோஷத்தில் குதிக்க வைக்க வேண்டுமென்று அவர் எண்ணினார். ஆனால், சீதேவி சொன்னது...

''இஞ்சார், இப்படி வாற பணம் சந்ததிக்குக்கூடாது. கொண்டுபோய் விசாரிச்சுக் குடுத்திட்டு வா?''

சீதேவியின் இந்தக் கட்டளைக்குப் பணிந்து, விதாணையார் வீட்டைச் சுற்றி வந்து, பலரிடம் கதை விட்டுக் கதை கேட்டுப் பார்த்தார் வைரமுத்தர். அந்தப் பணத்திற்குச் சொந்தக்காரரென்று யாரும் வரவில்லை.

'தோஷம்' ஒன்றும் தொடராதிருக்க இருபத்தைந்து ரூபா செலவில் அம்மனுக்குக்



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

குளுர்த்தி செய்துவிட்டு வீட்டுக்குப் போய்ப் பணத்தைக் கொடுத்து காணியை மீட்டுக்கொள்வதாக இருந்தார்.

விடிந்ததும் விடியாததுமாக வடக்கே துக்கமேளம் கேட்டது. விதானையார் வீட்டுப்பக்கம் கேட்டது. விதானையார் வீட்டுப்பக்கமென்ன? - விதானையார் வீட்டிலேயே கேட்டது.

''விதானையார் கண்களை மூடியிட்டராம்'' என்ற செய்தியைக் கேட்டதும், வைரமுத்தரின் மார்பில் சுரீரென்றது. ''அதுகள் யோக்கியமான பிள்ளைகள். அப்படிச் செய்யாயினம், என்றை காணியிலை ஆசைப்படாகினம்'' என்று தன்னைத்தானே சமாளித்துக்கொண்டு மரண வீட்டுக்குப் போய் வந்தார்.

காடு மாற்றி முடிந்தது. எட்டுச் செலவும் கழிந்த மறுநாள் விதானையார் வீட்டுக்குப் போயிருந்த வைரமுத்தர். விதானையாரின் மூத்த மகள் பார்வதியிடம் இலேசாக விஷயத்தை வெளியிட்டார்.

''அந்திரட்டி முடியட்டன் இப்பென்ன அவசரம்!'' என்று பார்வதி பதில் சொல்லியதுடன் ''நாங்கள் அள்ளிக் குடுத்திட்டிருக்கிறம்'' என்று மனதிற்குள் புகைந்து கறுவிக் கொண்டாள்.

அந்திரட்டி முடிய முந்தி நான் இப்படிக் கேட்டிருக்கப்படாது'' என்று தன்னைத்தானே நொந்து கொண்டு வைரமுத்து வீடு வந்து சேர்ந்தார்.

ஒருமாத காலம் கழித்து, தலையின் பிறை வளைவு வெட்டையும், முகத்தையும் சவரம் செய்து, குளித்துத் தண்ணீர் தடவி வால் குடுமியைத் தட்டி முடிந்து, அப்போதுதான் சலவையிலிருந்து வந்திருந்த வேட்டியையும் மடித்து உடுத்திக் கொண்டு, பணப்பையை இறுக்கிப் பிடித்ததவாறே வைரமுத்தர் விதானையார் வீட்டை அடைந்தார்.

''ஏன் புள்ளை அந்தக் காணிச் சங்கதியை, இண்டைக்கு முடிப்பமே.

நல்ல நாள்-!''

''ஓ.... ... ஓ காணி எனக்குத்தான் சீதனமாய் எழுதியிருக்கினம். அவரும் கொழும்பிலை நிக்கிறார். வரட்டுக்கன். வட்டிக் கணக்கெல்லாம் பாக்க வேணும். வட்டிக்கணக்கு மட்டும் இப்ப ஐநூற்றுக்கு மேலை வருமே!''

''ஐந்நூறு!''

வைரமுத்தரின் அந்தராத்மா நடுங்கியது. ''என்னட்டை அப்பிடியெல்லாம் வேண்டக்குடாது புள்ளை. ஏதோ ஆண்டவனுக்கு நீதியாய்ப் போடுங்க'' என்று நா தழுதழுக்கக் கூறிவிட்டு, வளர்த்த நாய் முகத்தைப் பார்ப்பதைப் போல பார்வதியைப் பார்த்தபடி நின்றார்.

''சரி சரி நீ போ! நான் காயிதம் போட்டு அவரைக் கூப்பிட்டிட்டு உனக்கு ஆள் விடறன்.''

ஒரு வழியாகக் காரியம் முடிந்தது என்ற மனத்திருப்தியுடன் நடந்தார் வைரமுத்தர்.

மூத்த பிள்ளை இரண்டையும் கட்டிக் கொடுத்து, மூத்த மகன் சுப்பிரமணியத்தை எட்டாம் வகுப்பு வரைபடிக்க வைத்து, அவனுக்குக் கொழும்பிலே பியோன் வேலையும் வாங்கிக்கொடுத்துக் கல்யாணமும் செய்து, இரண்டாம் மகன் கேது படித்து வரும்வரை உதவியாக இருந்த சீதேவி போய் இவ்வளவு காலமாகியும், அந்தக் காணித்துண்டை மீட்க வைரமுத்தரால் முடியவில்லை.

''இனி என்ன செய்யிறது! நீயும் கனகாலமாய் அதிலை இருந்திட்டாய். பிள்ளைக்குட்டிக்காரன். காணிக்கு விலையாக இரண்டாயிரம் தந்திடு உன் பேரிலை காணியை எழுதிறன்.'' இப்படி விதானையாரின் மகள் பார்வதி போட்ட நிபந்தனையிலே மனதை ஊறப் போட்டுக்கொண்டு வைரமுத்தர் இருந்தார்.

''காசு இரண்டாயிரமும் கட்டித் தீராமலுக்கு இந்தத் தோட்டத்திலை மண் வெட்டியைப் போடறதில்லை'' என்று வைரமுத்தர் சபதம் செய்துகொண்டு வாழ்ந்தார்.

❖ ❖ ❖

சுப்பிரமணியத்திற்கு வாய்ந்த மனைவி கண்ணம்மா சாந்தமானவள் - பொறுப்புணர்ச்சி உடையவள். அந்தக் குடும்பத்திற்கு அவள் கிடைத்தது பேரதிர்ஷ்டந்தான்!

''அம்மான் அம்மான்'. என்று வைரமுத்தர் மேலும், ''தம்பி தம்பி'' என்று கேது மேலும் அவள் உயிரையே வைத்திருந்தாள்.

அம்மானின் ஆசையைப் பூர்த்தி செய்வதுதான் அவளின் ஆசையெல்லாம். கணவனால் மாதா மாதம் அனுப்பி வைக்கப்பட்ட ரூபா நூறில் அப்படி இப்படியென்று மீதிப்படுத்தி பக்கத்து வீட்டுப் பாறாத்தையுடன் சீட்டு போட்டத்தில் ஆயிரத்தைநூறு தேறியது. மிகுதிப் பணத்திற்கும் ஏதோ வழி செய்து வைரமுத்தர் கையில் கொடுத்தாள்.

மருமகளின் கையிலிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டபோது, அவரின் உரோமங்கள் குத்திட்டு உடம்பெல்லாம் குளிரோடியது.

இளையமகன் கேதுவும் ஊரிலில்லை. அண்ணனுடன் பத்து நாட்கள் தங்கி கொழும்புப் பட்டணத்தைப் பார்ப்பதற்காக அவன் போய்விட்டான்.

கண்ணம்மாவையும் துணைக்கு அழைத்துக் கொண்டு விதானையார் வீடு சென்று, பார்வதி பரமேஸ்வரர் சகிதமாக நொத்தாரிசு வீட்டை அடைந்ததும்தான் கண்ணம்மாவின் கழுத்தை வைரமுத்தர் கவனித்தார்.

''புள்ளை தாலிக்கொடி எங்கை?''

தாழ்ந்த குரலில் கேட்டார்! கண்ணம்மாவினால் உடனே பதில் சொல்ல முடியவில்லை. ஆனாலும் புத்திசாலித்தனமாகப் பதில் சொல்லிவிட்டாள்.

பின் கொக்கி சுழன்று விட்டதென்று மருமகள் கூறியது பொய்யென்று வைரமுத்தருக்கு நன்றாக தெரிந்து விட்டது. குழிவிழுந்த கண்களால் மருமகளை ஏறெடுத்துப் பார்த்துவிட்டு அவர் நடந்துவிட்டார்.

புதிதாக உருகி முடியும்போது, ''மருமகளின் சீதனப்பணத்தால் கொண்ட கொள்விலை'' என்று நொத்தாரிசிடம் எழுதுவிக்கும்போது எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். கண்ணம்மா வாயடைத்துப் போய் சிலையாக நின்றாள்.

இரவெல்லாம் வைரமுத்தரால் கண்ணுறங்க முடியவில்லை.

''அந்தப் பூமியின் மார்பை கிழித்து, உரத்தைத்தூவி, கேதுவை மாடாயுழைக்க வைத்து....'' இப்படி அவர் எத்தனையோ நினைத்தார். தூக்கம் எப்பிடி வரும்?

மனதின் இன்ப வேதனை அவரை படாதபாடு படுத்தியது.

விடிந்தது.

''என்னம்மான் முகமெல்லாம் இரைச்சுக் கிடக்கு''

தேநீரை எடுத்து வந்து அவரிடம் நீட்டும்போது கண்ணம்மா இப்படிக் கேட்டாள்.

இறப்பிலே மாட்டப்பட்டிருந்த கண்ணாடியை எடுத்து முகத்தைப் பார்த்தார். கண்களின் கீழ் இமைப்பிறை வளைவு முருத்துகள் உப்பிப் போயிருந்தன, வைரமுத்து சுட்டுவிரலால் அந்த வீக்கத்தை உரசிவிட்டார்.

இறப்பின் மூலையோடு தலை கீழாகத் தொங்கவிடப்பட்டிருந்த மண்வெட்டியைக் கையிலெடுத்து, அதன் இருபுறமும் பற்றிப் பிடித்திருந்த துருவைக் கால்களால் உரசி விட்டு இலாவகமாக உயர்த்தி தோள் மீது போட்டுக் கொண்டே இராச நடைபோட்டுத் தோட்டத்து நிலத்தில் காலடி எடுத்து வைத்தார்.

கால்கள் குளிர்ந்தன.

அந்தக் கிழத்தைப் பார்த்து கண்ணம்மா பெருமையால் பொருமினாள்.

வெயில் நெருப்பாய் எரிந்தது. இடையிடையே மழையும் தூறியது.

தூற்றலில் நனைந்து, வெயிலில் காய்ந்துகொண்டே வைரமுத்தர் இயந்திரமாக வேலை செய்தார். கண்ணம்மா எவ்வளவோ தடுத்தும் அவர் கேட்டால் தானே! பூமித்தாய் எவ்வளவு இதமாக இருந்தாள்!

நல்ல நாள், ஏதாவது இன்று நட்டுவிட வேண்டுமென்று வைரமுத்தரின் மனது கூறியது. அடுத்த வீட்டுக்குச் சென்றவர், ஒரு பிடி தக்காளிக் கன்றுகளுடன் வந்து சேர்ந்தார்.

வீட்டோடு மருவிய தோட்டத்து வெளியிலே சிறிய நீள் பாத்தி அமைத்து, மாட்டுக் கட்டையின் எருக்கும்பியில் ஒரு கடகம் எடுத்து வந்து பரவிக்கொத்தி, பத்துத் தக்காளிக் கன்றுகளை நிரையாக நட்டு, வரம்பு கட்டி, கள்ளிகளை எடுத்து சிறிய வேலியும் அமைத்துவிட்டு, வைரமுத்தர் கூனல் முதுகை நிமிர்த்தி உளைவெடுத்தார்.

''அம்மான், தம்பிக்கு வேலை கிடைத்திட்டதாம், பியோன் வேலை தானாம்'' என்று கூறிக்கொண்டே கண்ணம்மா ஓடிவந்தாள்.

வைரமுத்தர் தலையை நிமிர்த்தியபடி அப்படியே நின்றார்.

''அம்மான், அவர் தந்தி குடுத்திருக்கிறாராம்மான், தம்பிக்கு வேலை கிடைத்திட்டுதாம் அம்மான்.''

தந்தியை நீட்டியபடி கண்ணம்மா மறுபடியும் கூறினாள்.

வைரமுத்தரின் பஞ்சடைந்த கண்கள் கண்ணம்மாவுக்கு நேரே குத்திநின்றன.

அந்தப் பார்வை!

இமை வெட்டாத அந்தப் பார்வை!

வைரமுத்தரின் கண்களிலிருந்து பெருக்கெடுத்து வந்த கண்ணீர் அந்தத் தக்காளிச் செடிகளில் விழுந்து சிதறியது.

ஏக்கத்தின் சாயை படர்ந்த அந்த முகத்தை உற்றுப் பார்த்தபடி கண்ணம்மா நின்றாள்.

இரவு வைரமுத்தருக்கு ஜுரம் அடித்தது. அவர் ஏதேதோ பிதற்றித் தள்ளினார்.

கண்ணம்மா கண் விழித்திருந்தாள்.

அன்று பிடித்த ஜுரம் இன்று வரையில் அந்த நிலையில் தான் இருக்கிறது.

மூன்று மாதங்கள்!

இன்று வரையில் கண்ணம்மா கண் விழித்துக் காத்திருக்கிறாள்.

இத்தனை நாட்களும் அம்பலவாணரின் மருந்தைக் குடித்து அவருக்கு அலுத்துவிட்டது.

❖ ❖ ❖

கண்ணம்மாவின் கடிதம் கிடைத்ததும், சுப்பிரமணியமும், கேதுவும் ஓடோடி வந்து சேர்ந்துவிட்டார்கள்.

பிள்ளைகளைக் கண்டதும் வைரமுத்தர் பார்த்த பார்வை - அந்தப் பார்வையின் ஏக்கம் நீண்ட நேரம் நீடிக்கவில்லை. அவருக்கு மயக்கம் வந்துவிட்டது.

அவசர அவசரமாக அம்பலவாணர் அழைத்துவரப்பட்டார்.

நாடியைப் பரிசோதிக்க அம்பலவாணரின் முகத்தில் களைகுன்றிப் போய்விட்டது.

''தம்பி! விதியை வெல்ல யாராலை முடியும்? நாடி விழுந்து கொண்டு வருகுது. இன்று இரவு பத்து மணிக்குள்...''

அம்பலவாணர் இப்படிக் கூறிக் கைவிரித்து விட்டார்.

வைத்திய விடுதித் தலைமை டாக்டர் பாலசிங்கம் அழைத்து வரப்பட்டார்.

அம்பலவாணர் கூறியதற்கும் அவர் கூறியதற்கும் வேறுபாடு இருக்கவில்லை.

கண்ணம்மா கோவென்று கத்தினாள்.

வைரமுத்தர் முன் விறாந்தயில் கிடத்தப்பட்டார்.

உறவினர்கள் எல்லோரும் சூழ நின்றனர். அவர்கள் எதற்காகவோ காத்திருந்தனர்.

கருக்கல் வேளை, அடிவானத்தில் செங்குருதி தடவிக்கிடந்தது. அது வைரமுத்தரின் முகத்தில் பட்டுப்பிரதி பலித்திருக்கவேண்டும். அவர் முகம் சிவந்து கிடந்தது.

உடம்பை இலேசாக ஆட்டி அசைத்துக்கொண்டே வைரமுத்தர் கண் திறந்தார். சூழநின்ற உறவினர்களைப் பார்த்து என்ன நினைத்துக் கொண்டாரோ! கைகளைக் காட்டி அவர்களை விலகி நிற்கும்படி சைகை செய்தார்.

கண்ணம்மா முன்னே வந்து, எல்லோரையும் வழி விலக்கிவிட்டாள்.

தோட்டத்து வெளி அவர் கண்களுக்கு நன்றாகத் தெரிந்தது.

நீண்டு வளர்ந்த தக்காளிச் செடிகளில் தொங்கிக் கொண்டிருந்த தக்காளிப் பழங்கள் காற்றில் அசைந்தாடின.



விரல்களை அசைத்துக் கண்ணம்மாவை அழைத்த வைர முத்தர், அவள் காதில் ஏதோ சொன்னார்.

பொருமி வந்த விம்மலை மென்று விழுங்கியவாறே, அந்தத் தக்காளிப் பழங்களில் இரண்டைப் பறித்து வந்து மாமனின் கரத்தில் வைத்தாள் கண்ணம்மா.

அவசர அவசரமாக அந்தப் பழங்களை எடுத்துக் கடித்து மென்று



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

விழுங்கினார் வைரமுத்தர்.

இருட்டிக்கொண்டு வந்தது.

உறவினர்கள் எதற்கோ காத்திருந்தார்கள்.

விடிந்தது.

உறவினர்கள் தோற்றுப் போனார்கள்.

மறுபடியும் இருட்டியது.

காலை, மாலை தவறாமல் இரண்டிரண்டு பழங்களாகப்பறித்து வந்து மாமனாரின் கையில் வைத்து வந்தாள் கண்ணம்மா.

*கே. டானியல், டானியல் சிறுகதைகள்*

### அரும்பத விளக்கம்

| | |
|---|---|
| நெஞ்சோச்சல் | - மார்புவலி |
| சரை | - சிறுபொட்டலம் |
| குளுர்த்தி | - நேர்த்திக்கடன் |
| வரட்டுக்கன் | - வந்தபின்பு |
| ஜுரம் | - காய்ச்சல் |

### பயிற்சி

01) வைரமுத்து தனது சொந்த நிலத்தை மீட்பதற்கு பட்டதுன்பங்களை உமது மொழிநடையில் சுருக்கித்தருக.

02) தக்காளிப் பழங்கள் எனும் கதையின் மூலம் கே. டானியல் கூறவிளைவது யாது?

03) இக்கதைத் தலைப்பின் பொருத்தப்பாட்டை எடுத்துக்கூறுக.

04) ‘இறுதிவரைக்கும் வைரமுத்துவிற்கு காணி மீட்கமுடியாது போனதாக’ உமது கற்பனைத்திறத்தால் ஒரு கதை எழுதுக.

### மொழித்தேர்ச்சிக்கான செயற்பாடுகள்

*1. இச்சிறுகதையின் உள்ளடக்கம், பாத்திர இயல்பு, மொழியாட்சி என்பன பற்றிய உமது உணர்வுகளை நண்பர்களுடன் கலந்துரையாடுக.*

*2. இச்சிறுகதையில் ஒரு பகுதியை உங்கள் நண்பர்களுடன் சேர்ந்து நாடகமாக்குக.*

*3. இச்சிறுகதையில் வரும் கதை மாந்தர்களை உமது பிரதேச மக்களுடன் ஒப்பிட்டு உசாவுதல் ஒன்றை சுயமாக அமைக்க.*



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## கட்டுரையின் வகைகள்

கட்டுரை என்பது ஒரு பொருள் பற்றிக்கட்டி உரைத்தல் எனப்பொதுவாகக் கூறினாலும் எழுதப்படும் கட்டுரையின் பொருள், சார்பு, போக்கு என்பன நோக்கி அவற்றை வெவ்வேறு வகைக்குட்படுத்தலாம். எனினும் கட்டுரையின் பொருளமைப்பிற்கேற்ப அவற்றை இரு வகைப்படுத்தலாம்.

| இலக்கியக்கட்டுரை | அறிவியற்கட்டுரை |
|---|---|
| வர்ணனைக்கட்டுரை | விளக்கக்கட்டுரை |
| கற்பனைக்கட்டுரை | வரலாற்றுக்கட்டுரை |
| தற்சார்புக்கட்டுரை | விமர்சனக்கட்டுரை |
| சிந்தனைக்கட்டுரை | விவரணக்கட்டுரை |
| நகைச்சுவைக்கட்டுரை | ஆய்வுக்கட்டுரை |
| அங்கதக்கட்டுரை | |

### 1. விளக்கக்கட்டுரை

ஒரு பொருளை அல்லது கூற்றைக் காரணகாரியத் தொடர்புடன் பல்வேறு எடுத்துக்காட்டுகள் வாயிலாக விளக்கி எழுதும் கட்டுரை விளக்கக்கட்டுரை எனப்படும்.

எல்லாக் கட்டுரைகளுமே விளக்கி எழுதப்படுவனவாக இருந்தாலும், இந்த வகைக்கட்டுரையில் எடுத்துக்கொண்ட விடயக்கூறுகளை உள்ளதை உள்ளவாறென்றில்லாமல் வாசகர்கள் புரிந்து ஏற்றுக்கொள்ளத்தக்கதான மொழி நடையில் கருத்துக்களை இலகுபடுத்தி தெளிவாக எழுதுதல் முக்கியமானதாகும்.

எழுத்தாக்க மூலங்களான, நூல்கள், அவதானிப்புகள், அபிப்பிராயங்கள், எண்ணங்கள், அனுபவங்கள் என்பவற்றைக் கொண்டு உங்கள் ஆசிரியரின் வழிகாட்டலுடன் பின்வரும் தலைப்புகளுக்கு சட்டகத்தை அமைத்துக் கட்டுரை எழுதுங்கள்.

1. சூழல் மாசுபடுதல்.
2. விஞ்ஞானத்தினால் உண்டான மறுமலர்ச்சி.

*தற்சார்புக்கட்டுரை - சுயசரிதை*

கட்டுரை எழுதுபவர் தனது சொந்த அனுபவங்கள், உணர்ச்சிகள், அபிப்பிராயங்கள் என்பவற்றை விளக்கியும், விமர்சித்தும் எழுதும் கட்டுரை தற்சார்புக்கட்டுரை எனப்படும். அவ்வாறே ஒரு பொருள் அல்லது உயிரினது வரலாற்றை அல்லது வாழ்க்கையை ஆரம்பத்திலிருந்து இன்றுவரை விளக்கிக் கூறுவதாக எழுதுவது ‘சுயசரிதை’ என்றும் கூறலாம்.

தற்சார்புக் கட்டுரை, சுயசரிதை ஆகிய இரண்டும் சுயகூற்றாக அமைந்தாலும் எழுதப்படும் பொருள் குறித்து இரண்டும் அமைப்பில் சிறிது வேறுபடும். தற்சார்புக்கட்டுரை தனது அனுபவங்கள், உணர்ச்சிகள் பற்றிக் கூறுவதாகும்.

1. நான் கண்ட கனவு
2. எனது வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம்

சுயசரிதை என்பது தனது வாழ்க்கை வரலாற்றை ஆரம்பத்திலிருந்து விளக்கிக் கூறுவதாக அமைவதாகும்.

1. ஒரு குடையின் சுயசரிதை
2. பேனை பேசுகிறது

சுயசரிதை தன் கூற்றாக எழுதுதல், கற்பனையில் சம்பவங்களை ஆக்குதல் பொருத்தமுற அவற்றைப் படிமுறையில் வளர்த்து செல்லுதல், வாசகர்களை கவரும் கதை தழுவியமொழி நடை, வியப்பூட்டும் முடிவு போன்றன இவ்வகைக்கட்டுரைகளின் இலச்சணங்கள் எனலாம்.

✸ உலகப்புகழ் பெற்ற சுயசரிதைகளைத் தேடி வாசியுங்கள்

| | | |
|---|---|---|
| காந்தி | - | சத்திய சோதனை |
| அப்துல்கலாம் | - | அக்கினிச் சிறகுகள் |
| கார்க்கி | - | எனது குழந்தைப்பருவம் |
| | | எனது இளமைப்பருவம் |
| | | எனது பல்கலைக்கழகம் |

### *கற்பனைக்கட்டுரைகள்*

ஒரு விடயத்தைப்பற்றி உள்ளதை உள்ளவாறு உரைத்தல் போலவே நாம் காணா ஒன்றைக் கற்பனையில் உருவாக்கி அதனைச் சுவைபடச் சித்தரித்தல் கற்பனைக் கட்டுரையாகும்.

1. வாசகர்களிடையே பயனுள்ள நடத்தைகளைப் பரப்புவதற்கு
2. புதிய அனுபவங்களை ஏற்படுத்துவதற்கு
3. இரசனையை ஏற்படுத்துவதற்கு

இவ்வகைக் கட்டுரை அதிகம் உதவும்.

1. 2050ம் ஆண்டில் உலகம் எப்படியிருக்கும் .......
2. நான் இந்த நாட்டின் சனாதிபதியானால் .....
3. எனக்கு வாய்பேச முடியுமானால் ..... மாட்டின் கற்பனை என்ற தலைப்பில்

இக்கட்டுரைகளுக்கான பொருத்தமான சட்டகத்தை அமைத்து, கட்டுரையை எழுதுக.

### *வருணனைக்கட்டுரை*

வாசகர்கள் வாசித்து இரசிக்கும் கட்டுரை வகையில் வர்ணனைக்கட்டுரையை சிறப்பானதெனக் கூறலாம். ஒரு பொருளையோ, காட்சியையோ, நிகழ்ச்சியையோ, ஒருவரின் தோற்றத்தையோ சுவைபட வர்ணித்துச் சிறப்பித்து எழுதுவதே வர்ணனைக் கட்டுரையாகும்.

வர்ணிக்கும் விதத்திலும் வாசகர்கள் மத்தியில் ஏற்படுத்தும் உணர்வுகளிலும்

வர்ணனைக்கட்டுரைகளின் சிறப்புத்தங்கியுள்ளது. வர்ணனைக்கட்டுரைகளுக்கு முகவுரை தேவையில்லையென்பர்.

### விவரணக்கட்டுரை

விவரணம் என்பது விபரங்கள் எனப்பொருள்படுமாகையால் குறிப்பிட்ட விடயம் ஒன்று பற்றிய பல்வேறு விபரங்களையும் தொகுத்து விளக்கி எழுதுவது விவரணக் கட்டுரை எனலாம். விவரணக்கட்டுரையில் பல்வேறு தகவல்கள் சேகரிக்கப்பட்டு ஒழுங்கு முறையில் தொகுத்து விளக்கப்படுகின்றது.

குறிப்பு - (1) பொருளியல், சமூகவியல் சார்ந்த விடயங்கள் பற்றியே விவரணக்கட்டுரை எழுதப்படுகின்றன.

(2) தரவு சேகரித்தல், தரவுகள் நிரைப்படுத்தல், தர்க்கரீதியாக நியாயப்படுத்தல் என்பன கவனிக்க வேண்டிய அம்சமாகும்.

### வரலாற்றுக்கட்டுரை

வரலாற்றுக் கட்டுரை என்பது நடைபெற்ற நிகழ்ச்சிகள் சம்பவங்கள். பெரியார்கள், அறிஞர்கள் வாழ்க்கைவரலாறு, தொண்டுகள் ஆகியனபற்றி விபரங்களை பயன்தரும் வகையில் ஒழுங்கமைத்து ஆக்குதலையே இது குறிக்கும். இவ்வகை கட்டுரைகளில் ஆதாரங்களை அதிகமாகப் பயன்படுத்த வேண்டும்.

### விமர்சனக்கட்டுரை

ஒரு விடயத்தைக் காய்தல், உவத்தல் இன்றி சீர்தூக்கி ஆராய்ந்து திறனாய்வு முறையில் எழுதுவது விமர்சனமாகும்.

நாவல், சிறுகதை, திரைப்படம், நாடகம், தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகள் போன்றவற்றின் கரு, உரு, அமைப்பு முதலியவை குறித்துக் குறைநிறைகளைச் சீர்தூக்கி விமர்சனக் கட்டுரைகள் எழுதப்படலாம்.

### ஆய்வுக்கட்டுரை

ஆராய்ந்து எழுதுதல் ஆய்வுக் கட்டுரை எனப் பொதுவாகக்கூறப்படினும் ஆழமாக சில விடயங்களை சீர்தூக்கி ஆராய்ந்து ஆதார பூர்வமாக எழுதுவதே ஆய்வுக் கட்டுரை எனப்படும்.

01. பிரச்சினையை இனங்காண்பது.
02. தரவுகளை சேகரிப்பது.
03. அத்தரவுகளிலிருந்து தகவல்களை இனங்காண்பது.
04. தகவல்களைத் தர்க்க ரீதியாக ஒழுங்குப்படுத்தி எழுதுவது.
05. ஆலோசனை அல்லது தீர்வுகளை முன்வைப்பது.

என்பன ஆய்வுக் கட்டுரையின் படிமுறையாகும்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## மரபுப்பெயர்கள்

### *இளமைப்பெயர்கள்*

| | | | |
|---|---|---|---|
| கீரி | - பிள்ளை, குட்டி | புகையிலை | - நாற்று |
| அணில் | - குஞ்சு, பிள்ளை | பனை | - வடலி |
| ஆடு | - குட்டி | தென்னை | - பிள்ளை, கன்று |
| குதிரை | - குட்டி | குரங்கு | - குட்டி, பறள் |
| பாம்பு | - குட்டி | புலி | - குட்டி |
| மீன் | - குஞ்சு | பூனை | - குட்டி, பறள் |
| தவளை | - குஞ்சு, பேத்தை | யானை | - குட்டி, கன்று போதகம் |
| கோழி | - குஞ்சு | சிங்கம் | - குருளை |
| கிளி | - பிள்ளை, குஞ்சு | நாய் | - குட்டி, குருளை |
| கமுகு | - பிள்ளை, குஞ்சு | மான் | - குட்டி, கன்று |
| வாழை | - குட்டி, கன்று | | |

## தொனியைக் குறிக்கும் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| கரடி | - கத்தும் | நாய் | - குரைக்கும் |
| குதிரை | - கனைக்கும் | பூனை | - கத்தும் |
| பசு | - கதறும், கத்தும் | ஆந்தை | - அலறும் |
| யானை | - பிளிறும் | மயில் | - அகவும் |
| நரி | - ஊளையிடும் | தேனீ | - ரீங்காரம் செய்யும் |
| பன்றி | - உறுமும் | வண்டு | - இரையும் |
| குயில் | - கூவும் | பாம்பு | - சீறும் |
| கிளி | - பேசும் | பல்லி | - சொல்லும் |
| காகம் | - கரையும் | கோழி | - கொக்கரிக்கும், கேரும் |
| தவளை | - கத்தும் | சேவல் | - கூவும் |

# தொகாநிலைத் தொடர்கள்

பின்வரும் உதாரணங்களை நோக்குவோம்.

*தூரிகையால் வரைந்தான்.*

*உண்ட கமலா.*

*இன்று வந்தான்.*

*சந்திரன் உதித்தான்.*

*பிறை நிலவு.*

இவ்வுதாரணங்களின் பண்புகளை நோக்குவோம்.

- சொற்களுக்கிடையில் உருபுகள் மறைந்து இருக்கவில்லை.
- சொற்கள் இணையாமல் பிளவுபட்டுத் தனித்தனியாகவே பொருள் உணர்த்துகின்றன.
- இரு சொற்களும் இணைந்து ஒரு சொல்லின் தன்மையை பெறவில்லை.

**எனவே,**

***சொற்களுக்கிடையே வேற்றுமை உருபு முதலிய உருபுகள் கெடாமலும், ஒரு சொல்லின் தன்மை பெறாமலும் சொற்கள் பிளவுபட்டுத் தொடரும் சொற்றொடர்களை நாம் தொகாநிலைத் தொடர்கள் என்போம்.***

## தொகாநிலைத் தொடர் பாகுபாடு

**பின்வரும் அட்டவணையைக் கவனியுங்கள்**

| தொகாநிலைத்தொடர் | தொகாநிலைத்தொடர் வகைகள் |
|---|---|
| கவிதா வந்தாள் | எழுவாய்த்தொடர் |
| சீதா வா! | விளித்தொடர் |
| குடத்தை வனைந்தான் | வேற்றுமை தொகாநிலைத்தொடர் |
| உண்டான் கிருபா | வினைமுற்றுத்தொடர் |
| உண்ட தீபன் | பெயரெச்சத்தொடர் |
| உண்டு வந்தான் | வினையெச்சத்தொடர் |
| மற்றொன்று | இடைச்சொற்றொடர் |
| கடிகமலம் | உரிச்சொற்றொடர் |
| பாம்பு! பாம்பு! | அடுக்குத்தொடர் |



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

- வேற்றுமைத்தொகை விரிந்த விடத்து வேற்றுமை தொகாநிலைத்தொடராகும்.
- வினைத்தொகை விரிந்த விடத்து பெயரெச்சத் தொகாநிலைத்தொடராகும்.
- பண்புத்தொகையும் உம்மைத்தொகையும் விரிந்தவிடத்து இடைச்சொற் தொகாநிலைத்தொடராகும்.
- உவமைத்தொகை விரிந்தவிடத்து முன்னது இடைச்சொற்றொடரும் பின்னது இடைச்சொல்லடியாகப் பிறந்த பெயரெச்ச,வினையெச்சத் தொகா நிலைத்தொடராகும்.
- அன்மொழித்தொகை விரிந்தவிடத்து வேற்றுமைத் தொகாநிலைத்தொடராகும்.

## பயிற்சி

பின்வரும் தொகைநிலைத் தொடர்களுக்கு உதாரணம் தருக.

1. எழுவாய் தொடர்
2. விளித்தொடர்
3. வேற்றுமைத்தொடர்
4. வினையெச்சத் தொடர்
5. பெயரெச்சத் தொடர்

**ஒப்படை**

1. தொகாநிலைத்தொடர்கள் கொண்ட பட்டியல் ஒன்றைத் தயாரிப்போம்.

# 04 அறிவியல் பார்வை



நமது நாட்டிற்கு அறிவியல் என்பது முழுமையும் புதிதன்று. நமது முன்னோர்கள் அறிவியல் துறையில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சாதனைகள் புரிந்திருக்கின்றனர். அதற்குப் பல சான்றுகள் காணலாம். ஆனால் இன்று நாம் பயன்படுத்தும் அறிவியல், தொழில்நுட்பம் ஆகியன நமது மண்ணுக்குப் புதியவை.மேலை நாட்டிலிருந்து நாம் இறக்குமதி செய்தவை. இதற்கு ஒருசான்று கூறி விளக்குவது பொருந்தும். நமது முன் னோர்கள் மருத்துவத்துறையில் கணிசமான முன்னேற்றம் கண்டிருந்தனர். ஆயுர் வேதம் நீண்ட பாரம்பரியம் உடையது. அதுபோன்றே சித்த மருத்துவம் தமிழ கத்தில் வளர்ந்திருக்கிறது. பெரிய அளவில் ஓலைச் சுவடிகள் இன்னும் நூல் வடிவம் பெறாமல் இருக்கின்றன. ஆனால் நமக்கு 'அலோபதி முறை' எனும் ஆங்கில மருத்துவ முறை முழுமையும் புதிதானது. அதில் நமக்கு எந்தப் பாரம்பரியமும் இல்லை. இன்று நாம் பயன்படுத்தும் அறிவியலும் தொழில் நுட்பமும் அலோபதி மருத்துவ முறை போன்று நமக்கு முழுவதும் புதியனவாகும்.

அறிவியல் பார்வை என்பதன் மூலம் ஓர் அணுகுமுறையை நாம் குறிப்பிடுகிறோம். பொதுவாக அறிவியல் உலகம், நம்பிக்கையின் அடிப்படையில் எதையும் ஏற்றுக் கொள்ளாத மரபை உடையது. எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும், எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவியல் உலகின் அடிப்படைக் கொள்கை யாயினும், கோட்பாடாயினும் அவை முறையான வாதங்கட்கும் சோதனை கட்கும் உட்படுத்தப்பட வேண்டும். அவற்றின் அடிப்படையில் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும். இது அறிவியல் உலகின் மரபு.



மனிதன் தனது அன்றாட வாழ்வில் எடுக்கும் முடிவுகளில் தனது பகுத்தறி விற்கு, ஆய்விற்கு அதன் வழி கண்ட முடிவுகளுக்கு, நடைமுறையில் என்ன இடம் கொடுக்கிறான், எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறான் என்பதைப் பொறுத்தே அறிவியல் பார்வை ஆகும். அறிவியல் பார்வையில் முக்கியமான ஒரு கூறுபாடு குறிப்பிடப்பட வேண்டும்.

அறிவியல் பார்வை மனித முயற்சினை வளர்ப்பது. நம்மைச் செயலுக்குத் தூண்டுவது; நமக்குள் அணைக்கட்டு நீர் போலத் தேங்கியிருக்கும் ஆற்றல் பிரவாகமாகப் பெருக்கெடுக்க உதவுவது. நம்மைப் படைத்தவன் இருக்கலாம். ஆனால் நாமும் படைப்புத் திறன் பெற்றவர்களே எனும் நம்பிகை நிறைந்த வாழ்வியலுக்கு வழிவகுப்பது.

நாம் வாழ்வது அறிவியல் தொழில்நுட்ப யுகம், அல்லது கல்வி யுகம் என்றே அழைக்கப்படுகிறது. அறிவியலும் தொழில் நுட்பமும்தான் தொழில் புரட்சியை ஏற்படுத்தித் தொழில் நாகரிகத்தைத் தோற்றுவித்தன. அறிவியலையும், தொழில் நுட்பத்தையும் பயன்படுத்துவதன் மூலம் இரு முக்கிய முன்னேற்றங்கள் ஏற்பட்டன.

1. இயற்கை வளங்கள் என்பன நிலம், நீர் மட்டும் என்ற நிலையிலிருந்து வளர்ந்து கனியவளம், எண்ணெய் வளம் ஆகியவற்றையும் நம்மால் பயன்படுத்த முடிந்தது.
2. மனிதன் தன்னுடைய தசைவலி, தான் பழக்கிய விலங்குகளின் தசைவலி என இரண்டை மட்டும் வினை செய்வதற்குப் பயன்படுத்தும் நிலையிலிருந்து, நிலக்கரி, எண்ணெய், எரிவாயு, மின்சாரம் பின்னர் அணுப்பகுப்பு போன்றவற்றிலிருந்து ஆற்றலைப் பெற்றுப் பணி முடிக்கும் நிலைக்கு வளர

முடிந்தது. இது மனித ஆற்றலின் எல்லையை எண்ணிப் பார்த்திராத அளவிற்கு விரிவாக்கியது. மனிதனின் முன்னேற்றப் பாதையின் ஒவ்வொரு கட்டத்திலும் 1950 வரை அவன் கண்ட கருவிகள், அவன் தசைவலி மூலம் பெறும் உற்பத்தித் திறனை மிகுத்தன. 1950-க்குப் பின்னர் அவன் கண்ட கணிப்பொறி அவன் மதிவலி மூலம் பெறும் உற்பத்தித் திறனை அவன் கற்பனை செய்திராத அளவிற்கு மிகுந்தது.

அறிவியல் தொழில் நுட்பம் படைத்த கருவிகளைப் பயன்படுத்தியதன் மூலம் எல்லாத் துறைகளிலும் தனி மனிதன் உற்பத்தித்திறன் பல மடங்கு உயர்ந்தது. இன்று முன்னேறிய நாடுகட்கும், பின் தங்கிய நாடுகட்கும் உள்ள முக்கியமான வேறுபாடே உற்பத்தித் திறனில் இருக்கும் வேறுபாடுதான்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

இந்தக் கட்டத்தில் அறிவியல் தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்துவதற்கான இன்றியமையாத தேவையைக் குறிப்பிட வேண்டும். பசுமைப் புரட்சியைப் பொறுத்தவரை உணவு உற்பத்திச் சாதனங்களை உருவாக்கியவர்கள் அறிவியல் தொழில் நுட்ப வல்லுநர்கள். ஆனால் உற்பத்தியைப் பெருக்கியவர்கள் விவசாயிகள் தான். அறிவியலும் தொழில்நுட்பமும் விவசாயிகளைச் சென்றடைந்த பின்தான் இந்த மாற்றம் ஏற்பட்டது.

முன்னேறியுள்ள நாட்டினர் கண்டுள்ள மேம்பாடு அறிவியலும் தொழில் நுட்பமும் தந்த வரம்தான். எனினும் அறிவியல், தொழில் நுட்பக் காணல்கள் புனைவுகள் மட்டுமே இவற்றைச் சாதித்துவிடவில்லை. அவை மக்கள் பயன்படுத்தும் வகையில் அவர்களைச் சென்றடைந்தன. அவர்களது சிந்தனையில், பார்வையில், தம்மை எதிர் நோக்கும் பிரச்சினைகளைப் பார்க்கும் முறையில், புரிந்து கொள்ளும் திறனில், அவர்களுடைய அன்றாட வாழ்கை முறையில், நம்பிக்கைகளில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தின. அந்த மாற்றங்கள்தான் அந்தச் சமுதாயங்களில் அறிவியலும், தொழில்நுட்பமும் மேலும் வளரும் சூழ்நிலையை உருவாக்கின. அறிவியல் தந்த கருவிகளை, செய்முறைகளைத் தங்கள் நலனுக்குப் பயன்படுத்தும் திறனை மக்களிடம் உருவாக்கின.

என்ன? ஏன்? எப்படி? என ஆங்காங்கு கேள்விகளை எழுப்பும் அணுகுமுறை, அக்கேள்விகட்குப் பதில் காணும் திறனை வளர்த்தது. ஒவ்வொரு முறையான கேள்வியும், அதற்குக் கண்ட பதிலும், மனித சமுதாயத்தை ஓர் அடி முன் செல்ல உதவியது. சில சமயங்களில் புரட்சிகரமான மாற்றங்களையும் உருவாக்கியது.

நமது சமுதாயம் பரந்த அளவில் இன்னும் அறிவியல், தொழில் நுட்பச்சிந்தனையின், அணுகுமுறையின், அறிவியல் விழுமியங்களின் அறிமுகத்தைப் பெறவில்லை. நம்பிக்கைகளையே அடிப்படையாக வைத்துச் செயல்பட்ட வேளாண்மை நாகரீக வரம்புகளைத் தாண்டி வெளிவரவில்லை. காலாவதியாகிவிட்ட பல பாரம்பரியச் சுமைகளை இறக்கி வைக்கவில்லை. நமது சமுதாயத்தில் அறிவியலும் தொழில் நுட்பமும் ஆங்காங்கு ஒளிபரப்பும் மின் விளக்குகள் போல் இருக்கின்றன. அவற்றுள் சில பிரகாசமாகவும் இருக்கலாம். ஆனால் அவை பரவலாக அங்கிங்கெனாதபடி எங்கும் ஒளி வீசும் முழு நிலவு போன்று இல்லை.

வேளாண்மை நாகரீகத்தில் ஒவ்வொரு சிற்றூரும் அதற்குத் தேவையான தொழில் நுட்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திறன் கொண்டவையாக இருந்தன. அவர்களது தேவைக்கேற்ப தச்சர், கொல்லர், குயவர், கொத்துத் தொழில் செய்வோர், காலணி செய்வோர், உடைவெளுப்போர் எனத் தன்னிறைவு கொண்ட சமுதாயமாக இருந்தது. தொழில் நாகரீகத்திலும் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் தொழில் நுட்பத் திறன் உள்ளதாக ஒவ்வொரு சிற்றூரும் அமைய வேண்டும். அந்த அளவிற்கு அறிவியலும் தொழில் நுட்பமும் பரவலாக மக்கள் மன்றத்தில் இடம் பெற வேண்டும். அது பல வகையான கருப்பொருளாக மட்டுமன்றி மக்களது பார்வையிலும், அணுகுமுறையிலும் பிரதிபலிக்க வேண்டும்.

அறிவியல் பார்வை எத்தனையோ விருப்பு, வெறுப்புகளை முழுமையாக நீக்கா விட்டாலும் கணிசமாகத் தளர்த்தும் தன்மையுடையது. கருத்துக்குத் தெளிவூட்டும் திறனுடையது. தன் முயற்சிக்கு ஊக்கமளிக்கும் கருவுடையது. வாழ்கையில் பல



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

பரிமாணங்களைச் சற்றுப் புதிய கோணத்தில் பார்க்கும் வாய்ப்புகளைப் படைக்கும் வாயில்களைத் திறக்கும் இயற்கையைக் கொண்டது. இதற்கேற்ற மாற்றம் இன்னும் பரவலாக நமது நாட்டில் மக்களிடையே உருவாகவில்லை. இதற்கான முயற்சிகளை மேற்கொள்வது நம் தலையாய கடமை.

*- வா. சே. குழந்தைசாமி -*

**அரும்பத விளக்கம்**

| | |
|---|---|
| கனிசம் | - மிகுதியான |
| பாரம்பரியம் | - மரபு வழி |
| பாமர மக்கள் | - விரிந்த அறிவிலார் |
| வாதம் | - தருக்கம் |
| பரிமாணம் | - அளவு |
| பிரச்சினை | - கேள்வி |
| அலோபதிமுறை | - ஆங்கில மருத்துவமுறை |

**பயிற்சி**

01) நாம் இன்று பயன்படுத்தும் அறிவியல் மேலை நாட்டு இறக்குமதி என்பதற்கு சான்று கூறுக?

02) அறிவியல் பார்வையின் பயன்களைத்தருக.

03) அறிவியலும், தொழினுட்பமும் சூழலில் ஏற்படுத்திய மாற்றங்களைத் தருக.

**மொழித்தேர்ச்சிக்கான செயற்பாடுகள்**

*1. உமது பிரதேச தொழிற்றுறையில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு அறிவியல் தொழில்நுட்பம் வகித்த பங்கு பற்றி - இது தொடர்பான அறிவுள்ளோருடன் உசாவி - அறிந்த விடயங்களை வகுப்பறையில் தொகுத்துக் கூறுக.*

*2. தற்கால அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி தொடர்பாக சஞ்சிகைகள், நூல்கள், இணையம் என்பவற்றைப் பயன்படுத்தி - தேவையான பொருத்தமான குறிப்புகளைத் தொகுக்க.*

*3. நீர் தொகுத்த குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு கட்டுரை எழுதுக.*

## உரையாடல்

நாளாந்த வாழ்வில் நாம் பலருடன் கலந்துரையாடுகிறோம் ஒருவரின் சுகம் விசாரிக்க, வாழ்த்துத் தெரிவிக்க, எமது கருத்தைத் தெளிவுபடுத்த, வாதிட, எமது தேவைகளை பிறரிடம் கூற, பிறரின் தேவைகளை நிறைவேற்ற, கல்வியைக் கற்றுக்கொள்ள எனப்பல விடயங்களுக்கு பிறருடன் கலந்துரையாடுகிறோம்.

நீங்கள் பின்வரும் விடயங்கள் பற்றிச்சிந்தித்துப் பாருங்கள். உங்கள் தாயுடன், தந்தையுடன், நண்பர்களுடன், ஆசிரியருடன், அதிகாரிகளுடன் உரையாடும் போது ஒரே விதமாகவா உரையாடுகிறீர்கள்? இல்லை என்பதே உங்கள் விடையாக இருக்கும்.

ஏன் இவ்வாறு வித்தியாசமாக உரையாடுகிறோம். பால், வயது, உறவு, பதவி, தகுதி என மாறுபடும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எமது உரையாடலும் வேறுபடும் என்பதை நீங்கள் சிந்தித்திருப்பீர்கள்.

இந்த வேறுபாடுகளுக்கு அமைய எமது உரையாடலின் பாணியை மாற்றிக் கொள்வோம், என்பதை நடைமுறையில் நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். அத்தோடு எமது அன்றாடவாழ்வின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு உரையாடலே மிக முக்கியமாக இடம் பெறுகிறது. மேலும் நாடகம், சிறுகதை, நாவல் போன்ற இலக்கியங்களைப் படைக்கவும் இவ்வகையான உரையாடல்கள் அவசியம்.

உரையாடல் வாழ்வின் வெற்றிக்கு பெரும்பங்கு வகிப்பதுடன் எமது திறமையை வெளிப்படுத்தவும் உதவும். எனவே இவ்வகையான உரையாடல்களை நீங்கள் எழுதிப்பழகுவது மிக அவசியமாகும்.



### விண்வெளி ஆய்வுகள்



வசந்தனும், நிமாலும் நல்ல நண்பர்கள் ஒரே அறையில் தங்கிப் படிப்பவர்கள். நிமால் அன்றைய தினசரியை பார்த்துக் கொண்டிருந்தான். வசந்தன் தன் புத்தகங்களை ஒழுங்குப்படுத்திக் கொண்டிருந்தான்.

**நிமால்** :- வசந்த் இன்றைய பேப்பரில் பறக்கும் தட்டைப் பற்றி ஒரு செய்தி வந்திருக்கிறது.

**வசந்த்** :- பறக்கும் தட்டா அப்படி என்றால்?

**நிமால்** :- வேற்று கிரகத்தவர்களின் விமானம்! என்று கூறலாம்.

**வசந்த்** :- வேற்றுக் கிரகத்தவரின் விமானமா? அது எமது விமானங்கள் போலவா இருக்கும்?

**நிமால்** :- இதோ, ஒரு மாதிரி படம் போடப்பட்டிருக்கிறது பார்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

*பத்திரிகையைப் பார்த்துக் கொண்டே.....*

வசந்த் :- எமது விமானங்களை விட வித்தியாசமாக உள்ளது! சரி இவர்கள் எப்படி நமது கிரகத்துக்கு வந்திருப்பார்கள்?

நிமால் :- எம்மிடம் ஏற்பட்டிருக்கும் விண்வெளி அறிவைவிட அவர்களிடம் அதிகமாக இருக்கக் கூடும். அதனால் தான் பூகோள எல்லைக்கு அவர்களால் வந்து போக முடிகிறது.

வசந்த் :- அப்படி என்றால், எமது விண்வெளி ஆய்வுகள் அவ்வளவு சிறப்பு வாய்ந்தவை இல்லையா?

நிமால் :- அப்படிச் சொல்ல முடியாது? எமது விண்வெளிக் ஆய்வுக்கு கிட்டத்தட்ட மூந்நூறு ஆண்டு வரலாறு உண்டு. அண்டவெளியில் எமது ஆதிக்கமும் சிறப்பானது. 1950 க்குப் பின் அது தீவிர வேகம் கண்டுள்ளது.

வசந்த் :- அதைப் பற்றி எனக்குத் தெளிவு இல்லை எனக்கு சற்று விளக்கமாக சொல்லேன்.

நிமால் :- ரஷ்யா, அமெரிக்கா, இன்று இந்தியா போன்ற நாடுகள் விண்வெளி ஆய்வில் தடம் பதித்தவை எனலாம். ரஷ்யர்கள் ஸ்புட்னிக் 1,2 எனும் செய்மதிகளை விண்ணுக்கு ஏவியதில் இருந்து விண்வெளி ஆய்வுகள் விரிவாக தொடங்கியது.

வசந்த் :- விண்வெளி ஆய்வுகளை செய்வதால் மனிதனுக்கு என்ன நன்மைகள் ஏற்படுகின்றன?

நிமால் :- விண்ணிலை பற்றி அறியலாம், காற்றின் வேகம், வளிமண்டலத்தின் வெப்பம், ஈர்ப்பு விசை, மண்ணின் தன்மை, நாட்டு நிலைமைகள், சமுத்திர, வான் போக்குவரத்து, செய்தித் தொடர்பாடல் என பல விடயங்களுக்கு செய்மதிகள் உதவுகிறது. அத்தோடு வேற்று கிரகங் களில் உயிரினங்கள் உள்ளனவா அங்கு மனிதன் சென்று வாழ்வதற்கான சூழல் உள்ளதாவென்று அறியவும் முற்படுகிறது.

வசந்த் :- ஆம்... நிலவில் மனிதன் நடந்து செல்லும் படம் கூட நான் பார்த்திருக்கிறேன். நீல் ஆம்ஸ்ரோங், அல்ட்றின், காலின்ஸ் ஆகிய மூன்று பேர் பற்றிய தகவல்களை எமது புவியியல் ஆசிரியர் கூறி இருக்கிறார்.

நிமால் :- அதுமட்டுமல்ல கொழும்பில் விண்வெளிக்கலம் ஒன்றை கூட காட்சிக்கும் வைத்திருந்தார்கள்.

வசந்த் :- சே.. நம்மால் அதைப் பார்க்க முடியவில்லையே!

நிமால் :- சரி. உண்மைதான், அதைவிட இப்போது இணையத் தளங்களில் பல தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். இன்று விண்வெளி ஆய்வில் புதிய திருப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

வசந்த் :- அது என்ன திருப்பம்?

நிமால் :- அதுதான் செவ்வாய்கிரகத்தை நோக்கிய ஆய்வுகள்.

வசந்த் :- என்ன செவ்வாய் கிரகமா? ஆமாம். இப்போது தான் எனக்கு ஞாபகம் வருகிறது. இந்தப் பறக்கும் தட்டில் வருபவர்கள் செவ்வாய்க் கிரகத்தை சேர்ந்தவர்களாக இருக்கக் கூடும் என்று, பரவலாகப் பேசப்படுகிறது. சரி செவ்வாய்க்கு அனுப்பப்பட்ட விண்கலத்தின் பெயர் என்ன?

நிமால் :- 'வைக்கிங்' என்பது அதன் பெயர். புவியில் இருந்து 50 கோடி கி.மீ தூரத்தில் உள்ள செவ்வாயில் மனிதன் உயிர்வாழ முடியுமா? நீர், நில, மண் அமைப்பு எவ்வாறு என்பதை ஆய்வு செய்யும் அத்தோடு இந்த ஆய்வுகளுக்கு மிதக்கும் ஆய்வு கூடங்களைப் பயன்படுத்துகிறார்கள்.

வசந்த் :- மனிதனின் ஆற்றல் எவ்வளவு மகத்தானது மனிதனால் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை.

நிமால் :- உண்மைதான் வசந்த் இந்த உலகில் எல்லாவற்றையும் படைத்தவன் மனிதன் தான் ஆனால் மனிதனின் ஆற்றல் நன்மைக்கு மட்டும் பயன்படவில்லையே மனிதனின் அழிவுக்கும் காரணமாகிவிடுகிறது.

வசந்த் :- அப்படி என்றால் விண்வெளி ஆய்வுகளால் தீமையும் உண்டா?

நிமால் :- ஆமா. தீமையும் உண்டு பலகோடி பெறுமதியான பணம் செலவிடப்படல், சூழல் மாசடைதல், நாடுகளை உழவு பார்த்தல், உயிர்ச்சேதம் வல்லரசு ஆதிக்கம் என அதுவும் நீண்டுக்கொண்டே போகிறது.

வசந்த் :- இந்திய விண்வெளி வீராங்கனை கல்பனா சாவுலா இறந்தது, இவ்வாறான ஒரு நிகழ்வின் போது தானே அவரோடு பலர் வெடித்துச் சிதறிவிட்டனர் அல்லவா?

நிமால் :- உண்மை, விண்வெளி ஆய்வால் நன்மையோடு பல தீமையும் இருந்தாலும், நாளைய உலகின் அறிவு விருத்திக்கும் விண்வெளி ஆய்வுகள் அவசியமானது தான்.

### பயிற்சி

குழுவாக இணைந்து பின்வரும் தலைப்புகளில் உரையாடல்களை எழுதிப் பயிற்சி பெறுங்கள்.

01) நூல் நிலையத்தின் பயன்கள்.

02) விஞ்ஞானத்தின் நன்மை தீமைகள்.

03) தொலைகாட்சி நிகழ்ச்சிகள்.

04) இலக்கியத்தின் பயன்பாடு.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## தொடர்மொழிக்கு ஒரு மொழி

| | | |
|---|---|---|
| அகராதி | - | சொற்களை அகரவரிசைப்படி குறிப்பிட்டு அவற்றின் பொருளைக் கூறும் நூல். |
| அகாலமரணம் | - | வயோதிபம் அடைந்து இறக்காமல் எதிர்பாராத சந்தர்ப்பத்தில் இடையிலே மரணம் சம்பவித்தல். |
| அங்கதம் | - | வெளிப்படையான பொருளில் புகழ்ந்தும், மறைபொருளில் இகழ்ந்தும் கூறுதல். |
| அரங்கேற்றம் | - | அறிஞர் பலர் கூடியுள்ள சபையில் நடுவே புதிதாக ஆக்கப்பட்ட நூலையோ அல்லது ஒரு கலை நிகழ்வை படித்தோ அல்லது செய்து காட்டியோ அச்சபையிரை ஏற்றுக் கொள்ளச் செய்தல். |
| அஞ்ஞாதவாசம் | - | பிறர் தம்மை இன்னார் என்று அறியாதவாறு மாறுவேடம் பூண்டு மக்கள் மத்தியில் வசித்தல். |
| அட்டாவதானி | - | ஒரே சமயத்தில் எட்டு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தவன். |
| அணிந்துரை | - | ஒரு நூலுக்கு நூலாசிரியர் தவிர்ந்த பிறர் வழங்கும் புகழுரை. |
| அந்தப்புரம் | - | அரண்மனையில் மகளிர் தங்குவதற்காக அமைக்கப்பட்ட தனி இடம். |
| அல்லங்காடி | - | மாலை அல்லது இரவில் கூடும் சந்தை. |
| அழைப்பாணை | - | குறித்த ஒரு நாளில் நீதிமன்றுக்கு சமுகம் தரும்படி நீதிபதியால் விடுவிக்கப்படும் அதிகார பூர்வமான கட்டளை. |
| ஆச்சிரமம் | - | துறவிகள் வசிக்கும் இடம். |
| ஆத்திகன் | - | கடவுள் இருக்கின்றார் என நம்புபவன். |
| ஆதனம் | - | ஒருவருக்குரிய நிலம் முதலிய சொத்துக்கள். |
| ஆதுலர்சாலை | - | வறியவர்க்கும், அங்கவீனர்களுக்கும்,முதியோர்களுக்கும் உண்டியும், உறையுளும் அளித்து ஆதரிக்கும் இடம். |
| இடக்கரடக்கல் | - | சபையில் சொல்லத்தகாத சொல்லை மறைத்து வேறு வகையில் சொல்லுதல். |

# இடைச்சொல்

பின்வரும் வாக்கியத்தைக் கவனமாக வாசிப்போம்.

*அவன் பழத்தை உண்டான்*

பழம் - ஐ இதில் ஐ வேற்றுமை உருபு

உண் - ட் - ஆன் - இதில் - ட் - இடைநிலை - ஆன் - விகுதி

ஒருவாக்கியத்தை அமைக்க, பெயர்ச்சொல், வினைச்சொல் என்பன மட்டும் இருந்தால் போதாது. அவ்வாக்கியம் பொருள் உள்ளதாக அமைய வேண்டும் என்றால் - வேற்றுமை உருபுகள், இடைநிலைகள், சாரியைகள், விகுதிகள், உவமை உருபுகள் சுட்டுக்கள் வினாக்கள் என்பனவும் இணைய வேண்டும்.

இவற்றையே நாம் இடைச்சொற்கள் என்கின்றோம்.

*இடைச்சொல்லின் இயல்பு*

- இரண்டு சொல் சேரும் போது அப்பொருள் விளங்க வரும்.
- வினைச்சொல்லை முடிக்கும்போது காலத்தை உணர்த்தி வரும்.
- வேற்றுமைப்பொருளிடத்து உருபாக வரும்.
- பொருளற்றுத் துணையாய் வரும்.
- ஒலியை நிறைக்கப் பொருளாக வரும்.
- தம்முடைய குறிப்பால் பொருளை உணர்த்தவரும்.
- ஒப்புப்பொருள் தோன்ற வரும்.

பெயர்ச்சொல், வினைச்சொற்களைப் போல இடைச்சொல் தனித்து வந்து பொருள் தரமாட்டாது (சில சொற்கள் தனித்துவந்து பொருள் தரும்).

பெயர்ச்சொல்லையாவது வினைச் சொல்லையாவது இடைச்சொற்கள் சார்ந்தே வரும்.

பெயர், வினைச்சொற்களின் முன்/பின் வரும் ஓரிடத்தில் ஒன்றாயினும் பலவாயினும் வரும்.

*பின்வரும் சொற்களில் இடம்பெறும் இடைச்சொற்களை இனங்காண்போம்.*

| | | | |
|---|---|---|---|
| வேற்றுமை உருபு | பாடலை | - பாடல் | + ஐ |
| இடைநிலை | உண்டான் | - உண் | + ட் + ஆன் |
| சாரியை | படித்தான | - படி | + த் + த் + ஆன் |
| விகுதி | கண்டான் | - காண் | + ட் + ஆன் |
| உவமை உருபுகள் | பால் போல் நிலவு | | |
| சுட்டுக்கள் | அவன் | | |
| வினாக்கள் | ஏன் | | |

## இடைச்சொல்லின் பொருள்கள்

- தெரிநிலை
- தேற்றம்
- சந்தேகம்
- முற்று

## இடைச்சொல் வகைகள்

*1. வேற்றுமை உருபுகள்*

ஐ, ஆல், கு, இன், அது, உடைய, உடன், ஒடு, இலிருந்து.

*2. பன்மை விகுதிகள்*

கள், மார்

*3. திணை, பால் விகுதிகள்*

ஏன், ஓம், ஆய், ஈர்கள், ஆன், ஆள், ஆர், ஆர்கள், அது, அ.

*4. காலம் காட்டும் இடைநிலைகள்*

கின்று, கிறு, த், த்த், ந்த், ட், ற், இன், இ, ப், ப்ப், வ்

*5. பெயரெச்ச, வினையெச்ச விகுதிகள்*

இ, உ, இ, மல், ஆல்

*6. எதிர்ப்பாற் இடைநிலைகள்*

ஆ, ஆர், மாட்டு.

*7. ஆக்கப்பெயர் விகுதிகள்*

மை, சி, வு, அல், காரன், கார், இயம், இயல், சாலி.

*8. தொழிற்பெயர் விகுதிகள்*

தல், அது, மை.

*9. ஏவல், வியங்கோள் வினை விகுதிகள்*

ங்கள், உங்கள், க, இய, இயர், அட்டும்.

*10. சாரியைகள்*

அத்து, அற்று, அம்.

*11. உவமை உருபுகள்*

போல, விட, பார்க்கிலும், காட்டிலும்.

*12. இணைப்பிடைச் சொற்கள்*

உம், அல்லது, இல்லையென்றால், ஆனால், ஓ, ஆகவே, ஆயினும், எனினும்.

*13. தத்தம் பொருள் உணர்த்தும் இடைச்சொற்கள்*

உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம்.

*14. சொல்லுருபுகள்*

மூலம், கொண்டு, இருந்து, பற்றி, வரை.

***உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம் என்பன தற்காலத் தமிழில் பெரிதும் வழக்கிலுள்ள இடைச்சொற்களாகும்.***

## ஏகார இடைச்சொல்

பின்வரும் உதாரணங்களைக் கவனியுங்கள்.
தடித்த எழுத்துக்களின் பண்புகளைக் கூர்ந்து அவதானியுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| அவர்களுள் இவனே இளையவன் - | பிரிநிலை | ஏகாரம் | - கூட்டத்திலிருந்து ஒருவனைப் பிரித்துக் காட்டுகின்றது. |
| நீயே அழைத்தாய் - | வினா | ஏகாரம் | - வினாப் பொருளைத் தருகிறது. |
| நிலமே நீரே தீயே - | எண் | ஏகாரம் | - எண்ணி நிற்கிறது. |
| பாரதியின் கவிதையே - | ஈற்றசை | ஏகாரம் | - இறுதியில் சார்த்தப்பட்டு வந்துள்ளது- தனித்துப்பொருளில்லை. |
| உண்டே மறுமை - | தேற்றம் | ஏகாரம் | - ஐயமின்மையை உணர்த்துகிறது. |
| ஏஎ இவனொருவன் அறிஞன் - | இசைநிறை | ஏகாரம் | - செய்யுளில் இசையை நிரப்ப வருகிறது வேறு பொருள் இல்லை. |
| நானே கள்வன் - | எதிர்மறை | ஏகாரம் | - எதிர்மறையை உணர்த்துகிறது. |

***ஏகாரம் தற்காலத்தில் தமிழில் தேற்றப்பொருளில் மட்டும் வருவதாகத் தெரிகிறது.***

## ஓகார இடைச்சொல்

பின்வரும் உதாரணங்களைக் கவனியுங்கள்.
தடித்த எழுத்துக்களின் பண்புகளைக் கூர்ந்து அவதானியுங்கள்.

| | | |
|---|---|---|
| படிக்கவோ வந்தாய் | - ஒழியிசை | படிப்பதற்கு இல்லாமல் விளையாட வந்தாய் என ஒழிந்த பொருளைத் தருகிறது. |
| மகனோ மகளோ | - வினா | வினாப்பொருளைத் தருகிறது. |
| ஓஓ மகா கவிஞன் இவன் | - உயர்வு சிறப்பு | உயர்வின் மிகுதியை விளக்குகிறது. |
| ஓஓ கொடியவன் இவன் | - இழிவு சிறப்பு | இழிவின் மிகுதியை விளக்குகிறது. |
| அவனோ கள்வன் | - எதிர்மறை | எதிர்மறைப்பொருளைத் தருகிறது. |
| ஆணோ அதுவுமன்று<br>பெண்ணோ அதுவுமன்று | - தெரிநிலை | ஆண்,பெண் என்ற அத்தன்மை இல்லாமையை தெரிவிக்கிறது. |
| உறுதியுணராது கெட்டாரை<br>ஓஓ தமக்கோர் உறுதி<br>உணராரே | - கழிவிரக்கம் | கழிவிரக்கப் பொருளைத் தருகிறது (இரங்குதல்). |
| இவனோ இளையவன் | - பிரிநிலை | பலரிலிருந்து பிரித்து நிற்கிறது. |
| காண வாரீரோ | - அசைநிலை | வேறு பொருளின்றி சார்த்தப்பட்டு நிற்கிறது. |

***தற்காலத் தமிழில் பிரிநிலைப் பொருளில் மட்டுமே ஓ காரம் வருவதாகத் தெரிகின்றது.***

ஓகார இடைச்சொல் தற்காலத் தமிழில் பின்வருமாறு இடம் பெறுகிறது.

ஐயம் - இன்றைக்கு மழை பெய்யுமோ?

திடக்குறிப்பின்மை - நீ யாரோ ஒருவரோடு போவதைக் கண்டேன்.

மிகை - கூட்டத்திற்கு எத்தனையோ பேர் வந்தார்கள்.

அது அல்லது இது - நானோ தம்பியோ வருவோம்.

இதுவும் இல்லை அதுவும் இல்லை - நானோ தம்பியோ வர மாட்டோம் எனும் பொருள்களில் வரக்காணலாம்.

## உம் இடைச்சொல்

பின்வரும் உதாரணங்களை அவதானியுங்கள்.

| | | |
|---|---|---|
| களவும் கற்று மற | - எதிர்மறை | களவு கற்கக் தகாதது எனும் பொருள் தருகிறது. |
| கவிஞரும் போற்றிய மனிதன் | - உயர்வு சிறப்பு | உயர்ந்தவற்றுள் உயர்ந்ததைக் குறிக்கிறது. |
| நாயிலும் கடையர் | - இழிவு சிறப்பு | இழிந்தவற்றுள் இழிந்ததைக்குறிக்கிறது. |
| நண்பன் வந்தாலும் வருவான் | - ஐயம் | நிச்சியமின்மையை உணர்த்துகிறது. |
| நாளைக்கும் வருவேன் | - எச்சம் | இன்றும் வந்தேன் என்ற பொருளையும் உள்ளடக்கியுள்ளது. |
| எல்லோரும் நல்லவர்கள் | - முற்று | எச்சப்பொருள் இன்மையால் முற்று. |
| இரவும் பகலும் | - எண் | எண்ணுவதற்கும் இணைப்பதற்கும் வருகிறது. |
| இதில் ஆய்வும் இல்லை ஆக்கமும் இல்லை | - தெரிநிலை | வெளிப்படையாக விடயத்தைக் குறிக்கிறது. |
| எழுதுவது தான் அவரது தொழிலும் | - ஆக்கம் | இன்னுமொன்றும் அமைவதை சுட்டுகிறது. |

***தற்காலத் தமிழில் இவை மட்டுமன்றி இன்னும் சில பொருள்களிலும் உம் இடைச்சொல் வரக்காணலாம்.***

உடனடித்தன்மை - மழைவிட்டதும் போகலாம்.

மாற்றுவழி - பணமாகவும் தரலாம் பொருளாகவும் தரலாம்.

உறுதிப்பாடு மறுப்பு - என்ன பிரச்சினை வந்தாலும் கலங்க மாட்டேன்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

**இன்னும் சில இடைச்சொற்களை கவனியுங்கள்.**

| | | |
|---|---|---|
| நான் நேற்றுத்தான் பாடசாலைக்கு வந்தேன். | - | தான் |
| நான் மட்டும் நாளை வருவேன். | - | மட்டும் |
| நீங்களாவது உதவி செய்வீர்களா! (குறைந்த பட்சம்) | - | ஆவது |
| இன்றாவது நாளையாவது வருவேன். ( அது அல்லது இது) | - | ஆவது |
| யாராவது உதவி செய்வார்கள். (திடக்குறிப்பின்மை) | - | ஆவது |
| அவனாவது பாடுவதாவது. (நடவாமை) | - | ஆவது |
| முதலாவது இரண்டாவது மூன்றாவது. (வரிசைப்பொருள்) | - | ஆவது |
| இரவு கொஞ்சம் கூட தூக்கம் இல்லை. ((முற்றுப்பொருள்) | - | கூட |
| அப்பா கூட இதை விரும்பவில்லை (எச்சம் தழுவிய எதிர்மறை) | - | கூட |
| கண்ணன் நேற்றுப்பாடசாலைக்குப் போனானா? (வினாப்பொருள்) | - | ஆ |
| நீங்கள் இனிப் போகலாம். (அனுமதி) | - | ஆம் |
| நாளைக்கு மழை பெய்யலாம். (சாத்தியப்பாடு) | - | ஆம் |
| இந்த நூலுக்கு பரிசு வழங்கலாம். (பொருத்தப்பாடு) | - | ஆம் |
| பாராளுமன்றம் நாளை கலைக்கப்படலாம். (தகவல், வதந்தி, செய்தி) | - | ஆம் |
| இன்று பாடசாலை இல்லை என மாணவர் வரவில்லை. | - | என |
| இன்று பரீட்சை என்று மாணவர் நினைத்தனர். | - | என்று |
| அம் மாணவன் இன்று பாடசாலைக்கு வரவில்லை. | - | சுட்டு |
| எம் மாணவன் பரீட்சைக்குத் தோற்றவில்லை? | - | வினா |
| இதுவில்லை மற்றொன்று. | - | மற்று |

## பயிற்சி

பின்வரும் வாக்கியங்களில் இடம் பெற்றுள்ள இடைச்சொற்களை இனங்கண்டு எழுதுவோம்.

1. கைலாசபதியின் நூல்களில் ஒன்று 'அடியும் முடியும்'.
2. பாரதியும், கம்பனும், வள்ளுவனும் தமிழில் மகாகவிகள்.
3. உள்நாட்டு யுத்தமே, அகதிகள் பெருகக் காரணம்.
4. உழைப்பாளர்கள் தான் இந்நாட்டை உருவாக்கியவர்கள்.
5. துயரப்படும் மக்களை சுனாமி கூட விட்டுவைக்கவில்லை.

பொருத்தமான இடைச்சொற்களைக்கொண்டு பின்வரும் வாக்கியங்களின இடைவெளிகளை நிரப்புக.

1. நண்பன் ஆசிரியர்..... விரும்பவில்லை.
2. இன்று மழைபெய்யும்...... நினைத்தேன்.
3. கவிதைகளை இரசிப்பதற்காக..... நான் படிப்பதில்லை.
4. சிறுகதையை..... நாவல்கள் சமூக யதார்த்தங்களை ஆழமாக சித்தரிக்கின்றன.
5. நான் ஒரு பாடகன்........ மிருதங்கமும் வாசிப்பேன்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

05

# நாட்டுப்புறமும் ஏட்டுப்புறமும்



திருவரங்கம் கோயிலில் இன்றைக்கும் தாழ்த்தப்பட்ட சேரி மக்கள் நுழைய அனுமதி யில்லையே எனச் சமூக மாற்றம் குறித்த சிந்தனையாளர்கள் வருத்தப்படுகின்றனர். சமூகப் போராளிகள் மற்றும் முற்போக்கு இயக்கங்கள் போராடுகின்றன. வைணவக் கோயில்களில் நடைபெறும் 'அரையர் சேவை' எனும் ஒரு கலை வடிவத்தின் வழியே - தாழ்த்தப்பட்ட சேரி மக்களின் கலை வடிவம் உட்புகுந்துள்ளது என்பது 'வரம் தரும் பெருமாள் அரையர்' என்பவர் கதை வழியே தெரிய வருகின்றது.

ஸ்ரீரங்கத்தில் ஒரு வைணவத் தொண்டர் ஒருநாள் காற்று வழியேவரும் சேரிமக்கள் கொண்டாடும் விழாவில் ஒலிக்கும் மேள தாள இசைச் கருவிகளின் வாசிப்பும் ஆடவரும் பெண்ணும் பாடி இசைக்கும் குரல் வளங்களையும் கேட்டு இரசித்தார். சேரிப் பக்கம் போகாமலேயே எட்டி நின்றபடியே பலநாள் சேரிமக்களின் இசை நிகழ்ச்சியை இரசித்த அந்த வைணவத் தொண்டர் ஒருநாள் சேரியில் இசைக்கும் பாடல், இசைக்கருவிகளின் தாளம் இவற்றுக்கேற்ப ஆண்களும், பெண்களும் இணைந்து ஆடும் காட்சிகளை நேரில் காண ஆசைப்பட்டார். ஸ்ரீரங்கப்பெருமானின் உயர்ந்த கோபுரம் கண்ணில் படும் போதெல்லாம் தொண்டருக்குச் சடங்கும் சம்பிரதாயங்களும் சாதிப்பிரிவினைச் சங்கடங்களும் நினைவில் அலை மோதின. முடிவில், உழைக்கும் மக்களின் கலை வெற்றிகொண்டது. ஒருநாள் சேரிமக்களின் இசை, பாடல், மேளதாள வாசிப்புக் கேட்டு விறுவிறு என சேரிக்குள் நுழைந்து விட்டார். உழைக்கும் மக்கள் இசையையும்

உழைப்பில் பிறந்த ஆடல் பாடல் கலை வடிவங்களையும் இரசித்தவர் சேரியிலேயே தங்கிவிட்டார்.

சேரியில் சேர்ந்துவிட்ட வைணவத் தொண்டரை வைணவர்கள் கூடி ஆசாரம் கெட்டவர் எனக் குற்றம் சாட்டினார். சாதிகெட்டவருக்கு இனி இங்கு இடமில்லை எனக் கூறி ஊரை விட்டு ஒதுக்கி வைத்து விட்டனர். திருவரங்கம் முழுதும் எப்போதும் இதே பேச்சு. ‘போயும், போயும் சேரியிலே போய் தங்கலாமா? ரெங்கநாத சுவாமிக்கு அபத்தம் பண்ணிடலாமா? பூணூல் போட்டவருக்குப் புத்தி இப்படியாச்சே?’ எனப் பலவாறான முணுமுணுப்புகளும், கோபாவேசப் பேச்சுகளும் ஊரே நிறைந்துவிட்டன.

ஒரு நாள் இரவு திருவரங்கப் பெருமாள் வைணவ அடியார்களிடம் தோன்றினார். பள்ளும் பறையும் இசையுடனே கேட்க மிகவும் ஆசைப்படுகிறேன், ஏற்பாடு செய்யுங்கள்; என்று கூறி திருவரங்கநாத சுவாமி மறைந்துவிட்டார். அதுபோலவே சேரியில் தங்கிவிட்ட வைணவத் தொண்டரைச் சந்தித்துப் ‘பள்ளும் பறையும் இசையுடனே கேட்டருளி எனக் கூறியதோடு திரு ஊரல் விழா நடைபெறும் ஆண்டுவிழாவில் ஏழாவது நாளின்போது பள்ளும் பறையும் இசையோடு கேட்க வேண்டும் எனப்பணித்து அத்தோடு சேரியில் தங்கிப் பள்ளு இசையையும், கூத்தினையும், பறை இசையையும், ஆட்டத்தினையும் கற்றுக் கொண்ட தொண்டருக்கு ‘வரம் தரும் பெருமாள் அரையர்’ எனும் பட்டமும் வழங்கி மறைந்தார். திருவரங்கப் பெருமாளே அங்கீரித்தபின் மறுப்பு ஏது? வைணவக் கோயிலில் ‘அரையர் சேவை’ எனும் ஒருவகை ஆட்டம் பள்ளும் பறையும் இசையுடனே கலந்து உருப்பெற்றது என மனங்கொள்ளமுடிகிறது.

நிகழ்த்துக் கலைகளுக்குத் தமிழரிடத்தே மிகுந்த செல்வாக்கு தொன்றுதொட்டு இருந்துள்ளமையினைத் தொல்காப்பியம் தொடங்கி இன்றைய இலக்கியங்கள் வரை சான்றுகள் காண முடிகிறது. தொல்காப்பியம் கூறும் ‘பண்ணத்தி’ என்பது கூத்துப்பாடல் வகையைச் சேர்ந்தது. பாடல்கள் யாவும் அக்காலத்தில் நிகழ்த்தப்பட்டவையாகவே (Performance) உள்ளன. நிகழ்த்தப்படுவதாவது-பார்வையாளர் முன் நடித்துக் காட்டுவதாகும். நாடகம் என்பது காட்சிக்கு உரியது. இதில் இடம்பெறும் இசை, பாடல் யாவும் உழைக்கும் மக்களுக்கு உரியவை. சேரி மக்களுக்கு உரியவை. கி.பி.2ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் நாடக அரங்குகள் எனும் கூத்துப்பள்ளிகளும், கூத்தர்கள் வாழ்ந்த கூத்துச்சேரிகளும் இருந்துள்ளன.

ஏரெழுபது போன்ற இலக்கிய வடிவங்கள் உழவர், உழவு எனப் பேசின. உழத்திப் பாட்டின் முந்தைய வடிவமாகவே ஏரெழுபது உள்ளது. உழவுத் தொழிலில் ஈடுபட்டிருந்த ஒடுக்கப்பட்ட மக்கள் பாட்டுக்கள் அவை. உழைக்கும் மக்களின் பள்ளுக் கூத்து என்பது எழுதப்பட்ட பண்டிதர்களின் கலை இலக்கியப் படைப்புக்களில் படித்த இலக்கணச்சுதியுடன் வெளிப்பட்டன.

பிரபந்தங்கள் எனும் இலக்கிய வடிவங்கள் யாவும் சமூகம், அரசியல், அறிவுத்துறை என வாழ்வின் இயக்கப் போக்குகளை வெளிப்படுத்தி அமைந்தன. சமயம், அரசியல், இரு துறைகளின் பிரதிபலிப்புகள் உலா, கோவை, தூது, மடல், பிள்ளைத் தமிழ்,



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

குறம், குறவஞ்சி, பள்ளு, பரணி மற்றும் தனிப்பாடல்கள் என அனைத்திலும் வெளிப்பட்டன.

சிற்றிலக்கியங்கள் அனைத்தும் நிகழ்த்துக் கலை வடிவங்களாகவே அமைந்திருந்தன. இவற்றில், நாடகக் கூறுகளும், காட்சி அமைப்புகளும் நடிப்பதற்கான வாய்ப்புகளும் அதிகம் உள்வாங்கப்பட்டிருந்தன. உழைக்கும் மக்களின் ஆடல், பாடல், இசைக் கருவிகள், கூத்து ஆகியன உழைக்கும் மக்களிடம் இருந்து உள்வாங்கப் பெற்றன.

சங்க இலக்கியம் தொடங்கிக் காவியங்கள், பாட்டியல் நூல்கள், பிரபந்தங்கள், குளுவ நாடகம், குறவஞ்சி, பள்ளு, நொண்டி நாடகம் வரை நாட்டுப்புறத்து உழைப்பாளி மக்களின் கலைவடிவங்களில் உருப்பெற்றவையாகும். சைவம், வைணவம், எனப் பிரிவுபட்ட பேரிலக்கியங்கள் மற்றும் சிற்றிலக்கியங்கள் என்ற அனைத்திலும் நாட்டுப்புற உழைக்கும் மக்களின் கலை வடிவங்கள் தமிழ்ப் பண்டிதர்களின் நேர்த்தியான தொழில் நுட்ப உத்திமுறைகளால் உள்வாங்கப்பட்டுப் படைப்புகள் உண்டாயின.

பாம்பாட்டி இசைச் சித்தர்கள் பாடல்களிலும், தாலாட்டு இசை பிள்ளைத் தமிழ் இலக்கியத்திலும் பறைப்பாட்டு போர்ப்பரணிகளிலும், குறவர், குளுவர் இனமக்களின் இசையும் கூத்துப் பள்ளுகளிலும், உழத்திப் பாட்டுகளிலும், இடம் பெற்றன.



*ஏடறியேன் எழுத்தறியேன்*

*எழுத்துவகை நானறியேன்*

*பாடறியேன் படிப்பறியேன்*

*படிப்பு வகை நானறியேன்.*

என்று தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு உழைப்பாளி மக்களின் வாய் மொழிக்கலை இலக்கியக் கூறுகளைக் கையாண்டவர்களான எழுத்திலக்கியம் படைத்த தமிழ்ப் பண்டிதர்கள் நாட்டுக்குப் புறமாக வாய்மொழி இலக்கியம்-கலையை ஒதுக்கினார்கள். ஏட்டுக்கும் புறமாகவே ஒதுக்கினார்கள்.

*''வெகுசனங்களின் காலமிது*

*அன்னக்கிளி ஒன்னத் தேடுதே*

*ஆறுமாசம் ஒருவருசம்*

*ஆவரம்பூ மேனி வாடுதே''*

*''தண்ணி கருத்திருச்சு - புள்ளே*

*தவளச் சத்தம் கேட்டிருச்சி,*

*ஊரும் ஒறங்கிடுச்சு - இப்ப*

*ஒதுங்க இடம் கிடைச்சிருக்க''*

*''ஓடக்கரை மண்ணெடுத்து*
*ஓ(ன்) உருவம் செஞ்சு வச்சேன்''*

என்பன போன்ற 'காதல்' குறித்த பாடல்கள் நாட்டுப்புற பாடல்களைத் தழுவியும், பல வேளைகளில் பாடல் அடிகளை மாற்றாமலும் கவிஞர்கள் திரைப்படங்களில் இடம்பெறச் செய்தனர்.

*'ஆத்தா உன் வாசலிலே'*

*'கருமாரி துணையிருப்பாள்*

*கவலைப்படாதே சகோதரா'*

*'மாரியம்மா மாரியம்மா*

*காளியம்மன், சுடலைமாடன்'*

என நாட்டுப்புறத் தெய்வங்கள் குறித்த பாடல்கள் மாற்றியும், மாற்றாமலும், பாடல் அடிகள் திரைப்படங்களிலும், ஒலி நாடாக்களிலும், வானொலிகளிலும் இடம் பெறுகின்றன.

உழைக்கும் மக்களின் பிரச்சினைகள் கொண்ட நாட்டுப்புறப் பாடல்கள் வெகுசன ஊடகங்களில் இடம் பெற வாய்ப்பு மறுக்கப்படுகின்றன. நாட்டுப்புறப் பாடல் பாட

முன்வருவோரும் மேடைகளில் சாமி, காதல் என எவ்விதப் பிரச்சினையுமின்றிப் பாடிப் பல ஆயிரம் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சம்பாதிக்கின்றனர்.

திரைப்படங்களிலும், நவீன நாடகங்களிலும் பக்திப்பாடல் ஒலிநாடாக்களிலும், சின்னத்திரை (தொலைக்காட்சி)களிலும், வானொலிகளிலும், உழைக்கும் மக்களின் ஏடறியாப் பாடல்கள், கதைகள், கதைப்பாடல்கள், வாழ்வியல் முறைமைகள் உள்வாங்கப்படுகின்றன. அன்று தொட்டு இன்றுவரை வயல்களிலும் வரப்புகளிலும், காடுகளிலும், கரைகளிலும், வியர்வை நெடியுடனும், கொண்டாட்ட வெறியுடனும் வெளிப்படும் உழைப்பாளிகளின் உன்னதக்கலைவடிவங்கள் நாட்டுப்புறமாகவே ஒதுக்கி விடும்போக்கு தொடர்கிறது. 'ஏட்டுக்குப் புறமாகவே ஒதுக்கிவிடும் போக்கு' தொடர்கிறது.

*மகாசபையோரே சிறந்த மறையோரே - கோடி*

*வந்தனங்கள் தந்தோம் எங்கள் பெரியோரே*

என்றும்,

*வந்தனமுன் னா வந்தனம்,*

*வந்த சனங்கள்ளாம் குந்தணும்*

என்றும்,

*வாரும் பெரியோர்களே*

*வாலிபரே, தோழர்களே*

*வணக்கங்கள் பலகோடி*

என மக்களையே சாமிகளை விட நம்புகின்ற உண்மையான உழைப்பாளிகளின் நம்பிக்கை நாட்டுக்குள் புகும். ஏட்டுக்குள் புகும்.

'ஏற்ற நீர்ப் பாட்டின் இசையினிலும், நெல்லிடிக்குங் கொற்றொடியார் குக்குவெனக் கொஞ்சும் ஒலியினிலும் சுண்ணம் இடிப்பார்தம் சுவை மிகுந்த பண்களிலும், பண்ணை மடவார் பழகு பலபாட்டினிலும் வட்டமிட்ட பெண்கள் வளைக்கரங்கள் தாம் ஒலிக்கக் கொட்டி இசைத்திடுமோர் கூட்டமுதற் பாட்டிலிலும் 'நெஞ்சைப் பறிகொடுத்த பாரதி காளிப்பாட்டு, சத்திக் கூத்து, வண்டிக்காரன் பாட்டு, மறவன் பாட்டு, பெண்கள் விடுதலைக் கும்மி, என்று

*தரித்திரம் போகுது, செல்வம் வளருது*
*படிப்பு வளருது, பாவம் தொலையுது;*
*படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினால்*
*போவான் போவான் ஐயோவென்று போவான்.*

எனப்புதிய கோணங்கிப் பாடல் பாரதி பாடியுள்ளதால் நாட்டுப்புறமெல்லாம் நாட்டுக்குள் புகும். ஏட்டுப்புறமெல்லாம் ஏட்டுக்குள் புகும்.

*வீரம் வருகுது மேன்மை கிடைக்குது*
*சொல்லடி சக்தி*
*குடுகுடு குடுகுடு*
*குடுகுடு குடுகுடு.*

*கே. ஏ. குணசேகரன்*
*தலித் கலை கலாச்சாரம்.*

**அரும்பத விளக்கம்**

| | | |
|---|---|---|
| பள்ளு | - | பாமரமக்களின் இசைவடிவம் |
| பறை | - | தாளக்கருவி |
| சேரி | - | பாமரமக்கள் குடியிருப்பு |
| ஆசாரம் | - | ஒழுக்கம் |

## பயிற்சி

1. உழைக்கும் மக்களின் தனித்துவமான கலை இலக்கியங்கள் குறித்து விளக்குக.
2. இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ள சிற்றிலக்கியங்களின் பெயர்களைத் தருக.
3. 'அரையார் சேவை' எனும் ஆட்டம் உருவான பின்னணியை விளக்குக.
4. தமிழ்ப் பண்டிதர்கள் நாட்டுப்புற இலக்கியங்களை எவ்வாறு நோக்குகின்றனர்.

ஒப்படை

1. உமது பிரதேசத்தில் வழங்கும் நாட்டார் பாடல்கள் இரண்டை எழுதுக.

### மொழித்தேர்ச்சிக்கான செயற்பாடுகள்

1. *நாட்டுப்புறமும் ஏட்டுப்புறமும் எனும் பாடப் பகுதியில் இடம் பெறும் பாடல்களைப் பாடிக் காட்டுக.*
2. *உமது பிரதேசத்தில் பயிலப்படும் நாட்டுக்கூத்து ஒன்றைப்பற்றி -அக்கூத்துக் கலைஞர்களிடம் உசாவி அது தொடர்பாக உமது நண்பருடன் கலந்துரையாடுக.*
3. *நீர் கலந்துரையாடிய கலைஞர்களைப் பற்றி பத்திரிகை ஒன்றுக்குக் கடிதம் ஒன்று எழுதுக.*



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

# கடிதம்

கடிதம் எழுதுதல் என்பது நமது வாழ்க்கையில் முக்கிய இடத்தைப்பெற்றுள்ளது. எமது தேவை, நிலைமை, எண்ணம், விருப்பு வெறுப்பு முதலான பல்வேறு விடயங்களையும் தொலைவில் உள்ளோர்க்குத் தெரிவிக்க பயன்படுகிறது கடிதங்களை பருமட்டாக மூன்று வகைப்படுத்தலாம்.

1. *உறவுமுறைக் கடிதம்*
2. *தொழில் முறைக்கடிதம்*
3. *மின்னியல் கடிதம்*

## உறவுமுறைக் கடிதங்கள்

உறவு முறைக்கடிதங்கள் சுற்றத்தார் - நண்பர், முதலியோர் தமக்குள் எழுதிக்கொள்வதாகும். இது பலவகைப்படும். அவையாவன.

1. *நட்புமுறை*
2. *நன்றி அறிவிப்பு*
3. *அனுதாபம்*
4. *அழைப்பிதழ்*
5. *வாழ்த்துக்கள்*

## நட்பாடற் கடிதம்

நட்பாடற் கடிதம் / நட்புமுறை கடிதம் நெருங்கிய நண்பர்கள், உறவினர்கள் தமக்குள் எழுதிக்கொள்ளும் கடிதங்கள் நட்பாடற் கடிதம் எனப்படும்.

## பாராட்டுக்கடிதம் அல்லது நன்றியறிவிப்புக்கடிதம்

ஒருவர் செய்த உதவிக்கு நன்றி தெரிவிக்கும் முறையில் எழுதும் கடிதங்கள் இவ்வகையின.

## அனுதாபக்கடிதம்

அறிமுகமான ஒருவருக்கு நேர்ந்த யாதேனுமொரு துன்ப நிகழ்ச்சியிலே, அவருக்கு ஆறுதல் கூறும் வகையில் எழுதுவது அனுதாபக்கடிதம் எனப்படும்.

# உறவு முறைக்கடிதத்தின் அமைப்புகள்




1. முகவரி
2. விளிப்பு
3. செய்தி
4. முடிப்பு
5. ஒப்பம்

**முகவரி** - இது எழுதுபவருடைய முழுமுகவரியையும் எழுதப்பட்ட திகதியை யும் குறிப்பிடுவதாகும். மேல் உள்ள சட்டகங்களில் முகவரி (1) என்பது இதுவே. இவ்விரு விதமாகவும் அமையலாம்.

**விளிப்பு** - சட்டகத்தில் (2) எனும் இடத்தில் வருவது இது பலவாறாக அமைய லாம். என் அருமை நண்பா..., அன்பின் ரவி... அன்புள்ள அம்மா... அன்புடையீர்... எனவும் விளிக்கலாம்.

(தற்காலத்தில் அன்பின் நெருக்கத்தை காட்ட பல்வேறு விதமாகவும் எழுதப்படுகிறது).

**செய்தி** - இதுவே கடிதத்தின் (3) உள்ளடக்கமாகும். செய்தியே கடிதத்தின் முக்கியமான உறுப்பாகும். இதை எழுதும் போது பந்தி அமைப்பு கவனிக்கப்படுதல் வேண்டும். விடயங்கள் மாறுவதைக் காட்டவே

இப்பந்தி வகுப்பு மேற் கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு புதுப்பந்தியையும் ஓரத்திலிருந்து ஒரே அளவான தூரம் உள்ளே தள்ளி ஆரம்பித்தல் வேண்டும்.

முடிப்பு - இது உறவுமுறை கடிதத்தில் உறவுமுறையை கூறி முடிப்பதாகும். (4) இதன் இறுதியில் காற்புள்ளி இடப்படும்.

உன் அன்பான நண்பன், அன்புள்ள, அன்புள்ள தம்பி, உங்கள் அன்பான, அன்புடன் ரவி.

ஒப்பம் - கையொப்பத்துக்குப்பின் (5) எவ்வித நிறுத்தக் குறியும் இடப்படுவதில்லை. நன்கு அறியாத ஒருவருக்கு எழுதுங் கடிதத்தில் கையொப்பம் அமைதல் வேண்டும்.

## பயிற்சி

1. கனடாவில் வாழும் பேனா நண்பருக்கு இலங்கையைப் பற்றிய ஓர் அறிமுகக் கடிதம் எழுதுக.
2. கிரிக்கெட் விளையாட்டில் பல உலக சாதனைகளை நிலைநாட்டிய இலங்கைக் கிரிக்கெட் அணியைப் பாராட்டும் கடிதம் ஒன்றை எழுதுக.
3. விபத்தில் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சுகம் பெற்றுவரும் உனது நண்பனுக்கு ஆறுதல் கடிதம் எழுதுக.

## பழமொழிகள்

நாம் நாள்தோறும் பேசும் வாக்கியங்கள் அவ்வப்போது எம்மால் அமைக்கப்படுவன. அவை அவ்வப்போதைய தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்துவிட்டு மறைந்து போகின்றன. எனினும், சிற்சில வாக்கியங்கள் பொருட்சிறப்பு மிக்கவையாகப் பிறந்து, மீண்டும் மீண்டும் எடுத்தாளப்படும் தகுதியைப் பெற்றுவிடுகின்றன. அத்தகைய வாக்கியங்களே பழமொழிகள். பழமொழிகளை யார் எப்பொழுது இயற்றினார் என்று சொல்ல முடியாது. அவை சமுதாயத்தின் பொதுச்சொத்து.

சமுதாயத்தின் அனுபவத்திரட்டான பழமொழிகள் நாட்டார் இலக்கிய வடிவங்களில் ஒன்று என்பது நீங்கள் அறிவீர்கள். ஆதலால், இவை இடத்துக்கு இடம் பாடபேதம் அடைந்து நிலவுகின்றது.

இப்பழமொழிகளைத் தக்கவாறு எடுத்தாண்டால் நம் பேச்சும் எழுத்தும் வலிமையும் ஆற்றலும் பெறும் அத்தகைய பழமொழிகள் சிலவருமாறு.

### பழமொழிகள்

01. அச்சாணியில்லாத் தேர் முச்சாணும் ஓடாது. (முக்கியத்துவம்)
02. அடிநாக்கில் நஞ்சும், நுனி நாக்கில் அமிர்தமும் (வஞ்சகம்)
03. அடிமேல் அடிஅடித்தால் அம்மியும் நகரும். (விடாமுயற்சி)
04. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. (ஒற்றுமையே பலம்)
05. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு. (அளவை மீறல்)
06. அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம். (உத்தம நட்பு)
07. ஆடமாட்டாதவள் அரங்கு பிழையென்றாளாம். (விடயப்புலமையின்றி வேறொன்றைக் குறை கூறாதே)
08. ஆழமறியாது காலை விடாதே. (ஆராய்ந்து செய்)
09. ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை. (அற்பனுக்கு மதிப்பு)
10. ஆனைக்கும் அடி சறுக்கும். (பெரியோரும் தவறலாம்)
11. ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம். (காலம் மாறி வரும்)
12. இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை. (திருப்தியற்ற மனம்)
13. இட்டுக்கெட்டார் எங்குமில்லை. (தருமம் செய்து கெட்டவர்கள் இல்லை)
14. இளங்கன்று பயமறியாது. (வாலிபத்துணிவு)
15. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து. (இளமையிற் கற்றலின் பயன்)



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## உரிச்சொல்

பின்வரும் சொற்களைப் பொருள் விளங்க வாசிப்போம்.

| | |
|---|---|
| சாலப் பேசினான் | சால |
| உறுமீன் | உறு |
| தவப்பெரியவன் | தவ |
| நனி நின்றான் | நனி |
| அன்பு கூர்ந்தான் | கூர் |
| கழி பேருவகை | கழி |

மிகுதி எனும் பொருளை உணர்த்துகிறது. பல சொற்கள் ஒரு பொருளை உணர்த்தி வந்துள்ளன.

பின்வரும் சொற்களைப் பொருள் விளங்க வாசிப்போம்.

| | | |
|---|---|---|
| **கடிநகர்** | - | காவல் |
| **கடிவேல்** | - | கூர்மை |
| **கடிமாலை** | - | வாசனை |
| **கடிப்பேய்** | - | அச்சம் |
| **கடுகதி** | - | வேகம் |
| **கடிகாற்று** | - | மிகுதியான காற்று |
| **கடிமணம்** | - | புதுமை |
| **கடிமுரசு** | - | ஒலி/ஆர்த்தல் |
| **கடிவினை** | - | மன்றல் |
| **கடிமிளகு** | - | கரிப்பு |

'கடி' என்ற ஒரு சொல் பல பொருளை உணர்த்தி வந்துள்ளமையை அவதானித்திருப்பீர்கள்.

இவ்வாறு ஒரு பொருளை உணர்த்தும் பல சொற்களும், பல பொருளை உணர்த்தும் ஒரு சொல்லும் ஆகிய பெயர்ச்சொற்களையே நாம் உரிச்சொல் என்கின்றோம்.

இத்தகைய சொற்களை நாம் செய்யுள் வழக்கிலேயே காண முடியும். அகராதியினூடாகவே இவற்றின் பொருளை அறிந்து கொள்ளலாம்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

பேச்சு வழக்கிலும் இன்றைய நடைமுறை வழக்கிலும் இவை அதிகமாகப் பயன்படுத்தப்படுவதில்லை என்பதை நாம் அறிவோம்.

### உரிச்சொல்லின் பண்புகள்

பொருளுக்கு உரிமை பூண்டு நிற்கும் பண்பை உணர்த்தும்.

**உலகத்துப் பொருள்** - உயிர்ப்பொருள், உயிரல்லாத பொருள் என இரு வகைப்படும்.

**இப்பொருளுக்குரிய பண்பு** - குணப்பண்பு தொழிற்பண்பு என இரு வகைப்படும்.

**உயிர்ப்பொருளின் குணப்பண்புகள்**

அறிவு, அச்சம், மானம், பொறுமை, மயக்கம், விருப்பு, வெறுப்பு, இரக்கம், நன்மை, தீமை, கோபம் முதலியன.

**உயிர்ப்பொருளின் தொழிற் பண்புகள்**

உண்ணல், உடுத்தல், உறங்குதல், அணிதல், தொழுதல், நடத்தல், ஆக்கல், அழித்தல் முதலியன.

### உயிரல்லாத பொருள்களின் குணப்பண்புகள்

| | | |
|---|---|---|
| பலவகை வடிவங்கள் | - | வட்டம், சதுரம், முக்கோணம் |
| இருவகை நாற்றங்கள் | - | நறுநாற்றம், துர்நாற்றம் |
| ஐவகை நிறங்கள் | - | வெண்மை,செம்மை, கருமை, பொன்மை, பசுமை |
| அறுவகைச் சுவைகள் | - | கைப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கார்ப்பு, இனிப்பு |
| எண்வகை பரிசங்கள் | - | வெம்மை, தன்மை, மென்மை, வன்மை, நொய்மை, சீர்மை, இழுமெனல், சருச்சரை |

### உயிர்ப்பொருள் உயிரல்லாத பொருள்களுக்குரிய தொழிற்பண்புகள்

தோன்றல், மறைதல், வளர்தல், சுருங்குதல், நீங்கல், அடைதல், நடுங்கல், ஒலித்தல் முதலியன.

ஒரு குணத்தையும் பல குணத்தையும உணர்த்தி வரும்.

**ஒப்படை**

இலக்கியத் தொகுப்பில் கையாளப்பட்டுள்ள உரிச்சொற்களை இனங்கண்டு பட்டியல் படுத்துக.

# 06 இரட்டையர்

ஒரு தாய் வயிற்றில் ஒரே கர்ப்பத்தில் இரட்டையாய்ப் பிறந்தவர்கள் இரட்டையர். ஒருவர் குருடர்; மற்றவர் முடவர் இருவரும் புலவர் குருடரின் தோளில் முடவர் ஏறிக்கொள்வார். ஏறியதுங் குருடர் நடப்பார். முடவர் வழிகாட்டுவார். இருவரும் ஒருவர் ஒரு பாட்டின் ஒரு பாதியை பாட, மற்றவர் மறுபாதியைப் பாடுவர். இருவரிலும் அதிட்டமுடையவர் முடவர். நடப்பதன் வருத்தம் முடவருக்குத் தெரிவதில்லை. சில சமயங்களிலே வழி வேறாயிருக்கக் குறுக்கு வழியில் இறங்கி விடுவார் முடவர். அந்த வழி ஏற்றமும் இறக்கமுங் குன்றுங் குழியுமாய் இருக்கும். ஏற்றத்திலிருந்து இறக்கத்துக்கு ஓடாமலிருக்க முடியாமற் குருடர் ஓடும்போது முடவருக்குப் பிரயாணம் சுகம் பேசும். குருடர் யாது செய்வார்? பாவம்!



*''குன்றுங் குழியுங் குறுகி வழிநடந்து*
*சென்று திரிவதென்றுந் தீரா தோ''*

'கடவுளே, மலைகளில் ஏறியுங் குழிகளில் இறங்கியும் எத்தனை காலம் அலைவது! இதற்கு ஒரு முடிவு வாராதோ!' என்று இரங்கி வெண்பாவின் முதற்ப் பாதியை பாடினார் குருடர்.

குருடரின் தோளில் வெகு குதூகலமாக அமர்ந்திருந்த முடவர்,'

*''ஒன்றுங் கொடாதானைக் கோவென்றுங் காவென்றுங் கூறின்*
*இடாதோ நமக்கிவ் விடர்''*

என்று மறுபாதியைப் பாடி வெண்பாவைப் பூர்த்தி செய்தார்.

'எச்சிற் கையாலே காகந்துரத்த உடன்படாத உலோபிகளைக் காமதேனுவே, கற்பகத்தருவே என்று பாராட்டிப் பாடினால், இல்லாததைப் பாடிய குற்றத்துக்காகக்

கடவுள் குன்றிலும் குழிகளிலும் அலைந்து திரிகிற இந்த இடர்களையெல்லாம் தமது தலையில் எழுதிவைப்பார் தாமே. இதில் ஒரு நூதனமும் இல்லையே' என்பது நடந்து களையாத முடவரின் சித்தாந்தம். முடவர் இப்படிக் குறும்பு செய்தபோதும், அந்தக்குருடர் வெறுப்படையாமல் தமது விதியை நொந்துகொண்டு, அந்த முடவரைத் தமது கண்ணேபோற் பேணித் தோள் வலிக்கச் சுமந்து செல்லுவார்.

ஒரு நாள் இருவருக்கும் மிக்க களைப்புங் கொடிய பசியும் எழுந்து விட்டன. ஓர் அரண்மனையை அணுகினார்கள். அத்தாணி மண்டபத்தில் அரசர் அரசு வீற்றிருக்கின்றார். அவருடைய தம்பியார் பக்கத்தில் அமர்ந்திருக்கின்றார். மந்திரிகள், தானைத் தலைவர்கள், புலவர்கள் குழுமியிருக்கின்றார்கள். அது பெரிய ஓலக்கம், இரட்டையர்கள் அங்கே பிரவேசித்தார்கள். அரசருக்குப்பெரிய இரக்கம் வந்து விட்டது. அவர்களுக்கு வேண்டிய திரவியங்களை உதவும்படி மந்திரிக்கு உத்தரவு பிறந்தது. மந்திரி அவர்களைச் சோம்பர்கள் ஆக்குவதாய் முடியும் என்று நியாயம் பேசினான். அரசர் கொடுப்பதற்கு மந்திரி பெரிய இடறுகட்டை ஆயினான். சபை மௌனஞ் சாதித்தது. அங்கிருந்த புலவர்கள் எரிந்தார்கள்; வெளிக்காட்டவில்லை.

முடவர், '**புராதனமான தமிழ்ப்புலவீர் இந்த**' என்று தொடங்கி ஏதோ ஒரு வார்த்தையை மனசுக்குள் உச்சரித்துக் கொண்டு, ''**மராமரம் விட்டிங்கு வந்ததென்னோ**'' என்று, ஒன்றே முக்கால் அடிபாடினார்.

''புலவர்களே, பழைமைகளை உணர்ந்தவர்களே, அரசருக்குப் பக்கத்திலிருந்து நியாயம் பேசுவர் யாவரோ? இந்தப் 'பிறப்பு' அடர்ந்த பெரிய மரங்கள் நிறைந்த காடுகளில், மரக்கொம்பர்களில் தனது வாழ்க்கையை வைத்துக் கொள்ளாமல் இவ்விடம் போந்தக் காரணம் என்னையோ! இதற்கும் இராசசபைக்கும் எவ்வளவு தூரம்! இதற்கு இங்கே என்ன அலுவல்!' என்று கருத்தும் விரிக்கப்பட்டது.

அதனைக் கேட்டதுங் குருடருக்குப் பாட்டுக் குமுறிக்கொண்டு வந்தது. முடவரின் பாகமான இரண்டாவது அடியிலும் குருடர் பங்கெடுத்துக்கொண்டார்.

''வந்தவாறு சொல்வேன்'' என்று முதலில் அந்த அடி பூர்த்தி செய்யப்பட்டது.

இந்தப் பெரிய சபையிலே அரசருக்கும் அவர் தம்பிக்கும் பக்கத்திலே நின்று, கொடுப்பதைத் தடுத்துச் சேட்டை செய்கின்ற வஸ்து, காடுகளிலே மரந்தடிகளிலே வாழ்க்கை நடத்த வேண்டியதே யாம். அதில் எவ்வித சந்தேகமுமில்லை. அதற்கு மனிதர் கொடுக்கல் வாங்கல் செய்கிற இந்தச் சபையிலே என்ன அலுவல்! என்று யாரும் நினைத்தல் கூடும். நினைக்க வேண்டும்! நினைப்பதில் தவறு இல்லை. ஆனால், அந்த வஸ்து இங்கே வந்து நிற்பதிலும் நூதனம் இல்லை. அது வந்ததற்குப் போதிய காரணம் இருக்கிறது. 'வந்தவாறு சொல்வேன்' என்கிறார் குருடர்.

சபையில் குதூகலம்! 'வந்தவாறு' இன்னதென்று, என்ன காரணங் கற்பிக்கப் போகின்றாரோ எனப் புலவர்கள் தங்கள் கற்பனை உலகத்திற் சஞ்சரிக்கின்றார்கள்.

குருடர் தமது பங்கைப் பாடுகின்றார்.

*''தராதல மன்னுந் தமிழ் மாறனையுந்தன் நம்பியையும்*
*இராகவனென்று மிலக்குவனென்றும் வந்தெய்தியதே''*

என்று பாட்டு பூர்த்தியானது. இது இராமாயண காலத்தைச் சேர்ந்தது, நீண்ட வாலுள்ள வருக்கத்தைச் சார்ந்ததாயிருத்தல் வேண்டும். எங்கேயோ பராக்குப் பார்த்தமையினால் இராம இலக்குமணர்களிலிருந்து தவறிவிட்டது. அவர்கள் அயோத்திக்குப் போனதையறியாமல் இங்கே தங்கித் தமிழ் நாட்டில் அலைந்து அவர்களைத் தேடித் திரிந்திருத்தல் வேண்டும். தமிழை வளர்க்கின்ற எங்கள் அரசரையுந் தம்பியையும், இது தன் கண் மயக்கத்தினால் இராம இலக்குமணர்கள் என்று நம்பி விட்டது. ஆகையினாலே இங்கே இது வந்து நிற்பது நியாயந்தானே?' குருடரின் கண்ணான கற்பனை இது.

அங்கே குழுமியிருந்த புலவர்கள் கவிதா லோகத்திலே தம்மையறியாமலே குதித்துக் கூத்தாடிச் சேட்டை செய்தார்கள். முடவர் வெளிப்படாமல் உச்சரித்த வார்த்தையும் புலவர்களுக்கு இன்னதென்று தெரிந்து விட்டது. இதோ மராமரம் விட்டிங்கு வந்து நிற்பது 'புன்குரங்கு' 'புன்குரங்கு' என்று சத்தமிட்டார்கள். சிலர் பாட்டை எழுதிக் கொண்டார்கள். சிலர் உரத்தும் படித்தார்கள் பாட்டுப் பின்வருமாறு.

*புராதனமான தமிழ்ப்புல வீரிந்தப் புன்குரங்கு*
*மராமரம் விட்டிங்கு வந்ததென் னோவந்த வாறுசொல்வேன்*
*தராதல மன்னுந் தமிழ்மா றனையுந்தன் நம்பியையும்*
*இராகவ னென்றுமி லக்குவ னென்றும்வந் தெய்தியதே.*

*- பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை -*

*இலக்கியவழி*

### அரும்பத விளக்கம்

**அதிட்டம்** - அதிர்ஷ்டம், **கோ**- அரசன், **கா**- சோலை, **இடர்**- துன்பம் **நூதனம்** - புதுமை, **அத்தாணி மண்டபம்** - அரசசபை, **மராமரம்**-அரசமரம், காச்சாமரம், **கொம்பர்**-மரக்கிளைகள், **வஸ்து** - பொருள், **தராதல்**- பூமி, திறம்

## பயிற்சி

1) 'புன்குரங்கு' என கவிஞர் யாரைக் குறிப்பிடுகின்றார்?
2) புராதனமான தமிழ்ப்புலவீர் ... எனத் தொடங்கும் பாடலை சந்தி பிரித்து எழுதுவோம்.
3) குன்றுங்குழியும் ........ என்று தொடங்கும் பாடலை சந்திபிரித்து எழுதுவோம்.
4) இவ்விரு பாடல்களின் பொருளை உங்களது மொழிநடையில் எழுதுங்கள்.

### மொழித்தேர்ச்சிக்கான செயற்பாடுகள்

*1. இரட்டையர் எனும் பாடப்பகுதியை வாசிக்கும் போது உமக்கு ஏற்பட்ட எண்ணங்களையும் அபிப்பிராயங்களையும் புலப்படுத்தி உரையாற்றுக.*

*2. இரட்டையர் எனும் பாடப்பகுதியில் இடம்பெற்ற செய்யுள்கள்வெளிப் படுத்தும் அக்கால சமூக நிலைப்பற்றி எடுத்துக்காட்டுக.*

*3. இப்பாடப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு ஒரு நாடகப்பிரதியை எழுதுக.*



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

# தொழில் முறைக்கடிதங்கள்

## தொழில் முறைக் கடிதங்களின் முக்கியத்துவம்

எமது அன்றாட வாழ்வில் பல்வேறு கருமங்களை ஆற்றுவதற்குத் தொழில் முறைக் கடிதங்கள் அத்தியவசியமானவை என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். வியாபார ரீதியான செயற்பாடுகளுக்கும், தொழில்ரீதியான கருமங்களை முறையாக நடத்துவதற்கும், இவ்வகையான கடிதங்கள் அவசியமாகின்றன. இன்று தொழில் முறையான கடிதங்கள் மட்டுமே பெருவழக்காக எழுதப்படுகின்றன. இக்கடிதங்களின் முக்கியத்துவத்தை இனிப் பார்ப்போம்.

1. இவ்வகைக் கடிதங்கள் ஆவணங்களாக இருக்கும்.
2. நிறுவனரீதியான சட்ட ஒழுங்கைப் பேணுவதற்கு அவசியமானது.
3. ஒருவரின் தொழிற் பாதுகாப்பை இக்கடிதம் வழங்கும்.
4. கொடுக்கல், வாங்கல் செயற்பாடுகளுக்கு நம்பகத் தன்மையை இக்கடிதம் ஏற்படுத்தும்.
5. பொருட்களை வாங்கவும், விற்கவும், பெற்றுக்கொண்டதை உறுதி செய்யவும் அவசியமாகிறது.
6. நிறுவனத் தலைவர் ஏனையவர்களைத் தொடர்பு கொள்ளவும், பணியாளர்கள், வேலைகள் பற்றிய தகவல்களைப் பரிமாறிக்கொள்ளவும் அவசியமானது.
7. கட்டளைகள், தகவல்களைப் பரிமாறவும், தகவல்களைப் பெறவும் அவசியமானது.
8. பல்வேறு தொழில் வாய்ப்புகளுக்கு விண்ணப்பிக்கவும் வங்கி, மின்சாரம், காப்புறுதி போன்ற அன்றாடக் கருமங்களை ஆற்றுவதற்கும் அவசியமானது.
9. பொருட்களை இரயிலின் ஊடாக, கடல், விமானத் தபால் மார்க்கமாக அனுப்பவும், பெறவும் அவசியமானது.
10. முறையீடுகளைச் சரியாகவும், தெளிவாகவும் வழங்குவதற்கு அவசியமானது.

அன்றாடம் இவ்வகையான கருமங்களில் நாம் ஈடுபடுகிறோம் எனவே இவ்வகைக் கடிதங்களை முறையாகவும் சரியாகவும் எழுதிப் பழகுதல் எதிர்காலத் தொழில் வாய்ப்புகளுக்கும், தொழிலை முறையாகச் செய்யவும் உங்களுக்கு உதவும்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## தொழில்முறைக்கடிதத்தின் அமைப்பு




மேலுள்ள சட்டகத்தை அவதானியுங்கள். உறவுமுறைக் கடிதத்தினை விடத் தொழில் முறைக் கடிதத்தின் அமைப்பு வித்தியாசமானது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

1. *முகவரி*
2. *உள் முகவரி*
3. *விளிப்பு*
4. *விடயத்தலைப்பு*
5. *செய்தி*
6. *முடிப்பு*
7. *ஒப்பம்*

முகவரி (1) - எழுதுபவரின் பெயரும் முகவரியும் திகதியும் இதில் இடம் பெறும்.

| | | |
|---|---|---|
| உள்முகவரி (2) | - | இது தொழில் முறை கடிதத்திற்கே சிறப்பாக உரியது. இவ்வுறுப்பிலே கடிதம் பெறுநரின் முழுப்பெயரும் முகவரியும் இடம் பெறும். |
| விளிப்பு (3) | - | இது பலவாறாக அமையலாம். கனம்/மதிப்புக்குரிய/ஐயா/ அம்மணி. |
| விடயத்தலைப்பு(4) | - | நீங்கள் எதற்காகக் கடிதம் எழுதுகிறீர்களோ அதன் தலைப்பு இடப்படல் வேண்டும். **'லீவு விண்ணப்பம்' 'மீள் கொடுப் பனவைப் பெற்றுக்கொள்வதற்காக'** எனப் பலவாறு வரலாம். |
| செய்தி | - | இது கடிதத்தின் உள்ளடக்கமாகும். சுருக்கமாகவும், எடுத்த விடயத்தைத் தெளிவாகவும், நேரடியாகவும் எடுத்துக் கூறல் வேண்டும். கற்பனை,வர்ணனை என்பவை தவிர்க்கப்பட வேண்டும். பந்தி அமைப்பு அவசியம். |
| முடிவு | - | உண்மையுள்ள, இங்ஙனம், என அமைதல் வேண்டும். |
| ஒப்பம் | - | சட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட பெயரையே ஒப்பமாக இடுதல் வேண்டும். ஒப்பத்துக்குக் கீழ் தங்களின் பெயரையும் சரியாக எழுதுதல் வேண்டும். பதவி முத்திரை இருப்பின் அதனை இடுதல் வேண்டும். |

## தொழில் முறைக்கடிதங்களின் வகைகள்

*செய்தித்தாள் கடிதங்கள்*

பொது மக்களின் சமூகப் பிரச்சினைகளையும், தனியார் துறை, அரசாங்கத்துறை நடவடிக்கைகளின் நிறை குறைகளையும் பற்றிச்செய்தித்தாளில் பிரசுரிக்கவென எழுதும் கடிதங்கள்.

*கவனிக்க வேண்டியவைகள்*

1. கடிதம் சுருக்கமாக இருத்தல் வேண்டும்.
2. எடுத்துக்கொண்ட விடயத்தை ஆரம்பத்திலேயே கூறுதல் வேண்டும்.
3. கருத்துத் தெரிவிக்கும் விடயத்தில் உமது நிலைப்பாட்டை விளக்குதல்.
4. கருத்துக்கான நியாயங்களை ஒழுங்காகக் கூறுதல் வேண்டும்.
5. வசைமொழி, கோபத்தொனியின்றி சமநிலையில் நின்று எழுதுதல் வேண்டும்.
6. கண்டனம் செய்வதோடு நில்லாது நல்லதைப் பாராட்டுவதிலும் அக்கறை காட்டுதல் வேண்டும்.

*விண்ணப்பக்கடிதம்*

ஒரு தேவையை நிறைவேற்றுவதற்கு, நிறுவனத்திற்குத் தனது சுயவிபரங்களை உள்ளடக்கி எழுதி அனுப்பப்படுவது விண்ணப்பக் கடிதம் எனப்படும்.

*முறையீட்டுக்கடிதம்*

அரச / தனியார் நிறுவனங்களினால் இழைக்கப்படும் அநீதிகள், தவறுகள், போன்றவற்றிலிருந்து நிவாரணம் பெறுதற் பொருட்டுத் திணைக்களத் தலைவருக்கு அல்லது மேலதிகாரிகளுக்கு முறையீடு செய்வது முறையீட்டுக்கடிதம் எனப்படும்.

*தகவலறியும்கடிதம்*

வர்த்தக நிறுவனங்கள், பாடசாலைகள், திணைக்களங்கள் முதலியவற்றிலிருந்து சில விபரங்களை நாம் அறிய விரும்பினால் அவற்றைக்கோரி சம்பந்தப்பட்ட நிறுவனத்தலைவருக்கு எழுதும் கடிதம், தகவலறியும் கடிதம் எனப்படும்.

*அனுப்பாணைக்கடிதங்கள்*

மொத்த வர்த்தக நிறுவனங்களுக்கு, வியாபார நிறுவனங்களால் பொருட்கள் அனுப்பும்படி கோரி எழுதப்படும் கடிதம் அனுப்பாணைக் கடிதம் எனப்படும். இது உள்நாட்டு வெளிநாட்டு வியாபாரத்திலும் கையாளப்படுகின்றது.

*லீவுக்கடிதம்*

தான் கடமைபார்க்கும் நிறுவனம் அல்லது திணைக்களத்திற்கு சமுகமளிக்க முடியாமைக்கான காரணங்காட்டி லீவுகோரி அனுப்பும் கடிதம் லீவுக்கடிதம் எனப்படும்.

### பயிற்சி

1. நட்புமுறைக் கடிதங்களுக்கும் தொழில்முறைக் கடிதங்களுக்கும் இடையிலான வேறுப்பாட்டைத் தருக.
2. தொழில் முறைக்கடிதங்களை வகைப்படுத்திக்காட்டுக.
3. உமது பாடசாலை அதிபருக்கு, நீர் பாடசாலைக்குச் சமுகம் தராமைக்கான காரணத்தைத் தெரியப்படுத்தி லீவுக்கடிதம் ஒன்றை எழுதுக.

### ஒப்படை

தொழில்முறைக்கடிதங்களுக்கு ஒவ்வொரு உதாரணக் கடிதங்களை எழுதுக.

## *கவிதைநயத்தல்*

ஓர் அனுபவத்தின் கற்பனை உணர்வைத்தேர்ந்தெடுக்கப்பட்ட சொற்கள் கொண்டு அவற்றின் பொருள், ஒலிக்குறிப்பு ஆற்றல் (Suggestive Power) ஆகியவற்றின் மூலம் ஒரு குறிப்பிட்ட உணர்ச்சி வெளிப்பாட்டைத் தோற்றுவிக்க முயலும் இலக்கிய வகையே கவிதை (Poetry) ஆகும். அதாவது, கவிதை என்பது பல கூறுகளினால் ஆகிய கூட்டுப்பொருள். சொல், பொருள், ஓசை, அலங்காரம் சொல்லுக்கு அப்பாற் குறிப்பாக நிற்கும் உணர்வு ஆகிய பல அம்சங்கள் அதனுள் அடங்கியுள்ளன. இத்தகைய பல உறுப்புகள் அளவாகக் கலந்து பிரிக்கமுடியா வண்ணம் இயைந்து இருப்பது கவிதை.

இவ்வாறு அமைந்து காணப்படும் கவிதை படிப்போருக்கும், கேட்போருக்கும் இன்பத்தையும், உயர் இலட்சியங்களையும் அளிப்பதாக இருக்கிறது. இதுவே, கவிதையின் பண்பும், பயனுமாகும். இதனை அனுபவிக்க உதவுவதே **கவிதை நயப்பு** எனலாம். இது குறித்து ''கவிதை நயம்'' எனும் நூலில் பேராசிரியர். க. கைலாசபதி அவர்களும், முருகையன் அவர்களும் தரும் விளக்கத்தை நோக்குவோம்.

> *''பழையனவும் புதியனவுமாகப் பல்லாயிரக்கணக்கான கவிதைகள் எமது மொழியில் உள்ளன. இவற்றிடையே சுவையானவற்றைத் தெரிந்தெடுக்கவும், சுவைக்கவும், அவற்றிற் காணப்படும் வாழ்க்கையனுபவத்தின் அடிப்படையில் எமது உணர்வினைப் பண்படுத்தவும், நல்லறிவு பெறவும், முதற்கண் கவிதையை உரைத்து தரங்காணப் பழகிக்கொள்ளல் அத்தியாவசியமாகும். அதுவே நலனாய்வின் முதலும் முடிவும் ஆகும்.கவிநயங் காணல் என்பது, பகுத்தாய்தலும் தொகுத்து நோக்குதலும் ஒருங்கே அமைந்த பயிற்சி முறை.கவிதையின் பல்வேறு கூறுகளைத் தனித்தனி இனங்கண்டு கொள்வது பகுத்தாய்தலாகும். அந்த வகையிலே, கவிதையை அவயவி என்று கூறமுடியும். அதாவது பல உறுப்புகளை உடையது என்பது பொருள். அதேசமயத்தில், அவயங்களைத் தனியே பார்ப்பதோடு அமையாது, அவயவியாகிய மனிதனையும் அவனது மகோன்னதத்தையும் காண்பது போல, உறுப்புகளைத் தொகுத்து, அவை குறிக்கும் உன்னதமான கவியுள்ளத்தைக் காண்பதே திறனாய்வின் பண்பு, அது தொகுத்து பார்த்தலாகும். பகுத்தும், தொகுத்தும் பார்க்கக் கற்றுக் கொண்டால், பின்னர் கவிதை நயப்பானது உயர் நிலையை அடைந்துவிடும்''.*

ஆகவே கவிதைநயப்பு என்பது ஒரு கவிதையைப் பகுத்தலும் தொகுத்தலும் என்பதை அறிந்திருப்பீர்கள். இனி, கவிதையின் பகுதிகள் எவை என நோக்குவோம்.

**உணர்ச்சி** - உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டே கவிதை பிறக்கிறது. என்பது பொதுவான நம்பிக்கை இதுவே கவிதை நயப்பில் முதல் இடம் வகிக்கிறது. அதாவது கவிஞனின் அனுபவத்தை வாசகராகிய எமது அனுபவமாக்குவது உணர்ச்சியே. நாடகம் அல்லது திரைப்படம் பார்ப்போர் அவற்றில் ஆழ்ந்து அவற்றை மெய்யென நம்பி இன்பதுன்பங்களில் ஈடுபாடு கொண்டு தம் மெய்ப்பாடுகளை வெளிப்படுத்துவர். எக்கவிதை இவ்வகையான மெய்ப்பாடுகளை தூண்டுகின்றதோ அதுவே சிறந்த கவிதை எனலாம்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

**கற்பனை** - கவிதையின் பல பண்புகளில் கற்பனையே பிரதானமானதாகவும் கவிதையின் மூச்சாகவும் கருதப்படுகிறது. கற்பனைக்கு வரைவிலக்கணம் கூறுவது எளிதன்று.பொதுவாகக் கூறுமிடத்து எமது அனுபவங்கள், ஐம்புலன்களை அடிப்படையாகக் கொண்டவை. அனுபவங்கள் வாயிலாக வரும் அறிவைப் புலனுணர்வு என்பர். புலன்கள் மூலமாக அன்றி, கருத்தளவிலும் ஒரு பொருளை எண்ணி அனுபவிக்கக் கூடிய நிலையும் உண்டு. அது பற்றி வரும் அறிவைக் கருத்துப் பொருளுணர்வு என்பர். பின்னதாகிய கருத்துப் பொருள் உணர்வின் செறிந்த உயர் நிலையினையே கற்பனையாற்றல் என்கிறோம். அதாவது கற்பனை என்பது இல்லாதது ஒன்றைக் கட்டிக் கூறுதல் என்று பொருள்படும்.

**ஓசை நயம்** - ‘‘ஒழுகிய ஓசையுடைய சொற்களால் விழுமிய பொருள் பயக்குமாறு செய்யப்படுவது கவிதை” கவிஞர்கள் தம் வாழ்க்கை நுகர்வுகளிலிருந்தும் அனுபவத்திலிருந்தும் எழும் உணர்ச்சிகளையும் உயர்கருத்துக்களையும் ஓசையினிமை, சொல்நயம், பொருள் நயம் நிறைந்த சொல்லோவியங்களாக வெளிப்படுத்துவர். ‘படிப்போர் மனதை ஈர்ப்பதற்குரிய ஓசை நயம், பொருளினிமை, சுருங்கிய பண்பு, செறிவு முதலியன பாக்களின் சிறந்த கூறுகள்.

**பொருள் நயம்** - கவிஞன் எதை வெளிப்படுத்த முயன்றானோ அதுதான் கவிதைப்பொருள். ‘அந்தப்பொருளை எவ்வாறு அவன் வெளிப்படுத்த முயன்றான்?’ என்பதை ஆராயும்போது பொருள் நயம் தோன்றும். கவிதையின் உயிர்போல மிக முக்கியமாக விளங்குவது அதன் உள்ளுறை அல்லது உரிப்பொருளாகும். இந்த உரிப்பொருள் ஓர் எண்ணமாகவோ, உணர்ச்சியாகவோ இருக்கலாம். எண்ணமும் உணர்ச்சியும் பிரிக்க இயலாதவாறு ஒன்றி இரண்டறக்கலந்த கலவையாகவும் இருக்கலாம். இதுவே கவிதையின் உயிர் என்பர்.

இதுவரை கவிதையின் சில கூறுகளை நோக்கினோம். கவிதையின் இன்னொரு கூறு ‘அணிநயம்’ என்பதாகும். இதனை அடுத்த அலகில் கற்போம். இனிப்பின்வரும் உதாரணக் கவிதையில் மேல்கற்ற உணர்ச்சி, கற்பனை, ஓசைநயம், பொருள்நயம் எனும் கூறுகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை உங்களின் ஆசிரியருடன் இணைந்து கவிதைகளின் நயம் காண முயலுங்கள்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## நல்லதோர் வீணை

நல்லதோர் வீணைசெய்தே - அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?
சொல்லடி சிவசக்தி - எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ - இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே?
சொல்லடி சிவசக்தி - நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ?

விசையுறு பந்தினைப்போல் - உள்ளம்
வேண்டிய படிசெலும் உடல்கேட்டேன்
நசையறு மனங்கேட்டேன் - நித்தம்
நவமெனச் சுடர்தரும் உயிர்கேட்டேன்
தசையினைத் தீசுடினும் - சிவ
சக்தியைப் பாடும் நல் அகங்கேட்டேன்
அசைவறு மதிகேட்டேன் இவை
அருள்வதில் உனக்கெதுந் தடையுளதோ?

## கங்காணி

கொண்டை யிலே பூவிருக்க
கொண்டுவந்த கங்காணி
கொந்தரப்பு வேலையிலே
கொல்லுறானே கங்காணி

ஏல மலைக்குப் போனேன்
ஏழெட்டு நாள் வேலை பார்த்தேன்
ஊரை நினைக்கையிலே
உருகுதையா எம்மனசு

ஏலமலையும் கண்டேன்
ஏலமலைத் தோட்டம் கண்டேன்
பாவிப்பய பஞ்சம் வந்து
பண்ணைப்புறம் கோம்பை கண்டேன்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## *வினையாலணையும் பெயர்*

பின்வரும் வாக்கியங்களைக்கவனமாக வாசிப்போம்.

**கால் தவறி விழுந்தவனைக் காப்பாற்றப் போய் நானும் விழுந்தேன்.**

**என்னை அடித்தவனை நானும் அடித்தேன்.**

| | |
|---|---|
| *விழுந்தவனை* | *விழுந்தேன்* |
| *அடித்தவனை* | *அடித்தேன்* |

இவை இரண்டிற்கும் இடையிலான வேறுபாட்டை அவதானிக்க முடிகிறதா?

விழுந்தேன், அடித்தேன் } என்பவை வினைச்சொற்கள்/ வினை முற்றுக்கள் என்பதை அறிவோம்.

விழுந்தானை, அடித்தானை } என்பவை வினையையடியாகக் கொண்ட சொற்களோடு வேற்றுமை உருபுகள் இணைந்துள்ளன.

**இவ்வாறு இணையும் போது வினைச்சொற்கள் பெயராக மாற்றம் அடைகின்றன. இதனையே நாம் வினையாலணையும் பெயர் என்கிறோம்.**

- வினைச்சொல் வேற்றுமை ஏற்காது.
- வேற்றுமை உருபுகளை ஏற்பது பெயர்ச் சொல்லின் முக்கிய பண்பு.
- ஆகவே, வினைச்சொல் வேற்றுமை, ஏற்கும்போது பெயர்ச் சொல்லாகிறது.

'ஐ' உருபு ஏற்காமலும் வினையாலணையும் பெயர் வரும்.

**உ-ம்**

*விழுந்தவனை- விழுந்தகுமாரை*

*அடித்தவனை - அடித்த முருகனை*

**விழுந்தவனை என்ற சொல்லில் விழுந்த மனிதனும் அடித்தவனை என்ற சொல்லில் அடித்த மனிதனும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.**

இவ்வாறு வினைச்சொல் வேற்றுமை உருபு ஏற்கும் போது அது பெயர்ச் சொல்லாகிறது.

**இதனையே நாம் வினையாலணையும் பெயர் என்கின்றோம்.**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| *நடந்தவனை* | - | *நடந்த* | + | *அவன்* | + | *ஐ* | - | *நடந்தவன்* |
| *படித்தவளை* | - | *படித்த* | + | *அவள்* | + | *ஐ* | - | *படித்தவள்* |
| *வாசித்தவரை* | - | *வாசித்த* | + | *அவர்* | + | *ஐ* | - | *வாசித்தவர்* |

இந்தச் சொற்களில்

வினையெச்சம் + அவன் + வேற்றுமை உருபு

என்ற வடிவத்தில் இருப்பதை காண்போம்

இன்று வினையாலணையும் பெயரை - பழந்தமிழ் முறையில் நாம் பயன்படுத்துவதில்லை.

***வினையெச்சத்துடன் பெயர்ச்சொற்களையும் வேற்றுமை உருபுகளையும் இணைத்தே பயன்படுத்துகின்றோம்.***

நடைமுறையில் நாம் பயன்படுத்தும் வினையாலணையும் பெயர்களை எழுதுவோம்.

உ-ம் அடித்தவனை படித்தவனால்
படுத்தவனை உடைத்தவனுக்கு
இறந்தவளை சிரித்தவளுக்கு

**பயிற்சி**

பின்வரும் வினைச்சொற்களுடன் வேற்றுமை உருபுகளை இணைத்து வினையாலணையும் பெயர்களை எழுதுவோம்.

| *வினைச்சொல்* | *வினையாலணையும் பெயர்* |
|---|---|
| 1. நடந்தான் | நடந்தவனை |
| 2. அடித்தான் | ................................... |
| 3. படித்தார் | ................................... |
| 4. நின்றான் | ................................... |
| 5. சென்றாள் | ................................... |
| 6. விழுந்தது | ................................... |
| 7. கொன்றது | ................................... |
| 8. வந்தான் | ................................... |
| 9. போனாள் | ................................... |
| 10. நீந்தினான் | ................................... |
| 11. உண்டான் | ................................... |

**ஒப்படை**

இவ்வினையாலணையும் பெயர்களைக்கொண்டு பொருள் விளக்கத்துடன் வாக்கியம் அமைப்போம்.

# 07

# பல்சுவைப் பாடல்கள்

## நாட்டார் பாடல்



இஸ்டோரும் கட்டியாச்சி
இஞ்சிநீரும் பூட்டியாச்சி
இளவட்டப் பொண்டுகளா
எலே பொறுக்க வந்திடுங்க

*மேரிவளே தோட்டத்திலே*
*மேக்கணக்கு கண்டக்கையா*
*இஞ்சிநீரே தட்டி விட்டு*
*எலை பொறுக்க நான் வாறேன்*



*ஆடுதையா இஞ்சிநீரு*
*அரைக்குரையா செம்புரோதை*
*ஓடுதையா வாருகளும்*
*ஒளிஞ்சிருந்து பாருமையா*



*வெங்கல ரோதையிலே*
*வேலை செய்யும் என் சாமி*
*வெத்திலை வேணுமினா*
*வெளியே வந்து கேளுமையா.*

*மலைநாட்டுப்பாடல்கள்*



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

உலகெங்கும்
வாழ்வை இழந்து வசதி பொறுக்குகின்ற
மனித சருகுகளாய்ப் புரள்கிறேன்
என்ன நம் தாய் நாடு
ஓயாமல் இலையுதிர்க்கும்
உயிர்ப்பிழந்த முதுமரமா....?

யாழ் நகரில் என் பையன்
கொழும்பில் என் பெண்டாட்டி
வன்னியில் என் தந்தை
தள்ளாத வயதினில்
தமிழ் நாட்டில் என் அம்மா.......

என்ன நம் குடும்பங்கள்
காற்றில் விதிக்குரங்கு கிழித்தெறியும்
பஞ்சுத் தலையணையா?
பாட்டனார் பண்படுத்தி
பழமரங்கள் நாட்டி வைத்த
தோப்பை அழியவிட்டுத்
தொலை தேசம் வந்தவன் நான்
என்னுடைய பேரனுக்காய்
எவன்வைப்பான் பழத்தோட்டம்....?



-வ.செ.ஜெயபாலன்-

## உலகம் உன்னுடையது

அறிவை விரிவுசெய்! அகண்ட மாக்கு!
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!
அணைந்துகொள் உன்னைச் சங்கமமாக்கு!
மானிட சமுத்திரம் நானென்று கூவு!
பிரிவிலை எங்கும் பேத மில்லை.
உலகம் உண்ண உண் உடுத்த உடுப்பாய்!
புகல்வேன் உடைமை மக்களுக்குப் பொது
புவியை நடத்து பொதுவில் நடத்து
வானைப் போல மக்களைத் தாவும்
வெள்ளை அன்பால் இதனைக்
குள்ள மனிதர்க்கும் கூறடா தோழனே!

-பாவேந்தர் பாரதிதாசன்-

## முக்கூடற் பள்ளு

கொண்டல் கோபுரம் அண்டையிற் கூடும்
கொடிகள் வானம் படிதர மூடும்
கண்ட பேரண்டந் தண்டலை நாடும்
கனக முன்றில் அனம்விளை யாடும்
விண்ட பூமது வண்டலிட் டோடும்
வெயில்வெய் யோன்பொன் னெயில்வழி தேடும்
அண்டர் நாயகர் செண்டலங் காரர்
அழகர் முக்கூடல் ஊரெங்கள் ஊரே.

## நான்மணிக் கடிகை

இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்
வளமிலாப் போழ்தத்து வள்ளண்மை குற்றம்
கிளைஞரில் போழ்தில் சினம் குற்றம் குற்றம்
தமரல்லார் கையகத்து ஊண்.

விளம்பி நாகனார்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

*செற்றன் றாயினும் செயிர்த்தன் றாயினும்*
*உற்றன் றாயினும் உய்வின்று மாதோ*
*பாடுநர் போலக் கைதொழு தேத்தி*
*இரந்தன் றாகல் வேண்டும் பொலந்தார்*
*மண்டமர் கடக்குந் தானைத்*
*திண்டேர் வளவற் கொண்ட கூற்றே.*

*மாறோக்கத்து நப்பசலையார்.*

## அரும்பத விளக்கம்

### நாட்டார் பாடல்

| | | |
|---|---|---|
| இஸ்டோர் | - | தொழிற்சாலை |
| இஞ்சிநீரு | - | இயந்திரம் |
| பொண்டுகளா | - | பெண்கள் |
| எல/எலே/எலை | - | இலை |
| கண்டக்கையா | - | மேற்பார்வையாளர் |
| ரோதை | - | சக்கரம் |
| வார்கள் | - | பட்டி (Belt) |

### உலகம் உன்னுடையது

| | | |
|---|---|---|
| அகண்டம் | - | முழுமை |
| விசாலப்பார்வை | - | பரந்தநோக்கு |
| சங்கமம் | - | கலத்தல் |
| பேதம் | - | வேறுபாடு |
| புகல்வேன் | - | கூறுவேன் |
| வெள்ளை அன்பு | - | தூய்மையான அன்பு |

### முக்கூடற் பள்ளு

| | | |
|---|---|---|
| கொண்டல் | - | மேகம் |
| வானம் | - | மேகம் |
| தண்டகலை | - | சோலை |
| பேரண்டம் | - | வானப்பெருவெளிப்பரப்பு |
| நாடும் | - | விரும்பும் |
| கனகம் | - | பொன் |
| முன்றில் | - | முற்றம் (வீட்டின் முன்புறம்) |
| அனம் | - | அன்னப்பறவை |

| | | |
|---|---|---|
| வெய்யோன் | - | கதிரவன் |
| எயில்வழி | - | அம்புகள் எய்ய அமைத்துள்ள துளைவழி |
| மது | - | தேன் |
| அண்டர் | - | தேவர் |
| செண்டு | - | திருமாலின் ஒருவிதப்படைக்கருவி |
| **நான்மணிக்கடிகை** | | |
| வளமிலா | - | வருவாய் இல்லாத |
| போழ்தத்து | - | காலத்தில் |
| வள்ளன்மை | - | ஈகைப்பண்பு |
| கிளைஞர் | - | உறவினர் |
| தமரல்லார் | - | உள்ளன்பு இல்லாதவர் |
| ஊண் | - | உண்ணுதல் |
| **புறநானூறு** | | |
| செற்றம் | - | கறுவு (செற்றம் - மனத்துள்ளே வெகுளுதல்), |
| செயிர்த்தல் | - | வெளிப்படையாக வெகுளுதல் |
| உறுதல் | - | மெய்தீண்டுதல் |
| இரந்தன்று | - | யாசித்துக் கொண்டது |
| அமர் கடத்தல் | - | நேர் நின்று போரிட்டு வெல்வது |

## பயிற்சி

1. நாட்டார் பாடல் தரும் செய்தியை உமது நடையில் எழுதுக
2. புதுக்கவிதையில் ''ஓயாமல் இலையுதிர்க்கும் உயிர்ப்பிழந்த முதுமரமா...?'' ''காற்றில் விதிக்குரங்கு கிழித்தெறியும் பஞ்சுத் தலையணையா?'' எனும் வரிகளில் கவிஞர் உணர்த்துவது யாது?
3. உலகம் உன்னுடையது ''பிரிவிலை எங்கும் பேதமில்லை'' எனும் வரியில் கவிஞர் உணர்த்துவது யாது?
4. ''முக்கூடல்'' ஊரின் சிறப்புக்களைக் கூறுக
5. ''நான்மணிக்கடிகை''யில் கூறப்பட்டுள்ள அறக்கருத்துக்கள் யாவை?
6. புறநானூறு பாடலின் பொருளை உமது நடையில் எழுதுக

### மொழித்தேர்ச்சிக்கான செயற்பாடுகள்

*1. தரப்பட்டுள்ள பாடல்களைப் பொருள் விளக்கத்தோடும் பொருத்தமான பாணியையும் நுட்பத்தையும் கையாண்டு உணர்வு பூர்வமாக வாசித்துக் காட்டுக.*

*2. பல்சுவைப்பாடல்கள் எனும் பகுதியில் இடம் பெற்றுள்ள பாடல்களின் கருத்துக்களை உமது மொழிநடையில் விபரித்து எழுதுக.*

*3. இதில் இடம்பெற்றுள்ள நாட்டார் பாடலை இராகத்தோடு பாடிக் காட்டுக.*



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## மின்னியல் கடிதம்

கடிதவகைகளுள் நட்பாடல் தொழில்முறை சார்ந்த கடித வகைகளை இதுவரை கற்றோம். இனிக் கடித வகைகளில் தற்காலத்தில் புழக்கத்தில் உள்ள மின்னியல் கடிதங்களை நோக்குவோம்.

மின்னியல் கடிதம் என்பது மின்சார தொடர்புசாதனம் வழியாகத் தொடர்பாடலை மேற்கொள்வதைக் குறிக்கும். தொலைபேசி, சுருக்கத் தொடர்பு சேவை, (S.M.S) தொலைநகல் (Fax), டெலிபெக்ஸ், மின்னஞ்சல் (e-mail) போன்றன இவற்றுள் அடங்கும். மேலும் மொழித்திறன் என்பது இன்று இவ்வகையான தொடர்புச்சாதனங்களை முறையாகக் கையாளும் திறனையும் உள்வாங்கிய ஒன்றாக உள்ளது. எனவே மின்னியல் ஊடகங்களைத் தெளிவுறக் கையாளும் திறனை நீங்கள் பெற்றிருப்பது அவசியமாகும்.

### மின்னஞ்சல் (E-mail)







மின்னஞ்சல் 1973ம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்பட்டாலும் தொடர்பாடல் செய்மதியும் இணையமும் (Internet) கண்டுபிடிக்கப்பட்ட பின்னர்தான் அதன் வளர்ச்சி அபரிமிதமானதாக அமைந்தது. இன்று மின்னஞ்சல் கடிதம் போன்று தகவல்களைப் பரிமாற சகலவிதமான கோப்புகளையும் இணைத்து அனுப்புவதற்கும், படங்களை அனுப்புவதற்கும், உரையாடல்களைப் பதிவுசெய்து சேமித்து அனுப்புவதற்கும் எனப்பல வகைகளில் பயன்படுகிறது.

சாதாரண கடிதங்களில் செய்யமுடியாத பல விடயங்களைத் தெளிவாகவும், சரியாகவும் குறித்த நபருக்கு அனுப்புவதற்கும் மின்னஞ்சல் சிறந்தவழியாகும். இன்று உலகம் முழுவதும் மின்னஞ்சல் ஊடாகவே தொடர்பாடல் கருமங்கள் இடம் பெறுகின்றன.

எனவே குறித்த நபருடன் நீங்கள் மின்னஞ்சலைப் பரிமாறிக்கொள்ளப் பின்வரும் அறிவினையும், சாதனங்களையும் பெற்றிருத்தல் அவசியம்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

01. **கணினியை இயக்குவதற்கான அடிப்படை அறிவைப் பெற்றிருத்தல்.** கணினியை ஆங்கிலம் தெரிந்தவர்கள் மட்டும் தான் பயன்படுத்த முடியும் எனச் சிலர் இன்றளவும் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் கணினி என்பது மொழி எனும் எல்லையைத்தாண்டி உலகின் எல்லாப் பாகங்களிலும் வாழும் மக்களுக்கும் பயனளித்துக் கொண்டிருக்கிறது. இன்று உலகில் வாழும் ஒவ்வொரு தனிநபரும் அவரவர் தாய்மொழியில் கணினியைக் கற்றுக்கொள்ள வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன.

02. **கணினி அவசியமானதாகும்-** தனியாள் மின்னஞ்சல் அனுப்புவதற்கு அவர் கணினி ஒன்றை வாங்குதல் வேண்டும். இதற்கான முதலீடு அதிகமான போதும் மின்னஞ்சல் மிக விரைவானதும், பெறுமதி வாய்ந்ததுமாக மாறிவிட்டதால் முதலீடு என்பது இரண்டாம் பட்சமாகின்றது. Cyber cafe எனும் தனியார் நிறுவனங்களிலும் அரச ஊடகங்களினூடாகவும் இச்சேவையைப் பெறலாம்.

03. **தொலைபேசி வசதியைக் கொண்டிருத்தல்.**

04. **மோடம் (Modem) பெற்றிருத்தல்**

05. **தனக்கான மின்னஞ்சல் முகவரியை உருவாக்கிக் கொண்டிருத்தல்.**

என்பன மின்னஞ்சல் அனுப்புவதற்கான அடிப்படைத் தகைமையாகக் கொள்ளப்படுகிறது. மேற்குறித்த விடயங்கள் குறித்து உங்கள் பாடசாலையின் கணினிப்பிரிவு ஆசிரியருடன் கலந்துரையாடி மின்னஞ்சல்களை அனுப்பவும், பார்வையிடவும் முயற்சியுங்கள்.



### *தொலைநகல் (Fax)*

மின்னியல் கடிதவகைகளுள் தொலைநகலும் ஒன்றாகும். சாதாரண கடிதங்களின் விதிமுறைகளுக்கு அமையக் கறுப்பு மையால் எழுதப்பட்டு அல்லது தட்டச்சு, கணினி தட்டச்சுச் செய்யப்பட்டுத் தொலைநகல் இயந்திரத்தின் ஊடாகப் பரிமாறலாம். தொலைநகல் அனுப்புவதற்கு, தொலைபேசி-தொலைநகல் இயந்திரம், தொலைநகல் இலக்கம், பெறுநரின் தொலைநகல் இலக்கம் என்பன அவசியமாகும்.

### பயிற்சி

01. உங்கள் பாடசாலை கணினி ஆசிரியரின் உதவியுடன் www.com என்றால் என்ன? என்பதை குறிப்பிடுக.

02. தொலைநகல் அனுப்புவதற்குத் தேவையான சாதனங்கள் எவை?

03. உங்கள் பாடசாலையில் நடைபெறவுள்ள நிகழ்வு ஒன்றைப்பற்றிப் பத்திரிகை ஒன்றுக்குத் தொலைநகல் ஒன்றைத் தயாரித்து அனுப்பவும்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## அணிகள்

கவி ஆக்கத்தின்போது பல்வேறு வகையான உத்திகள், நுட்பங்கள் கடைப்பிடிக்கப்படுகின்றன. கவிஞன் சொல்லவந்த கருத்துக்கு வலுவூட்டுவதாக அமைவனவே அணிகள் எனப்படும். அணிகள் பலவகை. இங்கு முக்கியமான ஒரு சில அணிகளைக் கற்போம்.

### உவமையணி

ஒருவர் தான் எடுத்துக்கொண்ட பொருளை விளக்குவதற்கு வேறொரு பொருளை ஒப்பிட்டுக் காட்டுவது உவமை அணியாகும். இது இரண்டு பொருள்களுக்குமுள்ள ஒப்புவமையை விளக்குவது, உவமான உவமேயம், பொதுத்தன்மை, உவமை உருபு என்பன இதன் பகுதிகளாகும்.

*உவமையின் கூறுகள்*

| | | |
|---|---|---|
| உவமானம் | - | எவர்க்கும் தெரிந்த பொதுவான சிறப்புப் பொருளைக் குறிக்கும் |
| உவமேயம் | - | நாம் விளக்க எடுத்துக்கொண்ட பொருள் |
| பொதுத்தன்மை | - | உவமானத்துக்கும் உவமேயத்துக்கும் இடையேயான ஒற்றுமை |
| உவமை உருபு | - | ஒப்புவமைகளைக் காட்டப் பயன்படும் சொற்கள் உருபுகள் எனப்படும் (போல, ஒப்ப, புரைய, அன்ன, நேர, நிகர) |

உ-ம்

மன்னர் விழித்தாமரை பூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்கான் - மின்னிறத்த
செய்யதான் வெள்ளைச் சிறையன்னம்
செங்கமலப் பொய்கை வாய்ப் போவதே போன்று

*மேல் உள்ள கவிதையில் வரும் உவமை அணிகள்.*

| | | |
|---|---|---|
| உவமானம் | - | செங்கமலப் பொய்கை |
| உவமேயம் | - | விழித்தாமரை பூத்த மண்டபம் |
| பொதுத்தன்மை | - | அழகு |
| உவமானம் | - | அன்னம் |
| உவமேயம் | - | மடப்பாவை |
| பொதுத்தன்மை | - | நடையழகு |

*நாற்குணமும் நாற்படையாய் ஐம்புலனும் நல்லமைச்சாய்*
*ஆர்க்கும் சிலம்பே யணிமுரசாய் வேற்படையும்*
*வாளுமே கண்ணாய் வதனமதிக் குடைகீழ்*
*ஆளுமே பெண்மையரசு*

*-நளவெண்பா-*

இந்த வெண்பா முழுவதும் உருவகங்களாய் உருவாக்கப்பட்டுள்ளது. தேர், குதிரை, யானை, காலாற்படை ஆகிய நான்கு படைகள் போல அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் குணங்களை உடையவள் என்ற உவமை

*'நாற்குணங்களே நாற்படையாயுடையவள்'*

என்று உருவகிக்கப்பட்டுள்ளது.

*ஐம்புலனும் நல்லமைச்சாய்*
*சிலம்பாகிய முரசம்*
*கண்ணாகிய வேல், கண்ணாகிய வாள்*
*வதனமாகிய மதிக்குடை*
*பெண்மையாகிய அரசு*

என ஏனைய உருவகங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

## தற்குறிப்பேற்ற அணி

இயற்கை நிகழ்ச்சியொன்றின் மீது புலவன் தனது கருத்தை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணியாகும். தன் + குறிப்பு + ஏற்றம் - தற்குறிப்பேற்றம்

*தீய வக்கொடிய காண கத்தரை*
*திறந்த வாய்தொறும் நுழைந்துதன்*
*சாயை புக்கவழி யாதெ னப்பரிதி*
*தன்க ரங்கொடு திளைக்குமே*

பொருள் : சூரியனானவன் தன் மனைவியான சாயை என்பாள் நிலத்திலே புகுந்த வழி எதுவென அறிதற்பொருட்டு, தீய கொடிய பாலை நிலத்தரையிலுள்ள வெடிப்புக்கள்தோறும் தன் ஒளிக்கதிர்க் கரங்களால் இடைவிடாது தேடுகிறான்.

குறிப்பு : சூரியனது கடிய கொடிய வெம்மையால் நிலம் பாளம்பாளமாக வெடித்துப்பிளந்திருந்தது என்க. இது தற்குறிப்பேற்ற அணி. அவ்வணியானது, புலவன் இயற்கை நிகழ்வின் மேல் தன் குறிப்பை - எண்ணத்தை ஏற்றிச் சொல்வது. இங்கு சூரிய வெம்மையால் பாலைநிலம் வெடித்து பிளந்து இருத்தலும், அவ்வெடிப்பினூடாக சூரியகதிர் உள் நுழைந்து மேலும் வெப்பமுண்டாக்கலும் இயற்கை நிகழ்ச்சி, இந்நிகழ்ச்சியின் மீது புலவன் தன் எண்ணத்தை - குறிப்பை ஏற்றிக் காண்கிறான். சூரியன் தனது மனைவியான சாயை என்பாள் நிலத்தில் ஒளிந்திருக்கும் இடத்தைக காண்பதற்காக, நிலத்தில் வெடித்த பிளவுகள்தோறும் கையை விட்டு இடைவிடாது தேடுகிறான். இவ்வணியின் வாயிலாகப் புலவனின் கற்பனை வளத்தை அறிய முடிகின்றது.பயிற்சி



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## பயிற்சி

1. வெயில் நெருப்பாய் எரிக்கின்றது.
2. மைதானத்திலே சனம் 'வெள்ளமாய்க்' கிடந்தது.
3. பொம்மை மாதிரி
4. 'விசையுறு பந்தினைப்போல் - உள்ளம்
   வேண்டியபடி செல்லும் உடல் கேட்டேன்'
5. 'மின்னொத்த இடை உடையாள்'
6. 'எஃகிய பஞ்சினைப் போலத்
   தமிழ் எல்லாள மன்னன் இருதயம் போல
   வெஃகிய வெண்முகிற் கூட்டம்
   இந்து மேய எழுந்திடுமன்றே'

1. மேல் உள்ள உதாரணத் தொடர்களில், கவிதைகளில் உள்ள உவமை உருபுகளை இனங்கண்டு எழுதுங்கள்
2. உங்களின் இலக்கியத் தொகுப்பில் உள்ள செய்யுள்கள், நவீன கவிதைகளில் உள்ள உவமைகளை இனங்கண்டு தொகுத்து எழுதுங்கள்.

### *உருவக அணி*

உவமைக்குறிப்பை உள்வாங்கி, ஒரு பொருளை மற்றொன்றாகக் கூறுவது உருவக அணியாகும் 'அது போன்றது இது' என்பது உவமை, 'அதுவே இது' என்பது உருவகம். ஆதலால் இதனைச் செறிந்த உவமை எனச்சொல்லாம்.

உ-ம்

| | | |
|---|---|---|
| கடல் போன்ற கல்வி | - | உவமைத்தொடர் |
| கல்விக்கடல் | - | உருவகத்தொடர் |
| பால் போல அன்பு சுரக்கிறது | - | உவமைத்தொடர் |
| சுரக்கும் பால் | - | உருவகத்தொடர் |

*பொங்கும் மானுடம்*
*புரட்சி அலைகளாய்*
*பொய்மை வேகத்தைச்*
*சாடுகின்றோம்.*

*-இன்குலாப்-*

புரட்சி அலை - உருவகம் இங்கு புரட்சி என்பதே அலை தான் என உருவகிக்கப் பட்டுள்ளது.

## பயிற்சி

பின்வரும் பாடலில் இடம் பெற்றுள்ள உருவக அணியை எடுத்துக்காட்டுக.

01. *பார்; சுடர்ப் பரிதியைச் சூழவே படர்முகில்;*
*எத்தனை தீப்பட்ட டெரிவன? ஓகோ!*
*என்னடி! இந்த வன்னத் தியல்புகள்*
*எத்தனை வடிவம்! எத்தனை கலவை!*
*தீயின் குழம்புகள்! செழும்பொன் காய்ச்சி*
*விட்ட ஓடைகள்! வெம்மை தோன்றாமே*
*எரிந்திடுந் தங்கத் தீவுகள்! பாரடி!*
*நீலம் பொய்கைகள் அடடா நீல*
*வன்ன மொன்றில் எத்தனை வகையடி!*
*எத்தனை செம்மை! பசுமையுங் கருமையும்*
*எத்தனை! கரிய பெரும்பெரும் பூதம்!*
*நீலப் பொய்கையின் மிதந்திடுந் தங்கத்*
*தோணிகள்! சுடரொளிப் பொற்கரை யிட்ட*
*கருஞ்சிக ரங்கள்! காணடி, ஆங்கு*
*தங்கத் திமிங்கலம் காம்பல மிதக்கும்*
*இருட்கடல்! ஆஹா! எங்கு நோக்கிடினும்*
*ஒளித்திரள்! ஒளித்திரள்! வண்ணக் களஞ்சியம்.*

02. பின்வரும் பாடல்களிலுள்ள தற்குறிப்பேற்ற அணிகளை இனங்காண்க.

*''நாட்டு நிலமையை நல்லாப் பாத்தது*
*ஏற்றத் தாழ்வை ஒழிக்க வரப்பில்*
*போட்டது வளையைப் புரட்சி நண்டு''*

*''முகில் இனங்கள் அலைகிறதே*
*முகவரிகள் தொலைந்தனவோ*
*முகவரிகள் தொலைந்ததனால்*
*அழுதிடுமோ, அது மழையோ?''*

### உயர்வு நவிற்சி அணி

ஒரு பொருளின் தன்மையை மிதமிஞ்சி உயர்த்திக் கூறுவதே உயர்வு நவிற்சியணியாகும்.

*'அணிகொண்ட குரங்கினங்கள்*
*அலை கடலுக் கப்பாலை*
*மணலொன்று காணாமல்*
*வரையெடுத்து மயங்கினவே'*



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

இராமன் இலங்கை மீது படைநடத்திச் செல்வதற்காக வானரங்கள் கடலில் அணைகட்டின. வானரங்கள் மலைகளையும் பெயர்த்து வந்து கடலில் போட்டன. அதனால் மிகுதியும் வருந்தின இவ்வாறு ஏன் வருத்தப்பட வேண்டும்? இப்பாலைவனத்தின் ஒரு மணலை எடுத்து வந்து கடலில் போட்டிருந்தால் கடல் முழுவதுமே வற்றியிருக்குமே குரங்குகளுக்கு இது தெரியவில்லையே என்று இரங்குவது போல அமைகிறது பாடல். இவ்வாறு கூறுவது மூலம் அப்பாலைவனத்தின் வெம்மைக் கொடுமையை உணர்த்துகிறார் புலவர்.

***பாலைவனத்தின் ஒரு மணலே கடல் நீர் முழுவதையும் வற்றவைத்தது*** என்பதை உய்த்துணர வைக்கிறார் புலவர். இவ்வாறு ஒரு பொருளின் தன்மையை மிதமிஞ்சி உயர்த்திக் கூறுவதே உயர்வு நவிற்சியணியாகும்.

**ஒப்படை**

இவ்வகையான பாடல்களை உங்கள் இலக்கியத் தொகுப்பில் இனம் கண்டு தொகுத்துத் தருக.

## சிலேடை அணி

ஒரு சொல், அல்லது சொற்றொடர் பல பொருள் தந்து பாடும் பொருளின் கருத்தோடு பொருந்தும்படி கூறுவது சிலேடையாகும்.

*'குறிஞ்சிக் குறத்தியரும் அரம்பையரும்*

*கரும்பாம் பாட்டினார்*

என்ற வாக்கியத்தில் கரும்பாம்பாட்டினார். என்ற சொற்றொடர்

கரும் - பாம்பு - ஆட்டினார் என்றும்,

கரும்பு - ஆம் - பாட்டினார் என்று பிரிக்கக்கூடியது.

அவ்வாறு பிரித்தால்

1. குறத்தியர் கரிய பாம்பை ஆட்டினார்.
2. குறத்தியர் கரும்பு போன்ற இனிய பாட்டை உடையவர் - என்றும் பொருள்படும் இவ்வாறு அமைவது சிலேடை அணியாகும்.

**பயிற்சி**

ஒரு சொல் பல பொருள் தரும் சொற்களைத் தொகுத்து அகராதி ஒன்று தயாரிக்குக.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## *வேற்றுமை*

பின்வரும் வாக்கியங்களை அவதானமாக வாசித்து வேறுபாடுகளை அவதானியுங்கள்.

*திவ்யா வந்தாள்.*

*திவ்யாவைப் போன்றவள்.*

*திவ்யாவினால் பாடப்பட்டது.*

*திவ்யாவுக்குக் கொடுத்தாள்.*

*திவ்யாவின் புத்தகம்.*

*திவ்யாவினது வீடு.*

*திவ்யா கண் இருக்கிறது.*

*திவ்யா, வாருங்கள்.*

இவ்வாக்கியங்களில் **திவ்யா** என்ற பெயர்ச்சொல் **வினைச்சொற்களுக்கு** ஏற்ப மாற்றமடைந்துள்ளது என்பதை அவதானித்திருப்பீர்கள்.

**ஐ, ஆல், கு, இன், அது, கண்** என்ற **வேற்றுமை உருபுகளை** பெயர்ச்சொல் ஏற்றமையால் இந்த மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பதையும் அவதானித்திருப்பீர்கள்.

*எனவே,*

- **எல்லா வகைப்பட்ட பெயர்ச்சொற்களும் இறுதியில் வேற்றுமை உருபுகளை ஏற்பதால் அதன் பொருள் வேறுபடுவதையே வேற்றுமை என்போம்.**

இன்னுமொரு வகையில் கூறுவதானால்,

- **வாக்கியத்தில் பெயர்ச்சொற்களின் இலக்கணத் தொழிற்பாடு வேறுபடுவது வேற்றுமை எனப்படும்.**
- **பெயர்ச்சொல்லின் சிறப்பு வேற்றுமை உருபுகளை ஏற்பதே**

ஒவ்வொரு வேற்றுமைக்கும் தனித்தனி உருபுகளும், பொருளும், சொல்லுருபுகளும் உண்டு

- **உருபு விரிந்து நிற்பது வேற்றுமை விரி என்றும் உருபு தொக்கு நிற்பது வேற்றுமைத்தொகை என்றும்சொல்லப்படும்.**

தமிழில் வேற்றுமை எட்டு என்பர்.

## முதலாம் வேற்றுமை

இது எழுவாய் வேற்றுமை எனவும் பெயர் பெறும்.

முதலாம் வேற்றுமைக்கு உருபு கிடையாது, சொல்லுருபும் கிடையாது.

*பெண் வந்தாள்*

*பூ மலர்ந்தது*

*நான் சிரித்தேன்*

இவ்வாக்கியங்களில் **பெண், பூ, நான்** என்ற பெயர்ச்சொற்களே எழுவாயாகும்.

எனவே,

- உருபு ஏற்காத, திரிபு அடையாத பெயர்ச்சொல் ஒரு வாக்கியத்தில் எழுவாயாகச் செயற்படுவது எழுவாய் வேற்றுமை அல்லது முதலாம் வேற்றுமை எனப்படும்.

  ஒரு வாக்கியத்தின் பயனிலையுடன் திணை, பால், எண், இட உறவு கொண்டுள்ள பெயரே அதன் எழுவாய் எனப் பொதுவாகக்கூறலாம்.

## இரண்டாம் வேற்றுமை

உருபு ஐ

இரண்டாம் வேற்றுமைக்கான பொருளை மரபிலக்கண நூல்கள் பின்வருமாறு கூறுகின்றன.

இரண்டாம் வேற்றுமைக்கான பொருளையும் அவற்றிற்கான நோக்கங்களையும் மிகக் கவனமாக வாசியுங்கள்.

| | |
|---|---|
| *ஆக்கல்* | *வீட்டைக் கட்டினான்* |
| *அழித்தல்* | *வீட்டை இடித்தான்* |
| *அடைதல்* | *வீட்டை அடைந்தான்* |
| *நீத்தல்* | *வீட்டை விட்டுச் சென்றான்* |
| *ஒத்தல்* | *தாயைப் போன்றவள்* |
| *உடைமை* | *பணத்தை வைத்திருக்கின்றான்* |

***இவ்வாக்கியங்களில் பொருளை உணர்த்துவது எது?***

வீடு, தாய், பணம் என்ற பெயர்ச்சொற்களோடு ஐ உருபு இணைவதால் பொருள் உணர்த்தப்படுகின்றதா?

இல்லை

*கட்டினான் - ஆக்கல்*

*இடித்தான் - அழித்தல்*

*அடைந்தான் - அடைதல்*

*சென்றான் - நீத்தல்*

*போன்றவள் - ஒத்தல்*

*வைத்திருக்கிறாள் - உடைமை*

என்ற வினைப்பயனிலைகளே பொருளை உணர்த்துகின்றன என்பதை அவதானித்திருப்பீர்கள்

- பெயர்ச்சொற்கள் ஐ உருபு ஏற்பதால், பொருள் வேறுபாடு ஏற்படவில்லை என்பதையும் உணர்ந்திருப்பீர்கள்

எனவே,

**ஒரு பெயர்ச்சொல் வாக்கியத்தில் செயப்படுபொருளாக தொழிற்படுவதே இரண்டாம் வேற்றுமை எனச் சுருக்கமாகக் கூறலாம்**

எனவே தான் இரண்டாம் வேற்றுமையைச் செயப்படுபொருள் வேற்றுமை என மொழி ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

*மணி பரிசைப் பெற்றான்*

*கள்வன் வீட்டை இடித்தான்*

*மாலதி தாயைப் போன்றவள்*

இவ்வாக்கியங்களில் பரிசை, வீட்டை, தாயை என்ற பெயர்ச்சொற்கள் (ஐ உருபு ஏற்று) செயப்படுபொருளாகும்.

***ஒரு வாக்கியத்தில் வினையின் பயனுக்கு உட்படும் பெயர்ச்சொல் செயப்படுபொருள் எனப்படும்.***

*எனவே,*

- இரண்டாம் வேற்றுமையின் பொருள் செயப்படுபொருளாகும்.
- சொல்லுருபு இல்லை.

### பயிற்சி

1. தமிழில் வேற்றுமை எத்தனை?
2. முதலாம், இரண்டாம் வேற்றுமைகளுக்குரிய பொருள் என்ன?
3. பின்வரும் சொற்களில் 'ஐ' உருபை இணைத்து வாக்கியங்கள் ஆக்குக.

அ) கவிஞன் ஆ) நிலா இ) இயற்கை ஈ) உழைப்பு உ) தியாகம்

ஊ) பாடல் எ) புகழ் ஏ) வெற்றி ஐ) புத்தகம் ஒ) நாடகம்



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

# 08 புதுக்கவிதை


அப்துல் ரகுமான்

## புதுக்கவிதை வடிவம்

மாற்றம் காலநியதி, பழைமை புளித்துப்போகும்போது பயனற்றுப் போகும் போது புதுமை பிறக்கிறது. கட்டுப்பாடுகளை விரும்பாத விடுதலை வேட்கை புரட்சி செய்யும்போதும் புதுமை பிறக்கிறது. பெருநிகழ்ச்சி களால் சுற்றுச்சூழல் மாறும்போதும் புதுமை பிறக்கிறது. மனித மனத்தின் இயல்பான புதுமை நாட்டத்தின் காரணமாகவும் புதுமை பிறக்கிறது. கால வகையினால் பழைமைகள் கழிந்து புதுமைகள் புகுகின்றன. இது எல்லாத் துறைகளிலும் நிகழ்வதுதான். அதனால் தான் வாழ்க்கை தேக்கமடையாமல் வளர்கிறது. எனவே புதுமை, வளர்ச்சியின் அறிகுறி.

இரு உலகப்போர்கள், புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள், தொழிற்புரட்சி, மார்க்ஸ், பிராய்ட் போன்றோரின் கோட்பாடுகள், தொடர்பு சாதனங்களால் விளைந்த நாகரிகப் பண்பாட்டுப் பரிமாற்றம் ஆகியவை தனித்தனியாகவோ ஒன்றிணைந்தோ, நேர்முகமாகவோ மறைமுகமாகவோ மனித வாழ்வைப் பெரிய அளவில் பாதித்தன. இதனால் சிந்தனைப் போக்கில் பெரிய மாற்றங்கள் நிகழ்ந்தன. பழைய மதிப்பீடுகள் நிலை குலைந்தன. மற்றத் துறைகளைப் போன்றே இலக்கியத்துறையிலும் இந்தப் பாதிப்புகள் விளைவுகளை ஏற்படுத்தத் தவறவில்லை. அந்த விளைவுகளில் ஒன்று தான் புதுக்கவிதையின் பிறப்பு.

இந்த மாற்றங்கள் காலமும் சூழலும் அனுமதித்த அளவுக்குத் தமிழ் நாட்டையும் பாதிக்கவே செய்தன. இவற்றோடு நாட்டு விடுதலைப் போர், சமூக சீர்திருத்த இயக்கங்கள், ஆங்கிலமொழி, பிறமொழி இலக்கிய அறிமுகம், இலக்கிய ஏடுகளின் பணி ஆகிய இந்திய, தமிழ்நாட்டு நிகழ்வுகளும் சேர்ந்து தமிழில் புதுக்கவிதை தோன்றுவதற்குரிய சூழ்நிலையைப் படைத்துத் தந்தன.

'காட்சி' என்ற தலைப்பில் பாரதி எழுதியவற்றைத் தமிழில் முதன்முதலாக எழுதப்பட்ட புதுக்கவிதைகள் என்று கூறுவதுண்டு. ஆனால் இவற்றைப் புதுக்கவிதைகள் என்பதை விட வசன கவிதைகள் என அழைப்பதே பொருத்தமானது. ஆனாலும் தமிழில் புதுக்கவிதை எழுதத் தொடங்கிய ந. பிச்சமூர்த்திக்குப் புதுக்கவிதை எழுதத் தூண்டிய சக்திகளுள் பாரதியின் வசனகவிதையும் ஒன்று என்பதை மறுப்பதற்கில்லை.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

ந. பிச்சமூர்த்தி, கு.ப.ராஜகோபாலன், வல்லிக்கண்ணன் ஆகியோர் புதிய வழியில் கவிதை எழுத ஆரம்பித்த 1930-40 களைத்தான் தமிழில் புதுக்கவிதை தோன்றி வளர்ந்த காலம் எனலாம்.

மரபு வழி யாப்புக்குள் அடங்காமல் வசனத்தில் எழுதப்படுகின்ற கவிதைகளையெல்லாம் இன்று 'புதுக்கவிதை' என்றே அழைத்தாலும் புதுக்கவிதைகள் அல்ல. 'புது' என்பது இங்கே பழைய யாப்பு மரபிலிருந்து வேறுபட்டது, என்பதைக் குறிக்கும் அடையாக மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது. உண்மையில் உருவத்தில் மட்டுமல்லாமல் உள்ளடக்கத்திலும் புதுத்தன்மை கொண்டிருப்பவற்றையே புதுக்கவிதைகள் என்று அழைக்க வேண்டும்.

புதுக்கவிதைக்கு இலக்கணமோ, வடிவமோ இல்லை என்று கூறுவது தவறு. அவ்வாறே வசனத்தில் எழுதப்படுவது புதுக்கவிதை என்ற கருத்தும் தவறானது. இதை விளக்குவதற்கு வசனம், கவிதை என்ற சொற்கள் எதைக் குறிக்கின்றன என்று அறிவது அவசியமாகும்.

வசனம் என்பது மொழியின் சொற்றொடர் அமைப்பு வகைகளில் ஒன்றாகும். கவிதை என்பது இலக்கிய வகைகளில் ஒன்றாகும். அது வெளிப்பாட்டு முறையைப் பொறுத்தது. இவை இரண்டும் வெவ்வேறு இனத்தைச் சார்ந்தவை.

மொழிநிலையைப் பேச்சு (Speech) என்றும், வசனம் அல்லது உரைநடை (Prose) என்றும், செய்யுள் அல்லது பா (Verse) என்றும் மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

பேச்சு, மொழியின் ஒலி வடிவமாகும் இதில் சொற்கள் கொச்சையாக இருக்கும்; தொடர்பற்று விட்டு விட்டு அமையும், சில சொற்கள் மீண்டும் மீண்டும் வரும்; பேசுவோன் நோக்கத்திற்கேற்ப குரல் ஏற்ற இறக்கத்தோடு ஒலிக்கும்.

வசனம் (Prose) என்பது மொழியின் வரிவடிவம், இதைச்செம்மைப்படுத்தப்பட்ட பேச்சு எனலாம். இதில் கொச்சைச் சொற்கள் இடம் பெறுவதில்லை; கூறப்படும் கருத்தை விளக்குகிற வகையில் சொற்கள் தர்க்க முறைப்படி தொடர்ச்சியாக அமையும்; சொற்றொடர் அமைப்பு முழுமை பெற்றிருக்கும்; ஆனால் உணர்வு நிலைக்கேற்ற குரல் ஏற்ற இறக்கத்தை இதில் காட்ட இயலாது.

செய்யுள் (Verse) என்பது இசைப்படுத்தப்பட்ட பேச்சாகும். பேச்சின் பண்புகள் இதிலும் இருக்கும். சொற்றொடர்கள் தர்க்க முறைப்படி அமையா; எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பன முறை மாறியும் வரும், ஒன்றிரண்டு இல்லாமலும் இருக்கும்; இதில் இசையொழுங்கால் உணர்வை எழுப்பமுடியும். சந்தம், எதுகை,மோனை, அடியமைப்பு ஆகியவற்றால் குரல் ஏற்றத் தாழ்வையும் காட்ட முடியும்.

கவிதை (Poetry) என்பது வெளிப்பாட்டு முறையைக் குறிக்கும். இந்த வெளிப்பாடு, உணர்வு நிலையைச் சார்ந்ததாதலால் இது வசனத்தை விட பேச்சையும் செய்யுளையும் நாடக்கூடியது.

யாப்பில் எழுதப்படுவதுதான் கவிதை என்ற கருத்து சரியானதல்ல. கவிதை யாப்பிலும் எழுதலாம்.

ஆனால் யாப்பில் எழுதப்படுவதெல்லாம் கவிதையுமல்ல. ஓர் உரைநடைச் சொற்றொடரை அப்படியே யாப்பில் நிறுத்த முடியும். யாப்பில் அமைந்து விட்டதாலேயே அதைக் கவிதை என்று கூறிவிட முடியாது. மருத்துவம், சோதிடம், இலக்கணம்

போன்றவையும் யாப்பில் எழுதப்பட்டுள்ளன. ஆனால், இவற்றைக் கவிதை என்று சொல்வதில்லை.

செய்யுளில் ஒரு கருத்து எவ்வித உணர்வையும் கிளறாமல் வெறும் கருத்து நவிற்சியாக (Plain Statement) முறையான சொற்றொடர் அமைப்பில் கூறப்பட்டிருந்தால் அது வசனத்தன்மையாக (Prosaic) இருக்கிறது என்று கூறும் வழக்கம் உண்டு. உரைநடையில் எழுதப்படுகின்ற கதைகளிலோ, புதினங்களிலோ, ஏன் கட்டுரைகளில் கூட. சில நல்ல எழுத்தாளர்கள் எழுதுகின்ற சில எழுத்துக்களை, 'இது கவிதையாக இருக்கிறது' என்று பாராட்டுவதும் உண்டு. இதிலிருந்து வசனத்தன்மை என்பது கவிதை என்பதற்கு மாறுபட்டது என்பதை உணரலாம். வசனத்தின் நோக்கம் விளக்குவது; கவிதையின் நோக்கம் உணர்த்துவது.

செய்யுள் கவிதை வெளிப்பாட்டுக்கு உதவும் சாதனம். என்றாலும், கணிதத் தன்மையான செயற்கைச் சந்தமுடையது எந்தச் செய்கையையும் மறுக்கும் புதுக்கவிதை. இந்தச் செயற்கைச் சந்தத்தையும் புறக்கணிக்கிறது. ஆனால் செய்யுள்களின் எல்லாப் பண்புகளையும் அது விளக்குவதில்லை. சக்தி மிக்க வெளிப்பாட்டுக்கு உதவும் செய்யுட் பண்புகள் சிலவற்றை அவசியமான இடத்தில் இது கைக்கொள்ளவே செய்கிறது.

மரபுக்கவிதை யாப்பில் அமைந்த செய்யுளைச் சார்ந்து நின்றது. புதுக்கவிதையோ யாப்பின் பண்புகள் சிலவற்றை ஏற்றுக் கொண்டாலும் மொழியின் மற்றொரு நிலையான இயல்பான பேச்சு நிலையைப் பெரிதும் சார்ந்து நிற்கிறது. வறண்ட வசனத்தோடு கவிதைக்குத் தொடர்பு கிடையாது. இவற்றையெல்லாம் அறியாமல் புதுக்கவிதை, வசனத்தில் எழுதப்படுகிறது என்று கூறுவது தவறாகும்.

*- அப்துல் ரகுமான் - விலங்குகள் இல்லாத கவிதை.*

### அரும்பத விளக்கம்

| | | | |
|---|---|---|---|
| **தேக்கம்** | - தடை | **யாப்பு** | - செய்யுள்களின் விதிகள் |
| **வெளிப்பாடு** | - தோற்றம் | **செய்யுள்** | - பண்டைய கவிதைகள் |
| **தர்க்கம்** | - விவாதம் | | |

### பயிற்சி

1. தமிழில் முதல் முதலில் புதுக்கவிதைகள் எழுதியவர் யார்?
2. வசனத்திற்கும் கவிதைக்குமுள்ள வேறுபாடுகள் எவை?
3. புதுக்கவிதைக்கும் மரபுக்கவிதைக்கும் இடையிலுள்ள வேறுபாடுகள் யாவை?

### மொழித்தேர்ச்சிக்கான செயற்பாடுகள்

*1. நீர் வாசித்து இரசித்த ஒரு புதுக்கவிதையின் உள்ளடக்கம், மொழியாட்சி, வர்ணனை, ஓசைநயம், கற்பனை, அணிகள், நயந்த பகுதிகள் தொடர்பாக உமது நண்பருக்கு எடுத்துக் கூறுக.*

*2. உமது உள்ளத்தை தொட்ட உணர்வு அல்லது சம்பவம் தொடர்பாக ஒரு கவிதையை எழுதுக.*

*3. புதுக்கவிதை வாசிக்கும் நுட்பங்களை அறிந்து உமது இலக்கிய மன்றத்தில் 'கவிதா நிகழ்வு' நிகழ்ச்சி ஒன்றை நண்பர்களுடன் இணைந்து மேடையேற்றவும்.*



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## அழைப்பிதழ்

வீட்டில், நிறுவனங்களில் நடைபெறும் மங்களகரமான நிகழ்வுகளுக்கு நண்பர்களை, உறவினர்களை, ஆர்வலர்களை, நலன்விரும்பிகளை அழைக்கும் வகையில் எழுதப்படுவன இவ்வகையில் அடங்கும். அழைப்பிதழ்கள் தற்காலத்தில் அச்சிட்டே அனுப்புவதே பழக்கமாக உள்ளது. கடிதத்தினூடாக அழைப்பது இன்றைய வழக்கத்தில் இல்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆயினும் ஆரம்பகாலங்களில் அழைப்பிதழ்களை கடிதத்தினூடாக அனுப்புவதே வழக்கமாக இருந்தது.

### அழைப்பிதழ் வகைகள்

**குடும்பம் சார்**

- திருமண அழைப்பிதழ்
- பிறந்த நாள் அழைப்பிதழ்
- புதுமனை புகு விழா அழைப்பிதழ்

**நிறுவனம் சார்**

1. கலை இலக்கியமன்ற அழைப்பிதழ்கள்
   - பாரதி விழா
   - நூல் ஆய்வரங்கு
   - நாடக விழா
   - இசை விழா
2. திறப்பு விழா அழைப்பிதழ்கள்
3. விளையாட்டுப்போட்டி அழைப்பிதழ்கள்
4. சமூக மன்றங்களின் அழைப்பிதழ்கள்






### அழைப்பிதழின் அம்சங்கள்

1. கவரக்கூடியதாக வடிவமைத்தல்
2. தலைப்பு - (என்ன நிகழ்வு என்பதை காட்டுதல்)
3. திகதி
4. நேரம்
5. இடம்
6. சுருங்கச் சொல்லி விரிந்த பொருள் தருவதாய் அமைந்துள்ளது.
7. முகவரிதொலைபேசி இல.... - (அனுப்புபவரின்)
8. விளிப்பு

இவ் அம்சங்களை அழைப்பிதழ்கள் கட்டாயம் கொண்டிருக்கும். இவை வடிவமைத்தலுக்கு ஏற்ப மாறுபட்டு வரலாம்.

*விளிப்புக்குரிய குறிப்புகள்*

அழைப்புகள் விடுக்கும்போது அழைக்கப்படுபவரின் பதவி, சமூக அந்தஸ்து ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு உரிய மரியாதைப் பதங்களைப் பயன்படுத்தி அழைப்பு விடுத்தல் மிகவும் முக்கியமானது. உதாரணமாக

| | | |
|---|---|---|
| ஜனாதிபதி | - | அதி உத்தம அல்லது மேதகு |
| அமைச்சர்கள் | - | மாண்புமிகு |
| பௌத்தபிக்குகள் | - | அதிசங்கைக்குரிய / சங்கைக்குரிய |
| கிறிஸ்தவ மதத்தலைவர்கள் | - | அருட்சகோதரர்/அருட்சகோதரி/ அருட்தந்தை/வணக்கத்திற்குரிய பிதா/ அதிவணக்கத்துக்குரிய ஆயர்/ பேராயர் |
| இஸ்லாமிய மதத்தலைவர்கள் | - | மௌலவி, உலமா |
| இந்துசமயத்தலைவர்கள் | - | சுவாமிகள் |
| ஏனையோர் | - | அன்புடையீர் |

குறிப்பு :- அழைப்பிதழ் எழுதுவது இன்று ஒரு கலையாகவே மதிக்கப்படுகிறது பலரையும் கவரும் வகையில் நீங்கள் வடிவமைத்துப் பழகுவது அவசியம். வடிவமைத்தல் அழைப்பிதழில் சிறப்பிடம் பெறும்.

### பயிற்சி

1. மாதிரி அழைப்பிதழ்களை மரபு ரீதியாகவும், நவீன ரீதியாகவும் தயாரிக்குக.
2. உங்கள் பாடசாலையில் நடைபெறும் கலைவிழா ஒன்றுக்கான அழைப்பிதழ் ஒன்றைத் தயாரிக்குக.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## பிறமொழிச்சொற்கள்

### வடசொல்

சகம்
சடம்
சலம்
பிரசை
பொக்கிசம்
புருசன்
சுதேசி
சுவர்க்கம்
இதயம்
மகிமை
ஆயுதம்
கல்யாணம்
அட்சரம்
சேமம்
பிச்சை
பட்சி
சாட்சி
அரங்கம்

### போர்த்துக்கேயர்

பறங்கிக்காய்
அலுமாரி
மேசை
சாவி
புனல்
வராந்தா
ஆயா,
அன்னாசி,
கோப்பை
யன்னல்
பிஸ்கோத்து
கொறடா
ஏலம்
வாத்து
பேனா
பாண்

### ஒல்லாந்து

கக்கூஸ்
துட்டு
உலாந்தா
கோப்பு

### பாரசீகம்

திவான்
நமாஸ்
முகரி
லங்கர்
ரல்தா
கானா

## ஆங்கில மொழிச்சொற்கள்

| | | |
|---|---|---|
| அந்தர் | இலத்திரன் | காபன் |
| சோடியம் | பஃறீரியா | அம்பர் |
| வைரசு | கலண்டர் | இஞ்சினியர் |
| ஹோட்டல் | கோப்பி | கம்பனி |
| சீமெந்து | பொலிஸ் | வோட்டு |

## மூன்றாம் வேற்றுமை

*உருபுகள், 'ஆல்', 'ஆன்', 'ஒடு', 'ஓடு'*

***பின்வரும் வாக்கியங்களை அவதானிப்போம்.***

*கத்தியால் வெட்டினான் - கருவி*

*கண்ணன் பாட்டு பாரதியால் பாடப்பட்டது - கருத்தா*

இங்கு **'ஆல்'** எனும் வேற்றுமை உருபு கருவி (கத்தி), கருத்தா (பாரதி) ஆகிய பொருள்களில் வந்துள்ளன.

ஒரு வாக்கியத்தில் ஒரு பெயர்ச்சொல் வினை நிகழ்வுக்குரிய கருவியாக அல்லது கருத்தாப் பொருளில் செயற்படுவதை **'ஆல்'** வேற்றுமை சுட்டும்.

**'ஆல்'** உருபு கருவி, கருத்தாப் பொருளில் மட்டுமன்றி வேறு சில பொருள்களிலும் வருகின்றது என மொழி ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

**பின்வரும் வாக்கியங்களைக் கவனிப்போம்.**

*உழைப்பால் உயர்ந்தவன்.*
*கவலையால் வாடினான்.*
*நோயினால் இறந்தான்.*
*மகிழ்ச்சியால் துள்ளிக்குதித்தான்.*

இவ்வாக்கியங்களில் **உழைப்பு, கவலை, நோய், மகிழ்ச்சி** எனும் பெயர்ச்சொற்கள் **'ஆல்'** உருபு ஏற்று உயர்தல், வாடுதல், இறத்தல், குதித்தல் என்ற வினைகளுக்கான காரணத்தை உணர்த்துகின்றன.

எனவே,

**'ஆல்' உருபு காரணப் பொருளில் வந்துள்ளது.**

**பின்வரும் வாக்கியங்களைக் கவனிப்போம்.**

உழுந்து மாவால் செய்த தோசை.
பலகையால் செய்த மேசை.
தங்கத்தால் செய்த காப்பு.

இவ்வாக்கியங்களில் **தோசை, மேசை, காப்பு** என்பன செய்வதற்கு மூலப்பொருள்களாக உழுந்து, பலகை, தங்கம் என்பன இடம்பெறுகின்றன.

எனவே

*'ஆல்' உருபு மூலப்பொருளில் வந்துள்ளது.*

*'ஆன்' வேற்றுமை உருபு இன்றைய வழக்கில் பயன்படுத்தப்படுவதில்லை.*

பின்வரும் வாக்கியங்களைக் கவனிப்போம்.

நண்பனோடு சென்றான்.

ஆசிரியையோடு கதைத்தான்.

இவ்வாக்கியங்களில் **நண்பன், ஆசிரியை** ஆகிய பெயர்ச்சொற்கள் சென்றான், கதைத்தான் என்ற வினை நிகழ்வுக்கு உள்ளாகியிருப்பதை அவதானித்திருப்பீர்கள்.

இதனையே உடன்நிகழ்ச்சி வேற்றுமை என்போம்.

**'ஓடு'** உருபு உடன்நிகழ்ச்சிப் பொருளில் மட்டுமன்றி, வாக்கியத்தில் வேறுபொருள்களிலும் வருகின்றது என மொழி ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

அவை

- *அடைமொழிப்பொருள்*

அன்போடு பேசினார்.

மகிழ்ச்சியோடு பாடினார்.

கோபத்தோடு பார்த்தார்.

பசியோடு இருந்தார்.

மேலே உள்ள வாக்கியங்களில் **'ஓடு'** உருபு ஏற்ற பெயர்கள் வினைக்கு அடைமொழியாகச் செயற்படுவதால் இதனை அடைமொழிப்பொருள் எனலாம்.

- *கலப்புறு பொருள்*

பாலோடு தண்ணீர் கலந்தான்.

பூவோடு நாரும் மணம் வீசும்.

மேலே உள்ள வாக்கியங்களில் **'ஓடு'** உருபு ஏற்ற பெயர்கள் பிறிதொன்றுடன் கலப்புறுவது உணர்த்தப்படுவதால் இவற்றைக் கலப்புறுபொருள் எனலாம்.

- *கூட்டல் அல்லது சேர்த்தல் பொருள்*

ஐந்தோடு ஐந்தைக் கூட்டினால் பத்து.

இன்றோடு பத்து நாளாகிறது.

பாலோடு தேனை சேர்த்தால் சுவை கூடும்.

மேலே உள்ள வாக்கியங்களில் ஒன்றொடு பிறிதொன்றைக் கூட்டுதல் சேர்த்தல் அல்லது இணைத்தல் என்ற பொருளில் **'ஓடு'** உருபு பயன்படுகின்றது.

- *ஓர் இடத்தில் தொடர்ந்திருத்தல்*

ஆசிரியர் இடம் மாற்றம் பெற்று ஊரோடு சென்று விட்டார்.

ஓய்வு பெற்ற பின் ஆசிரியர் வீட்டோடு இருக்கிறார்.

நோயாளியான பின் அவர் வாழ்க்கை கட்டிலோடு கழிகிறது.

மேலே உள்ள வாக்கியங்களில் **'ஓடு'** உருபு ஏற்ற ஊர், வீடு, கட்டில் ஆகிய சொற்கள் ஒருவர் அந்த இடத்திலேயே தரித்திருத்தல் என்ற பொருளைத் தருகின்றன.

- *வரையறைப்பொருள்*

அடுத்த மாதத்தோடு நான் வேலையிலிருந்து ஓய்வு பெறுகிறேன்.

இவ்வளவோடு நிறுத்திக் கொள்கிறேன்.

ஐந்து இடியப்பத்தோடு காலை உணவு முடிந்தது.

மேலே உள்ள வாக்கியங்களில் **'ஓடு'** உருபு ஏற்ற பெயர்கள் வரையறைப்பொருளைத் தருகின்றன.

- *வினையடை ஆக்கி*

மக்களோடு மக்களாக

இரவோடு இரவாக

காற்றோடு காற்றாக

மேற்காட்டிய அடுக்கு வினையடைகளில் ஒரே பெயர் இரட்டித்து வருகின்றது. அவ்வாறு வரும்போது முதற்பெயருடன் 'ஓடு' உருபு இணைந்து வந்து வெவ்வேறு வினை அடைப்பொருளைத் தருகின்றது. இங்கு 'ஓடு' உருபு வினையடை ஆக்கியாகத் தொழில்படுகின்றது எனலாம்.

**'ஓடு' உருபு இன்று நடைமுறை வழக்கில் கையாளப்படுவதில்லை.**

'ஆல்' உருபுக்குப் பதிலாக கொண்டு என்ற சொல்லுருபு பயன்படுத்தப்படுகிறது.

***உ-ம் வாள் கொண்டு வெட்டினான்.***

'ஓடு' உருபுக்குப் பதிலாக உடன் என்ற சொல்லுருபு பயன்படுத்தப்படுகிறது.

***உ-ம் ஆசிரியருடன் மாணவன் சென்றான்.***

## நான்காம் வேற்றுமை

### உருபு - 'கு'

இவ்வுருபுக்கு - **க்கு, அக்கு, உக்கு** ஆகிய மாற்று வடிவங்கள் உள்ளன.

உ-ம்

| | | |
|---|---|---|
| பூனைக்கு | - | பூனை + க்கு |
| எனக்கு | - | என் + அக்கு |
| அப்பாவுக்கு | - | அப்பா + உக்கு |



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

*பின்வரும் வாக்கியங்களை அவதானிப்போம்.*

| | | |
|---|---|---|
| நண்பனுக்குப் பணம் கொடுத்தான். | - | கொடை |
| எலிக்குப்பகை பூனை. | - | பகை |
| காந்தனுக்கு நண்பன் தீபன். | - | நட்பு |
| கற்றவனுக்கு உரியது பணிவு. | - | தகுதி |
| காப்புக்கு தங்கம் உருக்கினான். | - | முதற்காரணம் |
| கூலிக்கு வேலை செய்தான். | - | நிமித்தக்காரணம் |
| கந்தனுக்கு மகன் சித்தன். | - | உறவு |

வாக்கியங்கள் உணர்த்தும் பொருளையும் அவதானித்திருப்பீர்கள்.

மேலே குறிப்பிட்ட பொருள்களில் மட்டுமன்றி வேறு பல பொருள்களில் 'கு' உருபு வருகின்றது என மொழி ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

### எல்லைப்பொருள்

இலங்கைக்கு வடக்கே இந்தியா இருக்கிறது.

நாய் வீட்டுக்கு முன்னே இருக்கிறது.

ஓர் இடம் நோக்கி நகர்தல்

தம்பி வீட்டுக்கு ஓடினான்.

நான் கண்டிக்குப் போகிறேன்.

### அனுபவப்பேறு

அவருக்கு மருத்துவத்தில் அனுபவம் உண்டு.

கண்ணனுக்கு ஆங்கிலம் பேசமுடியும்.

### காலக்குறிப்பு

ஆசிரியர் மூன்று மணிக்கு வரச்சொன்னார்.

எத்தனை நாட்களுக்கு இங்கு இருப்பீர்கள்.

### வீதம், விகிதாசாரம்

இலங்கையில் நூற்றுக்கு எண்பது பேர் எழுத்தறிவு பெற்றுள்ளனர்.

பத்து பேருக்கு மூன்று பேர்தான் வந்துள்ளனர்.

## வினையடை ஆக்கம்

வீட்டுக்குவீடு

ஊருக்கு ஊர்

ஆளுக்கு ஆள்

நாட்டுக்கு நாடு

நான்காம் வேற்றுமை உருபுக்குப் பதிலாக பொருட்டு, நிமித்தம், ஆக முதலிய சொல்லுருபுகள் சிறுபான்மை பெயர்ச்சொற்களோடு இணைந்து வருகின்றன.

பொருட்டு - ஜனாதிபதி வருகையின் **பொருட்டு** பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

நிமித்தம் - ஒரு முக்கிய அலுவலின் **நிமித்தம்** அவர் வெளியூர் போயிருக்கிறார்.

ஆக - அம்மா குழந்தைக்**காகப்** பால் வாங்கினார்.

நான்காம் வேற்றுமையின் சிறப்புப் பொருள் **கொடை** என்பதால் இதனை கொடைப்பொருள் வேற்றுமை என்பர் மொழியியலாளர்.

### பயிற்சி

பின்வரும் வாக்கியங்களில் இடம் பெறும் வேற்றுமை உருபையும், பொருளையும், சொல்லுருபையும் இனங்கண்டு எழுதுக.

1. சிற்பியால் செதுக்கப்பட்ட சிலை.
2. உளியால் செதுக்கினான்.
3. நோயால் இறந்தான்.
4. வெள்ளியால் செய்த கொலுசு.
5. ஆசிரியரோடு பேசினான்.
6. நண்பனுடன் சென்றான்.
7. பொருளோடு பொருளாக போய் சேர்ந்தது.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

# 09

# மொழியும் மொழிவளர்ச்சியும்





மனிதன் பயன்படுத்தும் தொடர்பாடல் ஊடகங்களுள் மொழியே மிகவும் பிரதான மானது. நமது அபிப்பிராயங்கள், உணர்வுகள், தகவல்கள் முதலியவற்றைப் பிறர் இலகுவில் அறிந்து கொள்ள அல்லது புரிந்து கொள்ளச் செய்வதே தொடர்பாடல் (communication) என அகராதிகள் தொடர்பாடலுக்கு வரைவிலக்கணம் கூறும். சைகைகள், அடையாளங்கள், நிறங்கள், பேச்சு, எழுத்து போன்ற பலவகையான ஊடகங்கள் தொடர்பாடலுக்குப் பயன்படுத்துகின்றன. ஒரு பரந்த பொருளில் இவையெல்லாவற்றையும் நாம் மொழி என்று கூறலாம். எனினும் இங்கு பேச்சையும் எழுத்தையுமே மொழி என்ற சொல்லால் நாம் சுட்டுகின்றோம்.

மொழி வளர்ச்சி என்பது ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் தொடர்பாடல் தேவைகளுக்கு அச்சமூகத்தின் மொழி பெறும் இணக்கப்பாட்டைக் குறிக்கும். காலந்தோறும் ஏற்படும் சமூக வளர்ச்சி அச்சமூகத்தின் தொடர்பாடல் தேவையை அதிகரிக்கின்றது. கபிலரும், பரணரும் வாழ்ந்த சங்ககால மக்களின் தொடர்பாடல் தேவைகளும், கம்பரும் ஒட்டக்கூத்தரும் வாழ்ந்த காலத்து மக்களின் தொடர்பாடல் தேவைகளும் மிகவும் வேறுபட்டவை அவர்கள் பரிமாறிக் கொண்டவற்றை விட மிகவும் வேறுபட்ட தகவல்களை நாம் இன்று பரிமாறிக்கொள்கின்றோம். அதற்கு ஏற்ப நம் காலத்து மொழியும் வளர்ச்சியடைந்துள்ளது. நாம் இன்று பரிமாறிக்கொள்ளும் தகவல்களை அவர்கள் காலத்து மொழியில் நம்மால் தொடர்பாடல் கொள்ள இயலாது. உதாரணமாக, பின்வரும் வாக்கியங்களை கூறும் தகவல்களை கபிலர் அல்லது கம்பர் பயன்படுத்திய தமிழில் அல்லது பரிமேலழகரும் நச்சினார்க்கினியரும் பயன்படுத்திய தமிழில் தொடர்பாடல் செய்வது முற்றிலும் சாத்தியமல்ல.

01. தனியார் மருத்துவமனையில் அவசர சத்திர சிகிச்சை நிலையம் ஒன்றை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

02. தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்வு கோரி ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர்.






இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

03. குடித்தொகையைக் கட்டுப்படுத்துவதற்குக் குடும்பக் கட்டுப்பாட்டு முறையையே வளர்முக நாடுகள் அனைத்தும் இன்று கடைபிடிக்கின்றன.

04. அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி சார்ந்த நமது சமுதாயம் அந்த வளர்ச்சியின் அனைத்துக் கூறுகளையும் அறிந்து கொள்ள முற்படுகின்றது.

05. நான் புதிதாக வாங்கிய கார் ஒரு லீட்டர் பெற்றோலில் பத்து கிலோமீற்றர் ஓடும்.



இன்றைய நமது சமூக வாழ்வின் பல்வேறு அம்சங்களைப் பிரதிபலித்து நிற்கும் இத்தகவல்களும், இத்தகவல்களை வெளிப்படுத்தும் மொழியும் முற்றிலும் புதியவை நமது சமூகத்தினதும், மொழியினதும் ஒரு புதிய - மிகவும் பிந்திய வளர்ச்சிக்கட்டத்தை குறித்து நிற்பவை. அவ்வகையில் கபிலரோ, கம்பரோ, நச்சினார்க்கினியரோ பயன்படுத்திய தமிழில் நாம் இவற்றை மொழிபெயர்த்துக் கூறுதல் இயலாது. காலம்தோறும் அவ்வக்காலத்தின் தேவைகளுக்கேற்ப மொழி வளர்ச்சி அடைகின்றது என்பதையே இது காட்டுகின்றது.

மொழி வளர்ச்சி என்பது புதிய சொற்களின் பெருக்கத்தை மட்டுமன்றி ஒலியமைப்பு (Phonology) சொல்லமைப்பு (Morphology) வாக்கிய அமைப்பு (Syntex) முதலிய மொழியின் அனைத்து நிலைகளிலும் ஏற்படும் மாற்றங்களையும் உள்ளடக்குகின்றது.

மாறாத எதுவும் வளர்ச்சியடைவதில்லை. மொழி இதற்கு விலக்கு அல்ல. வாழும் மொழிகள் எல்லாம் இடையறாது மாற்றத்துக்கு உள்ளாகின்றன. அதனால் தொடர்ந்து வளர்ச்சியடைகின்றன. மாற்றமும் வளர்ச்சியும் ஒரு நிகழ்ச்சியின் இரு அம்சங்களாகும். மொழி ஒரு சமூக சாதனம் என்ற வகையில் சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களும் வளாச்சிகளுமே மொழி மாற்றத்தையும் வளர்ச்சியையும் இறுதியாகத் தீர்மானிக்கின்றன.

எனினும் முற்காலத்தில் மொழி வளர்ச்சி பெரிதும் பிரக்ஞை பூர்வமான ஒரு நிகழ்வாக இருக்கவில்லை. அதனாலேயே மொழி வளர்ச்சி பற்றிய திட்டங்களும் கொள்கைகளும் பழைய மொழி நூல்களில் காணப்படவில்லை. ஆனால் இன்றைய கைத்தொழில் நாகரிக யுகத்தில் பிற துறைகள் போல மொழி வளர்ச்சியும் பிரக்ஞை பூர்வமான ஒரு நிகழ்வாக உள்ளது. மொழி வளர்ச்சி பற்றிய பல்வேறு கொள்கைகளும், திட்டங்களும், செய்முறைகளும் பின்பற்றப்படுகின்றன.





இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

கருத்து முரண்பாடுகளும், மோதல்களும் நிகழ்கின்றன. மொழியை நவீனப்படுத்துவதே இவற்றின் குறிக்கோள் ஆகும். மொழியை நவீனப் படுத்துதல் என்பது தற்கால சமூகத்தின் நவீன தொடர்பாடல் தேவைகளுக்கேற்ப மொழியை வளர்த்தல் அல்லது இணக்கப்படுத்தலேயாகும். அவ்வகையில் தற்காலச் சூழலில் மொழி வளர்ச்சி, நவீனத்துவம் என்பன ஒரு பொருளையே குறித்து நிற்கின்றன எனலாம்.

தமிழில் நவீனத்துவம் பற்றி கருணாகரன் (1978), அண்ணாமலை (1980), சண்முகம் (1985) ஆகியோர் விரிவாக எழுதியுள்ளனர். இக்காலத் தேவைகளையெல்லாம் வெளிப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் சொல்வளத்தைப் பெருக்குதல், பழைய வழக்குகளைத் தவிர்த்து பொது வழக்கில் உள்ள சொற்களையே பெரிதும் பயன்படுத்துதல், சொற்களை இலகுவில் அடையாளம் கண்டு பொருள் விளங்கத்தக்க வகையில் சந்தி பிரித்து எழுதுதல், பழைய இலக்கண விதிகளுக்குப் புறம்பாக வளர்ச்சியடைந்துள்ள உருபனியல் வாக்கியவியல் அம்சங்களுக்கு இடமளித்தல், பேச்சு மொழிக்கும், எழுத்து மொழிக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைத்தல், பன்முகப்பட்ட மொழிநடையை வளர்த்தல், நவீன தொடர்பாடல் பொறிமுறைகளுக்கு ஏற்றவகையில் எழுத்துச் சீர்திருத்தத்தை மேற்கொள்ளுதல் போன்றவற்றை நவீனத்துவத்தின் அம்சங்களாக இவர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்.

*பேராசிரியர். எம். ஏ. நு.்.மான்*
*இலக்கணத்தூய்மையும் மொழித்தூய்மையும்*
*(தொடர்பாடல் மொழி நவீனத்துவம்)*

**அரும்பத விளக்கம்**

| | | |
|---|---|---|
| ஒலியமைப்பு | : | Phonology |
| சொல்லமைப்பு | : | Morphology |
| வாக்கியமைப்பு | : | Syntex |

**பயிற்சி**

1. மொழியைத் தவிர தொடர்பாடலுக்காக மனிதன் பயன்படுத்தும் சாதனங்கள் எவை?
2. பழங்காலத் தமிழ் வழக்கு தற்காலத்திற்குப் பொருத்தமற்றது என்பதை கட்டுரை யாளர் எவ்வாறு எடுத்துக்காட்டுகிறார்?
3. சமூகமாற்றத்திற்கேற்ப மொழிவழக்கு மாறுகின்றது என்பதற்கான சான்றுகளைத் தருக.

**மொழித்தேர்ச்சிக்கான செயற்பாடுகள்**

*1. மொழி தொடர்பாக தமது கருத்தை வலியுறுக்க கட்டுரையாசிரியர் கையாண்ட உத்திகள் எவையென விளக்கிக் கூறுக.*

*2. கட்டுரையில் அடங்கியுள்ள கருத்துக்களைத் தொகுத்து பந்தியாக எழுதுக.*

*3. 'மொழியும் சமுதாயமும்' எனும் தலைப்பில் மாணவர் மன்றத்தில் உரையாற்றுக..*



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## விளம்பரம்

நீங்கள் பலவிதமான விளம்பரங்களைப் பார்த்திருப்பீர்கள், கேட்டிருப்பீர்கள் விளம்பரம் இல்லாத துறையே இன்று இல்லை என்று கூறலாம். எங்கும் எதிலும் விளம்பரத்தைக் காணலாம் என்னும் அளவிற்கு விளம்பரம் விரிவடைந்துள்ளது. விளம்பரம் செய்வது ஒரு சுவையாகும் இத்துடன் விளம்பரம் செய்வதற்குப் பல உத்திகளும் கையாளப்படுகின்றன.

விளம்பரம் என்பது இன்று அதிக தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுக்கும் ஒரு தனித்துறையாக வளர்ந்துள்ளது. மேலும் இன்று அது ஒரு தனி கற்கை நெறியாகவும் வளர்ச்சிகண்டுள்ளது. எனவே. விளம்பரம் பற்றியும், அதன் அமைப்புப் பற்றியும் நீங்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.







## விளம்பரம் செய்வதற்கான காரணங்கள்.




01) விற்பனையைப்பெருக்குதல்.
02) பாவனையைப்பெருக்குதல்.
03) பொருட்களை அறிமுகப்படுத்தல்.
04) பொருட்களில் நாட்டத்தை ஏற்படுத்தல்.
05) தகவல்கள் சிலவற்றை தெரிவித்தல்.

## விளம்பரத்தின் பண்புகள்

01) சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல்.
02) கவர்ச்சியான வசனங்கள், சொற்றொடர்கள்.
03) கண்ணைக் கவரும் படங்கள்.
04) சுவையான தகவல்கள்.
05) மீண்டும் மீண்டும் அழுத்திச்சொல்லுதல்.
06) நுகர்வோர் நம்பிக்கையை வளர்த்தல்.

**ஒப்படை**

விளம்பரங்களை எழுதியும், தயாரித்தும் காட்சிப்படுத்துக.

## பெயராகவும், வினையாகவும் வழங்கும் சொற்கள்.

| சொல் | பெயர் | வினை |
|---|---|---|
| அகல் | விளக்குத்தகழி | அகல்,நீங்கு |
| அடி | பாதம் | அடி |
| அடை | வெற்றிலை | சேருதல் |
| அணி | ஆபரணம் | அலங்கரி |
| அணை | மெத்தை | தழுவு |
| அமர் | போர் | உட்காரு |
| அமை | மூங்கில் | அடங்கு |
| அரி | சிங்கம் | அரி-(வெட்டு) |
| அரை | கிடைப்பாகம்(பாதி) | அரை |
| அலை | கடலலை | அலை-(திரிதல்) |
| அவி | தேவருணவு | அவி-(பிட்டவித்தல்) |
| ஆடு | ஒரு பிராணி | ஆடு-(நடனமாடுதல்) |
| ஆள் | மனிதன் / நபர் | அரசாட்சி செய் |
| ஆறு | நதி, வழி | இளைப்பாறு |
| இடி | இடி | இடித்தலைச்செய் |
| இரை | உணவு | ஒலிசெய் |
| உடு | நட்சத்திரம் | உடுத்து(தரி) |
| உடை | ஆடை | சிதை, அழி |
| உரை | சொற்பொருள் | கூறு |
| ஊர் | கிராமம் | ஊர்ந்துசெல் |
| எண் | இலக்கம் | நினை |
| எரி | நெருப்பு | எரித்தலைச்செய் |
| ஏறு | இடபம்/ஆண்சிங்கம் | ஏறு-(ஏணியிலேறு) |
| ஒளி | பிரகாசம் | மறைந்திரு |
| ஓடு | கூரைஓடு | ஓடு-(வேகமாகஓடு) |
| கரை | ஓரம் | கரைத்தல் |



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

| | | |
|---|---|---|
| கலை | ஆண்மான் | பிரி |
| குடி | குடும்பம் | பருகு |
| சூடு | வெப்பம் | சூடு(மாலைசூடு) |
| செல் | கறையான் | போ |
| சோதி | பிரகாசம் | தேர்வுசெய் |
| திரி | (விளக்குத்)திரி | சுற்றித்திரி |
| தை | மாதம் | தைத்தல் |
| நிரை | பசுக்கூட்டம் | வரிசை |
| நொடி | நேரத்தைக்குறித்தல் | நொடித்தல் |
| பதி | தலைவன் | பதியம்பண்ணு |
| பிணை | பெண்மான் | கட்டு |
| பொறி | கருவி | பொறித்தலைச்செய் |
| மதி | சந்திரன் | மதித்தலைச்செய் |
| மாறு | விளக்குமாறு | வேறுபாடு,நீங்கு |
| முடி | கீரிடம் | முடிவுசெய் |
| மெழுகு | மெழுகு | மெழுகிடு |

### பயிற்சி

01) பெயராகவும், வினையாகவும் வரக்கூடிய சொற்களை தெரிந்து பொருள் விளங்க வாக்கியங்கள் அமைப்போம்.

02) பெயராகவும், வினையாகவும் வரக்கூடிய சொற்களை தொகுப்போம்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## ஐந்தாம் வேற்றுமை

உருபு- 'இல்', 'இன்'

***கீழ்வரும் வாக்கியங்களையும் அவை உணர்த்தும் பொருளையும் நோக்குவோம்.***

| | |
|---|---|
| மலையில் வீழருவி | - நீங்கல் பொருள் |
| என்னில் நல்லவன் | - ஒப்புப் பொருள் |
| இலங்கையின் வடக்கில் இந்தியா இருக்கிறது | - எல்லைப் பொருள் |
| கல்வியில் பெரியன் கம்பன் | - ஏதுப் பொருள் |

'இல்', 'இன்' வேற்றுமை உருபுகள் நீங்கற் பொருள், ஒப்புப் பொருள் எல்லைப் பொருள், ஏதுப் பொருள் என்பவற்றை உணர்த்தி வருவதை அவதானித்திருப்பீர்கள்.

பழந்தமிழில் 'இன்' உருபு நீங்கல் பொருளை உணர்த்தியது.

உ-ம் - நிலையின் இழிந்தக் கடை.

நீங்கல் என்பது ஓரிடத்திலிருந்து விலகுவதைக் குறிக்கும். இக்காலத்தமிழில் 'இன்' உருபு நீங்கல் பொருளில் வருவதில்லை.

'இல்' - இருந்து என்ற சொல்லுருபே இப்பொருளைத் தருகிறது.

*மரத்திலிருந்து பழம் விழுந்தது.*

*தூக்கத்திலிருந்து விழித்தேன்.*

*மாமா ஊரிலிருந்து வந்தார்.*

பொய்யிலிருந்து உண்மையை வேறுபடுத்த வேண்டும்.

அங்கு, இங்கு, எங்கு, மேல், கீழ், முதலிய பெயர்ச் சொற்களுடன் - இருந்து என்ற சொல்லுருபு இணைந்தும் நீங்கல் பொருள் உணர்த்துகின்றது.

*அங்கிருந்து*

*இங்கிருந்து*

*எங்கிருந்து*

*மேலிருந்து*

*கீழிருந்து*

உயர்த்திணைப் பெயர்களுடன் இடமிருந்து என்ற சொல்லுருபு இணைந்து வருகின்றது.

*அப்பாவிடமிருந்து கடிதம் வந்தது.*

*அம்மாவிடமிருந்து பணம் வந்தது.*



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

உயிருள்ள அஃறிணைப் பெயர்களுடன் 'இடமிருந்து' உருபு இணைந்து வருகின்றது.

*பாம்பிடமிருந்து தேரை தப்பியது.*

*பூனையிடமிருந்து புறாவைக் காப்பாற்றினேன்.*

எனவே,

***'இன்' என்ற உருபுக்குப் பதிலாக 'இல்' - 'இருந்து', 'இடமிருந்து' என்ற சொல்லுருபுகள் தற்காலத்தில் நீங்கல் பொருளை உணர்த்த வருகின்றது.***

பழந்தமிழில் - 'இல்' உருபு ஒப்புப் பொருளில் வந்துள்ளது.

உ-ம் - ஊழிற் பெரு வலி யாவுள.

***இதில் 'இல்' உருபு ஒப்புப் பொருளைத் தருகின்றது.***

***இக்காலத்தமிழில் 'ஐ' உருபு ஏற்ற பெயரை அடுத்து***

*விட*

*காட்டிலும்*

*பார்க்கிலும்*

போன்ற இடைச்சொற்கள் இணைந்தே ஒப்புப் பொருள் தருகின்றன.

*மாலனை விட தீபா கெட்டிக்காரி.*

*கோழியைப் பார்க்கிலும் சேவல் அழகானது.*

*கவிதையைக் காட்டிலும் நாவலை பலரும் விரும்புகின்றனர்.*

இக்காலத்தமிழில் ஒப்புப் பொருள் - இல் உருபினால் உணர்த்தப் படுவதில்லை.

வடக்கு, கிழக்கு முதலிய திசைப் பெயர்கள் முன், பின் மேல், கீழ், உள்ளே, வெளியே முதலிய சொற்கள் இன் உருபு ஏற்ற பெயரை அடுத்து வந்து எல்லைப் பொருள் அல்லது இடக்குறிப்பை உணர்த்துகின்றன.

*இலங்கையின் வடக்கில் இந்தியா இருக்கிறது.*

*பாடசாலையின் முன்னே கோயில் உள்ளது.*

*மேசையின் மேல் புத்தகம் இருக்கின்றது.*

*வீட்டின் வெளியே தோட்டம் உள்ளது.*

'இன்' உருபுக்குப் பதிலாக 'கு' உருபும் பயன்படுகிறது.

ஒன்றின் உயர்வு அல்லது தாழ்வு போன்றவற்றுக்குக் காரணமாய் அமையும் பொருள் ஏதுப் பொருள் எனப்படுகின்றது.

பழந்தமிழில் 'இல்' உருபு ஏதுப் பொருளில் வந்துள்ளது.

உ-ம் கம்பனில் பெரியன் கம்பன்.

தற்காலத்தில் 'இல்' உருபுக்குப் பதிலாக 'ஆல்' உருபு (மூன்றாம் வேற்றுமை உருபு) ஏதுப் பொருளை உணர்த்துகின்றது. எனினும் கவிதைகளில் இல் உருபு ஏதுப்பொருளை உணர்த்த தற்காலத்தில் பயன்படுகின்றது.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## ஆறாம் வேற்றுமை

*உருபு - அது, ஆது, அ.*

ஆறாம் வேற்றுமையின் சிறப்பம்சம் இரண்டு பெயர்ச் சொற்களுக்கிடையே உள்ள உறவைச் சுட்டி நிற்றல் ஆகும்.

ஏனைய வேற்றுமைகள் பெயருக்கும் வினைக்கும் இடையிலான உறவைச் சுட்டி நிற்கின்றன என்பதை நாம் அறிவோம்.

பின்வரும் வாக்கியங்களை அவதானிப்போம்.

*தீபனது புத்தகம்.*

*தீபாவினது தந்தை.*

*நமது தேசம்.*

இவ் வாக்கியங்கள் உடைமைப் பொருளை உணர்த்துகின்றன என்பதை அவதானித்திருப்பீர்கள்.

மரபிலக்கண நூல்கள் இதனை கிழமைப் பொருள் (உடைமை) எனக்கூறும்.

மேலும் இதனை தற்கிழமைப் பொருள் பிறிதின் கிழமைப் பொருள் என இரண்டாக வகைப்படுத்தும்.

தற்கிழமை என்பது ஒன்றிலிருந்து பிரிக்க முடியாத அம்சங்களைக் கொண்டது.

உ-ம் எனது கை

இதனை ஐந்து வகையாக வகைப்படுத்துவர்.

| | |
|---|---|
| எனது கருமை<br>எனது வரவு | பண்புத்தற்கிழமை |
| கண்ணனது கை<br>மாலனது கண் | உறுப்புத்தற்கிழமை |
| மாணவரது தொகுதி<br>மனிதரது தொகுதி | ஒன்றன்கூட்டத்தற்கிழமை |
| பறவைகளது கூட்டம்<br>பசுக்களது கூட்டம் | பலவின்கூட்டத்தற்கிழமை |
| நெல்லினது பொரி<br>கோதுமையினது மா | திரிபின்ஆக்கத்தற்கிழமை |

பிறிதின் கிழமை என்பது ஒன்றிலிருந்து பிரிக்கக் கூடிய உடைமைப் பொருளைக் குறிக்கும். இதனை மூன்றாக வகைப்படுத்துவர்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

*கண்ணனது பசு - பொருள் பிறிதின்கிழமை*

*கண்ணனது ஊர் - இடப் பிறிதின்கிழமை*

*கண்ணனது நாள் - காலப் பிறிதின்கிழமை*

'அது', 'அ', ஆகிய உருபுகள் தற்கால வழக்கில் பயன்படுத்தப் படுவதில்லை

உடைய என்ற சொல்லுருபு பயன்படுத்தப்படுகின்றது.

*என்னுடைய கண்.*

*என்னுடைய வீடு.*

*கண்ணனுடைய தந்தை.*

'அது', 'உடைய' என்ற உருபுகளை ஏற்காமலே உடைமைப் பொருள் உணர்த்தப்படுகின்றது.

*என் புத்தகம்.*

*என் வீடு.*

*என் தந்தை.*

*நம் தேசம்.*

*எங்கள் பாடசாலை.*

'இன்' என்பது உடைமைப் பொருளை உணர்த்துகின்றது.

*மரத்தின் கிளை.*

*காற்றின் வேகம்.*

***ஆறாம் வேற்றுமை உடைமை வேற்றுமை என மொழி ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.***

## பயிற்சி

1. ஐந்தாம், ஆறாம் வேற்றுமை உருபுகள் எவை?
2. உடைமைப் பொருளை எத்தனை வகைகளாக பிரிக்கலாம் அவை எவை?
3. பின்வரும் வாக்கியங்களில் இடம் பெற்றுள்ள சொல்லுருபுகள் எவை?

அ) மரத்திலிருந்து விழுந்தான்.

ஆ) என்னுடைய ஆசிரியர்.

இ) செயற்கையை விட இயற்கை அழகானது.

ஈ) கம்பனைப்பார்க்கிலும் பாரதி சமூக பிரக்ஞையுடன் கவிதைகளை எழுதியுள்ளான்.

உ) கட்டுரையைக் காட்டிலும் கவிதையைப் பலரும் விரும்பி வாசிக்கின்றனர்.

# 10 நாடகத்தின் பிரதான அம்சங்கள்



மற்றைய கலைகளிலிருந்து நாடகத்தைப்பிரித்துக் காட்டுகின்ற அம்சம் நாடகம் ஒரு சிலர் முன்னே ஒருவர், இருவர் அல்லது பலர் ஒரு குறிப்பிட்ட சூழலில் ஏதோ ஒன்றினைச் ''செய்து காட்டுவது'' ''ஆற்றுவது'' அல்லது ''நிகழ்த்திக் காட்டுவதாகும். சுருங்கச் சொன்னால் நாடகம் கணப்பிரசன்னமாக இருக்கும். அதாவது ஆற்றப்படும் அந்தக் கணத்தில் அது நம்முன்னே பிரசன்னமாகவிருக்கும். நாம் அதனைப் பார்க்கிறோம். அது நம்முன்னே நிகழ்கின்றது.

இப்படிப் பார்க்கும் போதுதான் இதற்கும் இலக்கியம், ஓவியம், கட்டிடக்கலை, சிற்பம் போன்றவற்றுக்கும் உள்ள வேறுபாடு தெரியவரும். ஓவியத்தை எடுத்துக்கொண்டால் அல்லது சிற்பத்தை எடுத்துக் கொண்டால் அவற்றில் ஒரு குறிப்பிட்ட கணம் அங்கு நிரந்தரமாக ஆக்கித் தரப்படுகின்றது. இலக்கியமென்றால் என்ன? கட்புலக் கலைகளென்றால் என்ன? அவற்றில் ஒரு கணத்தை ''உறையச்'' செய்து அதனை நிரந்தரமாக்கித் தருகின்ற நிலையைக் காணலாம். ஆனால் இசையும் நாடகமும் அவ்வாறானவை அன்று. அவை ஆற்றுகையின் பொழுது கணத்துக்குக் கணம் மாறிக் கொண்டே இருக்கும். அவற்றை நாங்கள் கேட்டுக் கொண்டோ, அல்லது பார்த்துக் கொண்டோ இருக்கின்றபொழுது அவைமாறிக் கொண்டு போய்க்கொண்டு இருக்கும். ஒரு நாடகத்தைப் பார்க்கின்ற போதும் இதுவே நடை பெறுகின்றது. ஒரு நிகழ்கையின் தொடர்பு எம்முன்னே நடந்து கொண்டிருக்கிறது.



இசை என்பது ஆற்றுகையின் பொழுது கணத்துக்குக்கணம் தொடர்ந்து வருகின்ற குரல் வேறுபாடுகளுடன் ஒரு குறிப்பிட்டதனைத் திருப்பிக் கூறுவதாகவோ அல்லது குரல் வேறுபாடுகளைக் காட்டுவதாகவோ, அல்லது தாள வேறுபாடுகளைக் காட்டுவதாகவோ அமைந்து அது ''ஓடி'க் கொண்டேயிருக்கும்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

இதேபோல அரங்கும் நமது கண்முன்னே நிகழ்ந்துகொண்டு இருக்கின்றது. நடந்துகொண்டிருக்கின்ற விடயங்களை அது காட்டுகின்றது. நாங்கள் ஒரு அரங்கினைப் பார்க்கின்றபோது அங்கு காட்சிகளைக் காண்கின்றோம். மாறுகிற காட்சிகளைக் காண்கின்றோம். மாறுகின்ற ஒலிகளைக் கேட்கின்றோம். எங்களுடைய மனம் அந்தக் காட்சிகளையும் ஒலிகளையும் பதிவு செய்து கொள்கின்றது. இவை எல்லாமே ஒரு கணத்தினுள் இணைந்து கொள்கின்றன. குறிப்பிட்ட வேளையினுள் இணைந்து கொள்கின்றன. இதனாலேதான் அரங்கு என்பது இந்தக் கணத்தை நமக்கு பிரக்ஞை பூர்வமாகத் தருவதாக அமைகின்றது. அதாவது ''இப்பொழுது'' நடந்து கொண்டிருப்பதைப் பற்றிய (The "now") உணர்வினைத் தருகின்ற ஒவ்வொரு காட்சியும் ஒவ்வொரு செய்கையும் நடிகர்களால் அனுபவித்து வெளியிடப்பட்ட அதனைப் பார்த்துக் கொண்டு இருப்பவர்களும் தங்களுடைய அனுபவ நிலையில் நின்று அந்த ஆற்றுகையை உள்வாங்கிக் கொள்கின்றார்கள்; அதனைப் புரிந்து கொள்கிறார்கள்.

எனவே அரங்கு என்பது மிக முக்கியமானதொன்றாகும் அது மற்றைய கலைகளில் இருந்து வித்தியாசப்படுகின்றது.

நாடகத்துக்கும் அரங்குக்கும் இடையே வேறுபாடுண்டு.

''நாடகம்'' என்பது நிகழ்த்திக் காட்டப்படுகிற அந்த விடயம் பொருள் என்று கொண்டால், அரங்கு என்பது அது சம்பந்தப்பட்ட முழுவதையும் இணைத்துக்காட்டுவது. யார் காட்டுகிறார்கள், எவ்விடத்திலே காட்டப்படுகின்றது, எவ்வாறு காட்டப்படுகிறது, யார் முன்னே காட்டப்படுகிறது, எந்தச் சூழலில் காட்டப்படுகின்றது போன்ற எல்லாவற்றையும் அரங்கு உள்ளடக்கியுள்ளது. ஆங்கிலத்தில் இதற்கு ''தியேட்டர்'' (Theatre) என்கின்ற சொல்லைப் பயன்படுத்துகின்றார்கள். ''தியேட்ரோன்'' என்கின்ற கிரேக்கச் சொல்லடியாக வருவது இது ''தியேட்ரோன்'' என்றால் ''பார்க்கின்ற இடம்'' ஆகும்.

எனவே அரங்கு என்பது, குறியீடாக நாடகம் சம்பந்தப்பட்ட பலவற்றையும் எடுத்துக்கூறுகின்ற ஒரு பதமாக அமைகின்றது.

நாடகத்தில் ஒவ்வொரு காட்சியும் ஒவ்வொரு செய்கையும் அதனைச் சித்திரிப்பவராலே அநுபவமாக வெளிப்படுத்தப்படுகின்றது. அவை ஒவ்வொன்றும் பார்ப்போரின் அநுபவத்தினூடாக உள்வாங்கப்படுகின்றன. இதனாலேதான். நாடகக் கலையானது மற்றைய கலைகளைவிட விடய நோக்காக (objective - புறநிலையானது) உள்ளது என்று கூறப்படுகிறது. ஏனென்றால் இது வெறுமனே வெளி அநுபவத்தையோ உடல் அநுபவத்தையோ அல்லது தனியே உள்ள மனத்தின் அனுபவத்தையோ எடுத்துக் கூறாமல் ஒருவருடைய புற அனுபவங்களையும் அக அனுபவங்களையும் பேச்சின் மூலமும் செயல்கள் மூலமும் எடுத்துக் காட்டுகின்றது. அந்த வகையில் இது மற்றைய கலைகளைவிட ஒரு அளவிற்கு ''விடய நோக்கைக்'' கொண்டதாகும். வாழ்க்கையில் உள்ளது போல நாமும் ''சம்பந்தப்பட்டவர்களை பார்ப்பதன்'' மூலமும் ''கேட்பதன்'' மூலமுமே அவர்கள் பற்றி அறிந்து கொள்கின்றோம். இதனால் நாடகக்கலை ஏனைய கலைகளில் இருந்து வித்தியாசமானதாக அமைகின்றது.

அரங்கு பற்றிய மிக முக்கியமான அம்சங்களில் ஒன்று, அது பன்முகப் பட்டதொரு கலையாகும். இதனுடைய பூரணத்து வத்திற்கு பல்வேறு கலைஞர்கள் ஒன்று சேர்ந்து



ஒருங்கு நிலைநின்று உதவல் அவசியமாகும். நடிகர், நாடகாசிரியர், நெறியாளர், காட்சி விதானிப்பவர், ஆடையணிகளுக்குப் பொறுப்பாயிருப்பவர், ஒளியமைப்புக்குப் பொறுப்பாய் இருப்பவர் எனப்பலர் ஒருவரோடு ஒருவர் இணைந்து ஒருவர் செய்வதை மற்றவர் முனைப்புறுத்திக் காட்டுகின்ற வகையில் தொழிற்பட்டு நடக்கின்ற பொழுதுதான் நாடகம் என்கின்ற வடிவம் பூரணத்துவத்துடன் அதனுடைய பொலிவுடன் விளங்கும் இதனாலேயே நாங்கள் இதனையொரு ''கூட்டுக்கலை'' என்கின்றோம். இந்தக் கலையில் ஓவியம் உண்டு. நடனம் உண்டு, இசையுண்டு, இலக்கியமுண்டு. இவை எல்லாவற்றையும் சேர்த்து அதேவேளையில் தனியொரு கலை வடிவமாகவும் இது அமைகின்றது.

*கா. சிவத்தம்பி, சி. மௌனகுரு, சி. திலகநாதன்*
*அரங்கு ஓர் அறிமுகம் (சி. பற்குணம் நினைவுமலர்)*

**அரும்பத விளக்கம்**

**கணப்பிரசன்னமாக**- குறித்த நேரத்தில் வருதல்
**ஆற்றுகை** - நிகழ்ந்துகை
விடயநோக்கு - குறித்த பொருள் பற்றிய பார்வை
**உறைதல்** - தோய்தல்

## பயிற்சி

1. நாடகம் ஏன் ஒரு கூட்டுக்கலை என்று அழைக்கப்படுகிறது?
2. நாடகத்தின் பிரதான அம்சங்கள் எவை?
3. 'அரங்கு' என்பது எவ்வாறு மற்றைய கலைகளிலிருந்து வேறுபடுகிறது?
4. 'அரங்கின்' பூரணத்துவதற்கு உதவும் பிற கலைஞர்கள் குறித்து விளக்குக.

### மொழித்தேர்ச்சிக்கான செயற்பாடுகள்

*1. பாடப்பகுதியை வாசித்து நாடகம் எனும் தலைப்பில் தரப்பட்டுள்ள விடயங்களைக் கிரகித்துக் கூறுக.*

*2. பாடத்தில் கையாளப்பட்டுள்ள மொழியாட்சி தொடர்பாக பின்வரும் அம்சங்களில் விளக்கம் தருக.*

*அ) கையாளப்பட்டுள்ள சொற்களும் சொற்றொடர்களும்*

*ஆ) கருத்துக்களை வலியுறுத்தும் விதம்*

*3. நாடக விளம்பரம் ஒன்றை வானொலி அல்லது தொலைக்காட்சி பாவனையில் வாசியுங்கள்.*



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

# அறிக்கை

## அறிக்கை எழுதுதல்

ஒரு விடயம்/நிகழ்வு பற்றிய பல அம்சங்களையும் ஒழுங்காக நிரைப்படுத்தி மேலதிகாரிக்கோ, சபையினருக்கோ சமர்ப்பிக்கும் பொருட்டுத் தெளிவாகவும், சுருக்கமாகவும் எழுதப்படுவது அறிக்கை எனப்படும்.

### அறிக்கை எழுதும் சந்தர்ப்பங்கள்

01. கூட்ட அறிக்கை - மன்றங்களில் வாசிக்கப்படும் கடந்த கூட்ட அறிக்கை.

02. பாடசாலை/சனசமூக நிறுவனங்கள் - ஆண்டறிக்கை.

03. செயற்றிட்டம், நிகழ்வு, நிகழ்ச்சி பற்றிச் சமர்ப்பிக்கப்படும் விஷேட அறிக்கை.

04. பிரச்சினைகள்/சூழ்நிலைகள் எதிர்பாராத சம்பவங்கள் பற்றி ஆராய்ந்து சமர்ப்பிக்கப்படும் அறிக்கை.

05. அரச திணைக்களங்கள் / கூட்டுத்தாபனங்கள் போன்றவற்றின் கருமக்கூறுகள் பற்றித் திணைக்களத்தலைவருக்கு சமர்ப்பிக்கப்படும் முன்னேற்ற அறிக்கை.

### அறிக்கை எழுதுவதனால் ஏற்படும் நன்மைகள்

01. கடந்த நிகழ்சிகளைத் தொடர்புபடுத்தலுக்காக அறியத்தருவதற்கு.

02. குறிப்பிட்ட ஆண்டொன்றில் குறித்த நிறுவனமொன்று பெற்ற வளர்ச்சியை மதிப்பிடுவதற்கு.

03. குறிப்பிட்ட ஆண்டொன்றில் குறித்த நிறுவனமொன்று நிலைநாட்டிய சாதனையைத் தெரியப்படுத்துவதற்கு.

04. செயற்றிட்டம் ஒன்று எவ்வாறு, எந்தளவுக்கு நிறைவேற்றப்பட்டது என்பதை அறிவதற்கு.

05. பிரச்சினைகள்/சம்பவங்கள் பற்றிய காரணங்களை அறிவதற்கு.

06. தரவுகள் இனங்காண்பதற்கு.

## அறிக்கை எழுதும் படிமுறைகள்

1 தகவல் திரட்டுதல் - வாசித்தல் - உசாவுதல், செவிமடுத்தல், செவ்வி காணல், அவதானித்தல் போன்ற முறைகளில் தகவல் திரட்டலாம்.

(இச்சந்தர்ப்பங்களில் குறிப்பெடுத்தலை கட்டாயம் செய்தல் வேண்டும்.)

2 தகவல்களை நிரல்படுத்தல் - முக்கிய அம்சங்களைத் தேர்ந்தெடுத்தல்.

3 அவற்றை ஒழுங்குபடுத்தி மறுபரிசீலனை செய்தல்.

4 அறிக்கை எழுதும் நோக்கத்திற்கேற்ப அவற்றைப் பந்திபிரித்து வேண்டியவிடத்து உபதலைப்பிடல்.

5 சுருக்கமாக, ஆனால் தெளிவாக தர்க்கரீதியாக எழுதுதல்.

6 இறுதியில் வேண்டியவிடத்து தீர்வினைக்காட்டல்.

### பயிற்சி

1. உங்களது பாடசாலையில் இடம் பெற்ற நிகழ்வுகள் பற்றிய அறிக்கைகளை எழுதுக.
    1. காலைக்கூட்டம்
    2. இலக்கிய மன்றக் கூட்டம்
    3. கல்விச் சுற்றுலா

## எதிர்க்கருத்துச் சொற்கள்

அருமை - எளிமை
அருள் - மருள்
அடி - முடி
அச்சம் - துணிவு
அநுகூலம் - பிரதிகூலம்
அமிலம் - காரம்
அகலம் - ஒடுக்கம்
ஆசை - நிராசை
ஆயுதன் - நிராயுதன்
ஆரோகணம் - அவரோகணம்
ஆதாரம் - நிராதாரம்
ஆண்டான் - அடிமை
ஆட்சேபித்தல் - ஆமோதித்தல்
ஆணவம் - அடக்கம்
இரகசியம் - பரகசியம்
இணக்கம் - பிணக்கம்
இணை - தனி
இகழ் - புகழ்
இலட்சணம் - அவலட்சணம்
இன்னார் - இனியார்
இன்சொல் - வன்சொல்
ஈரம் - வறட்சி
ஈரமான - உலர்ந்த
உபகாரம் - அபகாரம்
கர்வம் - பணிவு
உம்பர் - இம்பர்
உத்தமன் - அதமன்
உலோபம் - வள்ளன்மை
உற்சாகம் - சோர்வு
உருவம் - அருவம்
உடன்பாடு - மறுப்பு
ஊடல் - கூடல்
ஊர்தல் - விரைதல்
ஊன்றுதல் - பிடுங்குதல்
ஏறு - இறங்கு
ஏகம் - அநேகம்
ஏராளம் - குறைவு
ஏளனம் - புகழ்ச்சி
ஐது - செறிவு
ஐயம் - தெளிவு தேற்றம்
ஒறுப்பு - மலிவு
ஒளி - இருள்
ஒற்றுமை - வேற்றுமை
ஒட்டுதல் - வெட்டுதல்
ஒத்துழை - ஒதுங்கு
ஓங்குக - ஆழ்க, வீழ்க
கங்குல் - பகல்
கண்டம் - அகண்டம்
களங்கம் - நிட்களங்கம்
கனவு - நனவு
கலக்கம் - தெளிவு
களவியல் - கற்பியல்


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## ஏழாம் வேற்றுமை

*உருபு*

*'கண்', 'இல்', 'உள்' என 28 உருபுகளை நன்னூல் குறிப்பிடுகின்றது.*

தற்காலத்தில் இல், இடம் ஆகிய இரண்டுமே இவ்வேற்றுமைக்குரிய இடப்பொருளை உணர்த்துகின்றன.

இடப்பொருள் என்பது ஒரு பொருள் ஓர் இடத்தில் இருப்பதைச் சுட்டுவதாகும்.

அப்பா வீட்டில் இருக்கிறார்.

குருவி வானத்தில் பறக்கிறது.

தமிழில் நல்ல இலக்கிய நூல்கள் உள்ளன.

'இல்' உருபு காலவரையறையையும் உணர்த்தப் பயன்படுகிறது.

இந்தப்பணியை மூன்று நாளில் முடிக்கலாம்.

ஒரு வாரத்தில் திரும்பி விடுவேன்.

'இல்' உருபு ஒரு குழுவினுள் அமையும் பிறிதொரு குழுவைச் சுட்டவும் பயன்படுகிறது.

ஐந்து தொழிலாளர்களில் இருவர் வரவில்லை.

மாணவர்களில் சிறந்தவன் பணிவுள்ளவன்.

'இல்' உருபுக்குப் பதிலாக 'உள்' என்னும் உருபும் வரும்.

தொழிலாளர்களுள்

மாணவர்களுள்

மனிதருள்

நாவல்களுள்

கவிதைகளுள்

'இடம்' என்ற சொல்லுருபும் பயன்படுத்தப்படுகின்றது.

அப்பாவிடம் பணம் இருக்கிறது.

முயல் சிங்கத்திடம் சென்றது.

***ஏழாம் வேற்றுமையை இடவேற்றுமை என மொழி ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.***

## எட்டாம் வேற்றுமை

இது விளி வேற்றுமை எனச் சொல்லப்படும்.

பேசுவோன் படர்க்கை இடத்துக்குரியவரை முன்னிலைப்படுத்தி அழைத்துப் பேசுவதே விளி வேற்றுமை எனப்படும்.

*விளி வேற்றுமைக்கு தனியான உருபுகள் இல்லை.*

பெயர்ச்சொற்கள் ஏகார ஈறு பெறுதல்

| | | |
|---|---|---|
| மகன் | - | மகனே |
| தந்தை | - | தந்தையே |

ஈற்று இகரம் ஈகாரமாகுதல்

| | | |
|---|---|---|
| தம்பி | - | தம்பீ |
| கமலி | - | கமலீ |

ஈற்று அயல் திரிதல்

| | | |
|---|---|---|
| மக்கள் | - | மக்காள் |
| புலவர்கள் | - | புலவர்காள் |

'ஐ' ஈற்றுப்பெயர்கள் 'ஆய்' விகுதி பெறல்

| | | |
|---|---|---|
| தங்கை | - | தங்காய் |
| நாரை | - | நாராய் |

*தற்காலத்தில் ஆய் விகுதி பயன்படுத்தப்படுவதில்லை.*

## வேற்றுமை பற்றிய சில குறிப்புகள்

தமிழில் வேற்றுமை எட்டு என மரபிலக்கணவியலார் கூறுகின்றனர். தற்கால மொழி ஆய்வாளர்கள் தமிழில் வேற்றுமை எட்டை விட அதிகம் என்பர். உதாரணமாக மூன்றாம் வேற்றுமை; கருவிப் பொருளிலும் உடனிகழ்ச்சிப் பொருளிலும் வருகின்றது. தற்கால மொழியியல் அறிஞர்கள் இதனை தனித்தனி வேற்றுமையாகக் கொள்வர்.

| | | | |
|---|---|---|---|
| *ஆல்* | *-* | *கத்தியால் வெட்டினான்.* | *கருவிப்பொருள்* |
| *ஓடு* | *-* | *மரம் வேரோடு சாய்ந்தது.* | *உடனிகழ்ச்சிப்பொருள்* |

வேற்றுமையை எண் அடிப்படையிலும், உருபு அடிப்படையிலும் பொருளடிப்படையிலும் என பல்வேறாக வகைப்படுத்துகின்றனர். தற்கால மொழி ஆய்வாளர்கள் பொருளடிப்படையில் வகைப்படுத்துவதே சிறந்தது என்கின்றனர்.

*எழுவாய் வேற்றுமை.*

*செயப்படுபொருள் வேற்றுமை.*

*கருவி வேற்றுமை.*

*உடனிகழ்ச்சி வேற்றுமை.*

*கொடை வேற்றுமை.*

*நீங்கல் வேற்றுமை.*

*உடைமை வேற்றுமை.*

*இட வேற்றுமை.*

*விளி வேற்றுமை.*

இவற்றுள் பல வேற்றுமைகள் உட்பகுதிகளையும் கொண்டுள்ளது.

மரபிலக்கணங்கள் சுட்டும் பல்வேறு வேற்றுமை உருபுகள் இன்று வழக்கில் இல்லை. உதாரணமாக **'ஆன்'**, **'ஒடு'**, **'ஆது'**, **'அ'**.

மேலும் பல புதிய வேற்றுமை உருபுகள் நடைமுறையில் பயன்பட்டு வருகின்றதை தற்கால மொழி ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

உதாரணமாக - வீட்டைக்கட்டினான் என்பதன் ஆக்கப்படுபொருள் என்பது வினைக்குரியதேயல்லாமல் பெயருக்குரியது இல்லை எனலாம்.

எனவே,

சில வேற்றுமைக்குரிய பொருள் இல்லாமல்போயுள்ளன. உதாரணமாக - ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

சில வேற்றுமைகள் இன்று புதிய பொருள்களில் கையாளப்பட்டு வருவதையும் சுட்டிக்காட்டுகின்றனர். உதாரணமாக - அடைமொழிப்பொருள், கலப்புறுபொருள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

மரபிலக்கணக்காரர் குறிப்பிடும் வேற்றுமைக்குரிய சொல்லுருபுகளும் பொருத்தமற்றவையாக, தற்கால வழக்கில் பயன்பாடு அற்றும் காணப்படுகின்றது.

உதாரணமாக - என்பவன், என்பவள் போன்ற முதலாம்வேற்றுமைக்குரிய சொல்லுருபுகள் பொருத்தப்பாடு அற்றது என்கின்றனர்.

**பொருட்டு, நிமித்தம், நின்று** போன்ற சொல்லுருபுகள் இன்றைய பயன்பாட்டில் அருகி வருகின்றது. பார்க்கிலும், காட்டிலும், விட போன்ற புதிய சொல்லுருபுகள் இன்று பெருவழக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

எனவே,

வேற்றுமைத் தொடர்பாக பல்வேறு கருத்து முரண்பாடுகள் நிலவி வருகின்றன. இவற்றை மிகச்சரியாக விளங்கிக்கொள்வதனூடாக வேற்றுமை பற்றிய புதிய கண்ணோட்டத்தை வளர்த்துக் கொள்வோம்.

### பயிற்சி

பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| வேற்றுமை | உருபு | சொல்லுருபு | உதாரணம் |
|---|---|---|---|
| 1. எழுவாய் வேற்றுமை | | | |
| 2. செயப்படுபொருள் வேற்றுமை | | | |
| 3. கருவி வேற்றுமை | | | |
| 4. உடனிகழ்ச்சி வேற்றுமை | | | |
| 5. கொடை வேற்றுமை | | | |
| 6. நீங்கல் வேற்றுமை | | | |
| 7. உடைமை வேற்றுமை | | | |
| 8. இட வேற்றுமை | | | |
| 9. விளி வேற்றுமை | | | |



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## 11

# உபகதை

## அங்கம் 1 : காட்சி - 3

*வெளிச்சம் பரவுகிறது. பாடல் ஒலிக்கிறது. குருவம்சத்து இளவரசர்கள் துரோணாச்சாரியாரைப் பல்லக்கில் சுமந்தபடி அரங்கினுள் நுழைகின்றனர்.*



பாடல் : *ஏனோ! ஏனோ! ஏனோ! ஏனோ!*
*உயர்ந்தவன் தாழ்ந்தவன் மேலவன் கீழவன்*
*பேதம் இங்கே வகுத்ததும் ஏனோ!*
*வதைத்திடும் வாளையும் மிதித்திடும் காலையும்*
*தொழுவதும் சுமப்பதும் ஏனோ!*
*ஏனோ! ஏனோ! ஏனோ! ஏனோ!*

துரோணர் : யாரிங்கே ஏகலைவன்? எவனந்த ஏகலைவன்? குருவம்சத்து இளவரசனின் மகுடமணி தெறித்துச் சிதற கணைதொடுத்த அந்த சூத்திரநாய்... ஏகலைவன் எங்கே...!!

*மறைவிலிருந்து ஒரு பெண் ஓடி வருகிறாள்.*

பெண் : நான்தான் ஏகலைவன்!

துரோணர் : என்ன...! ஏகலைவன் ஒரு பெண்ணா...!!

பல்லக்குத் தூக்கி : இல்லை ஆச்சாரியரே! ஏகலைவன் பெண்ணில்லை!!

துரோணர் : ஏய்...! ஏகலைவா...! வா வெளியே...! என்னை ஏமாற்ற முடியாது! வெளியே வா...!!

*மறைவிலிருந்து ஒருவர் பின் ஒருவராக பலர் ஓடி வருகின்றனர்.*

நபர் 1 : நான் தான் ஏகலைவன்!

நபர் 2 : நான் தான் ஏகலைவன்!

நபர் 3 : நான் தான் ஏகலைவன்!

நபர் 4 : நான் தான் ஏகலைவன்!

குழுவினர் அனைவரும் : நான் தான் ஏகலைவன்!

துரோணர் : ஏகலைவா! விளையாடாதே! நிஷாதத்தை சுற்றி வளைத்துள்ள அஸ்தினபுரத்தின் சேனைகள் என்விரல் அசைவிற்காக காத்து நிற்கின்றன. என்விரல் அசைந்தால் நீயும் உன் மக்களும் இவ்வனத்தின் எண்ணற்ற ஜீவராசிகளும் எரிந்து சாம்பலாகிப் போவீர்கள்!

இது சர்வ நிச்சயம்!!

ஏய்! ஏகலைவா...! நிஷாதத்தை தீக்கிரையாக்கப் போகிறாயா?



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

இல்லை சரணடைகிறாயா...?

*குழுவிலிருந்து ஏகலைவன் வெளிப்படுகிறான்.*

ஏகலைவன் : நானே ஏகலைவன்!

துரோணர் : நீதான் ஏகலைவனா! யார் உனது குரு?

ஏகலைவன் : இந்த நிஷாதமும்! இதிலுள்ள சகல ஜீவராசிகளும் தான்!!

துரோணர் : கேவலம் ஒரு நாய்க்காக இத்தனை அம்புகளை வீணடித்திருக்கிறாயே!

ஏகலைவன் : எனது நோக்கம் நாயைக் கொல்வதல்ல! நாயின் வாயைக் கட்டுவதே. நான் நினைத்தால் உனக்கு இதே கதிதான்!!

துரோணர் : அர்ச்சுனா! கட்டி இழுத்து வா இந்த சூத்திரப்பதரை! வெட்டி எறி இவன் கட்டை விரலை!!

*அர்ச்சுனன் கையில் வாளுடன் ஏகலைவனை நோக்கி நகர்கின்றான்.*

குழு : நில்! ஏகலைவனைத் தொடும்முன் எங்கள் கணைகளுக்கு பதில்சொல்!!

துரோணர் : ஏகலைவா! என்னுடன் விளையாடாதே சொல்லிவை உன் குடிகளுக்கு!! உங்கள் நிஷாதமே என் முற்றுகையில்!

மரியாதையாக சரணடைகிறாயா? இல்லை நிஷாதத்தை

தீக்கிரையாக்கப் போகிறாயா!!

குழு : ஏகலைவா! வேண்டாம்! சரணடையாதே! இந்த துரோணரின் விரல் எப்படி அசைகிறது என்று பார்க்கலாம்.

*ஏகலைவன் நிஷாத மக்களை நோக்கிச் சொல்கிறான்.*

ஏகலைவன் : இல்லை! என் ஒருவனுக்காக இந்த நிஷாதத்தையும் நம் மக்களையும் பலியிட நான் தயாரில்லை.

துரோணரே! உமது சூழ்ச்சி நிறைவேறட்டும் இதோ சரணடைகிறேன் நான்!!

*ஏகலைவன் தன் வில்லை கீழே வைத்துவிட்டு மண்டியிட்டு சரணடைகிறான்.*

துரோணர் : ம்...! அர்ச்சுனா! வெட்டி எறி இவன் கட்டை விரலை!!

அர்ச்சுனன் வாளை உருவி ஏகலைவனின் கட்டைவிரலை

வெட்டுகிறான். பெரும் ஓலம் எழுகிறது. துரோணரும் குருவம்சத்து இளவரசர்களும் எக்காளமிட்டுச் சிரிக்கின்றனர்.பாடல் ஒலிக்கிறது.

*பாடல் :*

*பன்னெடும் காலம் ஒலிக்கிற ஓலம்!*
*மமதையின் சிரிப்பினில் கரையும்!*
*நரித்தன சாதி நுகத்தடி நீதி!*
*சிவிகையில் ஏறி உலவும்!*
*கனவும் மடியும் கதையும் முடியும்!*
*கண்ணீர் மட்டும் தொடரும்!*
*ஏனோ! ஏனோ! ஏனோ! ஏனோ!*

*துரோணரும் குருவம்சத்து இளவரசர்களும் வெளியெறுகின்றனர். கீழே விழுந்து கிடக்கிற ஏகலைவன் மெதுவே எழுகிறான்.*

ஏகலைவன் : நான் முதல் அம்பு!
யாருமற்ற மலைவெளியில்
தனித்துக் கிடக்கிறேன்!
எவர் மீதும்
பகைமையிலாதவர் வந்து
எமை
வெளியில் செலுத்துவாரென!!

குழு : நான் முதல் அம்பு!
யாருமற்ற மலைவெளியில்
தனித்துக் கிடக்கிறேன்!
எவர் மீதும்
பகைமையிலாதவர் வந்து
எமை வெளியில் செலுத்துவாரென!!

**குழு வெளியேறுகிறது. ஏகலைவன் மட்டும் நடிப்பிடத்தில் நிற்கிறான்.**

ஏகலைவன் : இதுவே என் கதை! ஏகலைவனின் கதை!!
காடும் மலையும் பெற்று வளர்த்த குறமகனின் கதை!

*எதிர் கேள்வி உள்ளே நுழைகிறான்.*

எதிர் கேள்வி : ஏகலைவா...! என்ன இது! யாரிடத்தில் கதை விடுகிறாய்! துரோணர் உனது கட்டைவிரலை பலவந்தமாக வெட்டிச் சென்றாரா...?

ஏகலைவன் : ஆம்! அப்படித்தான்!!

எதிர் கேள்வி : இல்லை! உனது மானசீக குருவான துரோணருக்கு மனமுவந்து குருதட்சணையாக நீதானே கட்டை விரலை வெட்டித் தந்தாய் அதுதானே கதை!

ஏகலைவன் : என்ன! துரோணர் எனது மானசீக குருவா... இப்போது நீதான் கதை விடுகிறாய்.

எதிர்கேள்வி : பின் என்ன... நீ துரோணரிடத்தில் வில் வித்தை பயில முயன்றாய். நீ தாழ்ந்த குலத்தில் பிறந்தவன் என்பதால் அவர் உன்னை மாணவனாக ஏற்கவில்லை. பிறகு துரோணரை மானசீக குருவாக வரித்து நீயே வில் வித்தையை கற்றுக் கொண்டாய். இதுதானே கதை.

ஏகலைவன் : என்ன சொன்னாய். நான் தாழ்ந்த குலத்தில் பிறந்தவனா... அப்படியென்றால்.. மனிதருக்குள் உயர்வு... தாழ்வு பார்க்க எங்கள் நிஷாதம் எங்களுக்கு கற்றுத் தரவில்லை.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக





வில்லும் அம்பும் எங்கள் மூச்சு
வில்லும் அம்பும் எங்கள் வாழ்வு
வில்லும் அம்பும் எமது கரங்களின் நீட்சி.

அப்படியிருக்க... நான் ஏன் துரோணரிடத்தில் வில்வித்தை கற்க முயல வேண்டும்.

வேண்டுமானால், அந்த துரோணர் எமது மூதாதையர் எவரிடத்திலாவது வந்து வில்வித்தையைக் கற்றுச் சென்றிருக்கலாம்.

இன்னொன்றும் சொல்கிறேன் கேள்.

துரோணரது அம்புகளில் உலோகங்கள் உண்டு. எங்கள் அம்புகளில் அவை இல்லை. குறி தவறாமல் அம்பு எய்வதில் நாங்கள் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல.

எங்கள் அம்புகள் தாக்குண்டவற்றை களைப்புறச் செய்யும்; காயப்படுத்தும்; மூர்ச்சையுறச் செய்யும். ஒருபோதும் அவை கொல்லாது.

ஆனால் துரோணரது அம்புகளோ, குறிதவறாவிடில் தாக்குண்ட எவற்றையும் கொன்றுவிடும்.

இப்படிப்பட்ட வில்வித்தை எங்களுக்கு தேவையுமில்லை. இதை யாரிடத்திலும் நாங்கள் கற்றுக் கொள்ளவும் மாட்டோம்.

**எதிர் கேள்வி** : இந்த கதை ஒன்றும் உகந்ததாகத் தெரியவில்லையே.

**ஏகலைவன்** : உங்களுக்கு உகந்த கதையை நீங்கள் சொன்னீர்கள். எனக்கு உகந்த கதையை நான் சொன்னேன்.

**எதிர் கேள்வி** : எல்லோருக்கும் உகந்த கதை என்று எதுவும் இல்லையா?

**ஏகலைவன்** : இல்லை. இதுவரை இல்லை.

**எதிர் கேள்வி** : ஏகலைவா. பாரதக்கதை ஆழப்பொதிந்துள்ள மக்களது மனங்களுக்கு நீ அதிர்ச்சியூட்டுகிறாய்.

**ஏகலைவன்** : உங்களுக்கு அதிர்ச்சியூட்டாமல் கதைசொல்ல நான் ஒன்றும் வியாசனல்ல; ஏகலைவன்!

*இருள் பரவுகிறது. காட்சி மாறுகிறது.*

உபகதை - பிரளயன்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## அரும்பத விளக்கம்

| | | |
|---|---|---|
| சேனைகள் | - | படைகள் |
| ஜீவராசிகள் | - | உயிர்கள் |
| நிஷாதம் | - | இடம் / வீடு / கிராமம் |
| முற்றுகை | - | சுற்றி வளைத்தல் |
| சரணடைதல் | - | அடைக்கலம் |
| நீட்சி | - | நீளம் / விசாலம் |
| சளைத்தல் | - | சோர்தல் |
| உகந்தது | - | ஒப்புக் கொள்ளப்பட்டது |

## பயிற்சி

1. ஏகலைவன் கட்டைவிரலை வெட்டச்சம்மதித்தது முறையானதா?
2. ஏகலைவன் சரணடைந்தமைக்கான காரணம் என்ன?
3. மகாபாரதக்கதையை எழுதியவர் யார்?
4. பின்வரும் கதாபாத்திரங்களின் குணப்பண்புகளை விளக்குக.

   அ) ஏகலைவன்

   ஆ) துரோணர்

   இ) எதிர்கேள்வி

## மொழித்தேர்ச்சிக்கான செயற்பாடுகள்

*1. இந்நாடகத்தை நண்பர்களுடன் இணைந்து மேடையேற்றுங்கள் / சிறுகதையாக்குங்கள்*

*2. இந்நாடகம் வெளிப்படுத்தும் படைப்பாளியின் எண்ணங்களை விளக்கி எழுதுக.*

*3. இந்நாடகத்தில் காணப்படும் வீரம், தியாக உணர்வுகள் இடம் பெறும் இடங்களைச் சுட்டி விளக்குக.*

## படிவம் நிரப்புதல்

அன்றாட வாழ்க்கையிலே பல்வேறு படிவங்களை நிரப்புகின்ற தேவைகள் நிறைய ஏற்படுகின்றன. காசுக்கட்டளை, வங்கியில் பணத்தை வைப்பிடல், மீளப்பெறல், பாடசாலை அனுமதி, கடவுச்சீட்டு, தொழில் விண்ணப்பங்கள், அடையாள அட்டை, பரீட்சைகள் விண்ணப்பங்கள் போன்ற பல்வேறு படிவங்களை நிரப்ப வேண்டியுள்ளது.

H 023165 - 5.00.000 (2005/02) P ශ්‍රී ලංකා රජයේ මුද්‍රණ දෙපාර්තමේන්තුව

තැ. කා. ෆැක්ස් / அ. அ. பெக்ஸ் / P. O. Fax } 05

**ෆැක්ස් මුදල් ඇනවුම් අයදුම් පත්‍රය / නිවේදනය**

**பெக்ஸ் காசுக்கட்டளை விண்ணப்பம்/அறிவிப்பு**

**FAX MONEY ORDER APPLICATION / ADVICE**

1. මුදල් යවන්නාගේ නම සහ ලිපිනය / பணம் அனுப்புநிறவரின் பெயரும் முகவரியும் / Name & Address of Remitter } ______

2. ගෙවන කාර්යාලය / கொடுப்பனவு அலுவலகம் / Office of Payment } ______

3. මුදල් ලබන්නාගේ නම සහ ලිපිනය / பணம் பெறுபவரின் பெயரும் முகவரியும் / Name & Address of Payee } ______

4. මුදල ඉලක්කමෙන් / தொகை இலக்கத்தில் / Amount in figures } ______ මුදල අකුරෙන් / தொகை சொற்களில் / Amount in words } ______

පෞද්ගලික පණිවුඩය (තිබේනම්) / சொந்தச் செய்தி (இருப்பின்) / **Private Message (if any)**

______

දිනය / திகதி / **Date** } ______

5. යවන්නාගේ අත්සන / அனுப்புநிறவரின் கையொப்பம் / Remitter's Signature } ______

කාර්යාලීය ප්‍රයෝජනය සඳහා — அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம் — **OFFICE USE ONLY**

*Office of Origin*

1. **Name of Office:** ______
2. **Fax No. of Destination :** ______
3. **C.I. No. :** ______
4. **Accepted by :** ______
5. **Checked by :** ______
6. **Transmitted by and time :** ______
7. **P.F. Checked by :** ______

**Date Stamps**

**Office of Origin** | **Office of Payment**

*Office of Payment*

8. **Received by :** ______
9. **P.F. No. :** ______
10. **Issued by :** ______
11. **Checked by :** ______



P.O. FAX 02

ශ්‍රී ලංකා තැපැල්
இலங்கை அஞ்சல்
SRI LANKA POST

INC :.....................

INCOMING TELEX/FAX

To :..........................................................................

..............................................................................

Number of Messages/Pages :..............................

Charges :..................................................................

GR No. :.....................................................................

Date :..........................................................................

From :..............................................

Telex/Fax No. :.....................................

Signature of Recipient.........................

Remarks :—

.........................................................

Signature of OIC

PP5099-1,00,000(5/94)



NSB Your Family Bank

ජාතික ඉතිරි කිරීමේ බැංකුව
தேசிய சேமிப்பு வங்கி
NATIONAL SAVINGS BANK

මුදල් තැන්පත් පත්‍රිකාව
பண வைப்புத் துண்டு
CASH DEPOSIT SLIP

சீ.எல்.ஜீ.1 C.L.G.1

| | | | | |
|---|---|---|---|---|
| | | | දිනය<br>திகதி<br>Date | |
| පාස් පොත නිකුත් කළ කාර්යාලය<br>வைப்புப் புத்தகம் வழங்கிய அலுவலகம்<br>OFFICE OF ISSUE OF PASS BOOK | | පාස් පොතේ අංකය (මුලකුරු සමග)<br>வைப்புப் புத்தக இலக்கம் (முதலெழுத்துடன்)<br>PASS BOOK NO. WITH PREFIX | | |
| ගිණුම් අයිතිකරුගේ නම සහ වර්තමාන ලිපිනය<br>கணக்கு வைத்திருப்பவரின் பெயரும் தற்போதைய முகவரியும்<br>NAME AND PRESENT ADDRESS OF THE ACCOUNT HOLDER | | | | |
| තැන්පත් මුදල (අකුරින්)<br>வைப்புத் தொகை (எழுத்தில்)<br>AMOUNT OF DEPOSIT ( IN WORDS) | | | ரூபா<br>Rs. | |
| ..............................<br>மුදල් බාරගත් නිලධාරියාගේ අත්සන<br>பணம் பெறும் அலுவலரின் ஒப்பம்<br>SIGNATURE OF CASH RECEIVING OFFICER | දින මුද්‍රාව - திகதி முத்திரை - DATE STAMP<br>உ.அ.அ. S.P.O | க.அ.அ. CONT.P.O | පාස් පොතේ ශේෂය<br>வைப்புப் புத்தக மீதி<br>PASS BOOK BALANCE<br>..............................<br>තැන්පත්කරුගේ අත්සන<br>வைப்பாளரின் ஒப்பம்<br>DEPOSITOR'S SIGNATURE | |

ජාතික ඉතිරිකිරීමේ බැංකුව - ඔබේ පවුලේ බැංකුව - தேசிய சேமிப்பு வங்கி - உங்கள் குடும்ப வங்கி - NATIONAL SAVINGS BANK - YOUR FAMILY BANK

## பயிற்சி

- மேலுள்ள படிவங்கள் யாவை?
- இவை போன்ற படிவங்களைத் தேடி எடுங்கள்.
- உங்கள் ஆசிரியருடன் கலந்துரையாடுங்கள்.
- அத்தோடு பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துங்கள்.

(1) படிவத்தை முற்றாக வாசித்து அதன் நோக்கம் என்ன என்பதை தெளிவாக அறியுங்கள்.

(2) எழுதுமுன் எல்லா விதிமுறைகளையும் கவனமாக வாசித்து விளங்கிய பின்பே எழுதுதல் வேண்டும்.

(3) திருத்தமானதும், நிறைவானதுமான தகவல்களைத் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

(4) நிரப்பியபின் முழுவதையும் மீண்டும் வாசித்துச்செப்பமாக்குங்கள்.

வாசித்துத் தெளிவடைந்து விட்டீர்கள். இப்போது நீங்கள் சேகரித்த / ஆசிரியர் வழங்கும் படிவங்களை நிரப்புங்கள்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## லகர, ழகர, ளகர பேதச்சொற்கள்

இவ்வெழுத்துகள் ஒலியிலும் பொருளிலும் வேறுபாடுடையன. இவற்றைத் திருத்தமாக உச்சரிக்கப்பழகி எழுதும் போது பிழைகளைத் தவிர்ப்போம்.

| | | |
|---|---|---|
| அலகு | - | அளவு,கதிர்,கூர்மை |
| அழகு | - | கவின், சிறப்பு |
| அளகு | - | அன்னப்பெடை, பெண்மயில், பெண்கோழி |
| அலி | - | நெருப்பு, ஆண் பெண் அல்லாதது |
| அழி | - | கெடு, குலை |
| அளி | - | கொடு, அருள், வண்டு |
| அலை | - | திரி, வருத்து, கடலலை |
| அழை | - | கூப்பிடு, வரவழை |
| அளை | - | தயிர், புற்று |
| ஆலி | - | மழைத்துளி, களி, ஒலி |
| ஆழி | - | கடல், மோதிரம், சக்கரம் |
| ஆளி | - | ஆளுபவன், சிங்கம் |
| இலை | - | தழை |
| இழை | - | செய், ஆபரணம், நூல் |
| இளை | - | மெலி, தளர் |
| உலை | - | அலை, நீரலை, கொல்லன் உலை |
| உழை | - | பிரயாசப்படு, இடம், மான் |
| உளை | - | வருத்து, குதிரையின் பிடரி மயிர், அழுகை |
| ஒலி | - | சத்தம் |
| ஒழி | - | முடித்துவிடு, தவிர் |
| ஒளி | - | மறை, பிரகாசி, வெளிச்சம், விளக்கு |
| கலகம் | - | குழப்பம், சண்டை |
| கழகம் | - | சபை, கல்விபயில் இடம் |
| களகம் | - | நெற்கதிர், பெருச்சாளி |



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## சொற்புணர்ச்சி

பின்வரும் உதாரணங்களை கவனிப்போம்

மரம் + அத்து + ஐ = மரத்தை

அவன் + ஓடி + போனான் = அவன் ஓடிப் போனான்

இங்கு மரத்தை என்ற சொல் எவ்வாறு பல உறுப்புகள் இணைத்துள்ளன என்பதைக் காட்டுகின்றது.

அவன் ஓடிப்போனான் என்ற வாக்கியம் எவ்வாறு பல சொற்கள் இணைந்து பொருள் தரும் வாக்கியமாகி உள்ளது என்பதைக் காட்டுகின்றது.

இவ்வாறு சொல்லின் உறுப்புகள் அல்லது சொற்கள் பொருள் தரும் வகையில் ஒன்றோடு ஒன்று இணைந்து வருவதே புணர்ச்சி எனப்படும்.

ஒரு சொல்லின் உறுப்புகள் ஒன்றோடு ஒன்று இணைந்து வருவது அகப்புணர்ச்சி எனப்படும்.

இரண்டு அல்லது பலசொற்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து சொற்றொடராகவோ வாக்கியமாகவோ வருவது புறப்புணர்ச்சி எனப்படும்.

காண் + ட் + ஏன் - கண்டேன் = அகப்புணர்ச்சி

எனக்கு + எல்லோரும் + உதவுகிறார்கள் - எனக்கெல்லோரும் உதவுகிறார்கள்

= புறப்புணர்ச்சி

அகப்புணர்ச்சியில் சொல் உறுப்புகளுக்கு இடையில் இடைவெளி இல்லாமல் புணர்ச்சி இல்லாமல் புணர்ச்சி விகாரங்களுடன் அவற்றை எழுதுகின்றோம்.

புறப்புணர்ச்சியில் சொற்கள் இடைவெளிவிட்டு பெரும்பாலும் புணர்ச்சி விகாரங்கள் இன்றி பிரித்து எழுதப்படுகின்றன அவசியமான இடத்து மட்டும் புணர்ச்சி விகாரங்கள் பேணப்படும்.

புணர்ச்சியில் குறைந்தபட்சம் இரண்டு சொற்கள் அல்லது சொல் உறுப்புகள் சம்பந்தப்படுகின்றன.

ஏற்கனவே சில புணர்ச்சி விதிகள் பற்றி நாம் அறிந்திருக்கிறோம்.

அவற்றை இங்கு மீட்டிப்பார்ப்போம்.

### இயல்புப் புணர்ச்சி

மாடு + கள் = மாடுகள்

கடல் + நீர் = கடல்நீர்

மேலே தரப்பட்டுள்ள உதாரணங்களில் நிலைமொழியும் வருமொழியும்

புணரும்போது அவற்றின் வடிவங்களில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

இவ்வாறு,

**தம் வடிவங்களில் எவ்வித மாற்றமும் இன்றிச் சொற்கள் அல்லது சொல் உறுப்புகள் புணர்வதை இயல்புப் புணர்ச்சி என்பர்.**

## விகாரப் புணர்ச்சி

| | | |
|---|---|---|
| கல் + ல் + ஆல் = கல்லால் | ஓடி + ப் + போ = ஓடிப்போ | தோன்றல் விகாரம் |
| மரம் + வேர் = மரவேர் | மனம் + வேதனை = மனவேதனை | கெடுதல் விகாரம் |
| கடல் + கரை = கடற்கரை | மரம் + கள் = மரங்கள் | திரிதல் விகாரம் |

மேலே உள்ள உதாரணங்கள் நிலைமொழியின் இறுதியில் தோன்றல், கெடுதல், திரிதல் என்ற மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

**சொற்கள் அல்லது சொல் உறுப்புகள் புணரும் போது நிலைமொழியிலோ வருமொழியிலோ ஏதாவது மாற்றம் ஏற்படின் அது விகாரப்புணர்ச்சி எனப்படும்.**

புணர்ச்சியில் வேறு சில வகைப்பாடுகளை இனி நோக்குவோம்.

அவை,

1. உயிர் முன் உயிர் புணர்தல்
2. உயிர் முன் மெய் புணர்தல்
3. மெய் முன் உயிர் புணர்தல்
4. மெய் முன் மெய் புணர்தல்

## 1. உயிர் முன் உயிர் புணர்தல்

**பின்வரும் உதாரணங்களை நோக்குவோம்**

பல + இடம - பல + வ் + இடம் - பலவிடம்
பலா + இலை - பலா + வ் + இலை - பலாவிலை
கிளி + இறகு - கிளி + ய் + இறகு - கிளியிறகு
தீ + அணை - தீ + ய் + அணை - தீயணை
பசு + இனம் - பசு + வ் + இனம் - பசுவினம்
பூ + இதழ் - பூ + வ் + இதழ் - பூவிதழ்



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

தே + ஆரம் - தே + வ் + ஆரம் - தேவாரம்

குவளை + இலை - குவளை + ய் + இலை - குவளையிலை

கோ + இல் - கோ + வ் + இல் - கோவில்

இவைகள் புணர்ந்துள்ள விதத்தில் முக்கியமான விடயம் 'ய'கரம் 'வ'கரம் என்பவற்றை கவனித்தீர்களா?

நிலைமொழி ஈற்றில் **இ, ஈ, ஐ** என்பவைக்கு முன் வருமொழி தொடக்கத்தில் உயிர் எழுத்துக்கள் வந்து புணரும்போது 'ய'கர மெய் தோன்றியுள்ளன.

நிலைமொழியையும் வருமொழியையும் இணைப்பதற்கு யகரம் தோன்றியுள்ளது. இதனை 'ய'கர உடம்படுமெய் என்பர்.

எனவே,

நிலைமொழியீற்றில் **இ,ஈ,ஐ** ஆகிய உயிர் எழுத்துக்கள் வந்து வருமொழி தொடக்கத்தில் உயிர்கள் வந்து, புணரும்போது அவற்றை உடன்படுத்துவதற்கு 'ய' கர உடம்பாடுமெய் தோன்றும்.

நிலைமொழியீற்றில் **அ,ஆ,உ,ஊ,ஒ,ஓ,ஔ** என்னும் உயிரெழுத்துகள் வந்து வருமொழி தொடக்கத்தில் உயிரெழுத்துகள் வந்து புணரும் போது அவற்றை உடம்படுத்துவதற்கு 'வ'கர உடம்படுமெய் தோன்றும்.

நிலைமொழியீற்றில் **'ஏ'** உயிரெழுத்துக்கள் வந்து வருமொழி தொடக்கத்தில் உயிரெழுத்துக்கள் வந்து புணரும் போது அவற்றை உடம்படுத்த 'வ்''ய்' உடம்படுமெய்தோன்றும்.

உ-ம் நீயே அரசன் - நீயேயரசன்

அவனே அழகன் - அவனேயழகன்

### புணர்ச்சியில் உடம்படுமெய் சேர்த்து எழுத வேண்டிய இடங்கள்

1. அகப்புணர்ச்சியில் உடம்படு மெய் சேர்த்து எழுதுக.

   உ-ம் - தீ + ஐ - தீ + ய் + ஐ - தீயை

2. தொகைச் சொற்கள் அல்லது கூட்டுப்பெயர்கள் அகப்புணர்ச்சிக்குரியவை ஆகையால், அங்கும் உடம்படுமெய் சேர்த்து எழுதுக.

   உ-ம் - மா + இலை - மா + வ் + இலை - மாவிலை

   கோ + இல் - கோ + ய் + இல் - கோயில்

3. உடன், ஒடு ஆகிய சொல்லுருபுகள் வரும்போது உடம்படுமெய் சேர்த்து எழுதுக.

   உ-ம் - அம்மா + உடன் - அம்மா + வ் + உடன் - அம்மாவுடன்

   தந்தை + ஒடு - தந்தை + ய் + ஒடு - தந்தையோடு



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

4. ‘செய்த’ என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சத்துடன் ‘உடன்’ என்னும் இடைச்சொல் புணரும் போது உடம்படுமெய் சேர்த்து எழுதுக.

உ-ம் - செய்த + உடன் - செய்த + வ் + உடன் - செய்தவுடன்

கேட்ட + உடன் - கேட்ட + வ் + உடன் - கேட்டவுடன்

5. ‘செய்ய’ என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சத்துடன் ‘இல்லை’ என்னும் இடைச்சொல் புணரும் போது உடம்படுமெய் சேர்த்து எழுதுக.

உ-ம் - போக + இல்லை - போக + வ் + இல்லை - போகவில்லை

கேட்க + இல்லை - கேட்க + வ் + இல்லை - கேட்கவில்லை

புறப்புணர்ச்சியில் உடம்படு மெய்யைத் தவிர்த்து சொற்களைப்பிரித்து எழுதுக.

உ-ம் - நான் நேற்று பாடசாலைக்கு வரவில்லை.

## 2. உயிர் முன் மெய் புணர்தல்

நிலைமொழி ஈற்றில் உயிரெழுத்துக்கள் வந்து வருமொழி தொடக்கத்தில் மெய்யெழுத்துக்கள் வந்து புணர்வதை இவ்வகைக்குள் அடக்கலாம்.

உயிர்முன் மெய் புணர்தலை இரண்டாக வகுத்து நோக்கலாம்.

*1. உயிர்முன் வல்லினம் புணர்தல்.*

*2. உயிர் முன் மெல்லினம், இடையினம் புணர்தல்.*

உயிர்முன் வல்லினம் புணர்தல்.

நிலைமொழி ஈற்றில் உயிரெழுத்துக்கள் வந்து வருமொழி தொடக்கத்தில் **க்,ச்,த்,ப்** ஆகிய மெய்கள் வருமாயின் இந்த வல்லின மெய்கள் இரட்டிக்கும் அல்லது மிகும்.

உ-ம் - கலை + கூடம் - கலை + க் + கூடம் - கலைக்கூடம்

மிகாத இடங்களும் உள்ளன.

**க்,ச்,த்,ப்** ஆகிய வல்லின மெய்கள் மிகும் இடங்கள் எவையென நோக்குவோம்.

அகப்புணர்ச்சி, புறப்புணர்ச்சி இரண்டிலும் இவை மிகுகின்றன.

1. **அ,இ,எ** ஆகிய சுட்டு, வினா எழுத்துக்களை அடுத்து வரும் வல்லினம் மிகும்.

உ-ம் - அ + காலம் - அக்காலம் எ + காலம் - எக்காலம்

இ + படம் - இப்படம் எ + படம் - எப்படம்

2. **அந்த, இந்த, எந்த** ஆகிய சுட்டு, வினாச்சொற்களை அடுத்து வரும் வல்லினம் மிகும்.

உ-ம் - இந்த + புத்தகம் - இந்தப்புத்தகம்

எந்த + படம் - எந்தப்படம்

இந்த + குழந்தை - இந்தக்குழந்தை



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

3. செய்ய என்னும் வாய்ப்பாட்டு வினை எச்சத்தை அடுத்து வரும் வல்லினம் மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| செய்ய | + | சொன்னான் | - | செய்யச்சொன்னான் |
| கேட்க | + | கண்டான் | - | கேட்கக்கண்டான் |
| பாட | + | பார்த்தான் | - | பாடப்பார்த்தான் |
| பார்க்க | + | தந்தான் | - | பார்க்கத்தந்தான் |

4. ஆகார ஈற்று எதிர்மறை பெயரெச்சத்தை அடுத்து வரும் வல்லினம் மிகும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உ-ம் | தீரா | + | பசி | - | தீராப்பசி |
| | ஆறா | + | துயர் | - | ஆறாத்துயர் |
| | மாறா | + | காதல் | - | மாறாக்காதல் |
| | அணையா | + | சூரியன் | - | அணையாச்சூரியன் |

5. இகர ஈற்று வினையெச்சத்தை அடுத்து வரும் வல்லினம் மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஓடி | + | போனான் | - | ஓடிப்போனான் |
| ஆடி | + | திரிந்தான் | - | ஆடித்திரிந்தான் |
| கூடி | + | சென்றன | - | கூடிச்சென்றன |
| பாடி | + | களித்தான் | - | பாடிக்களித்தான் |

6. அப்படி, இப்படி, எப்படி, இனி ஆகிய வினா அடைகளை அடுத்து வரும் வல்லினம் மிகும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உ-ம் | அப்படி | + | தாங்கினான் | - | அப்படித்தாங்கினான் |
| | இப்படி | + | சாய்ந்தான் | - | இப்படிச்சாய்ந்தான் |
| | எப்படி | + | கண்டான் | - | எப்படிக்கண்டான் |
| | இனி | + | படிக்கலாம் | - | இனிப்படிக்கலாம். |

7. நான்காம் வேற்றுமை உருபு ஏற்ற பெயர்ச்சொற்களை அடுத்து வரும் வல்லினம் மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| தம்பிக்கு | + | கொடுத்தான் | - | தம்பிக்குக்கொடுத்தான் |
| எனக்கு | + | சொன்னான் | - | எனக்குச்சொன்னான் |
| அவருக்கு | + | தந்தான் | - | அவருக்குத்தந்தான் |
| பாம்புக்கு | + | பயந்தான் | - | பாம்புக்குப்பயந்தான் |

8. வன்தொடர் குற்றியலுகரத்தை, அடுத்து வரும் வல்லினம் மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| கருத்து | + | கூறினான் | - | கருத்துக்கூறினான் |
| பேச்சு | + | பேசினான் | - | பேச்சுப்பேசினான் |
| பாட்டு | + | பாடினான் | - | பாட்டுப்பாடினான் |
| நேற்று | + | சந்தித்தான் | - | நேற்றுச்சந்தித்தான் |



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

9. இரண்டாம் வேற்றுமை உருபு ஏற்ற பெயர்ச்சொல்லை அடுத்து வரும் வல்லினம் மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| என்னை | + | பார்த்தான் | - | என்னைப் பார்த்தான் |
| நாயை | + | துரத்தினான் | - | நாயைத் துரத்தினான் |
| தாயை | + | சந்தித்தான் | - | தாயைச் சந்தித்தான் |
| தந்தையை | + | கண்டான் | - | தந்தையைக் கண்டான். |

10. வேற்றுமைத் தொகைச்சொற்களில் உயிரீற்றை அடுத்து வரும் வல்லினம் மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| யானை | + | பாகன் | - | யானைப்பாகன் |
| பட்டு | + | சேலை | - | பட்டுச்சேலை |
| கோழி | + | தீன் | - | கோழித்தீன் |
| குருவி | + | கூடு | - | குருவிக்கூடு |

11. வினைத்தொகை தவிர்ந்த தொகைச்சொற்களில் பெரும்பாலும் வல்லினம் மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| தீ | + | பெட்டி | - | தீப்பெட்டி |
| நடு | + | தெரு | - | நடுத்தெரு |
| கலை | + | கழகம் | - | கலைக்கழகம் |
| நடு | + | சாமம் | - | நடுச்சாமம் |

12. அங்கு, இங்கு, எங்கு ஆகிய சொற்களை அடுத்து வரும் வல்லினம் மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| அங்கு | + | சென்றேன் | - | அங்குச்சென்றேன் |
| இங்கு | + | கண்டேன் | - | இங்குக் கண்டேன் |
| எங்கு | + | சந்தித்தேன் | - | எங்குச்சந்தித்தேன் |
| அங்கு | + | பார்த்தேன் | - | அங்குப்பார்த்தேன் |

தற்காலத்தமிழில் வல்லினம் மிகாமல் எழுதுவதே பெரு வழக்கு.

## உயிர்முன் மெல்லினம், இடையினம் புணர்தல்

நிலைமொழி ஈற்றில் உயிர் எழுத்து வந்து வருமொழி தொடக்கத்தில் மெல்லின மெய்கள் இடையின மெய்கள் வருமாயின்; எவ்வாறு புணரும் என்பதை நோக்குவோம்.

1. அ, இ, எ ஆகிய சுட்டு வினா எழுத்துக்கள் நிலைமொழி ஈற்றில் வந்து வருமொழி தொடக்கத்தில் ஞ, ந, ம ஆகிய மெல்லின மெய்கள் அல்லது 'வ'கர இடையினமெய் வருமாயின் புணரும் போது வருமொழி தொடக்க மெய் மிகும் 'ய'கரம் வந்தால் 'வ'கரம் மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| அ | + | ஞானம் | - | அஞ்ஞானம் |
| இ | + | மனிதன் | - | இம்மனிதன் |
| எ | + | யானை | - | எவ்யானை |
| அ | + | நூல் | - | அந்நூல் |
| இ | + | வீடு | - | இவ்வீடு |

2. ஏனைய எல்லா இடங்களிலும் இயல்பாகப் புணரும்.

| | | | | |
|---|---|---|---|---|
| இந்த | + | ஞாயிறு | - | இந்தஞாயிறு |
| பாடசாலை | + | மூடப்பட்டது | - | பாடசாலை மூடப்பட்டது |
| பெரிய | + | யானை | - | பெரிய யானை |
| எந்த | + | நூல் | - | எந்தநூல் |
| அழகான | + | வடிவம் | - | அழகான வடிவம் |

## பயிற்சி

அ) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

1. கடல்நீர்
2. முக்காலம்
3. பூக்கள்
4. குருவிக்கூடு
5. கடற்கரை
6. கிளியழகு
7. மாவிலை
8. தும்மல்
9. மாறாக்காதல்
10. அஞ்ஞானம்

ஆ) பின்வரும் சொற்களைப் புணர்த்தி எழுதுக.

1. மரம் + வீழ்ந்தது
2. மரம் + வேர்
3. பள்ளி + கூடம்
4. இதழ் + கள்
5. ஆறு + உடன்
6. தீ + அணை
7. அம்மா + உடன்
8. அ + மனிதன்
9. குருவி + கூடு
10. பால் + நிலவு

# 12 எனது ஆசான்




1948ல் தனது நண்பர் சித்தானந்த தாஸ் குப்தாவைப் பார்த்து சத்யஜித்ராய் சொன்னார்.

'என்றைக்காவது ஒருநாள் நான் ஒரு அற்புதமான படத்தை எடுப்பேன்.....'

ராய் தமாஷ் பண்ணுகிறார் என்று எண்ணிய தாஸ் குப்தா சிரித்தார்.

ராய் தமாஷ் பண்ணவில்லை.

தனது முதற் படமான பதேர் பாஞ்சாலிக்காக அப்பொழுது அவர் எந்தவேலையையும் ஆரம்பித் திருக்கவில்லை. இருப்பினும் அடிமனசின் ஆழத்திலிருந்துதான் அந்த வார்த்தைகள் வந்தன.

இது நடந்து ஏழு வருடங்களுக்குப் பின்னர்தான் - ஐம்பத்தைந்தின் கோடைகால இறுதியில்தான் பதேர் பாஞ்சாலி பூர்த்தியுற்றது. கடின உழைப்பும், ஏகப்பட்ட பிரச்சினைகளும் நிறைந்த ஏழு வருடங்கள்...

அதுவரை அறியப்படாதவராய் இருந்த சத்யஜித்ராயை அந்த முதற்படமே. அகில உலக சினிமாக் கலைஞர்களின் பட்டியலில் முதல் வரிசையில் அமர்த்தி வைத்தது.

அதன் பின் தொடர்ச்சியாக முப்பத்தியேழு வருடங்கள்...

அவரது ஊரில் ஓடும் கங்கை நதியின் எழிலோடும், இயல்போடும் நுங்கும் நுரையுமாக அவரது படைப்பாற்றல் பொங்கிப் பிரவாகமெடுத்தது. இந்திய சினிமாவை உலகமே அண்ணாந்து பார்க்க வைத்தது.

உலகமே வியந்தராயின் சினிமா எனது கிராமத்தையும் எட்டியது.

எனது கிராமத்தில் நான் படித்த உயர்நிலைப் பள்ளிக்கூடம், யேசு சபையைச் சேர்ந்த அமெரிக்கன் பாதிரிமார்களால் நடத்தப்பட்டு வந்தது. ஆங்கில இலக்கியத்திற்கு ஆசிரியராய் இருந்த ஃபாதர் லோரியேயாவிற்கு, உலக சினிமா மீதும் நாட்டம் அதிகம். விளைவு - ஒவ்வொரு சனிக்கிழமையும் பள்ளிக்கூடத்திலேயே 16 மில்லி மீட்டரில் படங்கள் காட்டப்பட்டன. 'பைசிக்கிள் தீவ்ஸ்', 'ஐவன் தி டெரிபிள்', 'லூயிசியானா ஸ்டோரி' போன்ற அமரத்துவம் பெற்ற படைப்புகள் எல்லாம் அப்பொழுது பார்த்ததுதான்.

ஒரு மழைக்கால சனிக்கிழமை மாலையில், சத்யஜித்ராயின் பதேர் பாஞ்சாலி எங்களுக்குக் காண்பிக்கப்பட்டது. படம் முடிந்ததும் யாரும் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. நானும் என் நண்பர்களும் பள்ளிக்கூட வராந்தாவில் நின்றபடி கொட்டுகிற மழையைப் பார்த்த வண்ணமிருந்தோம். திடீரென்று, சொல்லி வைத்தாற் போல, எல்லோரும் முற்றத்தில் இறங்கி, படத்தில் துர்க்காவைப் போல் மழையில்



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

ஆடிக்களித்தோம்.

பேய் அடிப்பதைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதே உக்கிரத்தோடு ஒரு படம்கூட அடிக்கும் என்பதை அன்றுதான் உணர்ந்தேன். பதேர் பாஞ்சாலி என்னை பலமாக அடித்தது. அதன் தாக்கத்திலிருந்து இன்றுவரை என்னால் வெளியே வர முடியவில்லை.


பாலுமகேந்திரா

இந்தப் படத்தை நான் இன்ஸ்டிட்யூட்டிலும், வெளியேயுமாக நாற்பது ஐம்பது தடவைகள் பார்த்தாகி விட்டது. ஷாட் பை ஷாட் மனப்பாடமாகி விட்டது. என்னிடம் சொந்தமாக ஒரு நல்ல பிரதிகூட உள்ளது. இருந்தும், ஒவ்வொரு தடவை பார்க்கும் பொழுதும் ஒரு புதிய அனுபவமாகவே இன்னும் இருந்து வருகிறது.

பூனே இன்ஸ்ட்டியூட்டிற்கு ராய் அவர்கள் விசிட்டிங் பேராசிரியராக வருகை தந்தபொழுது நான் அங்கு ஒளிப்பதிவுக்கலை கடைசி வருஷம் படித்துக் கொண்டிருந்தேன். ராயின் படங்களை ராயோடு சேர்ந்து பார்க்கவும். அவை பற்றி மணிக்கணக்காக அவரோடு அளவளாவவும் கிடைத்த சந்தர்ப்பத்தை என் பாக்கியமாகக் கருதுகிறேன்.

உலகளவில் மதிக்கப்படும் மகா மேதையாக இருந்தும், மாணவர்களாகிய எங்களுடன் மற்றுமொரு மாணவர் போன்று அவர் கலந்து, சினிமா பற்றிய சகல விஷயங்களையும் சலிக்காது பேசிக் கொண்டிருந்ததை இன்றும் நினைத்துப் பார்க்கிறேன்.

அவரிடம் இயல்பாக அமைந்த எளிமை தான் அவரது படங்களிலும், சினிமா என்ற இந்த மீடியத்தையே என் மொழியாக்கிக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்த நாள் முதல், இந்த மொழி கொண்டு என்னையும், நான் சார்ந்த என் சமூகத்தையும் மேன்மைப்படுத்த வேண்டும் என்ற எண்ணமே என்னுள் மேலோங்கி நின்றது. முற்போக்கு இலக்கியத்தில் முழு மூச்சாக ஈடுபட்டதின் விளைவுதான் இது.

ஒரு படைப்பாளியின் பொறுப்புகள் என்ன? தான் சார்ந்த சமூகத்தோடு சம்பந்தப்பட்ட பொறுப்புகளிலிருந்தும் - அதன் பிரச்சினைகளிலிருந்தும் - உணர்வு பூர்வமாக விலகி நின்று, ஒட்டுறவில்லாத ஒரு பார்வையாளனாக மட்டும் பணியாற்ற வேண்டுமா...? அல்லது, உணர்வும், அறிவுமாய் அவற்றிலெல்லாம் கலந்து கொண்டு முழுப் பொறுப்போடு இயங்க வேண்டுமா....?'

மானிக்தா (நாங்கள் அவரை அப்படித்தான் அழைப்போம்) சொன்னார்.

ஒரு படைப்பாளியும் மனிதனே.. இன்னும் சொல்லப் போனால், மற்ற மனிதர்களை விடச் சற்று முழுமை பெற்ற மனிதன். தனது வாழ்க்கைச் சூழலில் இருந்தும், அதோடு பின்னிப் பிணைந்திருக்கும் அன்றாடக் கருமங்களிலிருந்தும் முழுவதுமாகத் தன்னைப் பிரித்துக் கொள்வதென்பது அவனால் முடியாத காரியம் எனவே தான் எந்த ஒரு



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

படைப்பிலும், ஏதோ ஒரு வகையில் இந்த சமூகப் பிரக்ஞை என்பது இடம் பெற்றே தீரும். ஒரு படைப்பாளி பார்த்துக்கொள்ள வேண்டியதெல்லாம், தான் ஒரு பிரச்சாரகனாக மாறிவிடக் கூடாது என்பது பற்றித் தான். பிரச்சாரம் செய்வது படைப்பாளியின் வேலையல்ல.

எந்த ஒரு சமூகப் பிரச்சினைக்கும் தீர்மானமான - முடிவான தீர்வுகளைக் கொடுக்க எவராலும் இயலாது. சரியா - தப்பா என்று நியாயம் வழங்குவதோ, தீர்வு சொல்வதோ ஒரு படைப்பாளியின் வேலையல்ல அவனுக்கு அது முக்கியமல்ல - கட்டாயமுமல்ல - சரியுமல்ல!

ஒரு படைப்பாளி பிரச்சினைகளைத் தொடுவதன் நோக்கம் - அவனது படைப்புகள் மூலம் அந்தப் பிரச்சினைகள் பற்றிய பிரக்ஞையை மக்களிடையே ஏற்படுத்துவதாகத் தான் இருக்க வேண்டும். பிரக்ஞையடைந்த மக்கள் தங்களுக்கான தீர்வுகளைத் தாங்களே சிந்தித்து முடிவு செய்வார்கள்.



இருப்பினும், நுண்ணுணர்வுகள் கொண்ட மனிதனே படைப்பாளியாக பரிணமிக்கிறான் என்பதால், பிரச்சினைகள் பற்றிய அக்கறையும், அவற்றைப் பற்றி திட்டவட்டமான தனிப்பட்ட கருத்துக்களும், பொறுப்புகளும் சில சமயங்களில் தவிர்க்க முடியாதவையாகி விடுகின்றன. அந்த வகையில் சமூகத்திற்கான நமது கடமைகளை நாம் ஆற்றிக் கொண்டுதான் இருக்கிறோம்.

சத்யஜித்ராய் தனது எந்த ஒரு நம்பிக்கையையும் - அது வெகுஜன நம்பிக்கைகளுக்கு நேர் எதிரான நம்பிக்கையாய் இருப்பினும் நம்முடன் பகிர்ந்து கொள்வதற்குத் தயக்கப்பட்டதில்லை.

உதாரணமாக - கடவுள் பற்றி அவர் கொண்டுள்ள நம்பிக்கை, நம்பிக்கையின்மை என்று சொல்வதுதான் இங்கு சரி.

'மனிதன் தான் கடவுளைப் படைத்தான்.' என்பது ராய் அவர்களின் தனிப்பட்ட கருத்து. கடவுள் மீது நம்பிக்கை வைப்பதால் எந்தப் பயனும் இருப்பதாக அவர் கருதவில்லை. அதற்கு அவசியமும் இல்லை என்றே அவர் எண்ணினார். தற்போதைய சூழலில். நாட்டு நடப்புகளின் கோணத்திலிருந்து பார்க்கையில், விஞ்ஞான அறிவில் நம்பிக்கை வைப்பதே அதிக முக்கியமானதும், பயனுள்ளதும் என்று அவர் நம்பினார்.

தறிகெட்டுப் போயிருக்கக் கூடிய என் சினிமாப் பிரக்ஞையைத் தன்னுடைய ஒரே படத்தினால் பிடித்து நிறுத்தி நேர் வழிப்படுத்திய என் ஆசானை, நடனமணி பாலசரஸ்வதி பற்றி ஒரு சிறுபடம் எடுப்பதற்காக அவர் சென்னைக்கு வந்திருந்த சமயம் போய்ப் பார்த்த போது சொன்னார் -

'பாலு... உன்னுடைய நுண்ணுணர்வுகளுக்கும், இந்த மீடியத்தின் மீது நீ கொண்டிருக்கும் காதலுக்கும், உன்னுள் இருக்கும் படைப்பு தாகத்திற்கும் நீ ஒரு



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

இயக்குநராக மாறுவதுதான் இயல்பானது.... விரைவில் நீ ஒரு படத்தை இயக்குவாய்...... Mark My Words.....'

இரண்டு மாதங்களுக்கு முன் கல்கத்தா மருத்துவமனை சென்று அவரைப் பார்த்த பொழுது... அவர் பேச முடியாதவராய் இருந்தார். அன்றுதான் அவரை நான் கடைசியாகப் பார்த்தது.

*பாலுமகேந்திரா*

*சுபமங்களா - இதழ் தொகுப்பு.*

**அரும்பத விளக்கம்**

| | | | |
|---|---|---|---|
| **எழில்** | - அழகு | **நாட்டம்** | - விருப்பம் |
| **களி** | - மகிழ்ச்சி | **உக்கிரம்** | - வேகம், தாக்கம் |
| **இன்ஸ்டியூட்** | - நிறுவனம் | **விசிட்டிங்** | - வருகை |
| **மீடியா** | - தொடர்புசாதனம் | **பிரக்ஞை** | - உணர்வு |
| **தறிகெட்டு** | - ஒழுங்கற்ற | **பரிணமித்தல்** | - மாற்றமும், வளர்ச்சியும் |

## பயிற்சி

1. சத்யஜித்ராய் என்பவர் யார்?
2. படைப்பாளி பற்றி கட்டுரையாசிரியரின் கருத்து என்ன?
3. ஒரு படைப்பாளி சமூகப் பிரச்சினைகளை தொடுவதன் நோக்கம் என்ன?

## ஒப்படை

நீர் பார்த்து இரசித்த ஒரு திரைப்படத்தை விமர்சனம் செய்து ஒரு கட்டுரை எழுதுக.

## மொழித்தேர்ச்சிக்கான செயற்பாடுகள்

*1. தமிழ்த்திரைப்படங்கள் தொடர்பாக உமது விமர்சனக் கருத்துக்களை முன்வைக்க.*

*2. நீர் பார்த்து ரசித்த திரைப்படம் மொன்றை நுணுகி ஆராய்ந்து அவற்றில் கையாளப்பட்டுள்ள உத்திகள் கருத்துக்கள் என்பவை தொடர்பாக - உமது உணர்வுகள், கருத்துக்கள், அபிப்பிராயங்கள் தெளிவாக புலப்படும் வகையில் ஓர் உரையாடலை எழுதுக.*

*3. 'தமிழ்' திரைப்பாடல்களின் இலக்கிய நயம் எனும் தலைப்பில் இலக்கிய மன்றத்தில் உரையாற்றுக.*

## சுருக்கம் எழுதுதல்

ஒரு விரிவான உரைப்பகுதியைப் பொருள் கெடாதவாறு வேண்டிய அளவுக்கு, சுருக்கி சொந்த மொழிநடையில் எழுதுவதே 'சுருக்கம்' என்று சொல்லாம்.

சுருங்கச்சொல்லி விளங்கவைத்தல் என்பது மொழிப்பிரயோகத்தின் சிறப்பான பண்புகளில் ஒன்று. சுருக்கி எழுதுதல் ஒரு மொழி ஆற்றலாகும். மொழி கற்கும் மாணவர்கள் உரைநடைப்பகுதியொன்றை அதன் பொருள் குன்றாது சுருக்கி எழுதும் ஆற்றல் பெறுதல் அவசியமாகும்.

ஒரு பகுதியை எவ்வளவு வேண்டுமானாலும் சுருக்கலாம். ஆனால் அளவுக்கு அதிகமாகச் சுருக்கினால் மூலப்பகுதியின் பொருள்கெட்டு விடவும் கூடும். ஆதலால் பொதுவாக மூன்றிலொரு பங்கைச்சுருக்கி எழுதுமாறே வேண்டப்படுவீர்கள்.

### சுருக்கம் எழுதும் படிமுறைகள்

சுருக்கி எழுதுவதற்கு வாசிக்கும் திறன், கிரகிக்கும் ஆற்றல், தெளிவான சிந்தனை, கருத்துக்களை தொகுக்கும் ஆற்றல் என்பன அவசியமான திறன்களாகும். சுருக்கி எழுதுவதற்குரிய சில படிமுறைகளை நாம் பின்பற்ற வேண்டும் அவையாவன.

01. குறிப்பிட்ட உரைநடைப்பகுதியை முதலில் தெளிவுபெற வாசித்தல், அதன் மையக்கருத்தை அறிதல், குறித்தல். (அதுவே தலைப்பாக வரும்)
02. அப்பகுதியை மீண்டும் கருத்தூன்றி வாசித்தல், மையக்கருத்தின் துணைக்கருத்துக்களை அம்சங்களை அறிதல், குறிப்பெடுத்தல்.
03. முக்கியமான கருத்துக்களைத்தெரிவு செய்தல் அக்கருத்துக்களை தொடர்பு படுத்தி ஒழுங்குபடுத்தல்.
04. முக்கியமில்லாத கருத்துக்களையும், தேவையில்லாத சொற்றொடர்களையும் நீக்குதல்.

- தன்கூற்று வாக்கியங்களைப் பிறர்கூற்று வாக்கியங்களாக மாற்ற வேண்டும்.

*உ-ம்* *கண்ணன் 'எனது உடல்நிலை நன்றாக இல்லை அதனால் நான் கூட்டத்திற்கு வரமாட்டேன்' என்று கூறினான்.*

சுருக்கம் - கண்ணன் தனது சுகவீனம் காரணமாக கூட்டத்திற்கு வரமறுத்தான்.

- சொற்றொடர்கள் வாக்கியங்களை பொருத்தமுறச் சுருக்கி, ஒரு சொல்லில், சொற்றொடரில் கையாளுதல்.

*உ-ம்* *நாம் என்ன பயன்களை அடைவதற்குக் கல்வி கற்கின்றோம்? கல்வி கற்பதன் விளைவு தான் என்ன?*

சுருக்கம் - எமது கல்விப்பேறு யாது?

- தொடர்ச்சியான கருத்துள்ள பல வாக்கியங்களைத் தொகுத்து ஒரு வாக்கியமாக எழுதுதல்.

  *உ-ம் திருவிழாக் காட்சியைக்காண பல பெண்கள் வந்திருந்தார்கள். அவர்கள் எல்லோரும் இளம்பெண்கள் அவர்கள் மிகவும் அழகாக இருந்தார்கள்.*

  சுருக்கம் - அழகிய இளம்பெண்கள் பலர் திருவிழாவிற்கு வந்தார்கள்.

- வர்ணனைகள், அணிகள் முதலானவற்றை நீக்கி எழுதுதல்.

  *உ-ம் செங்கதிர்ச்செல்வன் வெண்கதிர் பரப்பி குணதிசைக்கடலில் குளித்து எழுந்தான்.*

  சுருக்கம் - சூரியன் கிழக்கில் உதித்தான்

- வினாவும், விடையுமாக வரும் சந்தர்ப்பங்களை ஓரே கூற்றாக எழுதுதல்.

  *உ-ம் 'அச்செய்தியைக்கேட்ட இராவணன் என்ன செய்தான் தெரியுமா? கோபக்கனல் தெறிக்க அடர்ந்த அக்காட்டை நோக்கி உடனே செல்லலானான்.*

  சுருக்கம் - அச்செய்தியைக்கேட்ட இராவணன் கோபத்துடன் காட்டுக்குச் சென்றான்.

- வேண்டிய விடத்துப்பல சொற்களால் குறிப்பதை ஒரு சொல்லால் குறித்தல்.

  *உ-ம் அரசன் முதலானோர் உலாவரும் போது அதனைப்பொதுமக்கள் அறியும் படி கூறுபவன்.*

  சுருக்கம் - கட்டியக்காரன்

  *உ-ம் தாய், தந்தையர் முதலான உறவினர்கள் எவரும் இல்லாதவன்.*

  சுருக்கம் - அநாதை

05. ஒழுங்குபடுத்திய கருத்துக்களை, சொந்த நடையில் சுருக்கமாகக் கூறுதல்.
06. சுருக்கம் முழுவதையும் தொடர்ச்சியாக ஒரே பந்தியாக எழுதுதல்.
07. எழுதிய சுருக்கத்தை வாசித்து, மூலக்கருத்துக்கள் உரியவாறு இடம் பெற்றுள்ளனவா என்பதை உறுதிப்படுத்தல், வேண்டியவிடத்து திருத்தியமைத்தல்.
08. தலைப்பிடல்.
09. குறியீடுகள் பயன்படுத்தல் / மாதிரி சுருக்கம் / சொற்களின் எண்ணிக்கை என்பன அடங்கியிருத்தல் வேண்டும்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## பயிற்சி

பின்வரும் உரைப்பகுதியை வாசித்து சுருக்கி எழுதுக?

**பின்வரும உரைப்பகுதியை 15-20 சொற்களுக்கு மேற்படாமற் சுருக்கி எழுதுக.**

இன்று கவிதை எழுதிக்கொண்டிருக்கும் பெண்கவிஞர்களில் பலருக்கு, தங்களுடைய முன்னோடிகளான சங்கப் பெண்கவிஞர்கள் என்ன எழுதியிருக்கிறார்கள் என்பது பொதுவாகத் தெரியாது. ஔவை, எட்டுத்தொகை, நூல்களில் பரவலாகக் காணப்படும் பெண் கவிஞர்களின் கவிதைகளை எளிய உரைநடையுடன் தொகுத்து வாசிப்பதன் மூலம், தமிழ் மரபில் பெண்கவிஞர்களின் ஆளுமையை அறிந்துக்கொள்ள முடியும். இன்று பால் அடையாளத்துடன் அறியப்படும் பெண்கவிதை மொழியின் தனித்துவத்தையும் மூலத்தினையும் சங்கப்பெண்கவிஞர்களின் கவிதைகளிலிருந்து கண்டறிய வாய்ப்புண்டு.

- ந. முருகேச பாண்டியன்

மரங்களிலில் இருக்கும் ஒவ்வொரு இலையும் தெளிவாக பார்க்கக்கூடிய அளவிற்கு நட்சத்திரங்கள் அவ்வளவு பளீரென்று மின்னின. ஆத்திபாய், அப்போதும் போல இரவு உணவுக்குப் பிறகு முற்றத்தில் உட்கார்ந்திருந்தாள். அத்தகைய மாலைப்பொழுதுகளில் குளிர்ச்சியான தென்றலைப்போல நினைவுகள் அவளை தொட்டு தடவி கடந்துச்சென்றன.பிறகு இரவில் பூச்சிகள் தங்களுடைய இராத்திரிவேளைக் கூட்டிசையினால் அவளுடைய நினைவுகளை வாசிக்கும். ஆனால், இன்றைய தினம் வேறுப்பட்டதாகயிருந்தது. அவளுக்குத் துணையாக பானு இருந்தாள். ஓய்வில்லாமல் பேசிக்கொண்டியிருக்கும் பானுவின் மூட்டைமூட்டையான கேள்விகளுக்குப் பதில் சொல்ல முயன்று ஆத்திபாய் மூச்சுத் திணறிப்போய் விடுவாள்.

- திலகவதி

இனக்குழுத் தலைவர்கள் மக்களுடன் மக்களாகக் கலந்துறைபவர். இவர்களைத் தமிழிலக்கியம் அரசர்கள், மன்னர்கள் என்கிறது. ஆயினும் பின்னர் முடிவேந்தர்களும் இவ்வாறே அழைக்கப்படுவதால் அன்றைய இனக்குழுத் தலைவர்களிடமும் மக்களின் மேலானர் என்ற பேதம் வந்தடைந்ததாக மயக்கம் உண்டு. இனக்குழுத் தலைவர்கள் பெரும் வசதிகள் எதுவும் அற்றவர்; விருந்தினர் மேலதிகமாய் வந்து விட்டால், உடன் வேல் வடித்து, வேட்டையாடி, விருந்து படைக்கும் நிலையில் இருந்தவர். கூழோ கஞ்சியோ அனைவருடனும் பகுத்துண்டு பசியாறி மகிழ்பவர். ஒன்றுபட்ட கூட்டுவாழ்க்கையின் மதிப்புமிக்க ஒரு தலைவர். அந்த இனிய கூட்டு வாழ்வை இழந்துவிடாமல் இருப்பதற்காகத் தீரமுடன் போராடி, அழிவதையும் பொருட்டாகக் கருதாமல் பேரரசுகளைத் திணறவைத்த வரலாறுகள் பல உண்டு.

- ந. இரவீந்திரன்

## ரகர, றகர பேதச்சொற்கள்

'ற'கரம் வல்லினத்தைச் சேர்ந்தது 'ர'கரம் இடையினத்தைச் சேர்ந்தது. இரண்டினதும் ஒலி வேறுபாட்டையும் பொருள் வேறுபாட்டையும் அறிந்து பேசும் போதும் எழுதும் போதும் பிழைகளைதவிர்த்துக் கொள்ளுவோம்.

| | | | |
|---|---|---|---|
| **அரி** | - சிங்கம், வண்டு. | **இறும்பு** | - அதிசயம் |
| **அறி** | - உணர் | **உரவு** | - அறிவு, வலிமை. |
| **அரும்பு** | - மொட்டு, முளை. | **உறவு** | - சுற்றம், சேர்க்கை. |
| **அறும்பு** | - கொடுமை, பஞ்சகாலம். | **ஊரு** | - அச்சம் |
| **ஆர** | - நிறைய, நுகர. | **ஊறு** | - இடையூறு |
| **ஆற** | - ஆறுதலடைய | **கரி** | - அடுப்புக்கரி, யானை. |
| **இரங்கல்** | - உருகல் | **கறி** | - கடி, மிளகு |
| **இறங்கல்** | - கீழ்வரல் | **கரை** | - தேய், எல்லை. |
| **இரும்பு** | - கரும்பொன் | **கறை** | - விஷம், கறுப்பு. |

'ர'கர, 'ற'கர பேதச் சொற்களையும் அதன் பொருளையும் கொண்ட அட்டவணை ஒன்றைத் தயாரிப்போம்.

## 'ண'கர, 'ன'கரப் பேதச் சொற்கள்

'ண'கர, 'ன'கரங்கள் முறையே 'ட'கர, 'ற'கரங்களுக்கு இனவெழுத்துக்களாகும். ஆகவே, 'ண'கரத்திற்குப்பதிலாகவோ அல்லது 'ண'கரத்தோடு சேர்த்தோ 'ன'கரகத்தை எழுதுதலை தவிர்ப்போம்.

| | | | |
|---|---|---|---|
| **அணையார்** | - பகைவர் | **உண்ணல்** | - சாப்பிடுதல் |
| **அனையார்** | - அல்லாமை | **உன்னல்** | - நினைத்தல் |
| **அண்மை** | - சமீபம் | **ஊண்** | - உணவு |
| **அன்மை** | - அல்லாத | **ஊன்** | -. மாமிசம் |
| **ஆணம்** | - குழம்பு, அன்பு. | **கணப்பு** | - சூடு |
| **ஆனம்** | - தெப்பம், மரக்கலம். | **கனப்பு** | - பருமை |
| **இணி** | - தளை, அணி, எல்லை. | **கணி** | - மதி, எண்ணு. |
| **இனி** | - இப்பால், பின்னால். | **கனி** | - பழு, இளகு,பழம். |

'ண'கர, 'ன'கர பேதச்சொற்களையும் அதன் பொருளையும் கொண்ட அட்டவணை ஒன்றைத் தயாரிப்போம்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

### 03. மெய்முன் உயிர் புணர்தல்

நிலைமொழி ஈற்றில் மெய்யெழுத்து வந்து வருமொழி தொடக்கத்திலும் உயிரெழுத்து வந்து புணர்வதை இங்கு நோக்குவோம்.

**கல், மண், பொன், நெல்** போன்ற தனிக்குற்றெழுத்தை அடுத்து சொல் இறுதியில் மெய்யெழுத்து வந்து வருமொழி தொடக்கத்தில் உயிர் எழுத்து வந்து புணரும் போது நிலைமொழி ஈற்று மெய் இரட்டிக்கும்.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கல் | + | ஐ | - | கல் | + | ல் | + | ஐ | - | கல்லை |
| மண் | + | ஆல் | - | மண் | + | ண் | + | ஆல் | - | மண்ணால் |
| பொன் | + | ஐ | - | பொன் | + | ன் | + | ஐ | - | பொன்னை |
| நெல் | + | ஐ | - | நெல் | + | ல் | + | ஐ | - | நெல்லை |

தற்காலத்தில் புறப்புணர்ச்சியில் ஈற்றுமெய் இரட்டிக்காது இயல்பாகப் புணரும் வழக்கே கையாளப்படுகின்றது.

கல் எறிந்தனர்

நெல் இல்லை

மண் உலகம்

2. ஏனைய சொற்களின் இறுதியில் வரும் மெய் வருமொழி முதலில் வரும் உயிருடன் இணைந்து உயிர்மெய்யாகும்.

இதனை இயல்பு புணர்ச்சி என்பர்.

| | | | | |
|---|---|---|---|---|
| பால் | + | ஐ | - | பாலை |
| அவர் | + | ஆல் | - | அவரால் |
| மணமகள் | + | ஐ | - | மணமகளை |

புறப்புணர்ச்சியில் இத்தகைய மாற்றம் நிகழ்வதில்லை.

### 4. மெய் முன் மெய் புணர்தல்

நிலைமொழி ஈற்றிலும் வருமொழி முன்னும் மெய்யெழுத்துக்கள் வந்து புணருவது தொடர்பாக இங்கு நோக்குவோம்.

1. மகர ஈறு

அ) தொகைச்சொல்லாக்கத்தில் மகர ஈற்றின் முன் வல்லினம் வந்தால் மகர ஈறு கெட்டு வல்லினம் மிகும்.

மரம் + கொப்பு - மரக்கொப்பு

மரம் + சட்டி - மரச்சட்டி

மரம் + தொட்டி - மரத்தொட்டி

மரம் + பெட்டி - மரப்பெட்டி

ஆ) வேறு சில தொகைச்சொல்லாக்கத்தில் தோன்றிய அம் சாரியையின் மகர ஈறு - நிலைமொழியீற்றில் வந்து வருமொழி முன்னும் வல்லினம் வந்தால் - மகர ஈறு வல்லினத்தின் இன எழுத்தாகத் திரியும்.

பனை + கிழங்கு - பனம் + கிழங்கு - பனங்கிழங்கு

தென்னை + தோப்பு - தென்னம் + தோப்பு - தென்னந்தோப்பு

தென்னை + சாராயம் - தென்னம் + சாராயம் - தென்னஞ்சாராயம்

இ) தற்காலத் தமிழில் புறப்புணர்ச்சியில் மகரஈறு வல்லினத்துக்கு இனமாகத் திரிதல் பெருவழக்கு அல்ல.

வானமும் கடலும் சந்திக்கும் இடம்.

நானும் கண்ணனும் சென்றோம்.

மாலனும் தம்பியும் தோழர்கள்.

ஈ) மகர ஈற்றுப் பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபு ஏற்கும் போது அத்துச் சாரியை பெறும்.

மரத்தை - மரம் + அத்து + ஐ

மரத்துக்கு - மரம் + அத்து + கு

மரத்தால் - மரம் + அத்து + ஆல்

மரத்தில் - மரம் + அத்து + இல்

2) **ணகர, னகர ஈறு**

ண,ன ஈற்றுச் சொற்களுக்கு முன் வல்லினம் வந்தால் வேற்றுமைப் புணர்ச்சியில் அவை முறையே ட,ற ஆகத் திரியும் என்பது பழந்தமிழ் வழக்கு.

மண் + குடம் - மட்குடம்

பொன் + குடம் - பொற்குடம்

தற்காலத்தில் இவ்வாறு புணர்த்தி எழுதுவது பெரிதும் வழக்கில் இல்லை.

3) **லகர, ளகர ஈறு**

ல, ள ஈற்றுச் சொற்களின் முன் வல்லினம் வந்தால் அவை முறையே ற,ட வாகத் திரியும் என்பது பழந்தமிழ் வழக்கு.

பால் + குடம்- பாற்குடம்

வாள் + படை- வாட்படை

அகப் புணர்ச்சியில் விகுதி சேர்க்கும் போது இப்புணர்ச்சி மாற்றம் இன்றும் வழக்கில் உண்டு.

கல் + கள் - கற்கள் சொல் + கள் - சொற்கள்

ஆள் + கள் - ஆட்கள் நாள் + கள் - நாட்கள்



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

தொகைச் சொற்களிலும் இம்மாற்றம் காணப்படுகின்றது.

கடல் + கரை - கடற்கரை

நெல் + பயிர் - நெற்பயிர்

நாள் + குறிப்பு - நாட்குறிப்பு

முள் + செடி - முட்செடி

ல,ள ஈற்றின் முன் மெல்லினம் வந்தால் அவை ன,ண ஆகத் திரிதல் பழந்தமிழ் வழக்கு.

நல் + நூல் - நன்னூல்

முள் + முடி - முண்முடி

நன்னூல், முண்முடி என்பன போல் தற்காலத் தமிழ் வழக்கில் உள்ள பழந்தமிழ்த் தொகைச் சொற்கள் சிலவற்றைத் தவிர ஏனைய தற்காலத் தமிழ் சொற்களில் இம்மாற்றம் நிகழ்வதில்லை.

*உ-ம் சொல் நயம், பால் மணம், கல்நெஞ்சு.*

4) யகர ஈறு

தொகைச் சொற்களில் யகர ஈற்றின் முன் வரும் வல்லினம் மிகும்.

தாய் + பால் - தாய்ப்பால்

வாய் + சொல் - வாய்ச்சொல்

நாய் + குணம் - நாய்க்குணம்

பொய் + தீ - பொய்த்தீ

தனிக்குறிலை அடுத்து வரும் யகர மெய்யின் முன் மெல்லினம் வந்தால் அம்மெல்லினம் மிகுதல் பழந்தமிழ் இயல்பு.

மெய் + ஞானம் - மெய்ஞ்ஞானம்

செய் + நன்றி - செய்ந்நன்றி

தற்கால வழக்கில் மெல்லினம் இவ்வாறு இரட்டிப்பதில்லை.

5) ரகர ஈறு

தொகைச் சொற்களில் ரகர ஈற்றின் முன் வல்லினம் வந்தால் அவ்வல்லினம் மிகும்.

தேர் + சில் - தேர்ச்சில்

தேர் + திருவிழா - தேர்த்திருவிழா

வேர் + கடலை - வேர்க்கடலை

நீர் + கொப்புளம் - நீர்க்கொப்புளம்



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

6) ழகர ஈறு

தொகைச் சொற்களில் ழகர ஈற்றின் முன் வல்லினம் வந்தால் அவ்வல்லினம் மிகும்.

தமிழ் + புத்தகம் - தமிழ்ப்புத்தகம்

தமிழ் + கவிதை - தமிழ்க்கவிதை

தமிழ் + தாய் - தமிழ்த்தாய்

தமிழ் + சங்கம் - தமிழ்ச்சங்கம்

ஏனைய சூழல்களில் இயல்புப் புணர்ச்சியாக அமையும்.

தற்காலத்தில் எல்லாருக்கும் எளிதில் பொருள் புலப்படும் வகையில் சொற்களின் வடிவம் சிதையாமல் பெரிதும் சந்தி விகாரங்கள் இன்றி எழுதும் மரபு வேரூன்றி உள்ளது.

ஆயினும் பழந்தமிழ் நூல்களைப் படித்து புரிந்து கொள்வதற்கு புணர்ச்சி விதிகள் பற்றிய அறிவு நமக்கு அவசியம்.

## பயிற்சி

அ) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

1. கல்லெறிந்தனர்
2. தென்னந்தோப்பு
3. மரக்கட்டில்
4. படங்கள்
5. நிலத்தை
6. வெண்டாமரை
7. நன்னூல்
8. செய்ந்நன்றி
9. தமிழ்க்கவிதை

ஆ) பின்வரும் சொற்களைப் புணர்த்தி எழுதுக.

1. வேர் + கடலை
2. மெய் + ஞானம்
3. எள் + நெய்
4. பல் + கள்
5. மரம் + அத்து + ஐ
6. மண் + ஆல்
7. வட்டம் + கல்
8. வானம் + கடல்
9. கல் + நெஞ்சு
10. கடல் + தொழில்



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## உசாத்துணை நூல்கள்

**கலாநிதி எம். ஏ. நு்.மான் - அடிப்படைத்தமிழ் இலக்கணம்**

**ஆறுமுகவலர் - இலக்கணச்சுருக்கம்**

**நன்னூல்**

**தொல்காப்பியம்**

**கவிதைநயம் - க. கைலாசபதி, இ. முருகையன்**

*பாடப்பகுதிகளை அளித்த அறிஞர்களுக்கு நன்றிகள்*

## தமிழ்மொழியும் இலக்கியமும்

**பாடத்திட்டம் - தரம் - 10**

**தேர்ச்சி, தேர்ச்சி அலகுகள், உள்ளடக்கம்.**

*கேட்டலும் பேச்சும் :*

1.0 பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்குமேற்ப வினைத்திறனுடன்
- கேட்டுக் கிரகித்துத் துலங்குவார்.

1.1 கேட்டுக் கிரகித்தவற்றை திரட்டிக் கூறுவார்.
- மேடைப் பேச்சு
- கருத்தரங்கு

1.2 கிரகித்துப் பொருள் அறிந்து ஓதுவார்.
- செய்யுள்கள், பாடல்கள்.

1.3 செவிமடுத்துக் கிரகித்துக் கருத்துக்களை முன்வைப்பார்.
- செய்யுளின் பொருளைக் கூறுதல்.
- உரைநடையின் மையக்கருத்தையும், துணைக் கருத்துக்களையும் தொகுத்துக் கூறுதல்.
- கிரகித்த விடயத்துக்குச் சார்பாக எதிராக தமது கருத்துக்களை முன்வைத்தல்.
- நயந்தவற்றை விளக்கிக் கூறல்.

1.4 செயற்றிறனும் விளைதிறனும் உள்ள கட்டுருவாக்கச் செயன்முறை சார்ந்த கேட்போனாகச் செயற்படுவார்.
- கேட்டலில் விருப்பத்துடன் ஈடுபடுதல்.
- கேட்டவற்றின் உண்மைத் தன்மையை அறிதல்.
- கேட்டுக் கிரகித்துக் குறிப்பெடுத்தல்.
- கேட்டு விளங்கி ஒரு முடிவுக்கு வருதல்.
- பேச்சாளர் பேசிக்கொண்டிருக்கையில் அவர் தொடர்ந்து பேசப்போவனவற்றை முன்கூட்டியே ஊகித்தல்.
- கேட்டல் மூலம் பல்வேறு தேவைகளுக்கான தரவுகளைச் சேகரித்தல்.
- கேட்டவற்றில் தகவல்கள் எவை, அபிப்பிராயங்கள் எவை என வேறுபடுத்துதல்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

2.0 சந்தர்ப்பத்திற்கும் சூழ்நிலைக்கும் கேட்போருக்கும் ஏற்ற வகையில் பண்பாக உரையாடுவார்.

2.1 தமது உணர்வுகளும், கருத்துக்களும், அபிப்பிராயங்களும் தெளிவாகப் புலப்படும் வகை யில் உரையாடுவார்.

- விடயத் தெளிவு.
- கருத்துக்களை அறிந்துகொள்ளல்.
- முறையிடல்.
- தகவல் தெரிவித்தல்.
- விபரங்களை விவரித்தல்.
- பிறர் ஏற்றுக்கொள்ளும் வகையில் தமது கருத்தை வலியுறுத்திக் கூறுதல்.
- தனியாள் நிலையிலும், குழு நிலையிலும் கருத்துப் பரிமாற்றம் செய்தல்.
- கலந்துரையாடலின் பங்குபற்றி ஏற்றவகையில் தமது கருத்துக்களை முன்வைத்தல்.
- எடுத்துக்கொண்ட விடயங்களைத் தமது சொந்த அனுபவத்தின் அடிப்படையில் விவரித்தல்.
- தமது விருப்பு வெறுப்புக்களைப் பண்பாக வெளிப்படுத்துதல்.
- குறித்த விடயம் சார்ந்த அறிவுள்ளோருடன் உசாவி அறிந்த விடயங்களை வகுப்பறையில் தொகுத்துக் கூறுதல்.

2.2 நாடக பாத்திரங்களுக்கேற்ப, நடித்துப் பேசுவார்.

பாத்திரத்தின் உணர்வுகளை வெளிக்கொணரும் வகையில், உச்சரிப்புத் தெளிவுடனும் பொருத்தமான தொனி, முகபாவம், மெய்ப்பாடு, அங்க அசைவுகளுடன் உரையாடுதல்.

3.0 எண்ணக் கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் புலப்படுத்திப் பேசுவார்.

3.1 தலைப்புக்கு ஏற்றவகையில் பேசுவார்.

- தலைப்பு ஒன்றினைத் தெரிவுச் செய்தல்.
- கருத்தை முன்வைத்தலுக்குப் பொருத்தமான சட்டகத்தை அமைத்தல்.
- இலக்கினை அமைத்துப் பேசுதல்
- நோக்கத்திற்கும் சபைக்கும் ஏற்றவாறு பேசுதல்.
  (மேடைப்பேச்சு, விவாதம், பட்டிமன்றம்)
- கேட்போர் புரியும் வகையில் பேசுதல்.
- பொருத்தமான தொனியில் பேசுதல்.
- குறுகிய நேர ஆயத்தத்துடன் பேசுதல்.
- பொருத்தமான சொற்கள், தொடர்கள், பழமொழிகள், மேற்கோள்கள் முதலானவற்றைக் கையாண்டு பேசுதல்.

3.2 பாவனை செய்து பேசுவார்.

- வானொலி, தொலைக்காட்சிச் செய்தி வாசித்தல்.
- நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்குதல்.
- நேர்முக வர்ணனை செய்தல்.

*வாசிப்பு*

4.0 உயிர்த்துடிப்புள்ள, கூட்டுருவாக்கச் செயல்திறனுடைய வாசகராகச் செயற்படுவார்.

4.1 விளக்கத்தோடும் பொருளுக்கேற்ற உணர்ச்சியோடும் வாசிப்பார்.

- செய்யுள்களையும், கவிதைகளையும், பல்வேறு வசனப் பகுதிகளையும் பொருத்தமான பாணியையும், நுட்பத்தையும் கையாண்டு உணர்வு பூர்வமாக வாசித்தல்.

4.2 வாசிப்பதன் மூலம் இலக்கியத்துக்கும் சமூகத்துக்குமிடையிலான தொடர்பை அறிவார்.

- தன்னையும், தனது குடும்பத்தையும், தான் சார்ந்த சமூகத்தையும், தான் வாழும் உலகினையும் இலக்கிய வாசிப்பினூடாக விளங்கிக் கொள்ளுதல்.

5.0 கிரகித்துப் பொருள் உணர்ந்தமை புலப்பட வாசிப்பார்.

5.1 கிரகித்துப் பொருள் அறிந்து வாசிப்பார்.

- கருத்தைக் கண்டுகொள்வதற்கான உபாயங்களைப் பயன்படுத்தி வாசித்தல்.
- தேவைக்கேற்ப மேலோட்டமாகவும், கருத்தூன்றியும் வாசித்தல்.
- முழுக்கவனத்தையும் செலுத்தி வாசித்தல்.
- முன்னைய அறிவு, அனுபவம், விளக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் வாசித்துக் கருத்துக்களை உள்வாங்குதல்.

5.2 குறித்த நோக்கத்திற்காக வாசிப்பார்.

- மையக் கருத்தையும் துணைக் கருத்தையும் கண்டுகொள்ளுதல்.
- செய்யுளை சந்திபிரித்தும் கொண்டு கூட்டியும் வாசித்தல்.
- செய்யுளின் பொருளைக் கூறுதல்.
- வாசித்தவற்றை சொந்த மொழிநடையில் கூறுதல்.
- வாசித்த பகுதியைச் சுருக்கியும் விரித்தும் கூறுதல்.
- வாசித்தவற்றில் விடயங்கள் குறித்த உடன்பாட்டையும் உடன்பாடின்மையையும் அவற்றுக்கான காரணங்களையும் முன்வைத்தல்.
- பாத்திரங்களின் குணவியல்பை விவரித்தல்.
- பாத்திரங்களின் வாயிலாக வெளிப்படுத்தப்படுதல்.

  படைப்பாளியின் எண்ணங்களைக் கிரகித்துக் கூறுதல்.
- படைப்புக்கு உந்துசக்தியாக விளங்கிய காரணிகளைக் கூறுதல்.

  (படைப்பாளியின் அனுபவம், கலை, கலாசார சமூகப் பின்னணி)

6.0 நடைமுறைத் தேவைகளுக்காக வாசிப்பார்.

6.1 பல்வேறு நோக்கங்களுக்காக வாசிப்பார்.
(மகிழ்ச்சி,மனப்பாங்கு விருத்தி, சிந்தனை விரிவு, தெளிவு, தகவல் சேகரித்தல் அறிதல், மதிப்பீடு).

- சுவரொட்டிகள்.
- துண்டுப் பிரசுரங்கள்.
- பத்திரிகைகள்.
- சஞ்சிகைகள்.
- நூல்கள்.
- இணையம்.
- கலைக்களஞ்சியம்.
- அகராதி.
- சுற்றறிக்கைகள்.
- வர்த்தமானி.

7.0 ஆக்கத்திறனை மேம்படுத்துவதற்காக வாசிப்பார்.

7.1 பல்வேறு படைப்புகளை நுணுகி வாசித்து, அவற்றில் கையாளப்பட்டுள்ள உத்திகள், கருத்துக்கள் என்பனவற்றை விமர்சிப்பார்.

- கவிதை, செய்யுள்.
- உரைநடை.
- நாவல்.
- சிறுகதை.
- நாடகம்.

7.2 மொழித் திறன்கள் விருத்தி செய்வதற்காக வாசிப்பார்.
- ஆக்கங்களிலுள்ள பிரதேச வழக்குச் சொற்கள்.
- மொழிநடை வேறுபாடுகள்.
- அணிகள்.
  (உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம், உயர்வு நவிற்சி, சிலேடை).
- தொடர்மொழிகள்.

7.3 தரப்பட்ட பாடப்பரப்புகளில் வருகின்ற பயன்பாட்டு இலக்கணத்தை இனங்கண்டு பயன்படுத்துவார்
- வினையாலணையும் பெயர்.
- வேற்றுமை உருபு.
- சொல்லுருபு.
- இடைச்சொற், உரிச்சொற் வாக்கிய வகைகள் (கலப்பு, கூட்டு வாக்கியங்கள்).
- தொகை, தொகா நிலைத் தொடர்கள்.
- சொற்புணர்ச்சி (உயிர்முன் உயிர், உயிர்முன் மெய், மெய்முன் மெய், மெய்முன் உயிர்).

8.0 ஆர்வத்துடன் வாசிப்பார்.

8.1 விருப்பத்திற்காகவும் சுவையுணர்விற்காகவும் வாசிப்பார்.
- கதைகள், சிறுகதைகள், கவிதைகள், செய்யுள்கள்.
- நாட்டார் பாடல்களும், கதைகளும்.
- நாவல்கள்.
- நாடகங்கள்.
- கட்டுரைகள்.

8.2 ஆக்கங்களை வாசித்துப் பெற்ற அனுபவங்களை ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்வார்.
- உள்ளடக்கம்.
- பாத்திர இயல்பு.
- மொழியாட்சி.
- வர்ணனை.
- ஓசை நயம்.
- கற்பனை.
- அணிகள் (உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம், உயர்வு நவிற்சி, சிலேடை).
- நயந்த பகுதிகள்.

## සිංහල වර්ණ මාලාව

| | | | | | |
|---|---|---|---|---|---|
| අ | ආ | ඇ | ඈ | ඉ | ඊ |
| උ | ඌ | ඍ | ඎ | ඏ | ඐ |
| එ | ඒ | ඓ | ඔ | ඕ | ඖ |
| (අ)ං | (අ)ඃ | | | | |
| ක | ඛ | ග | ඝ | ඞ | ඟ |
| ච | ඡ | ජ | ඣ | ඤ | ඦ |
| ට | ඨ | ඩ | ඪ | ණ | ඬ |
| ත | ථ | ද | ධ | න | ඳ |
| ප | ඵ | බ | භ | ම | ඹ |
| ය | ර | ල | ව | | |
| ශ | ෂ | ස | හ | ළ | ෆ |

நம் நாட்டு இளஞ் சந்ததியினரின் நலன் கருதி நம் அரசு உங்களுக்கு வழங்கும் இந்நூலை அடுத்த ஆண்டும் உங்கள் சகோதரர்களுக்கு வழங்கத்தக்க வகையில் வைத்துப் படியுங்கள்.

பாடசாலைப் பெயர் : ........................................................................................

| ஆண்டு | புத்தகத்தைப் பெற்றுக் 'கொண்ட மாணவர் பெயர் | வகுப்பு | வகுப்பாசிரியரின் கையொப்பம் |
|---|---|---|---|
| 2008 | ........................................ | ......... | ............ |
| 2009 | ........................................ | ......... | ............ |
| 2010 | ........................................ | ......... | ............ |
| 2011 | ........................................ | ......... | ............ |
| 2012 | ........................................ | ......... | ............ |



இலவச விநியோகத்திற்காக

தமிழ் மொழியும் இலக்கியமும்

කේත අංකය : 07FT10-06P

யுனைற்ரெட் மேர்ச்சன்ஸ் பிரின்டர்ஸ் (பிரைவட்) லிமிட்ரெட்